நூற்றாண்டு சிறப்பு வெளியீடு

Offering the BEST of the Professor

பேராசிரியரின்

இலக்கியத்திறன்

அன்புப்படையல்கள்
அணிந்துரைகள்
சிறப்புப் பாயிரப் பாமாலைகள்
தலை சிறந்த படைப்புகள்
நூற்றாண்டில் 100

COMBO VOLUME

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

Professor's



No.	Field / Area
6	Pedagogy
23	Tamil Literature
30	Religion & Philosophy
24	Literary Criticism
15	Popular Science
9	Biography
12	Pilgrimage
2	Travelogue
7	Autobiography
7	Research

அரிய தொகுப்பு

பேராசிரியரின்

இலக்கியத்திறன்

தொகுப்பு
நூற்றாண்டு விழாக் குழுவினர்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பேராசிரியரின்

இலக்கியத்திறன்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

July 2016

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

Price: Rs. 1750.00
Special Offer: Rs.1250.00

Wrapper Design: Centenary Committee

Printed at: DJ Prints, Chennai – 600 095.

Cell No:- 8903478236.

சமர்ப்பணம்

செம்மொழி செய்த செம்மல்

[1855 – 1942]

தமிழ்த்தாத்தா உ வே சா

உள்ளுரை

திறன் - I

- தொகுப்பாசிரியர் : முனைவர் இரா மணிவண்ணன்
- அன்புப்படையல் : மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
- அணிந்துரை : முனைவர் அசு இளங்கோவன்
- தொகுப்பு : ***அன்புப்படையல்கள்***

Dedications

The unique feature one could find among the books of Professor is that almost all his books are DEDICATED to some famous personalities from almost all walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for dedicating his books. The amazing range includes Educational Administrators, Headmasters, Professors of Tamil, Professor of Saiva Siddhantha, Professor of Economics, Vice-chancellors, Philanthropists, Bureaucrats, Ministers, Governors, Tamil Scholars, Linguists, Judges, Social Workers, Industrialists, Rationalists, etc,.
Select samples are here.



திறன் - II

- தொகுப்பாசிரியர் : நீ இரவிச்சந்திரன்
- அன்புப்படையல் : மறைமலை அடிகள்
- அணிந்துரை : முனைவர் இரா காமராசு
- தொகுப்பு : ***அணிந்துரைகள்***

Forewords

The unique feature one could find among the books of Professor is that almost all his books carry a 'FOREWORD' from eminent personality in several walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for getting 'Foreword' for his books. The amazing range includes educational administrators, headmasters, professor of Tamil, professor of Saiva Siddhantha, professor of Economics, Vice-chancellors, his guide, philanthropists, his relatives, his students, religious heads, bureaucrats, ministers, chief ministers, governors, Tamil scholars, linguists, editors, principals, judges, technocrats, advocates, social workers, industrialists, etc,. A select samples are exhibited here.

திறன் - III

- தொகுப்பாசிரியர் : ந பாஸ்கரன்
- அன்புப்படையல் : மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை
- அணிந்துரை : முனைவர் ந கடிகாசலம்
- தொகுப்பு : ***சிறப்புப் பாயிரப் பாமாலைகள்***

SIRAPPU PAAYIRA PAAMAALAIS

Some of Professor's works have one unique
feature - Sirappu Paayira Paamalai [in Tamil],
rendered by the great Tamil scholars,
Tamil poets offering scholarly tributes to Professor
and his works. Paayira Paamalai highlights Professor's
life to a certain extent, his works and their special features,
especially the characteristic style of the work for
which the said Paayira Paamalai is rendered.
Fourteen out of 135 books written by the Professor
have these features which are listed in detail.
A wide range of variety in genre and other
salient characteristics are noteworthy.
A complete list is exhibited here !

திறன் - IV

- தொகுப்பாசிரியர் : பேராசிரியர் இராசு மைனர்
- அன்புப்படையல் : சாகித்ய அகாதமி
- அணிந்துரை : பேரா. கா. மீர்முஸ்தாபா உசேன்
- தொகுப்பு : ***தலை சிறந்த படைப்புகள்***

Bird's eye-view of Professor's FOUR Masterpieces

[A] *The Religion and Philosophy of Naalaayiram with special referent to Nammaazhvar* [Professor's PhD Thesis]

With 5234 footnotes and more than 300 Bibliographical references.
முனைவர் பட்ட ஆய்வேடு அன்னாரது உழைப்பினையும்,
ஆழ்ந்தகன்ற ஆய்வுப் பார்வையையும் கட்டியம் கூறுகின்றது.

[B] *தமிழ்ப் பயிற்றும் முறை*

இன்றுவரை கல்வியியல் துறையில் ஒளிரும் நூலாகும்.
பேராசிரியரின் புகழ்பாடும் நூல் இது.

[C] *கல்வி உளவியல் கோட்பாடுகள்*

கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், குழந்தைக் கல்வியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கட்கும் பொதுமக்கட்கும் ஒரு வழிகாட்டியாக அமையட்டும் என்றே கல்வி உளவியல் கோட்பாடுகள் எனும் நூலை எழுதியிருப்பதாக முன்னுரையில் பேராசிரியர் ரெட்டியார் கூறுகிறார். இந்நூலானது, இந்தக் குறிக்கோளைச் சீரிய முறையில் நிறைவேற்றியிருப்பதாக அறுதியிட்டுக் கூறலாம்.

[D] *வைணவச் செல்வம்*

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய திட்டப்பணியின் நூல் வடிவமாகும். வைணவத்தில் ஆழங்கால்பட்டவர் எனும் நிலையில் அன்னாரது உழைப்பின் மிகுதியை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படுகிறது. சுருங்கக்கூறின், வைணவம் பற்றிய ஒரு நூலாக, வைணவச் செல்வம் அமைகிறது எனலாம்.

திறன் - V [நூறு நூல்கள் @ Google Drive]

- தொகுப்பாசிரியர் : நூற்றாண்டு விழாக் குழுவினர்
- அன்புப்படையல் : **பரிதிமாற் கலைஞர்**
- தொகுப்பு : ***நூற்றாண்டில் 100***

இலக்கியத் திறனாய்வு 14
தமிழ் இலக்கியம் 11
ஆராய்ச்சி 5
கல்வியியல் 5
அறிவியல் 15
வைணவம் 13
சைவம் 8
தலப்பயணம் 6
தன்வரலாறு 7
பிறர் வரலாறு 5
மொழிபெயர்ப்பு 5
பயண நூல் 1
நூற்றாண்டு வெளியீடுகள் 5

நூற்றாண்டு வெளியீடு

அர்ப்பணங்கள்

DEDICATIONS

PARADED

The unique feature one could find among the books of Professor is that almost all his books are DEDICATED to some famous personalities from almost all walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for dedicating his books. The amazing range includes Educational Administrators, Headmasters, Professors of Tamil, Professor of Saiva Siddhantha, Professor of Economics, Vice-chancellors, Philanthropists, Bureaucrats, Ministers, Governors, Tamil Scholars, Linguists, Judges, Social Workers, Industrialists, Rationalists, etc,. Select samples are here.

முனைவர் இரா மணிவண்ணன்
தொகுப்பாசிரியர்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

அன்புப்படையல்கள்

முனைவர் இரா மணிவண்ணன்

தொகுப்பாசிரியர்

முதுகலைத் தமிழாசிரியர்

அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி

முசிறி-621 211

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

அன்புப்படையல்கள்

A Centenary Publication

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

February 2016

Copyright:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-932327-5-0

9 788193 232750 >

Wrapper design: **Centenary Committee**

Printed at: D J Prints, Chennai.95
8903478236

DEDICATION

Dedicated to:

Mahavidwan Meenakshisundaram Pillai



மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
1815 - 1876

An eminent Tamil scholar and was the teacher of
Mahamahopadhiyaya Dr UV Swaminatha Iyer,
a Tamil scholar and researcher.

தொகுப்புரை

பேராசிரியரின் அன்புப் படையல்கள் தொகுப்பு

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

- மகாகவி பாரதி

இன்னருங்கனிச் சோலைகள் செய்தல், நீர் நிலைகள் தோற்றுவித்தல், உயிருக்கு அடிப்படையான உணவளித்தல், கோயில்கள் கட்டுதல் இவை எல்லாவற்றையும் விட சிறந்த அறம் ஒரு ஏழை மாணவருக்கு கல்விக்கண் திறத்தல். அந்த எழுத்தறிவிக்கும் பணியில் தன் வாழ்நாளை முழுவதுமாக கரைத்துக் கொண்டவர் **கலைமாமணி பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார்** அவர்கள்.

துறையூர் ஜெமிந்தார் உயர் நிலைப்பள்ளியில் தலைமையாசிரியர், காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறை பேராசிரியர், துறைத்தலைவர் அடுத்து திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர், தமிழ் ஆராய்ச்சித்துறை பேராசிரியர் என படிப்படியாக முன்னேறியவர். பணிஓய்வுக்குப் பிறகும் வாழ்நாள் முழுவதும் பல பல்கலைக் கழகங்களில் கௌரவ பேராசிரியராகப் பணியாற்றினார்.

தனது கல்விப்பணியில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கியதோடு, பல்துறை சார்ந்த சிறந்த நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் அறிவுசார் சான்றோர்களின் சிறந்த படைப்புகளைத் தொகுத்தும் வெளியிட்டார்.

பேராசிரியர் தம்வாழ்நாள் இறுதிவரை படித்தும், படைத்தும், தொகுத்தும் வெளியிட்டுள்ள நூல்கள் நூற்றுக்கும் மேலாயின. இவரின் படைப்புகள் இலக்கிய ஆராய்ச்சி, இலக்கணம், கல்வி உளவியல், வாழ்க்கைக்கல்வி, தத்துவங்கள், உரைநூல் ஆராய்ச்சி, சமயச் சான்றோர் வரலாறு, அறிவியல், பயணக்கட்டுரை, வாழ்க்கை வரலாறு, ஒப்பீட்டு இலக்கியம் என பல்வேறு துறைகளில் தடம் பதிக்கின்றன.

பேராசிரியர் தம் நூல்களில் பெரும்பாலானவற்றை பல்துறை சார்ந்த சான்றோர்களுக்கு அன்புப்படையலாக்கி இருக்கிறார். சான்றோர் தம் பெருமையினை முதலில் உரைநடையில் கூறி பின்னர் செய்யுளில் இனிதே இயம்புகிறார். இவ்வாறு படைத்த அன்புப் படையல்களைத் தனிநூலாகத் தொகுக்க இயலும்.

அன்புப் படையல்களில் சில

கல்வியாளர்கள்	:	அழகப்பச்செட்டியார், நெ.து.சுந்தரவடிவேலு ...
தமிழ்சான்றோர்கள்	:	திரு.வி.க. உ.வே.சா. ...
இந்திய முதற் குடிமகன்கள்	:	சி.இராஜகோபாலாச்சாரியார் ஆர்.வெங்கட்ராமன் A.P.J. அப்துல்கலாம் ...
முதலமைச்சர் பெருமக்கள்	:	கு.காமராஜர், சி.சுப்பிரமணியம், சி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி எம்.ஜி.இராமச்சந்திரன் ...
பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள்	:	வை.வே.சிட்டிபாபு, அவ்வை நடராஜன் எஸ்.கோவிந்தராஜுலு ...

சமயச் சான்றோர்கள்	:	குன்றக்குடி அடிகளார் ஜீயர் ....
தத்துவ அறிஞர்கள்	:	சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
கொடை வள்ளல்கள்	:	P.B.K. இராஜாசிதம்பரம் S.R. நாக ரெட்டியார் ...
சமூகவியலார்	:	தந்தைப் பெரியார்

என பல்துறை சான்றோர்களுக்கு தனித்தனியாகப் பெயர்சுட்டி படையலாக்குகின்றார்.

மிகச்சில வேளைகளில்,

வெளிநாட்டு வாழ் தமிழர்கள்	:	பரணிப் பொழிவுகள்
பாரதிப் பித்தர்கள்	:	பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு
தமிழாசிரியர்கள்	:	கவிதைப் பயிற்றும் முறை
ஆய்வு வழிகாட்டிகள்	:	Collected Papers – Silver Jubilees Commemoration of the Dept of Tamil at Sri Venkateswara University, Tirupathi
பெரியார் வழிநடப்பவர்கள்	:	தந்தை பெரியார் சிந்தனைகள்
அமெரிக்காவில் வாழும் தமிழர்கள்	:	என் அமெரிக்கப் பயணம்

எனப் பொதுப்படுத்தியும் படையலாக வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு அன்புப்படையலாக்குமிடத்து தற்காலத்தில் உள்ளோருக்கு மட்டுமின்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பெருமக்கட்கும் (கொற்றவன்குடி உமாபதி சிவம்) படையலாக்குகின்றார். இவருடைய இந்நெறி எதனையும் எதிர்பாராது சான்றார்களைப் பெருமைப்படுத்தும் உன்னத மனநிலையை வெளிப்படுத்துகிறது.

இளம் பருவத்தில் தந்தையை இழந்த நிலையிலும் இவருடைய அன்னையார் வாழ்வின் அடிப்படை ஆதாரமான விவசாய பூமியை விற்று இவரைப் படிக்க வைத்தமை உன்னத செயலாகும். தன் குடும்பத்தின் நிலை உணர்ந்த ஆசிரியர் சிறப்பாக கல்வி பயின்றுள்ளார். **"*தமிழ் பயிற்றும் முறை*"** என்ற நூலை தம் அன்னையாருக்கு படையலாக்கி உள்ளார்.

தம் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளில் உடனிருந்து நெறிப்படுத்திய வாழ்க்கைத் துணைவிக்கு **"*முக்தி நெறி*"** என்ற நூலை படையலாக்கி உள்ளார்.

ஆசிரியரின் **"*வைணவ உரைவளம்*"** வைணவப் பெரியோர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

"*என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே*" என்பது ஆசிரியரின் குறிக்கோள். அதைப்போலவே ஆசிரியரின் வாழ்க்கையும் படைப்புகளும் சமுதாய மேன்மைக்கு வழிகாட்டும் உன்னத விளக்குகளாய் அமைந்துள்ளன. நாம் அவற்றை வழிகாட்டியாகக் கொண்டு வாழ்வை செம்மைப் படுத்துவோமாக.

ஆசிரியர் தம் அன்புப்படையலை தொகுத்து வழங்க அரியதொரு வாய்ப்பளித்த நூற்றாண்டு விழாக்குழுவினர்க்கு மிகுந்த நன்றியுடையேன்.

முனைவர்.இரா.மணிவண்ணன்
முதுகலைத் தமிழாசிரியர்
அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி
முசிறி-621 211

அணிந்துரை

செயற்கரிய செய்த செம்மல்

ஆன்ற அறிவின் கலங்கரை விளக்கம், திருநிறைந்த பேரறிவாளர், பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் ஊருணி போலவும், மருந்து மரம் போலவும், பயன்மிகு கனிமரம் போலவும் 90 ஆண்டுகள் தமிழுக்கும், தமிழர்க்கும் தக்கதோர் துணையெனத் திகழ்ந்தார்.

அவர் படைத்தளித்த நூல்கள் 135. அவரது நூல்கள் ஒவ்வொன்றும் தக்க சான்றோர் ஒருவருக்கு அல்லது ஓர் திறமிகு பெருங்குழுவிற்குப் படையல் செய்யப்பெற்றுள்ளது. இந்த நூல்கள் அவரது வெற்றியையும், வீச்சையும், நோக்கரிய நோக்கையும், நுணுக்கரிய நுண்ணுணர்வையும் பறைசாற்றுகின்றன.

அந்த படையல்கள் காட்டும் பல்திறப் பாங்கு நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றது.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

என வள்ளுவர் கூறுவதற்கேற்பத் தன் முயற்சியின் விளைவாகிய அறிவின் அறுவடையைத் தன் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியோர்க்குப் படையல் செய்துள்ளார். இவரது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து தூண்களால் நிறுவிய சால்பு என்னும் பேரரங்கம் நூற்றுக்கால் மண்டபமாக, ஆயிரங்கால் மண்டபமாக மந்திரம் போல விரிவு கொள்கிறது.

”கடவுள் உறவினர்களைத் தருகிறார். கடவுளே, என் நண்பர்களைத்தேர்ந்து கொள்ள வாய்ப்பளித்தீர். நன்றி.”

“God gives us relatives; Thank God, we can choose our friends!”

என்பதற்கேற்ப, அவருடைய அன்னை, துணைவியார் தவிர, மற்றவர் அனைவரும் அன்பும், நட்பும், மதிப்பும், போற்றுதலும், நன்றியும் மிளிரப் பேராசிரியர் தேர்ந்து தெளிந்த தக்காரும், மிக்காரும் தாழ்விலா அன்புச் செல்வரும்தாம்.

அவர் போற்றிய குழுவினர், திருக்கூட்டத்தார் யாவர்?

(01) ‘All Speakers and Lovers of Tamil whose list is cast in lands other than Tamilnadu’.

”வண்ணமார் கடலை மலைகளைக்கடந்து(ம்) பண்ணிசை தெய்வத் தமிழினை மறவாப் பாங்குறு சகோதரர்.”

(02) “பாரதிப் பித்தர்கள்”

(03) தமிழாசிரியர்கள் அனைவருக்கும்

”நாப்பயில தமிழால் மாணவப் பயிரை
நாடொறும் மாண்புற வளர்ப்போர்.”

(04) முன்னைய/இன்றைய/பின்னைய தமிழ்ச் சான்றோர்கட்கு

”புலமை வயங்கிய சீரிய சான்றோர்”

(05) பெரியார் வழி நடப்பவர்க்கு

"அறத்தினிற் பிறழா துணர்ந்த நம் பெரியார் அன்பர்கட்கு"

(06) அமெரிக்க வாழ் தமிழன்பர்கள்

"கடலினைக் கடந்தும் நாட்டினை மறவாக் கண்ணியப் புண்ணியம் மிக்கார்."

(07) வள்ளலார் தொண்டர்

"வின்னரும் புகழ் கொள் திருவருட்பாவில் விளக்கம் கொள் நல் வடலூரின் வள்ளலார் தொண்டர் அனைவருக்கும்."

"தமிழெனினும் மணிவிளக்கேற்றடா நாட்டில்
தமிழரின் நெஞ்சமாம் அழகான விட்டில்
அமிழ்தென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை"

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் மணிமொழியை உளமேற்றுச் சிறந்த தமிழ்மாமணி பேராசிரியர் அவர்கள் என்று நாம் வணங்கிப் போற்றலாம்.

பேராசிரியர் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுதிய இறையன்பர். எனவே துறவிவேந்தர் பலரும் அருளாளர்கள் பலரும் போற்றிப் பாராட்டப் பெற்றுள்ளனர். உடன் பணிபுரிந்தோர், வழிநடத்திய மேலோர், துணைவேந்தர்கள் பலரும் புகழப்பெற்றுள்ளனர்.

நாடறிந்த தலைவர்களான, தந்தை பெரியார், கல்விச்செம்மல் காமராசர், பேரறிஞர் அண்ணா, குடியரசுத்தலைவர் இராதாகிருட்டிணன், புரட்சித்தலைவர் எம். ஜி.ஆர்., மேதகு கலைஞர், பேராசிரியர் அன்பழகன், மூதறிஞர் இராஜாஜி ஆகியோரும் போற்றப் பெற்றுள்ளனர்.

அவற்றுள்,

பெரியார்

"மடமை கொள் சாதிமதமெனும் பேய்கள்
மடிந்திட எழுபடைக்கலமே
திடமொடு தமிழர் தந்தையாய் மதிக்கத்
திகழ்ந்திடும் ஒருபெரு வாழ்வே."

அண்ணா

"மன்னிய புகழ்சால் தமிழர்தம் நெஞ்ச
மலரினும் .... சீரிய நற்றுயில் புரியும்
தன்னிகர் இல்லாச்சீரிய அண்ணா."

திரு.வி.க.

"சாந்தியின் வடிவம்: செந்தமிழ்த்தென்றல்".

குன்றக்குடி அடிகளார்

"செந்தமிழ்த்தாய் மலரடியை மறவாச்செம்மல்
சீர்திருத்தக் கொடிவளர்க்கும் சீரிமை மிக்கார்"

நீதியரசர் இஸ்மாயில்

"கம்பனை உணர்ந்து திறமுறப்பகரும்
கண்ணியர் புண்ணியர் சீலர்"

போன்ற பல்வேறு மாணிக்க வாசகங்கள் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் தெள்ளதின் காட்டி நம்மை மகிழ்விக்கின்றன.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் என்றும் கூறினார். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே எனினும், செந்நெறியிலும், செந்தமிழ் மாண்பிலும் வாழ்ந்து சிறந்த பேராசிரியர் அறிஞர்கட்கு முன்மாதிரியான மாட்சி படைத்தவர்.

"பொங்கிய கலக்கம் சார்தரு போதில்
பூரணத் தெளிவருள் அமைச்சு"

என்று தம் துணைவியாராகிய குடும்ப விளக்கைப் போற்றுகிறபோது அவரது இல்லற நல்லறம் பளிச்செனை மின்னுகிறது.

இந்நூலை உருவாக்கிய தொகுப்பாசிரியர், விழாக்குழுவினர், பிற பல, பிரபல ஏனைய நல்லன்பர்களை வியந்து பாராட்டுகின்றேன்.

*பேராசிரியர் சென்ற வழிமுறையை அடியெற்றி "**அன்புப்படையல்கள்**" தொகுப்பை தமிழ் மொழியின் உயர்பெருஞ்சான்றோர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கட்கு படையல் செய்திருப்பது காலந்தோறும் சுப்பு ரெட்டியார் அவர்கள் முத்திரை தொடரும் எனச் சான்றளித்து வியக்க வைக்கிறது.*

"நூறு மேல் படைத்துத் தமிழ் மொழிக்
களித்த நுட்பமார் செந்தமிழ் அறிஞர்
கூறுவ தெல்லாம் பிறர் நலம் வேண்டிக்
கொடையென வழங்கிய செம்மல்
நூறு மேல் அறிஞர் செந்தமிழ் அன்பர்
மகிழவே படையல்செய் தளித்தார்
பேரறி வாளர் சுப்புரெட் டியாரின்
பெருமைகள் போற்றுவோம் நாமே.

பணிந்து வணங்கும்,

03 June 2015 **அசு இளங்கோவன்**

Dr AS Elangovan MA (Tamil), MA(Eng), MEd, MPhil, PhD
South Zone Secretary [Retd.]
Sahitya Akademi, Chennai

உள்ளடக்கம்

001

அன்புப்படையல்கள்
[Dedications]

பின்னிணைப்புகள்

076 காலக்கோடு ~ வாழ்க்கை
[TIMELINE – Life]

080 காலக்கோடு ~ நூல்கள்
[TIMELINE – Books]

085 காலக்கோடு ~ பாராட்டுதல்கள்
[TIMELINE – Honour]

086 காலக்கோடு ~ அறக்கட்டளைகள்
[TIMELINE – Endowments]

088 பேராசிரியரின் ஆசிரியப்பெருமக்கள்
[Professor's Teachers]

090 பணிகள்
[Service]

092 பதவிகள்
[Positions]

095 தொடர்புடையோர்
[Friends & Associates]

"The time to relax is when you don't have time for it."

~ Sydney J Harris

1916 2016

அன்புப்படையல்

Dedications

The unique feature one could find among the books of Professor is that almost all his books are DEDICATED to some famous personalities from almost all walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for dedicating his books. The amazing range includes Educational Administrators, Headmasters, Professors of Tamil, Professor of Saiva Siddhantha, Professors of Economics, Vice-Chancellors, Philanthropists, Bureaucrats, Ministers, Governors, Tamil Scholars, Linguists, Judges, Social Workers, Industrialists, Rationalists, etc,. Select samples are presented here.





1949
Kavignan Ullam

கவிஞன் உள்ளம்

Dedicated to:
V Venkatarajulu Reddiar,
Former Research Professor,
Dept of Tamil, University of Madras

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றி ஒய்வு பெற்று வைகுண்ட வாசியான பன்மொழிப் புலவர் திருவாளர் **வே. வேங்கடராஜுலு ரெட்டியார்,** *அவர்கட்கு,*

அன்புப் படையல்

திருந்திய வுளத்தை மாலடிக் காக்கிச்
சேவையைத் தமிழ்மொழிக் காக்கிப்
பொருந்திய வமுதை யார்வலர்க் காக்கிப்
புலமையை யடக்கத்திற் காக்கி
மருந்தெனும் கருணை யெம்மனோர்க் காக்கி
மனத்துற வெய்திய பெரியோன்
அருந்தமிழ்க் குரிசில் **வேங்கடராசன்**
அடிமலர்க் குரிய திந்நூலே.

1916 2016

1957
Ariviyal Payitrum Murai
அறிவியல் பயிற்றும் முறை

Dedicated to:
Dr RM Alagappa Chettiar
Educationist & Philanthropist

‘உண்மைச் செல்வர்’, வள்ளல் டாக்டர் **RM. அழகப்பச்செட்டியார்,** அவர்கட்கு,

அன்புப் படையல்

நலம்கிளர் ஊக்கம் எறும்புனல் பெய்
நாள்தொறும் அன்புற வளர்த்த
பொலம்கிளர் முயற்சிக் கொடியினில் பூத்த
பொருள்எனும் நறுமலர் கொய்து
புலம்கிளர் தெய்வக் கலைமகள் அடிக்கே
பொற்புற அணிந்துளம் களிக்கும்
வலம்கிளர் **டாக்டர் அழகப்ப வள்ளல்**
மலரடிக் குரியதிந் நூலே.

1957

Tamil Payitrum Murai

தமிழ் பயிற்றும் முறை

Dedicated to:
Prof Dr N Subbu Reddiar's **Mother**

*என் அருமை அன்னைக்கு (**திருமதி காமாட்சி அம்மாள்**)*

அன்புப் படையல்

நற்றவத் தாயே! வாழி!பல்   நலனுறப்
பெற்றெனை வளர்த்துக்
கற்றவ னாக்கிப் பேணினை! உலகிற் காணுறு
பொருளெலாம் கொணர்ந்துன்
சிற்றடிப் புறத்தில் வைப்பினும் அவைநின்
சீரருட் கொப்பென லாமோ?
மற்றிதை யுணர்வேன்! எனினுமிந் நூல்நின்
மலர்ப்பதத் துரிமைசெய் தனெனே.

1957
Kalingathup-parani Aaraichi
கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி

<u>Dedicated to:</u>
Kamban Adipodi **Sa Ganesan**,
Tamil Scholar, Karaikudi, Tamilnadu



தலைவர்கட்குத் தலைவரும், தொண்டர்கட்குத் தொண்டரும், புலவர்கட்குப் புலவரும் கம்பர் அடிப்பொடி **திரு. சா. கணேசன்,** அவர்கட்கு,

சமர்ப்பணம்

தீந்தமிழ் அன்னைக்கு இனியநற் புதல்வன்;
செம்மையில் பிறழ்ந்திடா உளத்தன்
காந்திஎம் பெருமான் நெறிவழி நிற்போன்;
கல்சொலும் கதையுணர் அறிஞன்;
சாந்தமார் முப்பால் வாசகம் சுவைப்போன்;
தண்டமிழ்க் கம்பனுக்கு அடியான்
*மாந்தருள் சிறந்தோன் **கணேசனாம்** எங்கள்*
வள்ளலுக்கு உரியதுஇந் நூலே.

1958

Anuvin Aakkam
அணுவின் ஆக்கம்

<u>Dedicated to:</u>
TS Avinasilingam,
Former Education Minister, State of Madras



சென்னை மாநில மேனாள் கல்வியமைச்சர் ***தி.சு. அவினாசிலிங்கம்,*** *அவர்கட்கு*

<u>சமர்ப்பணம்</u>

நற்குரு தேவர் திருவடிக் கன்பன்;
நாடுவாழ் வுறச்சிறை புக்கோன்;
பற்பமென் மலர்வாழ் கலைமகள் தனக்கே
பண்புயர் பொருளெலாம் அளித்தோன்;
கற்பனைக் குயில்வாழ் தமிழ்ப்பொழில் நடுவண்
கலைக்களஞ் சியம்அமைத் திட்டோன்;
*அற்புதன்; எங்கள் நல்**அவி னாசி***
ஆண்டகைக் குரியதிந் நூலே.

1961

Kalvi Ulaviyal

கல்வி உளவியல்

<u>Dedicated to:</u>
Bharat Ratna **C Subramaniam,**
Former Minister, State of Madras

சென்னை மாநில நிதி, கல்வி அமைச்சர் ***சி. சுப்பிரமணியம்,*** *அவர்கட்கு*

<u>*உரிமையுரை*</u>

சென்னைமா நிலத்திற் செந்தமிழ்
திருமுடி புனைந்தரி யணையில்
மன்னிவிற் றிருக்க மதிசெய்கல் லூரி
மாணவர் பலகலை களையும்
பன்னுதீந் தமிழிற் பயின்றிட உழைக்கும்
பண்பினன்; நிதிகலைை அமைச்சன்
இன் னுரை வல்லான்; ***சுப்பிர மணியற்***
கிவ் வுள நூல்உரி யதுவே.

1961

Arivukku Virundhu

அறிவுக்கு விருந்து

Dedicated to:

Tamil Kadal **Raaya Cho**
Tamil Scholar Par Excellence



'தமிழ்க்கடல்', 'சிவமணி', 'சிவம் பெருக்கும் சீலர்' **இராய.சொ.,** அவர்கட்கு

<u>அன்புப் படையல்</u>

பக்குவமெய்ஞ் ஞானியென உலகம் போற்றும்
பாரதியைக் கண்டுமகிழ் பேறு பெற்றோன்;
மிக்கநறுங் கலைத்தமிழ்நூல் ஒன்று கூடி
வெண்ணீறு புனைந்ததென விளங்கும் சான்றோன்;
தக்கதிரு வாசகத்தை மூன்று போதும்
தலைதாழ்த்திப் பணிந்திடுவோன்; எங்கள் ***ராய***
சொக்கலிங்கன் *எனுமி பெயர்கொள் தமிழ்க் கடற்குச்*
சொல்விருந்தாம் இச்சிறுநூல் உரிமை யாகும்.

1961

Ilaignar Vaanoli

இளைஞர் வானொலி

<u>Dedicated to:</u>

K Kamaraj

Former Chief Minister, State of Madras



தமிழ்நாட்டு எண்ணற்ற ஏழைச் சிறுவர்களின் எதிர்காலத்தை எண்ணத்தில் கொண்டு பணியாற்றும் ஏழை பங்காளர் முதலமைச்சர் ***திரு. கே. காமராசர்,*** *அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

பயிர்காக்கும் உழவனென உயிர்கள் காக்கும்
பான்மையிலே முதலமைச்சர்; வறியர் தாமும்
மயல்போக்கும் கல்வியினால் மேன்மை பெற்று
வாழ்வுபெற வழியமைத்தோன்; பார தத்தை
உயர்வாக்க உழைப்பதிலே முதன்மைத் தொண்டர்;
ஒருநலமும் தாம்நாடார் ***காம ராசர்***
பெயர் வாழ்த்தி அவர்பிறந்த நன்னாள் வாழ்த்திப்
பெரிதுவந்து படைக்கின்றேன் இந்த நூலை.

1963

Tolkappiyam Kaattum Vazhkkai

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

<u>Dedicated to:</u>

S Govindarajulu Naidu

Vice-Chancellor

Sri Venkateswara University, Tirupathi

திருவேங்கடவன் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு, அவர்கட்கு

<u>அன்புப் படையல்</u>

ஆங்கிலக் கலைஞன்; சீர்த்துணை வேந்தன்
அன்பெனும் தேன்பொதி யுளத்தன்;
வேங்கடே சுவரன் பல்கலைக் கழக
விளக்கினை மேதகத் தூண்டிப்
பாங்குறு கலைமான் முகத்தொளி கண்டோன்;
பண்புறு **கோவிந்த ராசன்**
ஓங்குநற் புகழோன் திருவடி மலரில்
ஒளிமணம் பெறுகஇந் நூலே.

1963
Athisaya Minnanu
அதிசய மின்னனு

Dedicated to:
ND Sundaravadivelu, Former Director
Dept of Education, Government of Tamilnadu

தமிழகக் கல்வித்துறை இயக்குநர் **திரு. நெ.சு. சுந்தரவடிவேலு,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்
நல்லிளங் கோவுயர் கபிலன்
கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்
குலவிய செந்தமிழ்த் தாயின்
பற்றறு வயிற்றில் திருவொடு தங்கிப்
பண்வொடு தோன்றிய செல்வர்
கற்வர்க் கினியர்; **சுந்தரவடி வேல்**
கண்ணியர்க் குரியதிந் நூலே.

1964
Illara Neri
இல்லற நெறி

Dedicated to:
Thiru Vi Kalyanasundaranar [Thiru Vi Ka]
Great Tamil Scholar

‘தமிழ்த் தென்றல்’ **திரு.வி.கல்யாணசுந்தரனார் (திரு.வி.க.),** அவர்கட்கு

அன்புப் படையல்

சாந்தியின் வடிவம்; செந்தமிழ்த் தென்றல்
சால்பினுக் கமைந்ததோர் உரைகல்;
காந்தியின் நெறியால் நல்வழி காட்டி;
கருணையாம் திரைதவழ் வேலை;
பாந்தளை முல்லை அலஙகலாய்ச் செய்யும்
பண்புரு; பெண்மையை போற்றும்
ஏந்தலார் - அமரர் - **திரு வி.க.** பதத்தில்
எழில்மணம் பெறுகஇந் நூலே.

1964

Rockettukal [Rockets]

இராக்கெட்டுகள்

<u>Dedicated to:</u>

Kundrakudi Adigalar

*தவத்திரு **குன்றக்குடி அடிகளார்,** அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

செந்தமிழ்த்தாய் மலரடியை மறவாச்சிலர்;
சீர்திருத்தக் கொடிவளர்க்கும் சீர்மை மிக்கார்;
சந்தஇளம் பிறையணிந்த மூர்த்திக் கன்பர்
தயாமூல தத்துவத்தை நன்கு ணர்ந்தோர்;
சிந்தனைக்கு விருந்தளிக்கும் பண்புச் செல்வர்;
தேன்மொழியால் தமிழகத்திற் குயிர்அ ளிக்கும்
அந்தணர்; நல் குன்றைநகர் வாழ வந்த
அடிகளார்க் *கிச்சிறுநூல் உரிய தாமே.*

1965
Muthollaayira Vilakkam
முத்தொள்ளாயிர விளக்கம்

<u>Dedicated to:</u>

Mahamahopadhyaya **Dr UV Swaminatha Iyer**

Reverentially Dedicated to The Sacred Memory of Mahamahopadhyaya
Dr. U.V. Swaminatha Iyer, The First and Foremost among Tamil Scholars

<u>அன்புப் படையல்</u>

முதலைவாய் அகப்பட்டுக் களிறு கூவ
முன்வந்து புரந்திட்ட திருமால் போலச்
சிதலைவாய் அகப்பட்டுக் கலங்கி மாழ்கிச்
சீர்குன்றி அகம்புறமும் நைந்து நொந்து
விதலைநோய் உறுதமிழைக் காக்க வந்த
*வீறுடையான் **சீர்சாமி நாதன்** தெய்வப்*
பதமலரில் இந்நூலை அன்பி னோடு
படைக்கின்றேன் பணிகின்றேன் வாழ்த்து கின்றேன்.

1966
Ilaignar Tolaikkaatchi
இளைஞர் தொலைக்காட்சி

<u>Dedicated to:</u>
Bharat Ratna **C Rajagopalachary** [Rajaji]
Former Governor-General of India

பாரத இரத்தினம் இராஜாஜி அவர்களின் 88-வது ஆண்டு நிறைவின் நினைவாக

<u>அன்புப் படையல்</u>

மல்லிகை மலர்போல் தூயவன்; வேத
வரம்புறும் உபநிட தத்தில்
சொல்லிய பொருளை ஆய்ந்தவன்; சிறுமைச்
சூழலில் புகாப்பெரு நடையன்;
நல்லியல் கலைஞன்; சிலசொலால் சான்றோர்
நன்மனம் கவர்ந்தவன்; அஞ்சா
வல்லிய மனைய வீர ராஜாஜி
மலர்ப் பதந் தொளிர்கஇந் நூலே.

1966
Anukkaru Bouthigam

அணுக்கரு பௌதிகம்

Dedicated to:
Sri TP Meenakshisundaram,
Vice-Chancellor,
Madurai-Kamaraj University

அன்புப் படையல்

சீலமார் தமிழ்த் தாய் புரிதவத் துதித்தோன்;
செவ்விய நல்லுளச் செம்மல்;
ஞாலமாம் கனியின் சாறெனத் தக்க
நன்மொழி பலபல சுவைத்தோன்;
கோலமார் மதுரைப் பல்கலைக் கழகக்
கோயிலின் முதற்றுணை வேந்தன்;
தாலம் தோங்கும்மீ னாட்சிசுந் தரனார்
தாள்மலர்க் குரியதிந் நூலே.

1967
Ariviyal Virundhu



அறிவியல் விருந்து

<u>Dedicated to:</u>
Sri TM Narayanasami Pillai, Tamil Scholar

*உயர்திரு **தி.மு. நாராயணசாமி பிள்ளை,** அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

பங்கயம் பூத்த நீலமால் வரைபோல்
பணிமிசை பொலியரங் கேசன்
துங்கமார் பாதம் மறந்திடா வுளத்தோன்
தூயநல் அறநெறி காத்து
மங்கலப் புகழைப் பெற்றவன்; வேழ
வனத்திருப் பணிபுரி அன்பன்;
பங்கமில் **நாரா யண**ப்பெரு நம்பி
பதமலர்க் குரியதிந் நூலே.

1971
Malai Naattu Thirupathikal
மலை நாட்டுத் திருப்பதிகள்

<u>Dedicated to:</u>
Kanchi Prathivathi Bhayangaram
Annangaracharya Swamigal
Great Scholar in Tamil & Sanskrit



காஞ்சி பிரதிவாதி பயங்கரம் ***அண்ணங்கராசாரிய சுவாமிகள்***
அவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவின் மகிழ்வாக

<u>அன்புப் படையல்</u>

வடமொழிச் சுவையைத் தென்றமிழ்ப் பயனை
மாநிலம் வியப்புறப் பருகித்
திடமுறு ஞானக் கொண்டலாய் வளர்ந்து
சேதன ரெனும்பயிர் முளைக்கக்
கடலுல குவக்க மழைபொழி **அண்ணங்**
காரவர் திருவடி மலரில்
சுடர்மிகப் பெற்று வயங்குக என்றித்
தூயநூல் சமர்ப்பணம் புரிந்தேன்.

1916 2016

1972
Paranip-polivukal

PARANIP - POLIVUKAL
07

Dr. N. Subbu Reddiar

Sri Venkateswara University
1972

பரணிப் பொழிவுகள்

<u>Dedicated to</u>:
All Tamil lovers outside Tamilnadu

“All Speakers and Lovers of Tamil
whose lot is cast in lands
other than Tamil Nadu”

<u>அன்புப் படையல்</u>

வண்ணமார் கடலை மலைகளைக் கடந்து
வயங்குபன் னாடுதொ றுற்று
திண்ணிய அறிவாற் கரத்தினாற் பணிகள்
சீருறப் புரிந்துநல் லுளத்தில்
பண்ணிசை தெய்வத் தமிழினை மறவாப்
பாங்குறு சகோதரர் தங்கள்
கண்ணியஞ் சான்ற நண்பினுக் குவந்து
கனிந்தகா ணிக்கையிந் நூலே.

1973
Ampulip-payanam
அம்புலிப் பயணம்

Dedicated to:

Dr D Jagannatha Reddy

Vice-Chancellor, Sri Venkateswara University



திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்

துணைவேந்தர் **டாக்டர் D. சகந்நாத ரெட்டி,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

நள்ளிரு ளிடையே முளைத்தசெஞ் சுடர்போல்
நலமுறத் தோன்றிய சீலன்;
ஒள்ளிய அறிவின் நற்பய னாய்
ஒழுக்கமும் திறமையும் பெற்றோன்;
தெள்ளிய வுளத்தன்; பல்கலைக் கழகச்
செவ்விய இதயமே போல்வான்;
விள்ளரும் புகழான்; **சீர்சகந் நாத**
வேந்தனுக் குரியதிந் நூலே.

1974
Namadhu Udhal



நமது உடல்

Dedicated to:
Chitbhavananda Adigal
[Religious Scholar]

தவத்திரு **சித்பவாநந்த அடிகளார்** *, அவர்கட்கு*

அன்புப் படையல்

வங்கநாடு ஈன்ற நரேந்திரன் கண்ட
மாண்புறு கற்பனை வித்தைத்
துங்கமார் கல்விச் சாலைகள் மலிந்த
தூயநல் தபோவன மாக்கிப்
பொங்கிய ஞானத் தீங்கனி தந்து
புவியெலாம் நுகர்ந்திடச் செய்த
எங்கன்மா முனிவர் **சித்பவா நந்தர்க்**
கிச்சிறு நூலிரித் தாமால்.

1976
Tholai Ulaga Selavu
தொலை உலகச் செலவு

<u>Dedicated to:</u>
Dr VC Vamana Rao,
Former Vice-Chancellor, Sri Venkateswara University

திருவேங்கடவன் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்
டாக்டர் ***வி.சி. வாமனராவ்,*** *அவர்கட்கு*

<u>*அன்புப் படையல்*</u>

கலைமகள் இதயப் பெற்றியை உணர்ந்தோன்;
கருத்தினில் ஒளியினை வளர்ப்போன்;
நிலையினில் திரியாப் பண்பினில் ஒளிர்வோன்;
நேயமே பொருளெனக் கொண்டோன்;
மலைவிளக் காகும் பல்கலைக் கழக
மாண்பினுக் குறுதுணை யானோன்;
தலைமைசால் புகழ்சேர் ***வாமன ராவின்***
சால்பினுக் குரியதிந் நூலே.

1916 2016

1977
Paandi Naattu Thirupathikal

பாண்டி நாட்டுத் திருப்பதிகள்

<u>Dedicated to:</u>
Srimad Aandavan



<u>பக்திப் படையல்</u>

நீண்டவன் குணத்தில் தோய்குரு கூரன்
நேயத்தோ டருள்கனிச் சாறும்
வேண்டிய தளிக்கும் வடமொழி தந்த
வித்தக நான்மறைத் தேனும்
ஈண்டியெஞ் ஞான்றும் பாய்தலால் அமுதாம்
இதயத்தைப் பெற்றிடு ***சீமத்***
ஆண்டவன் *பாத மலரினில் வண்டாய்*
அருளினைத் துய்க்க இந் நூலே.

1977

Religion and Philosophy of Nalayiram with special reference to Nammalvar

[**Professor's PhD Thesis**]

Dedicated to:

Bharat Ratna Dr S Radhakrishnan

Dr Sarvepalli Radhakrishnan

The Great Modern Interpreter of Indian Philosophy

1980
Vada Nattu Thirupathikal

வடநாட்டுத் திருப்பதிகள்

Dedicated to:
Akobilam Jeeyar Swamigal [Saint]

*அகோபிலம் **அழகிய சிங்கர் ஜீயர்** சுவாமிகள், அவர்கட்கு*

அன்புப் படையல்

திருவரங்கம் தனித்துயிலும் பெரியபெரு மாளின்
திருவருள்போல் மிகவுயர்ந்து, சடகோப ரிசைத்த
பெருவரங்கன் தருகின்ற நம்திருவாய் மொழிபோல்
பீடுற்று, யதிராஜன் பாஷியம்போல் ஓங்கிக்,
குருவரங்கன் படர்கின்ற பெருந்தம்ப மாகிக்
குலவுபெருங் கோபுரத்தை சுரங்கத்தே வளர்க்கும்
ஒருவருங்கொள் ளாச்சீரைப் பணிவுடனே தாங்கி
*உருக்கங்கொள் **அழகியசிங்** கருக்கிந்நூல் உரித்தே.*

1980
Chozhanaattut-thirupathikal - I

சோழநாட்டுத் திருப்பதிகள் - I

<u>Dedicated to:</u>
Vanamamali Sadagopa Ramanuja Jeeyar Swamigal [Saint]



வானமாமலை மடத்து 28-வது பட்டம்
ஸ்ரீமத் பரமஹம்ச சடகோப ராமாநுஜ ஜீயர் சுவாமி,
அவர்களின் திருவடிகளில்

<u>பக்திப் படையல்</u>

மோனமா தவத்தின் முடிமணி யான
முகுந்தளின் கருணையில் உருகும்
ஞானமா தவர்கள் பதின்மருக் குளத்தை
நற்பெருங் கோயிலாச் செய்து
தானமே முதலாம் குணங்களாம் பணியால்
சால்புடன் அலங்கரித் துவக்கும்
வானமா மலைநஞ் சீயர்தம் பாத
மலரினிற் சிறக்கஇந் நூலே.

1981
Chozhanaattut-thirupathikal - I
சோழநாட்டுத் திருப்பதிகள் - II

<u>Dedicated to:</u>
Kanchi Periyavar

காஞ்சி காமகோடி பீடம் 68-வது பட்டம்
ஜெகத்குரு தவத்திரு சந்திரசேகரேந்திர சரசுவதி பரமாசாரிய சுவாமிகள், திருவடிகளில்

<u>பக்திப் படையல்</u>

பங்கயப் பதத்தால் பூமியைக் குன்றாப்
பாவனம் ஆக்குவோர்; தோய்ந்து
கங்கையே முதலாம் தீர்த்தத்தில் தூய்மை
களிந்திடப் புரிபவர்; நோக்கால்
மங்கலப் பொலிவை உயிர்தொறும் நிரப்பும்
*மாண்பினர்; **சந்த்ரசே கரப்பேர்ச்***
***சங்கரா சார்யர்** திருவடி மலரில்*
தளிர்ந்தொளி பெறுகஇந் நூலே.

1981
Akattinai-k-kolkaikal
அகத்திணைக் கொள்கைகள்

<u>Dedicated to:</u>
Avvai Duraisami Pillai

<u>அன்புப் படையல்</u>

சங்க நூற் கடலில் தோய்ந்தெழு கொண்டல்;
சைவசிந் தாந்தத்தின் திலகம்;
மங்கலத் தமிழ்த்தாய் இதயத்தை மலர்த்தும்
வான்சுடர்; வள்ளலார் நூலின்
இங்கிதம் தேரும் அஞ்சிறைத் தும்பி;
இமயத்தைப் புலமையால் தாழ்த்தும்
துங்கமார் **ஔவை** - நம் - **துரைசாமித்**
தோன்றலுக் குரியதிந் நூலே.

1982
Muthi Neri
முத்தி நெறி

<u>Dedicated to</u>:
Mrs Chellapapa [Wife]

என் அருமைத் துணைவி ***திருமதி எஸ். செல்லபாப்பாவுக்கு***

<u>*அன்புப் படையல்*</u>

பொங்கிய கலக்கம் சார்தரு போதில்
பூரணத் தெளிவருள் அமைச்சாய்;
சங்கடப் புழுக்கம் நேர்தரு போதில்
சால்பருள் மலயமா ருதமாய்
துங்கமார் வீட்டின் தீபமாய்; எனது
துணைவியாம் **செல்லபாப் பாவின்**
மங்கலக் கழுத்தில் மீளயான் அணியும்
மங்கல நாண் இந்த நூலே.

1982
Kuyil Paattu - Oru Mathipeedhu
குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு

<u>Dedicated to:</u>
Rasikamani TKC



இரசிகமணி **டி.கே. சிதம்பரநாத முதலியார்** *(டி.கே.சி.), அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

புனிதகுற் றாலத் தருவியின் சுகத்தைப்
புதுமது வாக்கிஅம் மதுவை
இனியநல் லமுதாய் உயர்த்திநற் றமிழில்
இன்பமே மணந்திடக் கலந்து
நனியருள் கலைஞர்; ரசனையே வடிவாம்
நல்லுளம் பெற்ற மெய்ஞ் ஞானி;
கனிவுறும் அன்பர் எங்கள் **டி.கே.சி.**
கழற்கிந்நூல் சமர்ப்பணம் வாழி!

1982
Panchaali Sabatham - Oru Nokku

பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு

<u>Dedicated to:</u>

Fans of Bharathiar

<u>*அன்புப் படையல்*</u>

'பாரதிப் பித்தர்களுக்கு'

1983

Puthukavithai - Pokkum, Nokkum

புதுக்கவிதை - போக்கும், நோக்கும்

Dedicated to:
Dr MG Ramachandran,
Chief Minister, Tamilnadu

பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், மாண்புமிகு தமிழக முதல்வர்
திரு.எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு

அன்புப் படையல்

சுற்றுறும் ஏழை எளியவர் உள்ளம்
தூயநற் கோவிலாம்; அவண்வாழ்
கொற்றமார் மகிழ்வே தெய்வமாம்; அதற்குக்
கோதிலாத் தொண்டியற் றுவதே
நற்றவ யோகம் என்றுணர் முதல்வர்;
நற்குணப் பொன்மனச் செம்மல்;
உற்றநற் றாயார் நிகர்த்தளம் ஜியார்க்
குகந்தகா ணிக்கையிந் நூலே.

1983

Sila Nokkil Naalaayiram

சில நோக்கில் நாலாயிரம்

<u>Dedicated to:</u>

PR Purushothama Naidu

முத்தர் உயர்திரு ***பு.ரா. புருடோத்தம நாயுடு,*** *அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

முத்தர்கள் பராவும் சீர்த்திசால் திருவாய்
மொழியெனும் பாற்கடல் நடுவண்
வித்தகம் பெருகுந் தண்ணருள் உளத்தை
மேவுநஞ் சேடனாய் மாற்றிப்
பத்திகொள் கவிதா யோகத்தைப் புரிந்து
பாரகத் தொளியினை வளர்க்கும்
சித்தனெம் புருடோத் தமநம்பி பதத்தில்
திருவினைப் பெறுகஇந் நூலே.

1983
Bharatheeyam
பாரதீயம்

Dedicated to:
Justice Dr S Maharajan

அமரர் ஜஸ்டிஸ் **டாக்டர் எஸ். மகராஜன்,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

ஆங்கில அணங்கும் செந்தமிழ்த் தாயும்
ஆடல்செய் கின்றநா வுடையார்;
ஓங்கிய கம்பன் மாண்பினை மேற்கும்
உணர்ந்திடப் புரிஎழுத் தாளர்;
பாங்குறு புகழ்சால் ஷேக்ஸ்பியர் பொதியல்
படர்தரச் செய்தவர்; கலைச்சொல்
ஈங்களித் துயர்ந்தோர் **எஸ். மக ராசர்**
இசையுடம் பணிகஇந் நூலே.

1983

Kambanil Makkal Kural

கம்பனில் மக்கள் குரல்

<u>Dedicated to</u>:
Dr V Varadachariar, Research Advisor,
Pondicherry-French Research Institute, Pondicherry

திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டுகள் வடமொழித்துறையில்
துணைப் பேராசிரியராகப் பணியாற்றி
ஓய்வு பெற்ற பிறகு தற்சமயம்
புதுச்சேரி ஃபிரெஞ் ஆய்வுக் கழகத்தில் ஆய்வு நெறியாளராகப் பணியாற்றும்
***டாக்டர் வி. வரதாசாரியார்**, அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

பைந்துழாய் மௌலிப் பரமனை யுளத்திற்
பதித்தவர்; உபயவே தாந்தம்
சந்ததம் பயிலும் நாவினர்; குன்றாத்
தகுதியை அடக்கமாம் மெருகிட்
டந்தமிழ் பொலிவைப் பெறுபவர்; எனக்கும்
ஆய்நெறி காட்டிய ஞான
சுந்தரர் வரதா சாரியர் பாதச்
சுடரினில் மலர்கஇந் நூலே.

1983

Kavithai Puyitrum Murai



கவிதை பயிற்றும் முறை

<u>Dedicated to:</u>
All Tamil Teachers

*கவிதையை உணர்வூட்டிப் பயிற்றிக் கற்போரிடம் கவிதை வெறியை மூளச்செய்யும் **தமிழாசிரியர்கள்**, அனைவர்க்கும்*

<u>அன்புப் படையல்</u>

காப்பியம் யாவும் கசடற உணர்ந்தோர்;
கற்பகம் எனநிழல் தருவோர்;
பூப்பியல் காடாய் மணப்பவர்; கலைகள்
புகுதரு கடல்எனப் பொலிவோர்;
நாப்பயில் தமிழால் மாணவப் பயிரை
நாடொறும் மாண்புற வளர்ப்போர்;
மாப்புகழ் தமிழா சிரியர்கட் கிந்நூல்
வழங்கினள் படையலாய்; வாழ்க!

1984

Saiva Samaya Vilakku

சைவ சமய விளக்கு

<u>Dedicated to:</u>

Prof K Satchidananda Murthy, Former Vice-Chancellor,
Sri Venkateswara University, Tirupathi



Dedicated to **Prof. K. Satchithananda Murthy** (Ex-Vice Chanceller, Sri Venkateswara University, Tirupati) as a humble token of the Author's warmest regard and deepest respects and appreciation of his versatility and sincere admiration of true scholarship.

<u>அன்புப் படையல்</u>

திங்களஞ் சடையார்க் குளத்தினை மன்றாய்ச்
செய்தவர்; தத்துவ மேதைத்
பொங்கறு துயரம் அனைத்தையும் கணத்திற்
போக்கிடு நகைச்சுவைச் செல்வர்;
பங்கமில் எளிமை பண்பினால் மேருப்
பருப்பதம் எனப்பொலி அறிஞர்
*மங்கலச் **சச்சி தானந்த மூர்த்தி***
மாண்பினுக் குரியதிந் நூலே.

1984
Vaazhaiyadi Vaazhai
வாழையடி வாழை

Dedicated to:
CN Annadurai Former Chief Minister, Tamilnadu

இருபதாம் நூற்றாண்டில் சமூகம் அரசியல் ஆட்சி இவற்றில் தம் இணையற்ற பேச்சாலும் எழுத்தாலும் செயலாற்றும் திறனாலும் உள்ளத் தூய்மையுடன் பணியாற்றித் தமிழக வானில் துருவ மீன் போல திகழும்
பேரறிஞர் அண்ணா, *அவர்கட்கு*

__அன்புப் படையல்__

மன்னிய புகழ்சால் தமிழர்தம் நெஞ்ச
மலரினும் கலைவளத் தாலே
நன்னயஞ் சான்ற நம்முத லமைச்சர்
நயந்திடும் சீரிய உளத்தும்
சென்னைமா நகரின் கடற்கரைப் புறத்தும்
சீரிய நற்றுயில் புரியும்
தன்னிகர் இல்லாச் சீரிய **அண்ணா**
தாள்மலர்க் குரியதிந் நூலே.

1985

Vainava Uraivalam



வைணவ உரைவளம்

Dedicated to:
Mahavidwan **K Venkatasamy Reddiar** [Great Tamil Scholar]

பூதூர் சுவாமிகள் என்னும் முதுபெரும்புலவர் ,
*மகாவித்துவான் **கி. வேங்கடசாமி ரெட்டியார்,** அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

நன்னயஞ் சான்ற வுளத்தினை ஆழ்வார்
நவின்றருள் மறைகளுக் களித்தும்
பன்னரும் நுட்ப அறிவினைப் புலமைப்
பாவலர் தங்களுக் களித்தும்
பொன்னெனத் திகழும் ஒப்பிலா வுயிரைப்
பூரண நாரணற் களித்தும்
*மன்னிய புகழ்கொள் **வேங்கட சாமி***
வள்ளலார்க் குரியதிந் நூலே .

1985
Thambiran Thozhar
தம்பிரான் தோழர்

<u>Dedicated to:</u>
Pulavar **KC Kuppusamy Reddiar** [Tamil Teacher]



தம்பிரான் தோழர் **'உழவர் தோழருக்கு'**

<u>அன்புப் படையல்</u>

பண்ணியல் தமிழை நலமுறக் கற்றோர்;
பயன்தரு தொண்டுகள் புரிந்தோர்;
திண்ணிய உளத்தோர்; தோன்றிய சமூகம்
சிறப்புற ஒளிவழங் கறிஞர்;
கண்ணென வளர்ந்த புதல்வியை எனது
கான்முளைக் களித்தசம் பந்தர்;
நன்னரும் புகழ்சால் குப்புசா மிப் *பேர்*
நம்பர்க்குப் படையல் இந்நூல்.

1985
Collected Papers
[Silver Jubilee Commemoration of the Dept of Tamil at Sri Venkateswara University, Tirupathi]

Dedicated to:
All Research Guides



Respectfully dedicated to that small world of scholarship which while content to remain 'unseen and unknown' out of becoming humility yet is the fountain-head of the highest inspiration of creativity and architect of change and progress -
the world of the directors and guides of true research.

அன்புப் படையல்

பற்பல வடிவொ டெண்ணமாம் அலைகள்
பாங்குற அலைந்திடும் உளத்தில்
கற்பனை உதவ ஆய்வென்னும் கலத்தைக்
களிப்புடன் நடத்திகு வோர்க்குப்
பொற்புறும் ஒளியை நாடொறும் வழங்கும்
புரையறு கலங்கரை விளக்காய்
நிற்பதே பணியாய்க் கொளும் ***நெறி யாளர்.***

1986

Gnanasambhandhar

ஞான சம்பந்தர்

Dedicated to:

PBK Raja Chidambaram [Philanthropist]



திருச்சி மாவட்டம் பெருவளநல்லூர் பண்டகுலத் தோன்றல் ஈத்துவக்கும் இன்பம் கண்ட பெருந்தகையும் ஆட்சித் துறையில் அருந்தொண்டாற்றி ஆசிரியப் பெருமக்கள், ஏழை எளியவர்கள் இவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தவரும் நாட்டுப் பற்றாளருமான திரு. **PBK.** *இராஜா சிதம்பரம், அவர்கட்கு*

அன்புப் படையல்

ஒப்பிலாப் பண்பன்; நுட்பமார் அறிஞன்;
உறுவது தேர்ந்துணர் விறலோன்;
திப்பியம் மிக்க கொள்கையன்; அறிஞர்
சிந்தனைக்கு விருந்தருள் திறத்தன்;
துப்பமை உளத்தன்; எங்குல விளக்காய்த்
துலங்குவோன்; நியதியைத் தெளிந்தோன்;
*செப்பமார் '***இராஜா சிதம்பரம்** *என்னும்*
செம்மலுக் குரியதிந் நூலே.

1986

Naavukkarasar

நாவுக்கரசர்

Dedicated to:

SR Naga Reddiar [Philanthropist]



திருச்சி மாவட்டம் வைரிசெட்டிப் பாளையம் பண்டகுலத் தோன்றல்
ஈத்துவக்கும் இன்பம் கண்ட பெருந்தகை
சிவனேசச் செல்வர் ***திரு எஸ். ஆர். நாக ரெட்டியார்,*** *அவர்கட்கு*

அன்புப் படையல்

செந்தமிழ்க் கன்பர்; பண்பினில் உயர்ந்தோர்;
திருந்துமெம் குலக்கதி ரானோர்;
சிந்தனை வளர்க்கும் விருந்தருள் அறிஞர்;
சீரிய வள்ளலார்க் கன்பர்;
நந்தலில் லாத நாமகள் பொலிய
நங்கலைக் கோவிலைப் படைத்தோர்;
சந்தமார் **நாக ரெட்டியார்க்** *கிந்நூல்*
சால்புறு காணிக்கை யாமால்.

1987

Alwarkalin Aaraa Amuthu

ஆழ்வார்களின் ஆரா அமுது

Dedicated to:

Dr GT Gopalakrishna Naidu,

Former Vice-President, Medical Council of India

மாவட்ட நலவாழ்வுத்துறை அதிகாரி, கோவை (ஓய்வு), முன்னாள் தலைவர்,
இந்திய மருத்துவக் கழகம், தமிழ்நாடு, முன்னாள் துணைத் தலைவர்,
இந்திய மருத்துவக் கழகம் (மையம்), புதுதில்லி,
***டாக்டர் GT கோபாலகிருஷ்ண நாயுடு,** அவர்கட்கு*

அன்புப் படையல்

வேங்கடத் தப்பன் திருவருட் டுறையில்
விருப்புடன் தோய்பவர்; ஆழ்வார்
பாங்குற வழங்கும் அமுதினை யுண்டு
பண்புறு நயமெலாம் நுகர்வோர்
ஓங்குமா வட்டம் பலநலம் காண
ஒப்பிலாப் பணிகளைப் புரிந்தோர்;
தேங்குசீர் டாக்டர் கோபால கிருஷ்ணச்
செம்மலார்க் குரியதிந் நூலே.

1987

Vittu Chithan Viritha Tamil

விட்டு சித்தன் விரித்த தமிழ்

Dedicated to:

K Venkatarasamy Naidu, Former Minister, State of Madras & Former Chairman, TTD Board, Tirupthi

சென்னை மாநில இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர்,
திருமலை-திருப்பதி தேவஸ்தான முன்னாள் ஆட்சிக்குழுத் தலைவர்,
சென்னை ஸ்ரீ வைணவ மகாசங்க முன்னாள் தலைவர்,
பத்மஸ்ரீ **K. வேங்கடசாமி நாயுடு,** BA.BL., *அவர்கட்கு*

அன்புப் படையல்

ஓங்குகாந் தீய நெறியினிற் பிறழா
உத்தமன்; திருநெடு மாலைப்
பாங்குறப் போற்றும் அன்மினன்; விண்ணில்
படர்ந்தெழு கார்முகில் அனையான்;
யாய்கனும் எவரும் போற்றிய அமைச்சாய்
அற்புதச் செயல்பல புரிந்தோன்;
வேங்கட சாமி நாயுடு பதத்தில்
மேவுகா ணிக்கையந் நூலே.

1988

Tamil Ilakkiyangalil -Aram, Needhi & Muraimai

தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை

Dedicated to:

Dr M Anansayanam Iyengar

Former Governor, Bihar & Former Speaker, Lok Sabha

தில்லிப் பாராளுமன்ற முன்னாள் சபாநாயகரும் பீகார் மாநில முன்னாள் ஆளுநரும் திருவேங்கடவனுக்கு அடிமையும், வைகுண்ட வாசியுமாகிய திரு. ***மாடபூசி அனந்தசயனம் அய்யங்கார்,*** *அவர்கட்கு*

அன்புப் படையல்

திவ்விய மான வேங்கடத் தப்பன்
திருவடி மலர்தரு வுளத்தன்;
கவ்வைசேர் மக்கள் உயர்வுற உழைத்த
கண்ணியன்; காந்தியின் தொண்டன்;
அவ்வியம் அறியாச் சால்பினன்! என்னை
அன்பினால் பண்பினால் பிணித்தோன்;
செவ்விய ***அனந்த சயனமய் யங்கார்***
சேவடிக் குரியதிந் நூலே.

1988
Paatthut-tiran



பாட்டுத் திறன்

<u>Dedicated to</u>:
M Natesasa Mudaliar, Former Tamil Professor,
St Joseph College, Trichy

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்
(அமரர்) **திரு. மு. நடேசமுதலியாரவர்**கட்கு

<u>அன்புப் படையல்</u>

நற்றவர் பராவும் சிவத்தையே பேணும்
நலத்தினர்; செந்தமிழ் உயர
உற்ற சஞ்சீவி அளித்தவர்; தமிழின்
ஒளியினை எனக்கருள் சீலர்;
கற்றவர் வியக்கும் புலமையே வடிவாம்
கண்ணியர்; திண்ணிய உளத்தர்;
கொற்றமார் ***நடேச முதலியார்*** *அன்பிற்*
குலாவுக இத்திரு நூலே.

1989
Kalvi Ulaviyal Kotpadugal

கல்வி உளவியல் கோட்பாடுகள்

<u>Dedicated to</u>:
Prof Gurusamy Reddiar, Prof of Psychology,
Govt Teachers' College, Chennai

பேராசிரியருக்கு 1940-41இல் கல்வி உளவியல் கற்பித்த பேராசான்,
சைதை ஆசிரியர் கல்லூரி உளவியல் பேராசிரியர்
குருசாமி ரெட்டியார், *அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

தலம்புகழ் சைதைப் பயிற்சிக்கல் லூரி
சால்புறப் புரிந்தபே ராசான்
நலம்பொலி உளத்தின் இயல்பினை விரிக்கும்
ஞானசூ ரியனெனத் திகழ்ந்தோன்,
புலம்பெற எனக்கு நுண்ணுணர் வளித்த
புண்ணியன்; தண்ணியன்; எங்கள்
குலம்புரி தவத்தால் வருகுரு சாமிக்
கொண்டலுக் குரியதிந் நூலே.

1989
Manickvasagar
மாணிக்கவாசகர்

Dedicated to:
K Rajamanickam Chettiar [Philanthropist],
Chittoor, Andhra Pradesh

சித்தூர் - கட்டமச்சி (ஆந்திரம்) புகழ் மிக்க வெல்லம் மண்டி அதிபரும்
அருட்பிரகாச வள்ளலாரின் திருத்தொண்டரும் முருக பக்தரும் ஈத்துவக்கும்
இன்பம் கண்டவரும் வணிககுலத் திருச்செல்வருமாகிய
முத்தர் ரி. இராசமாணிக்கம் செட்டியார், *அவர்கட்கு*

அன்புப் படையல்

கள்ளவிழ் மலர்நேர் திருவருட் பாவிற்
கலைச்சுரும், பாகியின் புற்றோர்,
ஒள்ளிய சித்தூர்ச் சங்கங்குன் றாகி
ஓங்குறத் திருப்பணி புரிந்தோர்;
வள்ளுவர் தங்கப் பதக்கத்து மணிபோல்
வயங்கிளோர்; நற்குணச் செம்மல்;
தெள்ளிய புகழ்சால் **இராசமா ணிக்கச்**
செட்டியார்க் *குரியதிந் நூலே.*

1989

Sadagopan Senthamizh
சடகோபன் செந்தமிழ்

Dedicated to:
K Santhanam Reddiar [Philanthropist]



வைணவச் செல்வரும் ஈத்துவக்கும் இன்பங் கண்டவரும்
வைகுந்தவாசியுமான சொர்ணாவூர்
திரு.கே.சந்தானம் ரெட்டியார், அவர்கட்கு

அன்புப் படையல்

திங்கள்நேர் முகத்து நாரணன் அருளில்
திளைத்தவர்; திருமகள் அருளால்
மங்கலச் செல்வம் யாவையும் பெற்று
மகிழ்ந்தவர்; நாதயா முனர்போல்
துங்கமார் பண்பால் பிரபந்தம் யாண்டும்
துலங்குறத் தொண்டுசெய் வள்ளல்;
எங்குல தீபம் பொருவில் **சந்தான**
ஏந்தலார்க் குரியதிந் நூலே.

1991

Paaventhar Bharathidasan - Oru Kannottam

பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்

Dedicated to:

Thanthai Periyar



தன்மான (சுயமரியாதை) இயக்கத் தலைவர் தந்தை பெரியார்
***ஈ.வெ. இராமசாமி**, அவர்கட்கு*

அன்புப் படையல்

கடவுளின் பெயரால் விளைந்திடும் கயமைக்
களையெல்லாம் களைபகுத் தறிவே!
மடமைகொள் சாதி மதமெனும் பேய்கள்
மடிந்திட எழுபடைக் கலமே!
திடமொடு தமிழர் தந்தையாய் மதிக்கத்
திகழ்ந்திடும் ஒருபெரு வாழ்வே!
உடல் பொருள் யாவும் தமிழினம் உயர
உதவியோய்! உனக்கிது படையல்.

1992

Parakalan Painthamizh

பரகாலன் பைந்தமிழ்

<u>Dedicated to:</u>
Justice N Krishnaswamy Reddiar

மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் **ஜஸ்டிஸ் N. கிருட்டிணாமி ரெட்டியார்,** *அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

பெருந்திரு உளத்தர்; வாய்மையால் ஞானம்
பிறங்கிடப் பிறங்கிடப் பொலிவோர்;
திருந்திய நீதிக் கோலினால் ஈசன்
திருவடி தொட்டநற் சீலர்;
அருந்தமிழ் போல இனியவர்; என்பால்
அன்பிளர்; உளவளம் நல்கும்
மருந்தினர்; எங்கள் **கிருட்டிண சாமி**
வள்ளலுக் குரியதிந் நூலே.

1993
Vaaymozhium Vaasakamum
வாய்மொழியும் வாசகமும்

Dedicated to:
Prof Dr SV Chittibabu,
Former VC, Annamalai & Madurai-Kamaraj Universities



மதுரை காமராசர், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் துணைவேந்தரும், இந்நாள் அரசின் உயர்மட்டக் கல்விக் குழுவின் துணைத் தலைவருமான பேராசிரியர் **டாக்டர் சை.வே.சிட்டிபாபு,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

விழைவினை வழங்கும் தூயகாந் தாரம்
விரவிய சொல்லினார்; அன்பால்
குழைவினைப் பெற்ற வுளத்தினார்; இயங்கும்
குளிர்மலர்க் காவொப்பார்; சால்பாம்
மழையினால் எல்லாப் பயிர்களை வளர்க்கும்
மாண்மினர்; நற்றுணை வேந்தர்;
பழகுதொ றினிக்கும் **சிட்டிபா** *பென்னும்*
பண்பினர்க் குரியதிந் நூலே.

1994

Navavitha Sampandham
நவவித சம்பந்தம்

Dedicated to:
A Sadagoparamanuja Swamigal

ஏந்தூர் திரு. எ. சடகோபராமானுஜ சுவாமிகள், அவர்கட்கு

அன்புப் படையல்

தளர்விலாத் தூயன்; எம்பிரான் பாத
தாமரை மலர்ந்தநல் இதயன்;
அளவிலாப் புகழ்சால் வைணவ நூல்கள்
அனைத்தையும் திறமுறக் கற்றோன்;
துளவம்நேர் ஏந்தூர் சாமிஎன் றறிஞர்
தொழுதிடப் புதுவைவாழ் செம்மல்;
வளர்சட **கோபரா மாநுசன்** என்னும்
வள்ளலுக் குரியதிந் நூலே.

1995
Vainava Selvam
வைணவச் செல்வம்

Dedicated to:
Kottur Aranganatha Mudaliar
[Vaishnavite & Philanthropist]

கொடை வள்ளல், வைணவச் செம்மல்
கோட்டூர் **அரங்கநாத முதலியார்,** அவர்கட்கு

அன்புப் படையல்

திங்கள் முகத்துச் சேயிழை மணாளன்
தங்கி மகிழும் தகவுறும் உளத்தர்
உய்வகை காட்டி உலகைத் திருத்தும்
வைணவ நெறியின் வளத்தில் தோய்வர்;
அரும்பொருள் ஈட்டல் அறத்தின் பொருட்டெனும்
பெரும்பொருள் தேர்ந்து பிறங்கும் கொடையினர்;
வஞ்சமில் உணர்வாய் மாண்புறு நெறியால்
செஞ்சுட ராகித் திகழ்ந்த நடையினர்;
வாழ்வார் ஞான மரபை விளக்கிய
ஆழ்வார் பனுவலில் ஆழங்கால் பட்டவர்;
மூன்றாம் கண்ணை முறையால் வணங்கும்
தேன்தோய் கல்வியைச் சிறப்புறத் தருபவர்;
திருமகள் போலச் சிறப்பைப் பெற்ற
ஒருமகள் தன்னை உவப்பிற் பெற்றவர்
முற்படும் அரங்க நாத முதலியார்
கற்புறும் அன்புக் காணிக்கை இந்நூல்.

1999

Muthamizh Kavalar KAP Viswanatham



முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

Dedicated to:
All Tamil Scholars

முன்னைய, இன்றைய, பின்னைய **தமிழ்ச் சான்றோர்கட்கு**

அன்புப் படையல்

உள்ளுறை தன்னால் இறைச்சியால் தொன்னூல்
உணர்ந்திடும் எழுவகை நிலத்தைத்
தெள்ளின் தோன்றிப் பொன்னொடு மணியைத்
திசையெலாம் வியப்புற எடுத்து
வள்ளலாய் அறிஞர்க் களித்தலால் புலமை
வயங்கிய சீரிய சான்றோர்
ஒள்ளிய நலஞ்சால திருவடி மலரில்
உவப்பினிற் பொலிக இந்நூல்.

1999

Neengatha Ninaivukal – I

நீங்காத நினைவுகள்- I

<u>Dedicated to:</u>

Dr PT Manoharan,

Vice-Chancellor, University of Madras



அறிவியல் வல்லுநர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் **பெ.த. மனோகரன்,** அவர்கட்கு

<u>அன்புப் படையல்</u>

அறிவியல் அறிஞர்; நேர்மைசால் செம்மல்;
அளவியலாப் பெருமை சேர் அண்ணல்;
உறுபுகழ்ச் சென்னைப் பல்கலைக் கழகம்
உயர்வுறப் புத்திலக் கியத்தின்
துறைதனைக் கண்ட தனித்துணை வேந்தர்
தூயநன் நெறிபடர் தோன்றல்;
நிறையுடை அறிஞர் மனோகரன் தனக்குஎன்
நேயமார் படையல் இப்பனுவல்!

2001
Paavendarin Paattuthiran

பாவேந்தரின் பாட்டுத்திறன்

Dedicated to:

Prof K Anbazhagan,

Former Minister, Government of Tamilnadu

நேர்மையும் கடமையும் உருவாகத்திகழும் பேராசிரியர்
க. அன்பழகன் அவர்கட்கு

அன்புப் படையல்

நந்தமிழ் மொழியில் முந்துறு புலமும்
நாத்தொலை வில்லதோர் உரையும்
பைந்தமிழ்க் கல்வி பயிற்றிடு துறையில்
பழுத்தபட் டறிவொடு வாழ்வில்
நொந்துவந் தடைந்தோர் களைகணாய் விளங்கும்
நோன்மையும் தமிழ்நயம் துளும்ப
செந்தமிழ் பேசிச் சிவந்துள நாவும்
திகழ்ந்துளோய் நினச்சிதுபடையல்!

2001
Thaayumaanavar
தாயுமானவர்

Dedicated to:
Father **Jerome D'Souza,** Former Principal,
St Joseph College, Tiruchirappalli, Tamilnadu



மாணாக்கர்பால் அன்பும் பாசமும் நேசமும் கொண்ட அருளுருவாய
அருள்தந்தை ஜெரோம் டி' சௌஸா *அவர்கள், திருவடிகட்கு*

அன்புப் படையல்

சட்டத்தை மாற்றி அறத்தினைப் புரக்கும்
சால்பினர்; வேதியியல் படிப்பை
இட்டமொ டெனக்கு வழங்கிய சீலர்;
இணையிலா கிறித்துவத் தொண்டர்;
சிட்டரா தலினால் சமயங்கள் கடந்த
சீரிய அந்தணர்; புனிதர்;
மட்டறு புகழ்சால் ஜெரோம் டி'சௌஸா
மாண்படிக் குரியதிந் நூலே.

2001
Thanthai Periyar Sinthanaikal



தந்தை பெரியார் சிந்தனைகள்

Dedicated to:
Disciples of Thanthai Periyar

ஏறக்குறைய எண்பதாண்டுக்காலம் தொடர்ந்து நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களின் நல்லுபதேச மொழிகளால் விழிப்படைந்த **பெரியார் வழி** நடப்பவர்க்கு

அன்புப் படையல்

புறத்தினில் வெளுத்தும் அகத்தினில் கறுத்தும்
பொய்தனை மெய்யெனப் பேசும்
திறத்தோடு நாளும் தீமையே புரிந்து
திரிந்திரு மாந்தர்கள் நடுவே
புறத்தினில் கறுத்தும் அகத்தினில் வெளுத்தும்
பொருந்திய சொல்லோடும் செயல்களை
அறத்தினிற் பிறழா துணர்ந்தநம் பெரியார்
அன்பர்கட் கிந்தநூல் படையல்!

2001
Saivasiddhantham - Or Arimugam
சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்

Dedicated to:

Mei Kanda Devar [Saint]

‘புனிதம் எனும் அத்வைத மெய்கண்ட நாதன்’
மெய்கண்ட தேவனின் பொன்னடிகட்கு

பக்திப் படையல்

சாத்திர நெறியைத் தூவெனத் தள்ளித்
தன்முனைப்பு எனும்மது மாந்திப்
பூத்திரள் காவில் துழைமது காம்போல்
புல்லிய பொதிவழி யோடி
மீத்திகழ் கின்ற மூவகைப் பசுக்கள்
வெறியெலாம் ஒடுங்கமுந் நான்கு
சூத்திரம் தன்னால் யாத்த**மெய் கண்டார்**
துணையடிக்கு உரியதுஇந் நூலே.

2001
Saivamum Thamizhum
சைவமும் தமிழும்

<u>Dedicated to:</u>

Umapathi Deva Nayanar [Saiva Saint]



எட்டு சித்தாந்த சாத்திரங்கள் அருளிய கொற்றவன்குடி
உமாபதி சிவத்துக்குப்

<u>பக்திப் படையல்</u>

நற்றவர் பராவும் சிவபரம் பொருட்கே
நாயகம் தனைநனி விளங்கும்
பெற்றிசால் புருஷ காரமாய் விளங்கும்
பெருந்தகை இருந்தமிழ்க் குரிசில்
வெற்றிகொள் சைவ சித்தாந்த மரபை
விளங்கிடும் கதிர்மணி விளக்கம்
*கொற்றவன் குடிவாழ் **உமாபதி சிவ**த்தின்*
குளிரருட் குரியதிந் நூலே.

2001
Ariviyal Nokkil Ilakkiyam, Samayam, Thathuvam

அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்

Dedicated to:

Prof TMP Madadevan, Founder-Director,
Dr S Radhakrishnan Advanced Centre of Philosophy,
University of Madras

டாக்டர் எஸ். இராதாகிருட்டிணனின் உயர்வுறு தத்துவ ஆய்வு நிறுவன முதல் இயக்குநர் பேராசிரியர் **TMP. மகாதேவன்,** அவர்கட்கு

அன்புப் படையல்

தத்தவத் துறையில் விளக்கினை இட்ட
சால்பினர்; பண்பினால் உயர்ந்தோர்;
சித்திரம் சான்ற நூல்களைப் பண்பு
திரழ்தரும் ஆங்கிலத் தளித்தோர்;
வித்தக ஆழ்வார் பகர்ந்தஅத் துவிதம்
விளக்கென எனைமுனம் பணித்தோர்;
புத்தனே அணைய **மகாதேவ** நம்பி
பொன்னடிக் குரியதிந் நூலே.

2001

Thamzhil Ariviyal Selvam

தமிழில் அறிவியல் செல்வம்

Dedicated to:

Dr APJ Abdul Kalam

President, Republic of India



இந்தியத் திருநாட்டின் இணையற்ற அறிவியல் அறிஞரும் இந்தியக் குடியரசின் தலைவரும் ஆன பாரத ரத்னா **டாக்டர் எ.பி.ஜே. அப்துல் கலாம்,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

நற்குணச் செம்மல் அடக்கமே உருவாம்
நாயகர் பாரத ரத்னா;
சிற்பர இயல்பை நன்குணர் தலைவர்
சீரிய நாட்டன்பு மிக்கார்;
பொற்பமை தேவை அளித்தநற் சீலர்;
பொலிவுறும் மக்களின் தலைவர்;
கற்பனை கடந்த இயல்பினர் **அப்துல்**
கலாமுக்கே *உரியதிந் நூலே.*

2002
Paandiyan Parisu - Oru Mathippeedu

பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு

Dedicated to:

Dr **M Karunanidhi**, Former CM,
Government of Tamilnadu

நாடறிந்த நல்லவர் டாக்டர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கட்கு

அன்புப் படையல்

இலகு பாண்டியர் சேரலர் சோழர்கள்
எதிரிலாப் பல்லவர் பலரும்
மலைவு கொண்டிடர்ப் பட்டுமுன் ஆண்டஇம்
மண்ணினை வறியவன் செய்போல்
உலகு போற்றிட ஒருதனி ஆண்டிடும்
உயர்கரு ணாநிதி யாகும்
கலைஞர் என்றொளிர் கதிரவற் கென்சிறு
கையுறை யாகும்இப் பனுவல்!

2002
Palsuvai Virundhu

பல்சுவை விருந்து

<u>Dedicated to:</u>

Dr K Venkatasubramaniyam, Member,
Planning Commission, Government of India

முன்னெய தமிழகக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநரும், முன்னைய பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழக முதல் துணை வேந்தரும், இந்திய அரசின் திட்டச் சிறப்புக்குழு உறுப்பினருமாகிய
டாக்டர் K வேங்கட சுப்பிரமணியம், *அவர்கட்கு*

அன்புப் படையல்

ஒப்பரும் புகழ்சால் வள்ளுவர் குறளில்
உவப்புடன் தோய்ந்தவர் என்றும்
செப்பமார் கல்வித் துறையினை உயர்த்தும்
செம்மலார் புதுவைமா நிலத்தின்
ஒப்பரும் சீர்சால் பல்கலைக் கழகத்
துயரிய நற்றுணை வேந்தர்
சுப்பிர மணியம் என்றுல கோதும்
தூயவர்க் குரியதிந் நூலே.

2002

Kavimaniyin Thamizh Pani - Oru Mathipeedu

கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு

Dedicated to:

Prof M Shanmugham Pillai, Thirukkual Chair,
Dept of Tamil Literature, University of Madras

சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறை - திருக்குறள்
இருக்கைப் பேராசிரியர் என் நெடுநாள் நண்பர்
திரு. மு. சண்முகம் பிள்ளை, *அவர்கட்கு*

அன்புப் படையல்

இலக்கணக் கடலின் கரைகண்ட செம்மல்;
இணையற்ற தேவியின் தொண்டர்;
துலக்குசீர வையா புரியின் நல்லன்பர்;
தூய்மையார் வாய்மையார்; என்றும்
நலக்குரியத் தாய மர்ரேயின் நண்பர்;
நாவலர் பாவலர் பெருமான்;
புலக்குரியத் தூய ***சண்முகம் பிள்ளை***
பொற்பினுக் குரியதிந் நூலே.

2003
Annal Anuman
அண்ணல் அநுமன்

<u>Dedicated to:</u>

Justice Dr MM Ismail



சென்னைக் கம்பன் கழகம் கண்டதுடன் மாவட்டந்தோறும் கவின்பெறும் வண்ணம் கம்பன் கழகங்கள் காண வழிவகைகள் செய்து கம்பன் புகழ் பரவக் காரணபூதர் நீதி அரசர் **டாக்டர் மு.மு. இஸ்மாயில்**, *அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

செம்பொருள் ஒன்றென் றுணர்ந்தமெய்ஞ் ஞான
தேசிகர்; எட்டய புரத்து
நம்பரெம் உமறே மீளவும் இங்கே
நண்ணினன் எனவுல குரைப்பக்
கம்பனை உணர்ந்து திறமுறப் பகரும்
கண்ணியர்; புண்ணியர்; சீலர்;
தம்பமாய் நீதி புரந்த**இஸ் மாயில்**
தகவினுக் குரியதிந் நூலே.

2003

Pattinathadigal



பட்டினத்தடிகள்

Dedicated to:

Nagarathaar Community

பட்டினத்தடிகள் மரபில் வந்த தனித்தன்மையான
பண்பாட்டுடன் வாழும் **நகரத்தார் பெருமக்களுக்கு**

அன்புப் படையல்

கடல்கடந் துயர்ந்த புகழினைப் பெற்ற
கண்ணியர்; ஒற்றிமா நகரில்
திடமுடன் அமைந்த கோயிலில் மேவும்
சீரிய பட்டினத் தாரின்
அடல்மிகு குலத்தில் பிறந்தவர்; என்றும்
அனைந்திடா விளக்கெனப் பொலிவோர்;
மடமையைப் போக்கும் **நகரத்தார்** *தங்கள்*
மாண்பினுக் குரியதின் நூலே.

2003
Vainava Puranangal
வைணவ புராணங்கள்

<u>Dedicated to:</u>

Justice N Krishnaswamy Reddiar

வைணவராய்ப் பிறந்து வைணவராய் வாழ்ந்து பணியாற்றும் காலத்தில் வைணவ நெறிதவறாது பணியாற்றியும் ஒய்வுபெற்ற பின்னரும் பொது நிறுவனங்களில் வைணவ சீலராய் பணியாற்றியும் நிறைவாழ்வு வாழ்ந்து மறைந்த ***அமரர் நீதியரசர் என். கிருஷ்ணசாமி*** *ரெட்டியார், அவர்கட்கு*

<u>அன்புப் படையல்</u>

வறியவர் சார்பில் இலவச மாக
வழக்குரை யாற்றிய வள்ளல்;
நிறைபுகழ் அறிஞர்; நீதியின் அரசர்;
நெஞ்சினில் திருமகள் கேள்வன்
உறைதர வாழ்ந்தோர்; ஆயினும் உலகில்
உளபிற மதங்களை மதிப்போர்
அறிர்கள் வியக்கும் ***கிருட்டிண சாமி***
அண்ணலுக் காம்இது படையல்!

2003
Ramalinga Adigal



இராமலிங்க அடிகள்

Dedicated to:

All Disciples of St Ramalinga Adigal

வள்ளல் பெருமான் கொள்கைகளைக் கடைப்பிடித்து அவர்தம்
இணையடிகளைப் போற்றி வாழ்ந்த, வாழும் நேற்றைய, இன்றைய, நாளைய
அடியார் பெருமக்கள் அனைவருக்கும்

அன்புப் படையல்

வெள்ளநீர் சூழ்ந்த வித்தக உலகில்
மெய்ப்பொருள் ஈதெனத் துணிந்து
தள்ளரும் அகத்துப் பகையினைப் புறத்தில்
சார்தரும் பகையினை வென்று
விள்ளரும் புகழ்கொள் திருவருட் பாவில்
விளக்கம்கொள் நல்வட லூரில்
வள்ளலார் தொண்டர் அனைவருக் கிந்த
மாண்புறு நூலுரித் தாமல்.

2003

Moovar Tevaram - Pudhiya Paarvai

மூவர் தேவாரம் - புதிய பார்வை

Dedicated to:

Prof P Sambamurthy, First Professor,
Dept of Indian Music, University of Madras

சென்னைப் பல்கலைக் கழக இந்திய இசைத்துறை முதல் பேராசிரியர் - துறைத் தலைவர் ***அமரர் பி. சாம்பமூர்த்தி,*** *அவர்கட்கு*

அன்புப் படையல்

தென்னக இசையில் தேர்ந்தஆய் வாளர்;
திருப்பதி இசையியல் கழகம்
தன்னிலே முதல்வர்; வடமொழி தெலுங்கு
தமிழெனப் பலமொழி அறிந்தோர்;
சென்னையில் அமைந்த இசைத்துறை தன்னில்
திகழ்ந்திடும் முதல்துறைத் தலைவர்;
அன்னபேர் ஆசான் **சாம்பமூர்த் தி**க்கே
ஆக்கியே படைத்தனன் இந்நூல்.

2004
Valluvarin Vazhviyal Chinthanaikal
வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

Dedicated to:

Justice PR Gokulakrishnan

கல்லூரி வாழ்க்கை முதல் திரு.வி.க. பேரில் மணவழகர் மன்றம் தொடங்கி நாளிதுவரை சிறப்பாக நடத்தி வருபவரும், முன்னாள் குஜராத் உயர்நீதிமன்றத் தலைமை நீதி அரசருமான **திரு. பி.ஆர். கோகுலகிருட்டிணன்,** *அவர்கட்கு*

அன்புப் படையல்

உயரற மன்றத் தலைமையை அணிசெய்
ஒப்பிலா நடுவராய் உயர்ந்தோன்;
உயிரெனத் தமிழை, ஒண்டமிழ் இசையை
உடையவன்; தமிழினம் உயர
அயர்விலாது உழைப்போன்; தமிழ்முனி வர்பால்
அளவிலா மதிப்புடை அறிஞன்;
மயர்வறு மதிசால் **கோகுலக் கண்ண**
வள்ளலுக் கிந்நூல் படையல்!

2004
En Americap-payanam



என் அமெரிக்கப் பயணம்

<u>Dedicated to:</u>

All Tamils living in US

தாயகமாகிய தமிழகத்தைவிட்டு பொருளீட்டுவதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகள் போந்து நன்முறையில் பொருளீட்டி நல்வாழ்க்கை வாழ்ந்து தமிழகத்திற்கு நற்பெயர் ஈட்டும் ***அமெரிக்கா வாழ் தமிழன்பர்கள்,***

<u>அன்புப் படையல்</u>

கடலினைக் கடந்தும் நாட்டினை மறவாக்
கண்ணியப் புண்ணியம் மிக்கார்;
உடலினை மறவா உயிரெனப் பொலியும்
உத்தமர்; சத்தியத் தூன்றும்
திடனுலும் அன்பர்; திறமையி னாலே
சீர்மைகள் பற்பல பெற்றார்
அடலுலும் ***அமெரிக் காவினில் வாழும்***
அன்பருக் *குரியதிந் நூலே.*

2004
Kanchi Prathivathi Bhayangraam Annangaracharya Swamigal
காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

<u>Dedicated to:</u>

All Disciples of Annangaracharya Swamigal



பிரதிவாதி பயங்கரம் அண்ணாசுவாமிகளை நெஞ்சில் நிறுத்தும்
நேற்றைய இன்றைய நாளைய பக்த சீலர்கட்கு

<u>அன்புப் படையல்</u>

‘‘நீவிரே என்றன் சீடர்’’ என் றென்னை
நெஞ்செலாம் நெகிழ்ந்திடத் தமது
நாவினால் என்றன் மெய்யெலாம் சிலிர்ப்ப
நவின்றிடு பெருந்தகை! சால்பு
மேவிய அண்ணா சாமிதம் நினைவை
மேன்மையாய் நெஞ்சினில் நிறுத்தும்
***ஆர்வலர்க் கெல்லாம்** அடியனேன் படைக்கும்*
அன்புறு படையல்இப் பனுவல் !

ISBN 978-81-932327-5-0

நூற்றாண்டு வெளியீடு

FOREWORDS

PARADED

The unique feature one could find among the books of Professor is that almost all his books carry a 'FOREWORD' from eminent personality in several walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for getting 'Foreword' for his books. The amazing range includes educational administrators, headmasters, professor of Tamil, professor of Saiva Siddhantha, professor of Economics, Vice-chancellors, his guide, philanthropists, his relatives, his students, religious heads, bureaucrats, ministers, chief ministers, governors, Tamil scholars, linguists, editors, principals, judges, technocrats, advocates, social workers, industrialists, etc,. A select samples are exhibited here.

நீ இரவிச்சந்திரன்
தொகுப்பாசிரியர்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

அணிந்துரைகள்

அணிந்துரைகள்

நீ இரவிச்சந்திரன்
[தொகுப்பாசிரியர்]
தமிழாசிரியர்
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேனிலைப் பள்ளி
காரைக்குடி, சிவகெங்கை மாவட்டம்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

அணிந்துரைகள்

A Centenary Publication

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system
(including but not limited to computers, disks, external drives, electronic or digital
devices, e-readers, websites), or transmitted in any form or by any means
(including but not limited to cyclostyling, photocopying, docutech of other
reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions)
without the prior written permission of the publisher, not be otherwise circulated
in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchaser.

FEBRUARY 2016

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-932327-6-7

9 788193 232767 >

Wrapper design: **Centenary Committee**

Printed at: D J Prints, Chennai - 95
8903478236

DEDICATION

மறைமலை அடிகள்

He was proficient in Sanskrit and English and was influenced by the style of English authors. He is well remembered for his excellence in writing in prose. He was one of the earliest Thamizh authors who showed interest in research especially in the field of literary policy. Like his contemporaries he was a staunch Saivaite but had a social reforming motif.

தொகுப்புரை

என் துரோணாச்சாரியார் !

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட நூற்கடல் ந சுப்பு ரெட்டியார் என்னும் துரோணாச்சாரியாருக்கு தமிழ்கூறு நல்லுலகெங்கும் உள்ள ஏராளமான ஏகலைவர்களுள் நானும் ஒருவன். பாரதத்தின் துரோணாச்சாரியார் போலக் கட்டை விரலை வாங்காமல் அறிவுத்தாகம் எடுக்கும் போதெல்லாம் நூலமுதை வாரி வழங்கிய இருபதாம் நூற்றாண்டுத் துரோணாச்சார்யார் இவர்.

கல்வி, அறிவியல், ஆன்மீகம், இலக்கியம் என எந்தத்துறை சார்ந்த நூலாக இருந்தாலும் இவரால் மட்டும் எப்படி இவ்வளவு ஆழமாகவும் அகலமாவும் அதே சமயத்தில் எளிமையாகவும் எழுத முடிகிறது என்று இவருடைய நூல்களைப் படிக்கும் ஒவ்வொரு முறையும் வியப்பதுண்டு.

காலை, மாலை, இரவு என்னும் மூன்று பொழுதுகள் ஒரு நாளை நடத்திச் செல்வதுபோல படித்தல், சிந்தித்தல், எழுதுதல் என்னும் மூன்று செயல்பாடுகள் இவரின் வாழ்வை வழிநடத்திச் சென்றிருக்கின்றன.

அன்னாரது நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிட இருக்கும் பல நூல்களில் ஒன்றினை தொகுத்து வழங்கும் பணியினை யான் பெற்றிருப்பது என் பேறு. பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் அனைத்து நூல்களுக்கும் பல அறிஞர் பெருமக்கள் - பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், நீதியரசர்கள், தமிழ்ச் சான்றோர், ஆளுநர்கள், அமைச்சர் பெருமக்கள், கல்வித்துறை சான்றோர்கள், மற்றும் பிற பல, பிரபல பேரறிஞர்கள் - அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

அனைத்து அணிந்துரைகளும், அன்னாரது நூல்களின் திறம், உரம், ஆழம், வீச்சு, ஆராய்ச்சித் திறன், நுண்ணிய இலக்கியத் திறனாய்வு மற்றும் பல சிறப்பியல்புகளை கோடிட்டு குறியிட்டு பாராட்டுகின்றன, பறைசாற்றுகின்றன. மேலும் இவ்வணிந்துரைகள், அன்னாரது நூல்களின் தனிச் சிறப்புகளை - இனிமை, எளிமை, தெளிவு - தெள்ளதின் காட்டி படிப்போரை அக மகிழ்விக்கின்றன.

சுயசரிதையை இவரளவுக்குப் பரந்துபட்ட தகவல்களுடன் சுவாரசியம் குன்றாமல் விரித்து எழுதியவர்கள் நானறிந்தவரையில் தமிழகத்தில் எவரும் இல்லை. இவருடைய சுயசரிதைதான் என்றாலும், அதில் பலபேருடைய சரிதைகள் இருக்கும். பல்வேறு இலக்கியங்கள் மற்றும் அரிய நூல்களிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் இடம்பெற்றிருக்கும். இன்னும் சொல்லப்போனால், காரைக்குடிக்கு இவர் வந்த நாள் முதல் பதவிஉயர்வு பெற்றுச் சென்றநாள் வரையில் காரைக்குடியின் அத்தனை இலக்கிய நிகழ்வுகளையும் அற்புதமாகப் பதிவு செய்திருக்கிறார்.

திருமுறைகளிலிருந்தும், திவ்வியப் பிரபந்தங்களில் இருந்தும், கம்பனிலிருந்தும், தாயுமானவரிலிருந்தும், பாரதியிலிருந்தும், வில்லிபாரதத்திலிருந்தும் அன்னார் எடுத்தாண்ட பாடல்களை மனனம் செய்தே என் பேச்சுக்கு நான் வலிமை சேர்த்துக் கொண்டேன்.

திருவாவடுதுறை ஆதீன நேர்முகப் பயிற்சியில் சைவ சித்தாந்தம் கற்றிருந்தாலும் ஐயா அவர்களின் கடித வாயிலான "*சைவ சமய விளக்கு*" என்னும் நூலும் "*சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்*" என்னும் நூலும்தான் சைவ சித்தாந்தத்தின் பதி பசு பாசத்தை எனக்குப் பகலவன்போல் வெளிச்சமிட்டுக் காட்டின. சைவம், வைணவம் இவை இரண்டிலும் உள்ள மேன்மையான தத்துவங்களை அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டிருப்பது ஆன்மீக உலகுக்கும், ஆன்மீகத்தாகம் கொண்டவர்களுக்கும் ஐயா அவர்கள் செய்த மிகப்பெரிய தொண்டாகும்

அறிவாற்றல், ஆன்மபலம், ஒழுக்கம், நெஞ்சுறுதி என்னும் இவற்றை மட்டுமே பெற்றிருந்து எந்த விதமான சாதி மதப் பின்புலங்களும் இல்லாமல் ஐயா அவர்கள் எல்லாச் செயல்களிலும் எதிர்நீச்சல் போட்டு வெற்றிபெற்ற நிகழ்வுகளைப் படிக்கும்போது, சாதி மதப் பின்புலங்கள் இல்லாமல் அறிவையும், ஒழுக்கத்தையும் மட்டுமே பின்புலமாகக் கொண்ட ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் மீதான நம்பிக்கையைப் பெறமுடியும் என்பது திண்ணம்.

தம் நிறைவான வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியையும் தனக்கும் பிறர்க்கும் பயனள்ள வகையில் வாழ்ந்து பத்து அறிஞர்கள் ஆற்ற வேண்டிய பணிகளைத் தாம் ஒருவரே ஆற்றி அன்னைத் தமிழுக்கு அணிகலன்கள் அணிவித்திருக்கிறார். வையத்திலிருந்து உடலால் மட்டுமே விடைபெற்று வானுலகில் அறிவு நட்சத்திரமாய் ஒளிவீசும் ஐயாவின் நூற்றாண்டு விழாவின்போழ்து, அவரைப்பற்றிய நூலொன்றை தொகுப்பதற்கு அரிய வாய்ப்பினை நல்கிய நூற்றாண்டு விழாக் குழுவினர்க்கு அகம் கனிந்த நன்றி தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

நீ இரவிச்சந்திரன்

N Ravichandran
Tamil Teacher
SMSV Hr Sec School
Karaikudi – 630 001

அணிந்துரை

இரா காமராசு
எழுத்தாளர்
பொதுக்குழு உறுப்பினர், சாகித்திய அகாதெமி, புதுதில்லி
பொதுச்செயலாளர், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், சென்னை
உதவிப்பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

அப்பாகுடில்
4/664, பாரதிதாசன் நகர்
குமரபுரம், மேலவாசல்
மன்னார்குடி – 614 014

பேசி: 04367 224724
அலைபேசி: 94435 89189
Kamarasu_era@yahoo.com

~~~~~~

பேராசிரியரின் அறிவுக்கொடை

தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள பலர். மரபையும், நவீனத்தையும் இணைத்து முன்சொல்லவேண்டியச் சூழலை சிலர் உருவாக்கினர். ஏடுகளை அச்சு ஏற்றுதல், உரை எழுதுதல், இரசனை முறையில் விவரணை செய்தல் என்பவை தொடக்கநிலை முயற்சிகள்.

தமிழ்க் கல்விப் புல உருவாக்கம் அடுத்து நிகழ்ந்தது. மரபிலக்கண, இலக்கியங்கள் புதுநெறியில் கற்கவும், கற்பிக்கவுமாக பல எடுகோள்கள் நடந்தன. அதுவரை அறியப்படாத இலக்கியங்களின் அறிமுகம் பரவலாக்கம் பெற்றது. இரசனை என்பதைத் தாண்டி பல்துறைப் பலகனியாக பண்டைய இலக்கியங்கள் திறப்பு செய்யப்பட்டன. பாடசாலைகளில் பட்டங்கள் நோக்கி நகர்ந்த ஆரம்பகாலத் தமிழ்க் கல்விக்கு ஏராளமான இலக்கிய விளக்குநர்கள் தேவைப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியில் ஆய்வுகள் பலவும் முகிழ்த்தன. நூல்கள் பல்கிப் பெருகின. தமிழ் அறிவு மரபின் நீட்சி நவீன மயமானது இந்நிலையில்தான்.

இத்தகு தமிழ் இலக்கண-இலக்கியப் பாய்ச்சலின் விளைவுகளில் ஒன்றாக பேராசிரியர் ந சுப்பு ரெட்டியாரின் பங்களிப்பு அமைகின்றது.

பேராசிரியர் ந சுப்புரெட்டியார் பல்கலைவித்தகர். வாழ்நாள் முழுக்க எழுதிக்குவித்தவர். அவருடைய ஆய்வுக்களம் விரிவானது. தொல்காப்பியம், நன்னூல் என இலக்கணங்கள் தொடங்கி சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சித்தர்கள் வரை நீண்ட ஆய்வுப் பயணம் செய்தவர். சமய உலகை மெய்யியல் நோக்கில் அலசியவர். சைவம்,
~~~~~~

வைணவம் இரண்டின் ஆழத்தையும் கண்டு உணர்த்தியவர். கம்பர், வள்ளுவர், பாரதி, பாரதிதாசன், பெரியார்......... எனத் தமிழின் ஆக்கச்சக்திகளை ஆய்வு செய்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக கல்வியியல் நுட்பங்களை, புதுமைகளை, கோட்பாடுகளைத் தமிழ் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தவர்.

இவரின் நூற்றுக்கணக்கானப் படைப்புகள் யாவும் தமிழ் இலக்கியக் கல்விக்கும், கல்வியியல் கல்விக்கும் அடிப்படைத் தரவுகளாக விளங்குகின்றன. பரந்து பட்ட நூலறிவும், பன்மொழி ஆற்றலும், ஆய்வு நேர்மையும், ஒப்பீட்டுரைக்கும் பாங்கும், தருக்கமுறை விளக்கங்களும், அழகிய, எளிய உரைநடைக்கூறுகளும் பேராசிரியரின் ஆய்வுகளைப் படைப்புகளாக உயர்த்தும் வல்லமை வாய்ந்தவை.

பேராசிரியரின் படைப்புகளுக்கு புகழ்பெற்ற அறிஞர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள் அருளிய அணிந்துரைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இதன் வழி பேராசிரியரின் நட்பும், தொடர்பும், அறிவுலக ஏற்பும் இளைய தலைமுறைக்குத் தெரியவரும். இந்த அணிந்துரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறத்தக்கவை. நவீனத்தமிழ் உரைநடைக்கும், தமிழ்க்கல்விக்கும் பேராசிரியரின் அறிவுக்கொடையினை இச்சிறுநூல் வெளிச்சப்படுத்தும்.

பேராசிரியரின் படைப்புகள் நூலடைவாகவும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் துணைநிற்கும். இணையம், கணினி ..... என எவ்வித வசதியும் அற்றச்சூழலில் தாமே முயன்று முதல் நிலை ஆய்வுகளை உருவாக்கியப் பேராசிரியர் ந சுப்புரெட்டியார் உழைப்பும், நேர்மையும் குன்றி வரும் இன்றைய தமிழ் ஆய்வுலகுக்கு முன்மாதிரியாகக் கொண்டாடத்தக்கவர் என்பதை இந்நூல் சுட்டும்.

இதனை அரிதின் முயன்று தொகுத்துள்ள தொகுப்பாசிரியர் நீ இரவிச்சந்திரன் பாராட்டுக்குரியவர். பேராசிரியரின் நூற்றாண்டை பல்முனைகளில் முன்னெடுக்கும் நூற்றாண்டு விழாக்குழுவினர்க்கும் இவ்வேளையில் நன்றி கூறவேண்டும். ஆய்வாளர்களுக்கும், வாசகர்களுக்கும் இந்நூல் பயன்நல்கும்.

~~~~~~~~~~

உள்ளடக்கம்

001

FOREWORD

அணிந்துரைகள்
[Forewords]

பின்னிணைப்புகள்

082 காலக்கோடு ~ வாழ்க்கை
[TIMELINE – Life]
086 காலக்கோடு ~ நூல்கள்
[TIMELINE – Books]
091 காலக்கோடு ~ பாராட்டுதல்கள்
[TIMELINE – Honour]
092 காலக்கோடு ~ அறக்கட்டளைகள்
[TIMELINE – Endowments]
094 பேராசிரியரின் ஆசிரியப்பெருமக்கள்
[Professor's Teachers]
096 பணி
[Service]
098 பதவிகள்
[Positions]
101 தொடர்புடையோர்
[Friends & Associates]

"A writer should write what he has to say and not speak it."
~ Ernest Hemingway

1916 2016

அணிந்துரைகள்

Forewords

The unique feature one could find among the books of Professor is that almost all his books carry a 'FOREWORD' from eminent personality in several walks of life. Professor's broad outlook in selecting these persons is apparent, if one studies the variety and ranges of persons chosen by him for getting 'Foreword' for his books. The amazing range includes educational administrators, headmasters, professor of Tamil, professor of Saiva Siddhantha, professor of Economics, Vice-chancellors, his guide, philanthropists, his relatives, his students, religious heads, bureaucrats, ministers, chief ministers, governors, Tamil scholars, linguists, editors, principals, judges, technocrats, advocates, social workers, industrialists, etc,. Select samples are exhibited here.



1949

கவிஞன் உள்ளம்

Kavignan Ullam

Foreword by:
P Sri Acharya, Tamil Scholar

******

''இந்த ஆசிரியரின் தமிழ் நடை காலத்திற்கு இசைந்து வளர்ந்து வரும் நடைதான், வளரும் தமிழில் மலரும் இலக்கியத்திற்கு உரிய நடை. இத்தகைய நடைதான் 'நல்லதமிழ்' இக்காலத்திற்கு சங்க நூற் கட்டுரைகளையும் இத்தகைய வசன நடையில் எழுதினால்தான், சாதாரண உலக இன்பம் முதல் உயர்ந்த கொள்கைகள் வகையில் அறிஞர்கள் சங்க இலக்கியங்களிலே கண்டு களிக்கிறார்களே, அந்தக் கருத்துச் செல்வம் முழுவதும் சாதாரண மக்களுக்கும் பயன்படுவதாகும்.''

1957



கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி

Kalingathu Parani Aaraichi

Foreword by:
Tamizh Kadal Raya Cho,
Tamil Savant, Karaikudi, Tamilnadu

******

''நடையறாப் பெருந்துறவியாகிய தாயுமான அடிகளும் இப் பரணி நூலின் கடைதிறப்புப் பகுதியில் உள்ளத்தைப் பறிகொடுத்து ''உபயதனம் அசையில்'' என்ற தாழிசையை எடுத்துத் தமது பாட்டில் நயம்படக் கொண்ட முறையை இத்திறனாய்வு நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார் அன்பர் சுப்பு ரெட்டியார்.''

''அன்னார் கலிங்கத்துப் பரணியை நன்கு ஆராய்ந்து ஆங்காங்குள்ள நயங்களை யெல்லாம் இந்நூலில் அழகுபட எடுத்துக் காட்டியிருக்கிறார்.''

''கடைதிறப்பின் உட்பொருள்' என்ற பகுதியில் திரு. ரெட்டியார் காட்டியிருக்கும் கருத்தே கொள்ளத்தக்கது.''

1957

தமிழ் பயிற்றும் முறை

Tamil Payitrum Murai

Foreword by: **TS Avinashilingam** **Former Education Minister, TN**	**Foreword by:** **S Thiruvenkatachari** **Professor of Education** **Dr Algappa Chettiar Training College**
"…இதற்கு தேவையான புத்தகங்கள் தமிழில் இல்லையே என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் குறையை நீக்க பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது." "…… தாய் மொழிப் பயிற்சியைத் தவிர அத்துடன் தொடர்பாக இருக்கவேண்டிய நவீன முறைகள் பற்றிய பிற செய்திகளும் சேர்க்கப் பெற்றிருப்பதாக அறிகின்றேன். அவருடைய புத்தகம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்சிப் பள்ளிகளிலும் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்."	".. Professor Reddiar has not however, discarded what is of essence in the writings of experts in Linguistics. The merit of his work lies in its eclectic approach and what Western educational thinking has to furnish as its cream. The bibliography at the end of the book is the key to the way the author's mind must have worked at the time of his writing the book." ".. The value of this work is bound to increase with the greater realization of the new contribution it has made and the new vistas it has opened up to the teachers of Tamil for whom it is primarily intended."

1958


காலமும் கவிஞர்களும்

காலமும் கவிஞர்களும்
Kaalamum Kavignarkalum

Foreword by:
Sri P Duraikannu Mudaliar, Principal,
Dr Alagappa Chettiar Training College, Karaikudi

******

*''மேற்கூறிய வகைகளில் பேராசிரியார் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதி உதவியுள்ள '**காலமும் கவிஞர்களும்**' என்ற முதற் கட்டுரைத் தலைப்பையே மகுடமாகக் கொண்டது இந்நூல். கவிஞர்களின் வழிபாடு அமைந்து மிளிரும் நற்றமிழ் நாட்டுக் கவிதைகள், காவியங்கள், இறைவழிபாடுகள் அறிவியல் ஆற்றல்கள், வாணிக முறைகள், நமது மொழியின் வரலாற்று இலக்கணங்கள் ஆகிய கருத்துக்களைத் திறனாய்வு முறையில் தெளிந்த நடையல் பன்னிரு கட்டுரைகளாக அடக்கிக்கொண்டு ஒரு கட்டுரை கருவூலமாகத் திகழ்கின்றது.''*

''கட்டுரைகள் யாவும் பழமையையும் புதுமையையும் இணைத்து வழுவின்றி வருங்காலத்திற்கு ஏற்ற கருத்துக்களை வழங்குகின்றன. தமிழ் மாணவர்களும், பொது மக்களும் இவற்றினைப் படித்துத் தமிழ்க் கலையின் பல கோணங்களைக் காணலாம்.''

1958



அணுவின் ஆக்கம்

Anuvin Aakkam

Foreword by:
Bharat Ratna Dr C Subramaniyam

******

*‘‘உயரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் சொல்ல முடியுமா? இதற்கு விடையளிக்கும் முறையில் திரு. சுப்பு ரெட்டியார் ‘**அணுவின் ஆக்கம்**’ என்ற நூலை எழுதி முடித்திருக்கிறார்.’’*

‘‘அணு அறிவைப் பற்றிய அரிய கருத்துக்களைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் இந்நூல் எழுதப்பெற்றிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. புதிய புதிய விஞ்ஞானப் பதங்களைக் கையாண்டிருப்பது தமிழுக்குப் புதியதொரு வளத்தைக் கொடுக்கின்றது.’’

1961



கவிதையநுபவம்

Kavithaiyanubhavam

Foreword by:
Dr A Chidambaranatha Chettiar, Chief Editor, English-Tamil Dictionary, University of Madras, Chennai - 600 005, Tamilnadu

******

“The author is quite competent to write on the subject, for he has considerable experience in imparting instruction on the methods of teaching poetry."

"I agree with the author that students have to be taught the way in which they should approach poetry and the way in which they can appreciate poetry. I am sure that a perusal of this book will help hundreds of students of literature to enjoy poetry better. Any book that enhances our delight in that direction is a welcome addition. Let me congratulate Mr Reddiar on the able way in which he has treated this rather difficult subject."

1961

கல்வி உளவியல்

Kalvi Ulaviyal

Foreword by:
GR Damodaran, Principal,
PSG College of Technology, Coimbatore, Tamilnadu

******

‘‘இந்நூல் மாணவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே யன்றித் தம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் நாட்டமுடைய தமிழ்ப் பொது மக்களுக்கும் மிகவும் பயனளிப்பதாகும். இத்தகைய நூல்கள் தற்போது தமிழ்நாட்டிற்கு மிகமிகத் தேவையாகும். இதுவரை கல்வி உளவியலைப் பற்றி வெளிவந்துள்ள தற்கால அரிய கருத்துக்களை மிகச் செம்மையான முறையில் இந்நூலில் அமைத்து விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர். இவர் தம் வகுப்பறையில் உளவியலைப் பயன்படுத்திப் பாடம் கற்பிப்பவர் என்பது இந்நூலின்று நன்கு விளங்குகின்றது. தற்காலக் கல்வியியல் கொள்கைக்கும் நம் பழைய இலக்கியங்களிலிருந்து புலனாகும் பழங்காலக் கொள்கைகளுக்கும் ஒற்றுமை காணும் இவர் திறத்திலிருந்து இவர்தம் உளவியல் நுட்பம் புலனாகிறது.’’

1963



தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
Tolkappiyam Kaattum Vazhkkai

Foreword by: **Dr M Varadarajanar, Professor of Tamil, University of Madras**	**Foreword by:** **Prof A Srinivasa Raghavan, Principal, VOC College, Tuticorin, Tamilnadu**
‘‘இத்தகைய சிறப்புடைய நூற்பகுதியைத் திறம்பட ஆராய்ந்து தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை என்னும் இந்நூல் வடிவில் விளக்கியுள்ளார். தமிழ்ப் பேராசிரியர், திரு. ந. சுப்பு ரெட்டியார். அவர் அறிவியல் துறையிலும் பட்டம் பெற்ற அறிஞர். அவ்வளவில் நில்லாமல், தொடர்ந்து உளவியல் முதலிய துறைகளில் நூல் பல கற்றுத்தேர்ந்து தமிழில் நூல் பல இயற்றியுதவியவர். ஆதலின், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆராயுங்காலத்தும் இவர்க்கு உளவியல், உயிரியல் முதலிய அறிவியல் துறைகள் மிகப் பயன்பட்டுள்ளன என்பதை இந்நூலில் காணலாம்.’’	“This work on 'TOLKAPPIYAM' covers almost all aspects of that ancient classic. Its discussions are full, its analysis of TOLKAPPIYAM and its commentaries keen and learned and its judgment, on the whole, marked by restraint and balance. Prof Reddiar has given us a patiently-evolved and carefully-worded thesis on a recondite theme, one that will prove helpful to all earnest students of old Tamil literature."

1964

இல்லற நெறி
Illara Neri

Foreword by:
Dr Soundaram Ramachandran,
Minister of Education [State], Govt of India

******

‘‘வேலனுக்கு வேங்கடத்தான் எழுதும் கடிதங்கள் மூலமாக ஆசிரியர் இல்லற நெறியைப் பலகோணங்களிலிருந்தும் விளக்கியிருக்கின்றார். ஆங்கிலத்தில் இதுபோன்ற புத்தகங்கள் ஏராளமாக உள்ளன. இளத்தம்பதிகள் அவைகளை விருப்பத்துடன் படிக்கின்றனர். தற்காலத் தேவைக் கேற்பத் தமிழில் அத்தகைய நூல்கள் மிகவும் அவசியம். பேராசிரியர் ரெட்டியார் அந்த அவசியத்தை உணர்ந்து அதனை ஒருவாறு நிறைவேற்ற முன் வந்தது மிகவும் பாராட்டுதற்குரியது.’’

1966

அணுக்கருபௌதிகம்

Anukkaru Bhautheekam

Foreword by:
Bharat Ratna C Rajagopalachari,
Former Governor-General of India
******

"I can understand the difficulties of a translator of scientific books and I tender my congratulations to Prof. N. Subbu Reddiar on his having won the prize for the best translation of Heisenberg's "**Nuclear Physics**".

1967

அறிவியல் விருந்து

Ariviyal Virundhu

Foreword by:
Sri AS Narayanaswamy Naidu, Principal,
G Venkataswamy Naidu College, Kovilpatti, Tamilnadu

******

‘‘இந்நூலிலுள்ள கட்டுரைகளைப் பாராட்டி யுரைத்தலின்றி மதிப்பிட்டுரைத்தல் என்பது எளிதன்று. ஒவ்வொரு கட்டுரையும் அறிவியலாகிய மாற்றுயர்ந்த தங்கத்தாலியன்று பழமையாகிய மணிகள் குயிற்றிடப் பெற்றுப் பேரழகோடு திகழ்கிறது.’’

‘‘தமிழ் நடை மிக நன்றாயமைந்துள்ளது. எத்தகைய அறிவியலுண்மைகளையுங் கூறுவதற்கு தமிழ் மொழி வளையும் வளமுடையதென்பதைத் தெளியும்படி யிவர் தமிழ் இயைந்துள்ளது. இத்தகு முயற்சியால் ஈடுபாடும் புலவர்கட்கு இவர் நடை ஒரு நல்ல வழிகாட்டியாகும். தமிழ்கூறு நல்லுலகம் இவர்தம் நற்பணியைப் பாராட்டி நன்றியறிதலைக் காட்டுவதாக.’’

1916 2016

1971



மலை நாட்டுத் திருப்பதிகள்

Malai Naattu Thirupathikal

Foreword by:
Justice S Maharajan

******

"ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் டாக்டர் சுப்பு ரெட்டியார். அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக்குடியில் சந்தித்தபோது, ''எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்'' என்று அவரிடம் சொன்னேன். மித மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது.''

1975



திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
Thiruvengadamum Tamizh Illakiyamum

Foreword by:
Padma Sri ND Sundaravadivelu,
Vice-Chancellor, University of Madras

******

''டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் முறையாகத் தமிழைக் கற்றுத் தேறிய அறிஞர். ஆழ்ந்த புலமையும் கட்டுரைத் திறனும் சொல்லாற்றலும் மிக்கவர்.''

''**திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்**' *என்னும் தலைப்பில் டாக்டர் ரெட்டியார் ஆற்றிய சொற்பொழிவுகள் நம்மைச் சங்க காலத்திற்கு அழைத்துச்செல்கின்றன. இடைக்காலத்திற்கு இட்டு வருகின்றன. பிற்காலத்திற்கும் கொண்டுவந்து நிறுத்துகின்றன.''*

''விரிந்த தமிழ் இலக்கியத்தின் பல்வேறு இடங்களை அறிமுகப்படுத்தும் இச்சொற்பொழிவுகள் தமிழ்ப் பற்றாளர்களுக்குத் தித்திக்கும். அதுமட்டுமா? பெரிதும் சமயத் தொடர்புடைய திருவேங்கடத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் பக்தர்களுக்கும் பரவசமூட்டும்.''

1976

அறிவியல் தமிழ்

Ariviyal Thamizh

Foreword by:
Silamboli S Chellappan,
Directorate of Tamil Development, Govt of Tamilnadu

******

''அம்பலத்தே ஆடும் அம்பலவாணனின் திருக்கூத்தை அணுவின் ஆனந்தக் கூத்தாகவே கண்டு மகிழ்கின்றார் ஆசிரியர். அணுபற்றிய இன்றைய அறிவியற் கொள்கைகளை அன்றே தமிழ்ச் சான்றோர் அறிந்திருந்தனர் என்று எடுத்துக் காட்டியுள்ள திறம் பாராட்டத்தகுவது.''

''ஆழ்வார்களின் பாடல்களில் ஆசிரியர் ஆழங்கால்படுவது போலவே அவருடைய கட்டுரைகளில் நாமும் ஆழங்கால்படுகிறோம்.''

1977



பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

Pandinattuth thiruppathikal

Foreword by:
Justice PS Kailasam

******

‘‘தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டின் பதினெட்டு திவ்விய தேசங்களைத் தாம் சென்று தரிசித்ததோடு நில்லாமல் நம்மையும் தன்னோடு கூடவே தம் அருமையான எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ தரிசனம் செய்துவைக்கின்றார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். திருக்கோட்டியூரிலே தொடங்குகின்ற இவர்தம் பக்திப் பயணம் திருக்குறுங்குடியிலே போய் முடிவடைகின்றது. இத்தனைத் திருப்பதிகளையும் இவரோடு தரிசிக்கின்ற நாம் ‘மறந்தும் புறந்தொழா மாந்தராய்’ மாறி விடுகின்றோம்.’’

1978



Studies in Arts and Science

Foreword by:
Justice SS Ismail

******

"It was characteristic of the man that this volume, instead of being a more garland of praises is a mine of information in several fields of knowledge and contains 85 articles by recognized academicians and authorities in different disciplines."

'...It is again characteristic of Prof Reddiar that in collecting these articles and publishing them, his sole interest is to utlilize the sale proceeds for instituting an endowment in Sri Venkateswara University itself."

1916 2016

1980



வடநாட்டுத் திருப்பதிகள்

Vada Nattu Thirupathikal

Foreword by:
Justice S Suryamurthi

******

‘‘சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும் போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார்.’’

1980

சோழநாட்டுத் திருப்பதிகள் I

Chola Nattu Thirupathikal - I

Foreword by:
Justice S Ramanujam

******

‘‘சைவ சமயத்தைச் சாரந்தவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் என்பதை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயின்ற போதே அறிவேன். வைணவச் சமயத்தைச் சார்ந்த நான் இன்று வைண சமயத்தில் பேராசிரியர் ரெட்டியார் இவ்வளவு ஊற்றம் பெற்றிருப்பதையும் ஆழ்வார் பாசுரங்களில் மிகவும் ஆழங்கால் பட்டிருப்பதையும் காணும்போது எனக்குப் பெருவியப்பு ஏற்படுகிறது. ஆழ்வார் பாசுரங்களில் இவர் தன்னைப் பறிகொடுத்திருப்பதை நூலெங்கும் காணலாம்.’’

1981

சோழநாட்டுத் திருப்பதிகள் II

Chola Nattu Thirupathikal - II

Foreword by:
Justice PR Gokulakrishnan,
Chief Judge, Gujarat High Court

******

''உழைப்பால் உயர்ந்து உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப்பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும், அறிவாற்றலும், ஆழ்ந்து ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள்.''

''திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழுப்புகிறது.''

1981



அகத்திணைக் கொள்கைகள்

Akathinaik Kolkaikal

Foreword by:
Dr VSp Manickam, Vice-Chancellor,
Madurai-Kamaraj University, Madurai, Tamilnadu

******

‘‘நண்பர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் துறை பலவல்ல ஒரு பெருந்தமிழ்ப் பேராசிரியர் என்பதனை நாடறியும். ஐம்பூத நுட்பவியலை அழகான தமிழில் ஆற்றலுடன் எழுத முடியும் எனத் தமிழின் மொழியாண்மையைக் காட்டி மூன்று பரிசு பெற்றவர். பாடநூலாகப் பழைய அறிவியலை எழுதித் தமிழைப் பிற்படுத்தாமல் புத்தம் புதிய அறிவியல் பிடிப்புக்களை வளருந் தமிழில் வரையாது எழுதி வரும் ஆக்க எழுத்தாளர்; இத்தனிச் சிறப்பு இத்தமிழ்ப் பேராசிரியர்க்கே உண்டு.’’

‘‘நூலின் தலைப்புக்கள் மரபான வரிசையான கோவைத் தலைப்புக்களாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியின் கீழும் விரிந்த விளக்கமும், பரந்த மேற்கோளும் முரண் அறுக்கும் சான்றும், காலச் சாயலும் நீரோட்டம் போல் தொடர்ந்து வருகின்றன.’’

1982

முத்தி நெறி

Muthi Neri

Foreword by:
Justice V Ramasamy

******

''இந்தப் பனுவல் வைணவத்தையும் விசிட்டாத்வைதத்தையும் தெளிவாக விளக்கும் ஓர் அற்புதப் படைப்பு. மனத்தில் கருத்துக்கள் ஆழப்பதிவதற்காகக் 'கடித உத்தி' முறையைக் கையாண்டுள்ளார் இதன் ஆசிரியர். பாயிர இயலில் வாமன, அவதாரம் போல் சுருக்கமாக அமைந்த கருத்துக்கள் நூல்முழுவதும் திரிவிக்கிரம அவதாரம்போல் வளர்ந்து விளக்கம் அடைகின்றன. அருச்சுனனுக்குக் கண்ணன் காட்டிய விசுவரூபக் காட்சிபோன்ற ஒருவிதக்காட்சியை இந்நூலைக் கற்போர் காண்பர் என்பது உறுதி.''

1982



கண்ணன் பாட்டுத் திறன்

Kannan Paattu-t-tiran

Foreword by:
Dr K Meenakshisundaram, Director-in Charge,
Collegiate Education, Chennai, Tamilnadu

******

''பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் தானும் தனித்து நின்று பாரதியைக் கண்ணன் பாட்டுத்திறன் என்ற நூல்வழி தன் பற்றையும் பாசத்தையும் காட்டிப் போற்றுகிறார்.''

''பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும், தெளிவுடன் கூறும் நெறியும் நூல் முழுதும் மின்னுகின்றன. ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் நிலைத்து வாழ்ந்து வரும் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தெளிந்து அவைகளிலுள்ள கருத்துக்களை, 'கண்ணன் பாட்டுத் திறனை' விளக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமை அவருடைய பரந்துபட்ட ஆய்வு நெறியைப் புலப்படுத்துகிறது.''

1982



குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு

Kuyil Paattu - Oru Madhippeedhu

Foreword by:
Dr RK Nagu, Tamil Professor,
Presidency College, Chennai, Tamilnadu

******

‘‘பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்லதொரு இலக்கியச் சுவைஞர். அறிவியல் அறிவும் கலை இயல் அறிவும் கைவசம் பெற்றவர். எல்லையிலா இலக்கிப் பயிற்சியும், எழுதிக் குவிக்கும் எழுத்துத் திறனும் வாய்ந்தவர். பேராசிரியர் ரெட்டியார்அவர்கள் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டுவிழா நினைவாகச் சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றே குயில்பாட்டுப்பற்றிய இந்நூல்.’’

‘‘குயில்பாட்டைப் படிப்போர்க்குச் சலிப்பே தோன்றாது. அதுபோலக் குயில் பாட்டைப்பற்றிப் பேராசிரியர் எழுதியிருக்கும் இந்த நூலும் சலிப்பைத் தராது. பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து ‘புதுத்தமிழ்’ இலக்கியம்வரை பேராசிரியர் படித்தறிந்தவர் என்பதை இந்நூல் காட்டிக் கொடுக்கிறது.’’

1983

பாரதீயம்

Bharatheeyam

Foreword by:
Dr Avvai Naratajan

******

‘‘ . . . . அவற்றுள் பாரதியாரை மிகுந்த ஆர்வத்தோடு பாராட்டி மகிழும் நூல்கள் பல; ஆற்றலோடு ஆராய்ந்து போற்றும் நூல்கள் சில! . . . . இரண்டாவது வகையைச் சார்ந்தது பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் பாரதீயம். பாரதியாரின் நூற்றாண்டில் அவர்தம் முப்பெரும் பாடல்களைப் பற்றித் தனித்தனியே முயன்று திறனாய்வு நூல்களைத் திறம்பட எழுதி வெளியிட்டுத் தம் போக்கில் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியவர் இப்பேராசிரியர். இவற்றிற்கும் மேலாக, பாரதியார் கவிதைகள் முழுவதையும் சாராகப் பிழிந்து வழங்கும் பெருநூலே பாரதீயம் என்னும் இந்நூல்."

1983

கம்பனில் மக்கள் குரல்

Kambanil Makkal Kural

Foreword by:
Justice S Ratnavel Pandiyan

******

‘‘பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் இங்ஙனம் கம்பனை ஆழ்ந்து கற்றோருள் ஒருவர். பல்லாண்டுகளாப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் எழுதிய பதினொரு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். பேராசிரியர் பல கோண்ங்களில் கம்பனைத் துய்த்தமையைக் கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன.’’

‘‘பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்துறை அறிஞர். பல துறைகளையும் சிறப்பாக அறிவியல் துறைகளை முறையாகப் பயின்று அவற்றில் ஆழ்ந்த புலமையை அடைந்தவர். சிறந்த சிந்தையாளர். பல்வேறு துறைகளில் படைப்பிலக்கியங்களை வழங்கி தமிழன்னையைப் பெருமிதத்துடன் களிக்கச்செய்து வருகின்றவர். இவரை நடமாடும் கலைக்களஞ்சியம் என்று கூறினாலும் அக்கூற்று மிகைபடக் கூறியதாகாது.’’

1983

புதுக்கவிதை - போக்கும், நோக்கும்

Puthukkavithai - Pokkum, Nokkum

Foreword by:
Justice S Mohan

******

‘‘இந்நூலில் அடித்தளமே பல்வேறு கவிதைகளை ஆராய்ந்த பின்பு அமைக்க ஆசிரியரின் எண்ண ஓட்டங்கள் போக்குக்கும் நோக்குக்கும் வழிகாட்டிகளாக அமைந்து இருக்கின்றன. இவர் பேனா, முனையில் இருந்து புறப்பட்டுள்ள நூல்களின் பெருக்கு இத்துடன் 56ஆக நிற்கிறது. காவிரி தவழும் திருச்சி மாவட்டத்தில் பிறந்ததால் வளம் பெற்ற அறிவைப் பெற்றிருக்கின்றார் போலும். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி தற்போது நமக்கு தண்ணீரைத் தராவிட்டாலும் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் போன்றாரின் எழுத்துக் கூர்மை என்றுமே மழுங்கியதில்லை.’’

1983

சிலநோக்கில் நாலாயிரம்

Sila Nokkil Naalaayiram

Foreword by:
Justice S R Sengottuvelan

******

‘‘இந்நூலைப் பயிலும் நாம் திவ்வியப் பிரபந்தத்தைச் சுவைக்கின்றோம். இறைமையை உணர்கின்றோம். வைணவத்தின் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளுகின்றோம். அகப்பொருள் தத்துவத்தின் அடிப்படையிலும் (தோழி, தாய், மகள் பாசுரங்கள் மூலம்) இத்தத்துவம் விளக்கப்படும் அருமைப்பாட்டிலும் தெளிவு பெறுகின்றோம். பேராசிரியர் ரெட்டியார் பல அறிவியல் துறைகளில் வல்லவராதலால் கருத்துகளை விளக்கும் முறையில் இவர்தம் அறிவியல் பயிற்சி முறை இவருக்குப் பல்லாற்றானும் கைகொடுத்து உதவுவதை இறைவனின் அந்தர்யாமித்துவத்தை உணர்வதுபோல் உணர்ந்து மகிழ்கின்றோம்.’’

1984



வாழையடி வாழை

Vaazhaiyadi Vaazhai

Foreword by:
Sri S Aranganayakam,
Minister for Education, Govt of Tamilnadu

******

‘‘. . . . . பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அறிவியலில் - பல துறைகளில் - சிறுவர்களுக்காகவும் வளர்ந்தவர்களுக்காவும் பொதுமக்களுக்காகவும் இதுவரையில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழ் மொழிக்கு வளமூட்டியுள்ளார்.’’

‘‘கொஞ்சம் நில்லுங்கள் (பக்.264) என்ற தலைப்பில் நூல் படிப்போரை ஆசிரியர் சிந்திக்கத் தூண்டுகின்றார். ‘கால்வழியில் புரட்சி’ என்ற தலைப்பில் (பக்.268) உணவுப் பெருக்கம், தாவர இயலிலும் விலங்கியலிலும் சுட்டுவகையால் விளைந்த பயன்கள், இந்திய அறிவியலறிஞர்களால் வெளிநாடுகளில் கண்டறியப் பெற்ற நுணுக்கமான அறிவியல் உண்மைகள் முதலியன எழிலுற எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. ஆசிரியர் பல புதிய கலைச்சொற்களைக் கையாண்டிருப்பது தமிழுக்கு புதிய வளத்தை வழங்குகின்றது. ஓய்வு பெற்ற நிலையிலும் ஓயாது பணியாற்றும் இவர் திறம் சிறப்புடையதாகும்.’’

1984

சைவ சமய விளக்கு

Saiva Samaya Vilakku

Foreword by:
Dr VA Devasenapathi, Director,
Dr S Radhakrishnan Advanced Centre of Philosophy,
University of Madras

******

‘‘உணவுப் பொருள்களான அரிசி, பருப்பு, காய்கறிகள் இவற்றே அதே நிலையில் உண்டு செரிமானம் செய்ய இயலாது. தகுந்த முறையில் சமைத்துப் பக்குவப்படுத்தி உண்டால் செரிமானம் செய்வது எளிது. அதேபோல், சைவ சித்தாந்த முடிவுகளையும், மரபையும் எளிதில் படித்து உணர்ந்து கொள்வதென்பது இயலாத காரியம். அவற்றைப் பக்குவப்படுத்தி எளிமையான சொற்களால் விளக்குதல் வேண்டும். அதனை இந்நூலாசிரியர் சிறந்த முறையில் செய்திருக்கின்றார்.’’

1985

தம்பிரான் தோழர்
Thambiran Thozhar

Foreword by:
TK Somasundaram,Porur, Chennai, Tamilnadu

******

''தேவாரத் தலங்களிருக்கும் பண்டைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளையும், இந்தியத் துணைக் கட்டத்தின் வடபகுதியிலிருக்கும் தேவாரத்தலங்களையும், தெற்கே ஈழ நாட்டிலிருக்கும் இரு தேவாரத் தலங்களையும் குறிப்பிட்டு, பல தலங்களின் பெயர்க் காரணங்களையும், பல தலங்களிலுள்ள கோயில்களின் பெயர்க் காரணங்களையும் விளக்கி, தம்பிரான் தோழர் வழிபட்ட திருத்தலங்களின் பட்டியலையும் இணைத்து, அத்தலங்கள் இருக்கும் இடங்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டு, அட்டவிடத்தலங்கள், சப்தவிடத்தலங்கள், சப்ததானத்தலங்கள் என்று கருதப்படும் சிறப்புத் தலங்களையும் குறிப்பிட்டு, தம்பிரான் தோழரின் வரலாற்றை முடிக்கின்றார் பேராசிரியர்.''

1985



Collected Papers

Foreword by:
Prof KR Srinivasa Iyengar,
Former Vice-Chancellor, Andhra University

******

“As a teacher too, he has accumulated a body of variegated experience ranging from the Headmastership of the Turaiyur High School to the Headship of the Department of Tamil Studies in Sri Venkateswara University, Tirupati. Scholar, teacher, organizer of teachings, savant in Tamil language and literature, disseminator of knowledge about Vaishnava religion and philosophy, and well-informed and animated guide to the hundred hallowed Vaishnava shrines in South India, Prof Subbu Reddiar is a man of many parts, and these facets of his learning and personality stand revealed in the present collection of 27 papers, which is really a selection from a corpus comprising more than double the number".

1916 2016

1985



வைணவ உரைவளம்

Vainava Uraivalam

Foreword by:
Pulavar P Ramanujan, Thevanoor

******

''வைணவ உரைவளம்' என்ற இந்த வெளியீடு தேனும் கன்னலும் கலந்த' சுவை நிறைந்த பாலைப் போன்றது. சுவையின்றித் தள்ள வேண்டிய பக்கம் இந்நூலில் ஒன்றுகூட இல்லை. ஆழ்வார்கள் பாசுரங்கள் சுவைத்து அநுபவிப்பதற்கு இந்நூல் போன்ற வேறொரு நூலை நான் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை''.

''அருளிச் செயலுக்குரிய வியாக்கியானங்கள் அனைத்தும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப் பிரவாள நடையில் அமைந்துள்ளன. அன்றியும் வைணவ சம்பிரதாயத்திற்கேயுரிய சில சம்பிரதாய வாக்கியங்கள், பரியாயச் சொற்கள் ஓர் ஆசானை அணுகிக் கேட்டாலன்றி இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே, என்னைப் போன்றவர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் முயன்றுள்ள பேராசிரியர் அவர்களின் அரியபணி - தெய்வப்பணி - யைச் சிறப்பாக வைணவப் பெருமக்களும் பொதுவாகத் தமிழ்நன்மக்களும் போற்றி ஆதரவு காட்டுவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை.''

1985

ஆன்மீகமும் அறிவியலும்
Aanmeekamum Ariviyalum

Foreword by:
Dr N Sanjeevi,
Head, Dept of Tamil Literature,
University of Madras

******

‘‘டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்களைத் தமிழுலகு நன்கறியும். கடந்த நாற்பதாண்டுகளாக இடையீடின்றி அறிவுப் பணியும், அருந்தமிழ்ப் பணியும் செய்துவரும் சான்றோர் அவர். அறிவியல், சமயம், இலக்கியம், கல்வியியல் ஆகிய துறைகளில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு நூல்களை எழுதிப் பரிசுகளும், பாராட்டுகளும் பலப்பலவாகப் பெற்ற பெரியார் அவர். இவ்வகையில் இவருக்கு நிகர் இவரே எனலாம்.’’

‘‘டாக்டர் ரெட்டியார் சைவம், வைணவம் இரண்டையும் தமது இரு கண்களாகப் போற்றுபவர் என்பதும் தமிழிலக்கியத்தின் பல்வேறு காலத்து நூல்களிலும், உரைகளிலும் ஆழ்ந்த புலமையுடையவர் என்பதும் அவர்தம் இந்நூலாலும் உறுதி பெறும்’’.

1985



ஞான சம்பந்தர்

Gnanasambandhar

Foreword by: Prof Dr R Sarangapani,
Former-Head, Dept of Tamil,
Alagappa College, Karaikudi, Tamilnadu

******

''ஆதலால் இந்நூல் வரலாறு அறிவதற்கு மட்டும் துணையாகாமல் தேவாரப் பாக்களை அறிந்து கொள்வதற்கும் துணையாகிறது. சில தேவாரப் பாடல்களுக்குச் சேக்கிழார் தரும் விளக்கங்களை ஆங்காங்கே பேராசிரியர் இயைத்துக் காட்டுவது படிப்போருக்கு நல்விருந்தாக அமைகின்றது''

''பேராசிரியர் திருமாலிடமும் ஈடுபாடுடையவராதலின் நாயன்மார்களின் வரலாறு கூறும்போதும் திருமாலைப் பற்றிய கருத்துக்களைத் தொடர்புப்படுத்திக் காட்டுவர்''

''நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகளாய்'' தேவாரப் பாக்களைச் சுவையுடன் எடுத்துரைத்து நாயன்மார்கள் வழிபாடு செய்த தலங்களுக்கு விளக்கங் கூறி அவர்தம் வரலாறுகளை எளிய இனிய நடையில் நூலாக்கித் தரும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் தொண்டு பாராட்டுதற்குரியது.''

1986

நாவுக்கரசர்

Naavukkarasar

Foreword by:
Dr AM Parimanam,
Head, Dept of Tamil,
Pushpam College, Poondi, Tamilnadu

******

"அவ்வகையில் பக்திப் பனுவல்களைப் பயிலுதலும் பயின்றவற்றைப் பயில்வோர் உளங்கொளப் பகர்தலும் ஓர் அரிய கலையாகும். தமிழில் அந்த அரிய கலை கைவசம் பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆவார்கள்.''

''ஆழவார் பாசுரங்களுக்கு அமைந்துள்ள ஈடு முதலான வியாக்கியானங்களை நன்கு கற்றுணர்ந்து அநுபவித்ததால், டாக்டர் இரெட்டியாரவர்கள், நாயன்மார்களில் பதிகங்களை நோக்கும் கோணத்தில் புதுமையும், பொலிவும் திகழ்கின்றன. இரெட்டியாரவர்கள், அருட்பாசுரங்களைச் சுவைக்கும் பாங்கினை, அச்சுவையினைப் புலப்படுத்தும் பாணியை இந்நூலில் பக்கந்தோறும் காணமுடிகின்றது.''

1987

விட்டு சித்தன் விரித்த தமிழ்

Vittu Chithan Viritha Thamizh

Foreword by: Sri K Padmanabha Reddiar,
Vainava Chemmal, Peruvalanallur

******

‘‘சைவ சமயத்தைச் சார்ந்த இப்பெருமகனார் பதினான்கு இயல்களாக நடைபெறும் இந்தப் பனுவல் சமயக் காழ்ப்பின்றி பொதுநோக்கோடு உண்மையை உணர்ந்து பெரியாழ்வரைப் பற்றிய பல கருத்துக்களையும் வைணவக் கொள்கைகளின் நுட்பங்களையும் சம்பிரதாய மரபு கெடாது இயன்ற அளவு வைணவ நடைகலந்து உணர்த்தும் திறன் அனைவராலும் போற்றத்தக்கதாகும். வைணவப் பெருமக்களாலும் பாராட்டத்தக்கதாகும்.

‘‘இங்ஙனம் பல்வேறு கோணங்களில் பெரியாழ்வரையும் அவரது திருமொழிகளின் விளக்கங்களையும் காட்டி நமக்கு அரியதோர் பக்தி விருந்தாக அமைந்த இப்பனுவல் உள்ளபடியே ‘விட்டுசித்தன் விரித்த தமிழே’ யாகும். பெரியாழ்வரைப் புரிந்து கொள்ள விழைவாருக்கு இஃது ஓர் திறனாய்வு விளக்கமாகும்.’’

1987



ஆழ்வார்களின் ஆரா அமுது

Aazhvaarkalin Aaraa Amudhu

Foreword by:
Pulavar M Ramasamy,
Asst Headmaster, Senthamangalam Dist Board High School

******

‘‘ஆழவார்களின் ஆரா அமுது என்ற இந்த நூல் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தாம் திருப்பதியில் பணியாற்றிய ஒரு காலப் பகுதியில் திருப்பதியைச் சுற்றியுள்ள ஐந்து இடங்களில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவுகள் அடங்கியது. ஒரு காலத்தில் ஒரு சில இடத்தினருக்குப் பயன்பட்ட பொழிவுகள் எல்லா இடத்தினருக்கும் எல்லாக்காலத்தினருக்கும் பயன்படட்டும் என்னும் பெருநோக்கால் இந்த ஆறு பொழிவுகளும் நூல் வடிவம் பெற்றுத் தமிழ் மக்களிடையே உலா வருகின்றன.’’

‘‘இத்தகைய பெருமையைப் பெற்ற இப்பேராசிரியப் பெருமகனார் படைத்த இப் பக்திப் பனுவல் பல சிறப்புகளைக் கொண்டது. நயம், நடை, உவமை, மேற்கோள், வைண சமயக் கருத்துக்கள், பொதுக் கருத்துக்கள், சொற்பொருள் விளக்கம், ஐயத்தைத்தெளிவுபடுத்துதல் ஆகிய எட்டு வகைகளில் இந்நூலில் உயிரோட்டத்தைக் காணலாம். வைணவ சமய உயிரோட்டத்தில் அடக்கமும் எட்டெழுத்தில் தானே உள்ளது?’’

1988

நினைவுக் குமிழிகள் I

Ninaivu-k-Kumizhikal - I

Foreword by:
Silamboli Dr S Chellappan

******

''பேராசிரியர் ரெட்டியார் மூன்றாண்டு பருவம் நிரம்பும் முன்னர் தந்தையாரை இழந்தவர். எளிய குடும்பத்தில் வளர்ந்தவர்கள். என்றாலும் தன் கடின உழைப்பால் படிப்படியாக முன்னேறி இன்று கல்வியுலகு பாராட்டுகின்ற உயர்ந்த நிலையில் திகழ்கின்றார்கள். தம் வாழ்க்கைப் பயணம் பற்றி அவருடைய மனம் அசை போட்டதன் விளைவே இந்நூல்.''

''இந்நூலினால் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் தன் வரலாறு என்பதைவிட 1920, 1930 களில் தமிழ் நாட்டுச் சிற்றூர்களின் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, திண்ணைப் பள்ளிக் கூடங்களில் கல்வி கற்றுத்தந்த முறை, உயர்நிலைப்பள்ளி -கல்லூரிகளில் கல்வி நிலை போன்றவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகின்ற சமூக வரலாற்று விளக்க நூல் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.''

1988

தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை

Thamizh Illakkiyankalil Aram, Needhi, Muraimai

Foreword by:
Justice S Natarajan

******

‘முறைமை’ என்ற சொல்லை நெறிமுறை தவறாது நிகழும் ஊழ், ஞாலத்திகிரி, முது நீர்த்திகிரி, காலத்திகிரி, கோலத்திகிரி போன்ற பொருள்களுடன் புணர்த்தி வைணவ இலக்கியங்களுடன் மேற்கோள்களுடனும் இக்கால அறிவியல் வள்ரச்சியுடனும் ஒப்பிட்டுப் பேசும் பாங்கு மிகவும் சுவையான பகுதியாகும் (பக்.303 - 309).’’

‘‘பொதுவாக நூல் முழுதும், ஆசிரியரின் இலக்கண இலக்கிய அறிவையும், குறிப்பாக வைணவ சமயத்திலும் அதன் இலக்கியங்கள், தத்துவங்கள் ஆகியவற்றில் அவருக்குள்ள ஆழ்ந்த பயிற்சியையும் வெளிப்படுத்துகின்றன.’’

1988



பாட்டுத் திறன்

Paattu Thiran

Foreword by:
Dr KP Aravanan,
Head, Tamil Department,
Pondicherry University

******

‘‘இந்நூல் கவித்திறனை மட்டும் ஆராயாமல், கவித்திறனுக்கு அடிக்கிடையாகக் கிடக்கும் உடலியல், உளவியல், உணர்வியல் ஆகிய அனைத்தையும் ஆராய்கின்றது. உள்ளக் கிளர்ச்சிபற்றி வால்சன் ஆகியோர்கொண்ட கொள்ளைகளை விளக்கி, பழந்தமிழர் உள்ளக்கிளர்ச்சி பற்றிக் கொண்ட கொள்கைகளைப் பொருத்திப் பார்த்து ஆராய்ந்து இருப்பது பாராட்டத்தக்கது. கவிதையில் தத்துவம், கற்பனை, சொல்வளம், யாப்புமுறை, அணி நலன், தொடை நலம், உண்மைப் பொருள் போன்ற பல்வேறு செய்திகளைப் பேராசிரியர் திறம்படவும், நிரல்படவும் விளக்கியுள்ளார்.’’

1989

மாணிக்கவாசகர்

Manickvasagar

Foreword by:
Dr Pon Sourirajan,
Professor's research student

******

''இடையிடையே மணிவாசகப் பெருமானுக்கும் தில்லைக் கூத்தனுக்கும் மானசீகமாக நிகழ்ந்த பேச்சினை நேர்முக நடையில் சிறுகதை போக்கில் ஆங்காங்கே ஆசிரியர் தந்து செல்வது பூஞ்சோலையில் நடை பயில்வது போலக் கற்பவர் நெஞ்சம் எளிதில் நூலில் உலவ இடந்தருகின்றது.''

''சேரன் கலம் ஒன்று கடலில் சென்றால் அடுத்து வேறொன்றும் செல்ல இயலாது என்று பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாடியுள்ளார். அப்படித்தான் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் ஒருவரைப் பற்றி, ஒரு நூலைப் பற்றி எழுதிவிட்டால் பின்வருபவர் எழுதுவதற்கு வேறொன்றும் இல்லாது போய்விடும். அவ்வாறு பல நோக்குகளில் நூல் எழுதுதல் இவர்க்கே அமைந்த பாங்கு. பயன்பட்ட நூல்கள், சொல்லடைவுகள் முதலியவற்றை முறையாக அமைத்து, எந்நூலானாலும் - படைப்பிலக்கியமாயினும் ஆராய்ச்சி நூலாயினும் பதிப்பித்தல் இவர்க்கு கைவந்த கலை''.

1989



நினைவுக் குமிழிகள் II

Ninaivuk-Kumizhikal - II

Foreword by:
A Panneerselvam,
Joint Director,
Tamil Development, Govt of Tamilnadu

******

''பேராசிரியர் அவர்கள் தமக்குரிய பொறுப்புகளைத் திட்டமிட்ட முறையில் செயற்பாங்குடன் நிறைவேற்றி வருபவராவர்கள். அதனால் வாழ்க்கையைச் சுமையாகக் கொள்ளாமல் சுவையாக்கிக் கொண்டு வாழ்ந்து வருபவர். ''நீர் வழிப்படூஉம் புணை போலன்றி எதிரிட்டு - எதிர் நீச்சலிட்டு - வாழ்க்கையில் வெற்றிகளை நாட்டியவர்; சாதனைகளைப் படைத்தவர்''

''இத்தொகுதியில் பேராசிரியர் அவர்கள் தம்முடைய துறையூர் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் அவர் அடைந்த இடர்ப்பாடுகளும், இன்னல்களும் 'விரிப்பின் நீளும், தொகுப்பின் மிஞ்சும்' என்ற முறையிலேயே அமைந்துள்ளதனைக் காண்கிறோம்''.

1989

கல்வி உளவியல் கோட்பாடுகள்

Kalvi Ulaviyal Kotpadugal

Foreword by:
KR Manickam, Former Principal,
Govt Teachers' College, Chennai

******

‘‘கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற நூல் என் அரிய நண்பர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களால் தமிழன்னையின் திருவடியில் சூட்டப்பெற்ற அழகிய அணிகலன்களுள் தலைசிறந்தது. இறவாத புகழுடைய புது நூல்கள் இயற்றல் வேண்டும் என்ற தேசியக்கவி பாரதியாரின் அறை கூவலுக்கு விடையளிக்கும் பாங்கில் அமைந்துள்ளது.

‘‘ஆசிரியர்களும் கல்வியியல் பள்ளி, கல்லூரி மாணவர்களும் கல்வியில் நாட்டமுள்ள பெருமக்களும் இந்நூலைத் தக்க முறையில் பயன் படுத்துவார்களாயின் அதுவே அவர்கள் நூலாசிரியர்களுக்குச் செய்யும் பெரும் நன்றியாக அமையும்.’’

1989



கலியன் குரல்

Kaliyan Kural

Foreword by:
Dr AR Alagappan,
Head, Dept of Tamil,
Annamalai University, Tamilnadu

******

''ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்களைக் கசடறக் கற்ற புலமையாளர்; தமது சிந்தனைகளை நூலாக்கும் திறம் பெற்றவர். ஓயாத உழைப்பாலும், எழுத்தாற்றலாலும் இலக்கியம், சமயம், திருத்தலப் பயணம், திறனாய்வு, வரலாறு, அறிவியல், ஆராய்ச்சி, பயிற்று முறை என்று பல்வேறு துறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக எண்பத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களைத் தமிழன்னைக்கு அளித்துச் சிறந்து விளங்குபவர்; இன்று வளர்ந்து வரும் அறிவியல் தமிழுக்கு இவர் ஒரு முன்னோடி.''

1989



சடகோபன் செந்தமிழ்

Sadagopan Senthamizh

Foreword by:
Dr T Vaithamanidhi,
English Professor, Chennai, Tamilnadu

******

''சடகோபன் செந்தமிழ் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களது அடிமனத்தில், அநுபவமாகப் பல நாட்கள் படிந்து, படிந்து, அன்னாரின் மனம் முழுவதையும் நிறைக்க முயற்கின்ற வொன்று இலக்கிய ஆக்கம் பெற்று எழுத்து முயற்சியாகிவிட்டது என்றே தோன்றுகின்றது. ஏனென்றால், சைவ மரபினரான அவர்கள் வைணவ நெறியின் தலைவராம் 'வேதம் தமிழ் செய்த வித்தகரான' நம்மாழ்வாரின் பாசுரங்கள் தேக்கித் தரும் இறையநுபவத்திலும், 'ஈரத்தமிழிலும் மனத்தைக் கொடுத்த அந்த தாராளம் இந்த நூலில் பயில்வதைப் பார்க்கின்றோம்.''

1989

நினைவுக் குமிழிகள் III

Ninaiyuk-k-kumizhikal - III

Foreword by:
Dr S Meyyappan,
Dept of Tamil, Annamalai University, Tamilnadu

******

‘‘வாழையடி வாழை என வருகிற மரபில் வந்துதித்த அறிஞர் சுப்பு ரெட்டியார், தாம் வாழ்க்கையில் கண்டவற்றை, கேட்டவற்றை, கற்றவைகளை, உணர்ந்தவைகளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து எழுதி மகிழ்கிறார்.’’

‘‘பொழுதினை அவமே போக்காது கல்வித்தவம் செய்த ரெட்டியார் வரலாறு என்போல்வார்க்கு வழிகாட்டி. நல்வாழ்வு வாழத் துடிக்கும் இளைஞர்களுக்கு கலங்கரை விளக்கம். பொதுவாக எல்லோரும் இந்நூலைப்படிக்க வேண்டும். சிறப்பாக ஆசிரியர் ஒவ்வொருவரும் கற்க வேண்டும்.’’

1989

மலரும் நினைவுகள்

Malarum Ninaivukal

Foreword by:
Dr K Venkatasubramaniyan,
Vice-Chancellor, Pondicherry University

******

இளமையில் 'நிச்ச நிரப்பினுள்' நின்றபோதும், நிலை குலையாது துச்சமெனத் துயரைத் தூக்கி எறிந்து, 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் வள்ளுவன் வாக்கிற்கு இலக்கியமாய், இலக்கணமாகத் திகழ்பவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள்.

'வைணவத் தமிழ்க்கோ'வாகத் திகழும் பேராசிரியர் ரெட்டியார் வாள்நாள் முழுவதையும் தமிழ்த் தொண்டிற்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர்.

வெறும் வரலாற்றுப் படைப்பாக இராமல் இலக்கிய மேற்கோளுடன் இதனை, இனிய காவியமாக்கியுள்ளார் திரு ரெட்டியார்.

1990



புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்
ஒரு கண்ணோட்டம்

Puduvai(mai) Kavignar Subramaniya Bharathiyar
Oru Kannottam

Foreword by:
Dr N Ghadigachalam,
Senior Research Fellow,
International Institute of Tamil Studies, Chennai

******

‘‘பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர்; கனவிலும் பிறர்க்குத் தீங்கு நினையாதவர். பயன்கருதாது தமிழ்த் தொண்டாற்றி வருபவர். எளிய தமிழில் அறிவியல் நூல்களைத் தருபவர்.

*‘‘எளிய நடை, ஆழமான அறிவியல் பூர்வமான திறனாய்வுப் போக்கு, சிக்கலான சமய தத்துவங்களையும் எளிமையாக வெளிப்படுத்தும் பாங்கு, நடைமுறை உவமைகளை வாரி வழங்கும் பான்மை ஆகியவற்றால் பாரதியாரை ஒரு மாமனிதனாகக் காணும் **‘‘புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்’’** என்ற இந்நூல் தமிழன்னைக்கு பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் சூட்டியுள்ள புத்தம் புதிய ஆபரணமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.’’*

1990



நினைவுக் குமிழிகள் IV
Ninaiyuk-k-kumizhikal - IV

Foreword by:
Prof Dr Daniel Devasangeetham,
Dept of Tamil, Sri Venkateswara University, Tirupathi, AP

******

“மனத்தூய்மையால், அன்பு வார்த்தைகளால், மாணவர்கள் உள்ளங்களைக் கவர்ந்தார். ‘உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் போக்கு’ இவரிடம் இல்லாததால் மாணவர்க்கு இவரிடம் அளவற்ற நம்பிக்கை உண்டானது. அந்நம்பிக்கை, பின்னால் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.”

“பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையை உருவாக்கிய சிற்பி (The Architect of the Dept. of Tamil of Sri Venkateswara University) *என்பது தமிழ்கூறு நல்லுலகம் நன்கறிந்த உண்மை. இந்தச் சிற்பியின் வேதனைகளை, கனவுகளை, கற்பனைகளை, இந்நூலில் படிக்கும்போது, மெய்சிலிர்க்கிறது.”*

1991



பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்

Paavendhar Bharathidasan - Oru Kannottam

Foreword by:
Prof Gnana Ayyasami, Secretary,
Thamizhaga Mootharignar Kuzhu, Chennai

******

‘‘பாரதிதாசனாரின் கீர்த்தனங்கள், கீர்த்தனங்கள் படைப்போருக்கு ஒரு வழிகாட்டி. சிந்துபாடும் திறனுக்கு இஃது ஓர் அருமையான எடுத்துக்காட்டு (பக். 87) என்ற பேராசிரியர் அவர்களின் மதிப்பீடு, நமக்குப் பாவேந்தரின் ஒரு புதிய பரிமாணத்தை மக்களுக்கு அதிகமாகத் தெரிந்திராத ஒரு செய்தியை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.’’

‘‘இது தவிர, இன்னும் பல்வேறு நிழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டும் பாங்கில் பாவேந்தரின் கவினுறு கவிதைகளாம் கற்கண்டுக் கட்டிகளை, கட்டித்தேனை, கருத்துக் கருவூலங்களை பாரதிதாசன் படைப்புகளாகிய வற்றாத சுரங்கத்தை அகழ்ந்தெடுத்து அவருக்கே உரிய இனிய, எளிய, தெளிந்த தமிழில் வழங்கியுள்ள பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.’’

1992



பரகாலன் பைந்தமிழ்

Parakaalan Painthamizh

Foreword by:
Dr AV Rangachari,
Head, Dept of Economics,
Annamalai University, Tamilnadu

******

*‘‘**பரகாலன் பைந்தமிழ்**’ பேராசிரியர் அவர்களது அடிமனத்தில் ஆழமாகப் படிந்து அநுபவிக்கப் பெற்று, அந்த அநுபவம் பீறிட்டுக் கொண்டு நூல் வடிவமாக அமையப் பெற்றது என்பதை வரிகள் தொறும் உய்த்துணர முடிகிறது.’’*

‘‘ஆக, பேராசிரியர் அவர்கள் தமது 77-வது வயதில், வயது முதுமையைப் பாராது, அறிவு முதுமையையே பற்றாசாகக்கொண்டு, 555 பக்கங்களில் பரகாலன் பனுவல்களின் சாரத்தைப் பிழிந்து, வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், தம்மையே மறந்து, ஆழ்வாராகவே ஒன்றி விடுகின்றார். பாசுரங்களின் சொல்வளம், உரை ஆசிரியர்களோடு பேராசிரியரும் பாசுரப்பொருள்களை அநுபவித்த பாங்கு, இறை அநுபவத்தில் ஆழ்வார் ஆழங்கால்பட்ட முறை ஆகியவைகளோடு இந்நூலைப் படிப்போரின் உள்ளங்களையும் இக்கட்டுரைகள் ஆழ்வாரின் பாசுரங்களைச் சேவித்து அநுபவிக்கத் தூண்டுகிறது.’’

1992



வடவேங்கடமும் திருவேங்கடமும்

Vadavengadamum Thiruvengadamum

Foreword by:
Sri TK Krishnamacharya Swamigal,
Kancheepuram, Tamilnadu

******

''*இவற்றில் பல இடங்களில் ஸ்ரீ காஞ்சிபுரம் மகா வித்வான்* P.B. *அண்ணங்கராசார்யஸ்வாமிகளின் நாலாயிர திவ்யார்த்த தீபிகையுரைப் பகுதிகளை எடுத்தாண்டு சுவைப்பட விளக்கி அவ்வாசிரியர் திறத்தில் தமக்குள்ள பெருமதிப்பை உலகறிய வெளியிட்டிருக்கிறார் இப்பெரியவர்.*''

1916 2016

1993

வாய்மொழியும் வாசகமும்

Vaaymozhiyum Vaasakamum

Foreword by:
Prof Dr AA Manavalan,
Dept of Tamil, University of Madras

******

''பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரை அறியாத தமிழறிஞர்களோ, தமிழ்க் கல்வி நிறுவனங்களோ, தமிழ் நாட்டுச் சமயப் பெரியவர்களோ, சமயக் கல்வி தழைக்கப்பாடுபடும் சமய அமைப்புகளோ, தமிழ் நாட்டில் இல்லை என்று கூறினால் அது மிகையன்று.''

''வாய்மொழியும் வாசகமும் என்னும் இந்நூல் பல உதிரிக் கட்டுரைகளின் தொகுப்பாகத் தோற்றமளிப்பினும் இறையுண்மை, இறைத்தன்மை, இறையநுபவம் என்னும் முப்பெரும் உண்மைகளை அருளாளர்களின் திருவாக்கு, ஆசாரியர்களின் மெய்யுணர்வு, அறிவியலாரின் ஆய்வு நோக்கு என்றும் முத்திறக் கோணங்களின் வழி ஆய்ந்து தெளிவிக்கும் நோக்கத்தை அடி நாதமாகக் கொண்டு இக்கட்டுரைகள் விளங்குவதைக் காணலாம்.''

1994

நவவித சம்பந்தம்

Navavitha Sambandham

Foreword by:
Sri NS Ramanuja Thathacharya Swamigal,
Former Vice-Chancellor, Rashtriya Samskrit Vidyapeeth

******

*''ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய மேற்கூறிய எம்பெருமானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உள்ள ஒன்பது விதமான உறவுகளைப் பற்றித் தனியாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி முறையிலும் இதுவரை யாராலும் நூல் இயற்றப்பட்டு வெளிவரவில்லை. ஸ்ரீமான் பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் இக்குறையை நீக்க ''**நவவித சம்பந்தம்**'' என்கின்ற ஒப்பற்ற விரிவான நூலை இயற்றி இப்பொழுது வெளியிடுகின்றார். இஃது ஓர் ஒப்பற்ற பொக்கிஷமாகும்.''*

1994



அர்த்த பஞ்சகம்

Artha Panchakam

Foreword by:
Prof Dr S Mahadevan,
Former Vice-Chancellor,
Rashtriya Samskrit Vidhyapeeth

******

''இந்நூலில் நுவலப்படும் 'அர்த்த பஞ்சக ஞானம்' என்பது சம்சாரியான சேதநன் தத்துவஞானம் பிறந்து உய்யும் போது தோன்றுவதாம். இது (1) ஈசுவரனது இயல்பு, (2) ஆன்மாவின் இயல்பு, (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைவதற்குரிய வழிகள், மற்றும் (5) அப்பயனை அடைய வொட்டாமல் தடுக்கும் இடையூறுகள் இவை ஆகும். இவற்றைப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் இந்நூலில் மிக விரிவாக, ஆழ்வார்களின் பக்திப் பாசுரங்ககளிலிருந்து தெளிவான மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார்கள்.''

1916 2016

1995



வைணவச் செல்வம்

Vainava Selvam

Foreword by:
Prof Dr AV Rangachari,
Head, Dept of Economics,
Annamalai University, Tamilnadu

******

‘‘ஆக, வைணவத்தின் தோற்றம், வளர்ச்சி, வைணவத் தத்துவங்கள், வைணவ இலக்கியங்கள், வைணவம் பரப்பிய சிலர்கள், வைணவத்தலங்கள், திருக்கோயில் வழிபாட்டு முறைகள், திவ்வியப்பிரபந்தப் பெருவிழா, நடைமுறை சம்பிரதாயங்கள், வைணவத்தின் தாக்கம் ஆகிய அனைத்தையும் தன்னுள்ளே கொண்ட வைணவம் பற்றிய ஒரு முழு நூலாக, கலைக்களஞ்சியமாக, பேராசிரியர் அவர்கள் இதனை அளித்துள்ளார்கள். தம் வாழ்நாள் முழுதும் கடும் உழைப்பினால் வைணவ சமயத்தின் அனைத்து வடமொழி, மணிப்பிரவாள நுல்கள், வியாக்கியானங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்து அறிவு பெற்று, மற்ற சமய நூல்கள், பிறமொழி நூல்களிலும் நுண்ணறிவுபெற்று, அதன் பயனாக விளைந்தது இந்நூலாகும்.’‘

1997



இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

Illakkiya Vakaiyin Valarchiyum Ikkala Illakkiyankalum

Foreword by:
R Gandhi, Senior Advocate,
Madras High Court, **Tamilnadu**

******

"ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது சென்னை பல்கலைக் கழகமும், தமிழ் இலக்கியத் துறையும் சேர்ந்து நடத்திய பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுடைய கல்கி அறக்கட்டளை சொற்பொழிவினுடைய நூல் வடிவம்.''

''இப்படி இலக்கியங்களுடைய பல்வேறு வகைகளையும் ஆராய்ந்து இக்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும், ஆழ்ந்த புலமையோடு எளிய முறையில், சிந்தனைப்பொறிகள் தெறிக்கப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த நூலை வடித்திருக்கிறார். நல்ல நூல்களை எழுதுவதும் வெளியிடுவதுமாகக் கொண்டிருக்கிறார் பேராசிரியர் ரெட்டியார்..''

1997

கவிஞர் வாலியின் அவதார புருஷன் **-** *ஒரு மதிப்பீடு*

Kavignar Vaaliyin Avathaara Purushan - Oru Madhippeedhu

Foreword by:
Justice MM Ismail

*****

''அந்நூலின் மதிப்பீடாகவே பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நூல் அமைந்துள்ளது (நூல் சுமார் 272 பக்கங்கள் - மதிப்பீடு 352 பக்கங்கள்)

''எந்த அளவில் கவிஞர் வாலி தன் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதனை நன்கு எடுத்துக் காட்டுகிறார்.''

''இந்நூற்குத் திறனாய்வு அடிப்படையில் பேராசிரியர் ரெட்டியார் 352 பக்க அளவில் மதிப்பீடு செய்துள்ளார் என்பதே சிறப்பினது''

''ஆக, இத்திறனாய்வு மதிப்பீட்டு நூல் பொருத்தமும், தகுதியும் உடையதாகவே அமைந்துள்ளது. ***தமிழுலகம்*** *அதனை* ***வரவேற்கும்*** *என்பதில் எனக்கு ஐயமில்லை.''*

1998



வாழும் கவிஞர்கள்

Vazhum Kavignarkal

Foreword by:
Ponnambala Desika Paramacharya Swamigal,
Kundrakudi

*****

''தமிழைக் கற்பவர் சிலர்; கற்றவழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழி காட்டுவோர் வெகு சிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய் தமிழை விற்பவர் பலர்! தமெக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமுகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந. சுப்பு ரெட்டியார்.''

''உணவிற்கு உப்பு போல, தமிழ் கூறும் நல்லுலகிற்கு சுப்பு ரெட்டியார் படைப்புகள் தவிர்க்க முடியாதவை!''

1999

நீங்காத நினைவுகள் I

Neengatha Ninaivukal - I

Foreword by:
RM Veerappan.
Former Minister, Government of Tamilnadu

*****

''இருளும் ஒளியும் கலந்த உலகம் போல நல்லதும் கெட்டதும் கலந்தவன்தான் மனிதன் என்ற எச்சரிக்கையோடு தாம் உறவாடிய சான்றோர்களின் அருங்குணங்களை ஆழமாகத் தீட்டி, ஆராத் தன்மைகளையும் மிக நாகரிகமாகப் புலப்படுத்துள்ளார்கள். அவரது இருவகை விமர்சனங்களிலும் அவரது மென்மையும், மனித நேயமும், நட்பும், நன்றி உணர்வும் ஆதார சுருதியாக விளங்குவதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். தம்மை மிகவும் பாதித்தவர்களைக்கூடப் ''பாதர்கள்'' என்று கூறத் துணியாத அவரது 'தருமநெறி' தகைமை மிக்கது''.

1916 2016

1999

நீங்காத நினைவுகள் II

Neengaatha Ninaivukal -II

Foreword by:
RM Veerappan.
Former Minister, Government of Tamilnadu

*****

“இக்காலக் கட்டங்களில் அவரோடு தோழமை பூண்டவர்கள், அவர் தொண்டுக்குத் துணைபுரிந்தவர்கள், ஏன் தொல்லை கொடுத்தவர்கள் உட்பட, பலரின் குணச்சித்திரங்கள் இந்நூலில் அகச் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

‘‘மனிதனின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிற போதும், சில குறைகளைத் தெரிவிக்கின்ற போதும், எப்படிச் சொல்லவேண்டும், அதிலே அடக்கமும், அன்பும் நலமும் எப்படி இணைந்து வரவேண்டும் என்பதற்கு அருமையான தமிழ் நடையில் இலக்கணம் படைத்துள்ளது இந்த நூல்.’’

1916 2016

2001



பாவேந்தரின் பாட்டுத்திறன்

Paavendarin Paattuthiran

Foreword by:
Dr M Karunanidhi, Chief Minister of Tamilnadu

*****

‘‘பேராசிரியர் சுப்பு ரெட்டியார் கல்வியியல் வல்லுநர். ஆசிரியர் பயிற்சிக்குரிய நூல்கள் உட்பட பல்வேறு இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். அவர், இந்நூலில் பாரதிதாசன் பாடுபொருளாகக் கொண்டவற்றைப் பட்டியல் படுத்துகிறார். கற்பனைத் திறன், கவிதை வடிவம், யாப்பு நெறி, உவமைத் திறன், வருணனைத் திறன் முதலியவை குறித்து விரிவாக ஆராய்ந்து பாரதிதாசனின் அரிய கருத்துக்களை எடுத்து மொழிகிறார்.

*‘‘இப்படிப் பாரதிதாசன் அவர்களின் பாடல்கள் பலவற்றிலும் காணப்படும் சிந்தனைத் திறன்களைத் தொகுத்துரைக்கும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் அரிய முயற்சி போற்றுதற்குரியதாகும். தமிழ்ச் சமுதாய மக்கள் அனைவரும் கற்றுத் தெளிந்து, சுவைத்து, உணர்ந்து, மகிழத்தக்கது அவர் படைத்துள்ள ‘‘**பாவேந்தரின் பாட்டுத்திறன்**’’.*

2001



அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்

Ariviyal Nokkil Ilakkiyam, Samayam, Thathuvam

Foreword by:
Justice N Krishnaswamy Reddiar

*****

''பேராசிரியர் பெரும்புலவர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றியுள்ள பணி மகத்தானது. பல துறைகளிலே பல நூல்கள் எழுதிப் பல பரிசுகளும் பட்டங்களும் விருதுகளும் பெற்றிருக்கிறார்கள். இத்துணை புகழ் பெற்றும் செருக்கின்றி, ஆரவார ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒதுக்கி, எளிமையான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு ஒழுக்க சீலராய் வாழ்கின்றார்கள்.

***'என்பொருள வாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு'*** *(424)*

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க டாக்டர் ரெட்டியார் அவர்கள் மிகவும் கடினமான மறை பொருள்களையும் எளிமையாக மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எழுதுவதில் வல்லுநர். இவர்தம் தமிழ்ப் பணியில் அறிவியல் வாடை - ஒளி - வெகுவாக இருக்கும்; ஆதிக்கம் பெற்றிருக்கும்.''

2001



சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்

Saivasiddhantham - Or Arimugam

Foreword by:
Prof Dr P Krishnan,
Head, Dept of Saiva Siddhantham,
University of Madras

*****

''. . . . இந்நூல் தொல்காப்பியம் முதல் மெய்கண்ட சாத்திரங்கள் ஈறாக உள்ள பல நூற்களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொகுத்து ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட நூலாகும். சைவ சமய வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல உள்ளன. ஆனால் சைவ சமயக் கருத்துகளை மையப்படுத்தி தமிழ் நூல்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்ட வரலாற்று நோக்கில் எழுதப்பட்ட முதல் ஆய்வு நூல் இது என்றால் அது மிகையாகாது. எளிய நடையில் இலக்கிய நயத்தோடு எழுதப்பட்ட சுவையான நூல் இது. ஆங்காங்கே சைவக்கருத்துகளுக்கு இணையான வைணவக் கருத்துக்களையும் ஒப்புநோக்காகச் சுவைபட எடுத்துக்கூறி சமயப் பொறையின் இன்றியமையாமையை வலியுறுத்திச் செல்வது பாராட்டுக்குரியது.''

2001



தாயுமானவர்

Thaayumanavar

Foreword by:
Pulavar T Ramalingam,
Best Teacher Awardee

*****

‘‘இந்நூலைப் படித்தபொழுது, தாயுமான அடிகளார் சைவய உலகிற்குக் கிடைத்த மெய்ஞ்ஞானச் செல்வர் என்பதையும் அவர் அருளிய தெய்வமணம் கமழும் பாடல்கள் உயிர் வளர்க்கும் ஞானப்பாடல்கள் என்பதையும் அறிய முடிந்தது.’’

‘‘கற்கண்டுக் கட்டியை எப்பக்கம் சுவைத்தாலும் இனிக்கும். அதுபோல ஆன்மிகத் தேன் நிறைந்த இந்நூலின் எந்தப் பகுதியைப் படித்தாலும் இனிக்கும்’’

‘‘தாயுமான அடிகளாரை அறிய விரும்புவோர்க்கு அவர் அருளிய பாடல்களை ஆய்வு செய்ய விழைவோர்க்கு இந்நூல் கலங்கரை விளக்காகத் திகழும் என்பதில் ஐயமில்லை.’’

1916 2016

2001



சைவமும் தமிழும்

Saivamum Thamizhum

Foreword by:
Justice PR Gokulakrishnan,
Chief Judge, Gujarat High Court

*****

‘‘தொல்காப்பியம் முதல் கவிமணி தேசியவிநயாகம் பிள்ளைவரை கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடு அமைந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழில் கண்ணுதற் பெருங்கடவுள் பற்றிய குறிப்புகளை விளக்கியுள்ள பான்மை பாராட்டுதற்குரியது’’

‘‘சித்தர்களைப்பற்றி, அவர் இலக்கியங்களைப் பற்றி, சிவனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடுபற்றி, அவர்கள் இயற்றிய பாடல்கள் மூலம் இந்நூலில், ஆசிரியர் நமக்கெல்லாம் அற்புதக் கருத்துக்களை அள்ளித் தந்துள்ளார். சித்தர்களைப் பற்றி பலருக்குத் தெரியாத பல உண்மைகளை இந்நூலில் காணலாம்.’’

2001



தந்தை பெரியார் சிந்தனைகள்

Thanthai Periyar Chinthanaikal

Foreword by:
Dr R Thandavan,
Head, Anna Sociological Centre,
University of Madras

*****

‘‘தள்ளாத வயதிலும் தமிழ்ப் பணியாற்றும் பல்துறை அறிஞர் பல்கலைச் செம்மல் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் மிகுந்த ஆராய்ச்சிப் பாங்கோடு தந்தை பெரியாரைப் பற்றி அரியதொரு ஆய்வுப் பேருரை நிகழ்த்தினார்.’’

‘‘பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் அறிவுத் தெளிவும், ஆழ்ந்த நுட்பமும் வாய்க்கப் பெற்றவர். முயன்று முடிக்கும் முயற்சியர். தான் ஆற்றிய மூன்று பொழிவுகளையும் காற்றில் கரைந்துவிடாமல் அதை நூலாக்கித் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்துள்ள பேராசிரியரை வாழ்த்த எனக்கு வயதில்லை என்பதால் வணங்கி மகிழ்கின்றேன்.’’

2002



***பாண்டியன் பரிசு* - ஒரு மதிப்பீடு**

Paandiyan Parisu - Oru Mathippeedhu

Foreword by:
Dr K Anbalazhan,
Finance Minister, Govt of Tamilnadu

*****

‘‘அவர் சங்கத்தமிழிலும், திருக்குறளிலும், வைணவ சமய நூல்களிலும், சமய தத்துவ ஆராய்ச்சியிலும், கம்ப இராமாயணத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர். வைணவம் தொடர்புடைய நூல்களை ஆராய்ந்தவர். தமிழுக்கு ஆக்கம் செய்யும் ஆர்வத்துடன் அறிவியல் புலம் சார்ந்த பல நூல்களையும் இயற்றய பெருமைக்குரியவர்.’’

‘‘இப்படிப்பட்ட சிறுகாப்பிய நலன்களை விவரித்துள்ளதுடன், பாண்டியன் பரிசின் தலைமைக் காவிய மாந்தர்கள், துரோகியான எதிர்த்தலைவர், துணைக்காவிய மாந்தர், காவிய நடை, காவியத்தில் படிமங்கள், காவியம் உணர்த்தும் உண்மைகள் முதலான தலைப்புக்களில் நூலாசிரியர் புரட்சிக் கவிஞரின் படைப்பு நலன் விளங்க ஆய்வு செய்துள்ளார்.’’

2002



தமிழில் அறிவியல் செல்வம்

Thamzhil Ariviyal Selvam

Foreword by:
Fr Dr S Inacimuthu,
Vice-Chancellor, University of Madras

*****

‘‘தம் வாழ்நாளில் நிகழ்த்திய 14 சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று. இங்ஙனம் அறக்கட்டளைப் பொழிவுகளுக்கு ஒரு நிரந்தர வடிவம் தந்து கொண்டிருக்கும் பேராசிரியர் ரெட்டியார் எல்லோர் பாராட்டுதலுக்கும் உரியவராகின்றார். அத்தகைய தமிழன்பருக்கு என் ஆசியும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.’’

2002



பல்சுவை விருந்து

Palsuvai Virundhu

Foreword by:
Lion Durai Sundarajulu,
Former Joint Secretary, Government of Tamilnadu

*****

''சாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாரதியின் வாக்கும், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற முதுமொழியும் இன்று கடைப்பிடிக்கப்படவில்லை என்பது கண்கூடு. ஆசிரியரும் தமது ஆவேசமான கருத்துக்களை வெளியுட்டுள்ளார். சாதியை ஒழிப்போம் என்று ஒருபுறம் கூறும் அரசு, மறுபக்கம் சாதியின் பெயரால் பள்ளி, கல்லூரிகளில் சேர்த்தல், வேலைவாய்ப்பு அளித்தல், பதவி உயர்வு அளித்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசிரியர் குறிப்பிட்டதைப்போல, தெருக்களில் சாதிப் பெயரை நிக்குவதில் ஏற்படும் குளறுபடிகள், பத்திரப் பதிவில் சாதிப்பெயர் வைப்பது வேடிக்கை. இதைவிடக் கொடுமை, தம் பெயரோடு ரெட்டியார் சேர்ந்திருப்பதால் அவர் அறக்கட்டளை துவங்க அனுப்பிய ரூ.25,000/-ஐ ஒரு பல்கலைக்கழகம் திருப்பியனுப்பியது என்பதை எண்ணும்போது எந்தளவுக்கு சாதி வெறியர்கள் இருக்கிறார்கள் என்பதை வேதனையோடு குறிப்பிடுகிறார்...''

2002



***கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி* - ஒரு மதிப்பீடு**

Kavignar Vaaliyin Paandavar Bhoomi - Oru Madhippeedhu

Foreword by:
Dr V Jeyadevan,
Head, Dept of Tamil Language,
University of Madras

*****

‘‘ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே திறனாய்வு செய்து நூல் வெளியிடும் நல்ல மரபை பேராசிரியர் தமிழுக்குத் தோற்றுவித்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.’’

‘‘கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த பாண்டவர் பூமி பொதுமக்களின் சொத்தாக அமைந்துவிட்டது. புலவர்கட்கும் எட்டும் போக்கிலும் அமைந்துள்ளது. இதனை இவ்வுலகுக்கு வழங்கிய சபகரித்த கவிஞர் வாலி ‘தமிழ் வியாசர்’ என்று கருதும் அளவுக்கு உயர்ந்துவிடுகின்றார். தமிழர் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்பவருமாகின்றார் என்பது நூலாசிரியர் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் கண்ட முடிபு, கொண்ட துணிபு.’’

2002



***கவிமணியின் தமிழ்ப்பணி* - ஒரு மதிப்பீடு**

Kavimaniyin Thamizh-p-pani - Oru Mathipeedu

Foreword by:
Prof Dr Radha Sellappan,
Head, Dept of Tamil,
Bharathidasan University, Trichy, Tamilnadu

*****

‘‘கவிமணியின் பாடல்களைப் படிக்கும்போது பேராசிரியருக்குத் தேவராமும், ஆழ்வார் பாசுரங்களும் கண்முன்னே தோன்றுகின்றன. பேராசிரியரின் ஆசிய ஜோதியைப்பற்றிய மதிப்பீடு நம் கண்முன் புத்த கயையைக் கொண்டுவந்து காட்டுகிறது. கவிமணியின் கவிதைகளை ஒப்பீட்டு முறையில் நடுநிலையில் நின்று திறனாய்ந்து நல்லதொரு திறனாய்வு நூலினைப் படைத்தளித்த பேராசிரியருக்குத் தமிழ் உலகம் குறிப்பாகத் தமிழ்க் கவிதை உலகம் பெரிதும் கடமைப்பட்டிருந்கிறது என்றால் அது மிகையன்று.’’

2003



இராமலிங்க அடிகள்

Ramalinga Adikal

Foreword by:
Sri CS Kuppuraj,
Former Chief Engineer - PWD,
Govt of Tamilnadu

*****

*‘‘துரதிர்ஷ்டவசமாக, வள்ளற்பெருமானது மிக உயர்ந்த கருத்துகளை, இன்றைக்கும் மிகமிக தேவைப்படும் கருத்துகளை,அவர் வாழ்ந்த காலத்தில் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. இன்றைக்கும் அதே நிலைதான். அவரை இன்றைக்கு சரிவரப் புரிந்துகொண்ட வெகு சிலரில், பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் ஒருவர். இல்லாவிட்டால் தனது 88-வது வயதில், 350 பக்கங்கள் கொண்ட ஒரு நூலினை, ‘‘**இராமலிங்க அடிகள்**’’ என்ற தலைப்புடன் எழுதி வெளியிட முன்வருவாரா? அவருக்குச் சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் பெரிதும் கடப்பாடு உடையன ஆகும்’’*

‘‘வள்ளலார் பெருமானின் பெருமைகளையும் அவரது கொள்கைகள் பற்றிய அவசரமும் அவசியமும் நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். இதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.’’

2003



பட்டினத்தடிகள்

Pattinathadikal

Foreword by:
Sri S Thiagarajan,
President,
Saiva Siddhantha Perumandram, Chennai

*****

‘‘பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பட்டினத்தடிகளார் பெண்பாலர்பால் வெறுப்புக் கொண்டு பேசிய இடங்களைக் காட்டி, ‘‘ஆயின் ஆண்பாலார் அல்லரோ தவறிழைப்பவர். பெண்பாலரை இத்துணை இழித்துப் பேசலாமா?’’ என்று கேட்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.’’

‘‘பட்டினத்தடிகள் என்று ஒரே பெயரில் வழங்கப்பெறும் ஞானியாரின் வரலாறுகளையும் அவர்களின் அருளிச் செயல்களையும் ஒருசேர யாவரும் கற்று உணரும் வகையில் எளிய இனிய தமிழ் நடையில் ஆய்வு நோக்கில் தந்துள்ளார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார்.

2003

வைணவ புராணங்கள்

Vainava Puranangal

Foreword by:
Dr J Parthasarathy,
Former Tamil Professor,
Presidency College, Chennai

*****

‘‘இவர் எடுத்துக்கொண்ட நூல்களின் வரிசையைப் பார்த்தால் எல்லாமே மிகப்பல வைணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படாத இலக்கியங்களே என்பது புரியும். வரிசை நிரலிலும் அறிமுகம் ஆகாதது, மேலும் அறிமுகம் ஆகாதது என்று ஐந்தும் அமைந்திருப்பதைப் பார்க்கும்போது அறிமுகமாகாத இலக்கியங்களை அறிமுகப்படுத்திய தொண்டு புரியும்.’’

‘‘இப்படிப் படிப்படியாக மேலும் மேலும் அறிமுகமாகாத நூல்களை அறிமுகப்படுத்தியதே இவருடைய பெருந்தொண்டு எனலாம். இந்த விதத்தில் இவரைப் போற்ற வைணவ உலகம் மிகவும் கடப்பாடு கொண்டுள்ளது.’’

‘‘ஏராளமான செய்திகளை உள்ளடக்கி நடுநிலையோடு வெளிப்படுத்தி, வைணவ மரபு வழிப் பண்பாட்டினை நமக்கெல்லாம் புரிய வைத்து, இந்த நூல்களைத் தேடிக் கண்டறிந்து படிக்க வேண்டும் என்று தூண்டுகிறாரே அதுவே மிகவும் உயிர்ப்பான செய்தியாகும்.”

2003

மூவர் தேவாரம் - புதிய பார்வை

Moovar Tevaram - Pudhiya Paarvai

Foreword by:
Dr Prameela Gurumurthi,
Dept of Indian Music, UoM

*****

''பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் அயராது பல நூல்கள் படைத்துள்ள சிறந்த அறிஞர் பெருமகனார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராகத் தமிழ் இலக்கியத் துறையிலும், தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் மதிப்பியல் இயக்குநராகவும் அருந்தொண்டாற்றியவர். இவரது தனித்திறமை யாதெனில் சொற்பொழிவுகளை எல்லாம் நூலாக்கும் பணி என்ற அரும் சாதனையாகும்.''

''வடமொழி மற்றும் தமிழில் உள்ள இவரது திறனாய்வு வடமொழி யாப்பியத்தின் மரபு எனும் பகுதியில் சிறப்பாக வெளிப்படுகின்றது. கட்டளை எனும் பகுதியில் இவர் தரும் விளக்கங்கள் ஆய்வாளர்களுக்கும் பெரும் விருந்தாக அமைகின்றன.''

2003

அண்ணல் அநுமன்

Annal Anuman

Foreword by:
Kamban Adisoodi PL Palaniappan,
Secretary, Kamban Kazhagam, Chennai

*****

"இப்படியெல்லாம் அநுமனை ஒவ்வொரு புதுக்கோணத்திலும், யாரும் கண்டு காட்டியிராத முயற்சியிலும் ஈடுபடுவதுதான் பேராசிரியர் ரெட்டியார்வர்கட்கே கைவந்த கலை. இந்நூலில் காணப்பெறும் ஒவ்வோர் இயலும், ஒவ்வொரு கோணத்தில் அநுமனை முழுவதுமாய்க் காட்டிடும் புதிய பார்வை வீச்சுகள்; முழுப்பார்வை முயற்சிகள்; பேருருவ தரிசனங்கள். 'கவிக்கு நாயகன்', 'சிந்தனைச் செம்மல்', 'இராமபக்தன்' என்னும் பகுதிகள் அநுமனின் ***மனோ*** *பலத்தையும், 'சொல்லின் செல்வன், 'இராம தூதன்', 'குணக் குன்றன்' என்னும் பகுதிகள் அநுமனின்* ***வாக்கு*** *பலத்தையும், 'அஞ்சா நெஞ்சன்', 'விழையும் உருவினன்' என்பன அநுமனின்* ***காய*** *பலத்தையும் மொத்தத்தில் அநுமனின் பேருருவைக் கண்ட மகிழ்ச்சியை நம்முன் உண்டாக்குவன."*

2004



என் அமெரிக்கப் பயணம்

En America-p-payanam

Foreword by:
Dr N Mahalingam, Chairman,
Sakthi Group of Industries

*****

“முதுபெரும் புலவராகிய பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களை நான் பல்லாண்டுகளாக அறிவேன். தமது முதிர்ந்த தளர்ந்த அகவையிலும் அறிவுக் கருவூலங்களைத் தொடர்ந்து எழுதித் தமிழகத்துக்கு வழங்கி வருவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ‘‘பூசித்தும் வாசித்தும் போக்கினேன்போது’’ - என்னும் ஆழ்வார் திருமொழிக்கு அணிகலனாக திரு ரெட்டியாரின் அறிவு, வாழ்க்கை அமைந்துள்ளது. பேராசிரியர்களுக்குப் பேராசிரியராகிய திரு சுப்பு ரெட்டியார் அருந்தமிழ்ப் புலமை, அறிவியல் நுணுக்கம், ஆராய்ச்சி வன்மை எனப் பல்வேறு தகுதிகளைக் கொண்டிருப்பதால், அரிய பெரிய கலைச் செல்வங்களைத் தமிழுக்கு வழங்க முடிகிறது.’’

2004



வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

Valluvarin Vaazhviyal Chinthanaikal

Foreword by:
Thirukural K Bhaskaran,
Founder, Karunakaran Memorial Thirukural Library,
Anna Nagar, Chennai

*****

‘‘அகவை (89) முதிர்ச்சியிலும் பல்வேறு இடர்பாடுகளையும், இடையூறுகளையும், இன்னல்களையும் புறக்கணித்து, ‘வாக்கு வானை விட வலிமை மிக்கது’ எனும் மூதுரையை முற்றிலும் நம்பும் நூலாசிரியர், ஆழியில் மூழ்கி முத்துக்களை கண்டறிவது போல், திருக்குறள் இலக்கியப் பெருங்கடலில் மிக நுண்ணிய கருத்துக்களை அறிந்து, வரைகிறார் இப்படைப்பை. அறிவுக்கு விருந்தாக, கருத்துக்கருவூலமாக, பட்டறிவுப் பாசறையாக சிந்தனையைத் தூண்டும் ஊக்கியாக விளங்குகிறது இந்நூல்.’’

‘‘பேராசிரியர் முனைவர் சுப்பு ரெட்டியார் என்றால் சிந்தனை ஊற்று என இந்நூல் மெய்ப்பிக்கிறது. தமிழ் மக்கள் இந்நூலை வரவேற்பர்.’’

2004



காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

Kanchi Prathivathi Bhayangraam
Annangaracharya Swamigal

Foreword by:
Dr VKNS Raghavan,
Prof & Head, Dept of Vaishnavism,
University of Madras

*****

'தங்கக்காப்பு அண்ணா' என்று புகழ்மிக்க ஸ்ரீ ச.வே. காஞ்சி பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள் எனும் இனிய நூல் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களால் மிக நேர்த்தியாகவும், திறம்படவும் இயற்றப்பட்டுள்ளது. ஆதலின் இதற்கு அணிந்துரை என்பதே இன்றியமையாததல்ல.''

''ஆகவே இந்நூல் அனைத்து வைணவர்களாலும், மற்றும் தமிழர்களாலும் படித்துப் படித்து சுவைத்துச் சுவைத்து இன்புறத்தக்கது என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. மற்றும் அனைத்து நூலகங்களையும் அலக்கரித்தக்கது இந்நூல் என்பது மிகையாகாது.''

ISBN 978-81-932327-6-7
9 788193 232767 >

நூற்றாண்டு வெளியீடு

Garland of Poems

Paraded

Some of Professor's works have one unique feature - Sirappu Paayira Paamalai [in Tamil], rendered by the great Tamil scholars, Tamil poets offering scholarly tributes to Professor and his works. Paayira Paamalai highlights Professor's life to a certain extent, his works and their special features, especially the characteristic style of the work for which the said Paayira Paamalai is rendered. Fourteen out of 135 books written by the Professor have these features which are listed in detail. A wide range of variety in genre and other salient characteristics are noteworthy.

ந பாஸ்கரன்
தொகுப்பாசிரியர்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

சிறப்புப் பாயிரப் பாமாலைகள்

சிறப்புப் பாயிரப் பாமாலைகள்

ந பாஸ்கரன்
[தொகுப்பாசிரியர்]
தலைமையாசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி
கோட்டாத்தூர்
திருச்சி மாவட்டம்

1916 2016
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

சிறப்புப் பாயிரப் பாமாலைகள்
[GARLAND OF POEMS]
A Centenary Publication

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

FEBRUARY 2016

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-932327-7-4

9 788193 232774 >

Wrapper design: **Centenary Committee**

Printed at : D J Prints, Chennai - 95.
8903478236

DEDICATION

Dedicated to:

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை

The 'Manonmaniam' in his name is the name of a play he wrote in 1891 and which is considered a classic. '*Tamizh Thaai Vaazhthu*' was written as an invocation to precede the play and was adopted as the State Anthem of Government of Tamil Nadu in June 1970. All official functions of the Government of Tamil Nadu start with this song and end with the Indian National Anthem.

தொகுப்புரை

உலகமெங்கும் அதிக மக்களால் பேசப்படக் கூடிய மொழி ஆங்கிலமன்று ; சீன மொழியே ஆகும்.

விஜய நகரப் பேரரசை நிறுவிய ஹரிஹரர், புக்கர் என்னும் ரெட்டையர் வழி வந்தவரே "ரெட்டியர்"; மருவி "ரெட்டியார்" என ஆயிற்று. இவர்கள் தமிழ்நாட்டின் பல செழிப்பான பகுதிகளில் குடியேறினர்.

அவர்களுள் ஒரு பிரிவினர் கொல்லிமலை, பச்சைமலைகளுக்கு இடையிலுள்ள பகுதிகளில் குடியேறி, அங்கிருந்த அடர்ந்த காட்டை அழித்து, நன்செய் நிலத்தை உருவாக்கி, பெரும் நிலக்கிழார்களாகச் செல்வச் செழிப்புடன், மற்ற இனத்தவர்களிடையே இணக்கத்துடனும் வாழ்ந்திருந்தனர்.

இவர்கள் குடியேறி வாழ்ந்து வருகின்ற ஊர்களின் பெயர்களே - துறையூர், கோட்டாத்தூர், கீரம்பூர், சிக்கத்தம்பூர், மாராடி, சோபனபுரம், வைரிசெட்டிப்பாளையம், பச்சப்பெருமாள்பட்டி, ரெட்டியார்பட்டி ___ செழிப்பை காட்டுவன.

இவர்களில் சிலர், கோயில்கள், கல்வி நிறுவனங்கள், போன்றவற்றை நிறுவி பல அருஞ்செயல்கள் செய்து சிறப்படைந்தவர்கள்.

கல்விச்சிறப்பால், கடின உழைப்பால், அன்பு மனத்தால், எளியகுணத்தால் சிறப்படைந்தவர்களும் இருந்தனர்.

அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கோட்டாத்தூர் ந சுப்பு ரெட்டியார் ஆவார்.

கோட்டாத்தூரில் எளிய குடும்பத்தில் பிறந்த இவர், தமது மூன்றாவது வயதிலேயே தந்தையை இழந்தார். ஆசிரியர் பயிற்சி படிக்க தமக்கிருந்த சிறிது நிலத்தையும் குறைந்த விலைக்கு விற்றார். வறுமையிலும் கல்வியில் அவர் முதல் மாணவராகவே விளங்கினார்.

துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஒன்பதாண்டுகள் பணி.

காரைக்குடி டாக்டர் அழகப்பச் செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பத்தாண்டுகள் பணி.

திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பதினேழாண்டுகள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் பணி.

பணியிலிருந்தபடியே சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழில் எம்.ஏ. வரை படித்து அதில் முதல் நிலையில் தேறினார். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் போழ்து முனைவர் [PhD] பட்டமும் பெற்றார். தொண்ணூறு அகவை வரை நிறைவாழ்வு வாழ்ந்த இவர், முப்பத்து மூன்றாம் வயதில் "கவிஞன் உள்ளம்" நூலை எழுதி வெளியிட்டார். பிறகு தொடர்ந்து எழுதி, தம் வாழ்நாளில் 135 நூல்களை வெளியிட்டார். இவையன்றி பிறரது நூல்களையும் வெளியிட்டார்.

கற்பிக்கும் முறைகள் பற்றி ஐந்து நூல்கள். அறிவியலில் பதினான்கு நூல்கள். இலக்கிய நூல்கள், சமயநிலை விளக்கும் நூல்கள் பதினேழு. சான்றோர் வாழ்க்கை தொடர்பான நூல்கள் பனிரெண்டு. தன் வரலாற்று நூல்கள் நினைவுக்குமிழ்களாக வெளியாயின. இவரது திருக்குறள் தெளிவு, வைணவ உரை வளம், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ஆகிய நூல்களை கம்பராமன் எஸ்.கே.இராமராசன் பலரிடமும் படிக்கப் பரிந்துரைப்பாராம்.

நெற்றியில் நீறு மணக்கும் சைவ மரபினர். இவர் மனமோ ஈடு, வியாக்யானம் என்னும் வைணவ செல்வத்தில் திளைத்திருக்கும். சைவ, வைணவத்தில் ஆழ்ந்து அகன்ற நுண்மாண் நுழைபுலத்தவர்.

அக்காலத்தில் இவருடைய நூல்கள் இல்லாத நூலகங்களே தமிழகத்தில் இல்லை என்னும் சிறப்பைப் பெற்றிருந்தார். இவருடைய நூல்களுக்குச் சான்றோர் பலர் பாயிரமும், அணிந்துரைகளும் வழங்கிச் சிறப்பித்தனர்.

பாயிரம் = பா + இரம்.
இரம் = இரு + அம் = இருப்பது
பா = நூல் = பழங்காலத்தில் நூல்கள் யாவும் "பா" வடிவில் இயற்றப்பெற்றன. ஆதலால், "பா" என்பது நூலைக் குறித்தது. அந்த நூலில் இருப்பதைக் கூறுவது "பாயிரம்" ஆயிற்று.

சான்றோர் பலர் வழங்கிய "பாயிரப் பாமாலைகள்", அன்னாரது பதினான்கு நூல்களை அலங்கரிக்கின்றன. இப்பாயிரங்கள் வாயிலாக, நூலாசிரியரின் பண்புகளையும், அவரது எளிமை, அன்பு, விடாமுயற்சி, உழைப்பு போன்ற சிறப்பியல்புகளையும் நாம் அறியலாம். நூலின் உட்பொதிவையும் அறியலாம்.

அவ்வாறான பாயிரப் பாமாலைகளைத் தொகுத்து வெளியிடுவதென நூற்றாண்டு விழாக் குழுவினர் முடிவெடுத்ததை அடுத்து, இந்நூல் தங்கள் கரங்களில் தவழ்கிறது.

இந்நூலை ஒருமுறை வாசிப்பவர் ரெட்டியாரின் அனைத்து நூல்களையும் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியரின் தலைமாணாக்கர் முனைவர் ந கடிகாசலம் அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

ந பாஸ்கரன்
தலைமையாசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி
கோட்டாத்தூர்
திருச்சி மாவட்டம்

அணிந்துரை

முனைவர் ந கடிகாசலம்
தமிழ்ப் பேராசிரியர்(ப.நி.)
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை

நூற்றாண்டு விழா காணும் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் தலைமாணாக்கன் என்பது நான் பெற்ற பேறு.

அவரிடம் தமிழ் இலக்கியம் பயின்று, எம்.ஏ., பிஎச்.டி. பட்டங்களைப் பெற்றது என் வாழ்வில் மறக்க முடியாதது.

“பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் அஷ்ட பிரபந்தம் நூலை ஆய்வு செய்.” என்று அவர் எனக்கிட்ட ஆணையை மறுப்பு ஏதும் கூறாமல், நிறைவேற்றியதில், என்னை விட, பேராசிரியருக்குத்தான் எல்லையற்ற மகிழ்ச்சி.

1983 ஜுன் திங்களில், சீன வானொலியில் பணி புரிய வாய்ப்பு உருவானபோது, “வெளிநாட்டவர் உன் புலமைக்கு வரவேற்பளிப்பது எனக்கும் பெருமையாக இருக்கிறது” என்று வாயார வாழ்த்தியவர் என் பேராசிரியப் பெருந்தகை.

தமிழ் இலக்கியம் மட்டும் போதாது, மொழியியல், வடமொழி, இந்தி ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்திட வேண்டும் என்று அறிவுரை வழங்கி, என்னை ஆற்றுப்படுத்தியவர் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார்.

1971 முதல், பேராசிரியரின் குடும்பத்தில் ஒருவனாக இருந்து வரும் எனக்கு, அன்னாரின் நூற்றாண்டு விழா வெளியீடான ***“சிறப்புப் பாயிரப் பாமாலைகள்”*** எனும் நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பு கிட்டியிருப்பது தமிழ்க் கடவுளின் அருள் என்றே கருதுகிறேன்.

பேராசிரியர் அவர்கள், தமிழ், இலக்கியம், அறிவியல், உளவியல், கல்வியியல், சமயம், தத்துவம் என பல்வேறு துறைகளிலும் புலமை மிக்கவர்: செய்வன திருந்தச் செய்திடல் வேணடும் என்பதில் உறுதி கொண்டவர்.

அன்னாரது நூலுக்கு வழங்கப்பெற்ற 14 பாயிரங்களையும் தெரிவு செய்து, ***“சிறப்புப் பாயிரப் பாமாலைகள்”*** என்று நூலாக்கம் செய்திருப்பது, பாராட்டுக்குரியது.

ஓவ்வொரு பாமாலையும், பேராசிரியரின் குணநலன் குறித்தும், குறிப்பிட்ட நூல் குறித்தும் நடுநிலைமையுடன் நின்று, கருத்துக்களைத் தெரிவிக்கும் மதிப்பீடாகவே கருத இடமுண்டு.

நூலின் மதிப்புரையாக, விமரிசனமாக, இந்தப் பாமாலைகள் விளங்குவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாயிரம் படைத்தருளிய அறிஞர் பெருமக்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

பேராசிரியருடன் பழகியோர் அனைவருக்கும், பின்வரும் பாயிர வரிகளைப் படித்தவுடன், அன்னாரின் திருவுருவம் மனக்கண்ணில் நிழலாடுவது உறுதி.

திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர் சுப்புரெட்டி யாராம் (58)

த. பெரியாண்டவன் அவர்களின் பதிவு இது.

பேராசிரியர்க்கு எளிமையும், உழைப்பும் இரு கண்கள். எளிமை என்பது அவருடன் ஒட்டிப் பிறந்த ஒன்று. உழைப்பு என்பது, அவரால் பெருமை பெற்ற ஒன்று.

சுப்புரெட்டி யாரென்று பெயர் சொன்னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே ! (71)

என்கிறார் அர. சிங்காரவடிவேலன்.

பேராசிரியரின் பெயரை உச்சரித்தாலே தமிழ் மணக்கும் என்கிறார் சௌந்தரா கைலாசம். ஆணவம் என்பதே இல்லாமல் அமைதி காத்த தமிழறிஞர் என்று மேலும் புகழாரம் சூட்டுகிறார்.

சுப்புரெட்டி யாரென்று சொல்லும் போதே
சுகமான சுவைமிக்க தமிழ் மணக்கும் (26)

ஆணவமே இல்லாமல் அமைதி சார்ந்த
அன்பொளிரும் நல்லகத்தை உடைமை பெற்றார் (29)

என்பது உண்மை: வெறும் புகழ்ச்சியில்லை.

பேராசிரியரின் படைப்புத் திறன் பலராலும் போற்றப்பெற்றது. எளிய நடை இவருக்குச் சொந்தம். வாசகனுக்குப் போய்ச் சேர்வது என்பது படைத்தவனுக்கு இன்பம் தருவதாகும் என்பது அவர்தம் எண்ணம். எனவேதான்,

புலமையை எளிமை யாக்கிச்
சுகமுற வரையும் சுப்பு
ரெட்டியார் (76)

என்று பாராட்டுகிறார் ம.வே.பசுபதி.

நூலைப் படிப்போர்க்கு விருந்து ஊட்டுவது பேராசிரியரின் தனிச்சிறப்பாக அமைகின்றது. இதை,

சொல்லுக்கு நல்லமுதச் சுவையை ஏற்றுச்
சுவைப்பார்க்கு விருந்தூட்டும் வேளாண் செல்வர் (84)

என, அரங்க. சீனிவாசன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பேராசிரியரின் தமிழ்த் தொண்டு பாராட்டுக்குரியது என்பது, ஏற்புடையதே ! இதை,

அருந்தமிழ்ப் புலமை மிக்கார்
ஆங்கில மொழியில் வல்லார்
இருமொழிக் கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார் (5)

என்று பதிவு செய்கிறார் க. பெருமாள்.

நற்றமிழ்த் துறைகள் என்னும்
கடல்களைக் கடந்த நல்லார் (46)

என்றும்,

தமிழ்ப்பயிர்க் கருளும் கங்கைப்
பாய்ச்சலாம் இவரின் தொண்டு ! (50)

என்றும், மதிப்பீடு செய்கிறார் மு. இராதாக்கிருஷ்ணன்.

ஆயிரத்தில் ஒருவராய்த் தோன்றினார் (88)

என வீர. அரங்கனாரும்,

இப்படியோர் தமிழாசான் கிடைத்தது செந்
தமிழ்த்தாயின் இன்பப் பேறே (40)

என நாரா. நாச்சியப்பனும் பேராசிரியர்க்கு புகழ்மாலை சூட்டியிருப்பது அறியத்தக்கது.

தமிழ் பயிற்றும் முறை எனும் நூல் பேராசிரியரின் தலை சிறந்த நூல்களில் தனியிடம் பெறுகிறது.

ஆசிரியப் பணியிருக்கும் வரையிருக்கும்
அவர்படைத்த தமிழ்பயிற்று முறையின் கீர்த்தி (56)

என்று குறள்வடிவில் புகழ்கிறார் இரா. திருமுருகன்

தமிழின் ஆசிரியர் சுப்பு ரெட்டியார் என்பது கா. வெள்ளைவாரணாரின் தீர்ப்பு.

தமிழ்பயிற்றும் முறை தந்த
தண்டமிழின் ஆசிரியன் (13)

என்பது அவர்தம் வேதவாக்கு.

ஆக, போரசிரியரின் சாதனைப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

அன்பிற் புரந்திட்ட நம்சுப்பு ரெட்டியாரின்
சாதனைக்கு வரம்பில்லை (97)

என்று, பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார் எஸ்.கே.இராமராஜன்

"***சிறப்புப் பாயிரப் பாமாலைகள்*** எனும் இந்நூலை ஒருமுறை வாசிப்பவர், ரெட்டியாரின் அனைத்து நூல்களையும் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை" என்று, இந்நூலின் தொகுப்புரையில் ந. பாஸ்கரன் கோடிட்டுக் காட்டியிருப்பது உணரத்தக்கது.

நூற்றாண்டு விழாவினையொட்டி வெளிவரும் "***சிறப்புப் பாயிரப் பாமாலைகள்***" எனும் இந்நூல், பேராசிரியரின் மணிமகுடத்தில் மற்றுமோர் வைர மணியாகும்.

இந்நூலைச் சிறப்பான முறையில் வெளிக் கொணரும் நூற்றாண்டுவிழாக் குழுவினர்க்கும், அருமையான தொகுப்புரை வழங்கிச் சிறப்பித்த ந. பாஸ்கரன் அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை – 600 063
8 பிப்ரவரி 2016

ந. கடிகாசலம்

உள்ளடக்கம்

001
சிறப்புப் பாயிரப் பாமாலைகள்
[Garland of Poems]

003 தம்பிரான் தோழர்

012 வைணவ உரைவளம்

017 நாவுக்கரசர்

024 ஞான சம்பந்தர்

033 ஆழ்வார்களின் ஆரா அமுது

043 சடகோபன் செந்தமிழ்

052 விட்டு சித்தன் விரித்த தமிழ்

059 மாணிக்கவாசகர்

063 பரகாலன் பைந்தமிழ்

072 வடவேங்கடமும்திருவேங்கடமும்

076 வாய்மொழியும் வாசகமும்

080 நவவித சம்பந்தம்

086 அர்த்த பஞ்சகம்

092 வைணவ செல்வம்

பின்னிணைப்புகள்

114 காலக்கோடு ~ வாழ்க்கை
[TIMELINE – Life]

118 காலக்கோடு ~ நூல்கள்
[TIMELINE – Books]

123 காலக்கோடு ~ பாராட்டுதல்கள்
[TIMELINE – Honour]

124 காலக்கோடு ~ அறக்கட்டளைகள்
[TIMELINE – Endowments]

126 பேராசிரியரின் ஆசிரியப்பெருமக்கள்
[Professor's Teachers]

128 பணிகள்
[Service]

130 பதவிகள்
[Positions]

133 தொடர்புடையோர்
[Friends & Associates]



"If you can't be a poet, be the poem."
<< David Carradine

1916 2016

சிறப்புப் பாயிரப் பாமாலைகள்

Some of Professor's works have one unique feature - Sirappu Paayira Paamalai [in Tamil], rendered by the great Tamil scholars, Tamil poets offering scholarly tributes to Professor and his works. Paayira Paamalai highlights Professor's life to a certain extent, his works and their special features, especially the characteristic style of the work for which the said Paayira Paamalai is rendered. Fourteen out of 135 books written by the Professor have these features which are listed in detail. A wide range of variety in genre and other salient characteristics are noteworthy.





"**Poetry is the record of the best and happiest moments of the happiest and best minds.**"

<< Percy Bysshe Shelley

S.No.	Year	Name of the Publication	Sirappu Paayira Paamalai rendered by:
01	1985	தம்பிரான் தோழர் **Thambiraan Thozhar**	Prof K Perumal, Principal [Retd], Government Arts Colleges, Tamilnadu
02	1985	வைணவ உரைவளம் **Vainava Uraivalam**	SK Ramarajan [Kambaraman], Former Asst Editor, Department of Dictionary, Tamil University, Tanjore
03	1986	நாவுக்கரசர் **Naavukkarasar**	Prof K Vellaivaranaar, Former Head of Dept of Tamil, Annamalai University, Annamalainagar, Tamilnadu
04	1986	ஞான சம்பந்தர் **Gnanasambandhar**	Tirumathi Soundhara Kailasam
05	1987	ஆழ்வார்களின் ஆரா அமுது **Aazhvarkalin Aaraa Amudhu**	Kavignar N Nachiayappan, Novel Arts Printers, Chennai - 600 014
06	1987	சடகோபன் செந்தமிழ் **Sadagopan Senthamizh**	Vidwan M Radhakrishnan, Puduchery
07	1987	விட்டு சித்தன் விரித்த தமிழ் **Vittu Chitthan Viritha Thamizh**	Pulavar R Thirumuguran, Pondicherry - 605 001
08	1989	மாணிக்கவாசகர் **Maanickavasakar**	Pulavar T Periyaandhavan, Asst Director, Department of Tamil Development, Government of Tamilnadu, Chennai - 600 108
09	1992	பரகாலன் பைந்தமிழ் **Parakaalan Paithamizh**	Prof Dr PM Santhamurthi, Head of Dept of Tamil, Saurashtra College, Madurai - 625 006
10	1992	வடவேங்கடமும்திருவேங்கடமும் **Vadavengadamum Thiruvengadamum**	R Singaravadivelan, Kandanoor
11	1993	வாய்மொழியும் வாசகமும் **Vaaimozhiyum Vaasakamum**	Pulavar Prof Dr KV Pasupathi, Principal, Sri KSS Arts College, Thirupanandhal, Tanjore Dist, Tamilnadu
12	1994	நவவித சம்பந்தம் **Navavitha Sambandham**	Arutkavi Aranga Srinivasan
13	1994	அர்த்த பஞ்சகம் **Artha Panchakam**	Pulavar V Aranganaar, Tamil Teacher & Headmaster [Retd], Naaraanmai Board High School, Villupuram, Tamilnadu
14	1995	வைணவ செல்வம் **Vainava Selvam**	SK Ramarajan [Kambaraman], Former Asst Editor, Department of Dictionary, Tamil University, Tanjore

1916 2016



தம்பிரான் தோழர்
Thambiraan Thozhar

பேராசிரியர் **க. பெருமாள்**
முதல்வர் (ஓய்வு),
அரசினர் கலைக் கல்லூரிகள், தமிழ்நாடு.

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

பயண நூல்கள் நமக்களித்தார் யார்?

1. கல்லாரே மிக்குள்ள இக்காலம் தன்னில்
கல்லாரை முன்னேற்றும் கருத்தாற்றல் உள்ள
நல்லாரும் பாராட்ட, நன்றாக நாடி,
நல்லுலகை உருவாக்கும் நல்லெண்ணத் தோடு
சொல்லாலும் பொருளாலும் சுவையாலும் மிக்க
தொகைநூலும் அறநூலும் ஆன்மிக நூலும்
வல்லாரை உருவாக்கும் அறிவியல் நூலும்
வகுத்தாய்ந்து பயன்நூல்கள் நமக்களித்தார் யாரோ?

அவர்தாம் 'அருங்கலைக்கோன்' ரெட்டியார்

2. பேரன்பால் உலகனைத்தும் படைத்தழித்துக் காக்கும்
பெருமாளின் அழகெல்லாம் பெருந்தமிழில் பாடி,
ஆராத உள்ளுணர்வால் ஆழங்கால் பட்ட
ஆழ்வார்கள் அருள்செய்த பிரபந்தம் தம்மைச்
சீராக ஆராய்ந்து தெளிந்துணர்ந்த உண்மைத்
திறமெல்லாம் மறவாமல் கட்டுரைகள் தீட்டி,
ஊரெல்லாம் உலகெல்லாம் உணர்ந்தோ திவாழ
உயிரனைய நன்னூல்கள் உவந்தெழுதித் தந்து
தீராத உள்ளன்பால் தமிழணங்கைப் போற்றித்
திகழ்கின்ற சுப்புரெட்டி அவரென்பேன் அம்மா!

அவர்தம் புலவர்க்குத் தோழர்

3. பத்தியால் உலகை ஊட்டிப்
பரமனுக் கின்பம் செய்யும்
வித்தகர் நாயன் மார்கள்
விளம்பிய பதிகம் ஒதி
உத்தம ராகி இந்த
உலகெலாம் உயர்ந்து வாழப்
புத்தி நூல் அளித்தார் எல்லாப்
புலவர்க்கும் தோழர் அம்மா!

அவர்தாம் கோதில்லார்

4. படிப்பவர் உயர்தற் கேற்ற
படிப்பினை நல்க வல்ல
அடிப்படை நூல்கள் ஆக்கி
அறிவியல் நூல்கள் ஆக்கி
குடிச்செயல் வகைகள் காட்டும்!
குணநல நூல்கள் ஆக்கிக்
கொடுத்தநம் டாக்டர் சுப்பு
ரெட்டியார் கோதில் லாதார்.

1916 2016

அவர் மனைவிமக்கள் மகிழ்வுற வாழுகின்றார்

5. அருந்தமிழ்ப் புலமை மிக்கார்;
ஆங்கில மொழியில் வல்லார்;
இருமொழிக் கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார்;
திருவினை முயற்சி யாலே
திருவெலாம் நிரம்பப் பெற்றார்
மருவிய மனைவி மக்கள்
மகிழ்வுற வாழு கின்றார்.

6. இளமையில் வறுமை யுற்றார்;
இன்னல்கள் பலவும் பட்டார்;
வளமிகு தமிழைக் கற்றார்;
வறுமையை வென்றார்; சான்றோர்
உளம்புகழ்ந் துவந்து போற்ற
உயர்நிலைப் பற்றிக் கல்விக்
களங்களில் கழகம் தம்மில்
கற்பித்தார்; உயர்ந்தார்; மூத்தார்.

7. மூப்பினை அடைந்தா ரேனும்,
மூப்பிலா தோங்கி, ஞாலம்
காப்பதோர் ஆற்றல் பெற்ற
கருத்தெலாம் விளக்க வல்ல
நாப்பத மொழிகள் பேசி,
நற்கலை ஆய்வு நூல்கள்
பூப்ப தற் குதவி, இன்பம்
பூத்துளம் மகிழு கின்றார்.

8. நகைத்திளம் முகத்தர் ஆனார்;
நற்றமிழ் நூல்கள் காட்டும்
அகத்திணைக் கொள்கை தந்தார்;
அம்புலிப் பயணம் *தந்தார்;*
பகைத்திறம் அழிக்க வல்ல
பத்திநன் னெறிகள் ஆய்ந்து
வகைப்படச் சமய நூல்கள்
வழங்கினார்; வள்ளல் ஆனார்.

9. அன்பினால் இன்பம் காணும்
ஆண்டவன் அருளில்மூழ்கி,
அன்பினால் தொண்டு செய்த
அடியவர் தம்மைப் போற்றி,
அன்பினால் **டாக்டர் சுப்பு**
ரெட்டியார் ஆக்கி யுள்ள
'தம்பிரான் தோழர்' என்னும்
தகவுசால் நூலைப் பார்த்தேன்.

10. திருமகள் கேள்வன் தாளைத்
திருமனத் தேந்தி, நாளும்
அருந்தமிழ் மகிழ, நூல்கள்
ஆக்குமோர் கடமை செய்து
வருபவர், **நண்பர் டாக்டர்**
வன்றொண்டர் தம்மேல் செய்த
பொருவிலாத் தோழர் நூலின்
பொற்புணர்ந் துவகை கொண்டேன்.

11. ஆண்டவன் அருளைக் காட்டும்
ஆயிரம் ஆடல் தம்முள்
ஆண்டவன் தோழர் ஆரூர்
அடியவர் பொருட்டுச் செய்த
நீண்டதோர் ஆடல் காட்டும்
நீதியை உலகம் காண
வேண்டுமென் றாய்ந்து தந்த
விளக்கினை விளங்கிக் கொண்டேன்.

12. தூய்மையே உருவ மான
சுந்தரர் பரவை யோடும்
வாய்மையே உருவ மான
சங்கிலி வனிதை யோடும்
தோய்ந்நல் இன்ப வாழ்வும்
தொடர்ந்தவர் துன்ப வாழ்வும்
ஆய்ந்துள ரெட்டி யாரின்
ஆற்றலும் அறிவும் கண்டேன்

13. தண்டனை வழங்கி, நல்ல
தகுதியை வளர்த்துக் கொள்ளும்
தொண்டராய் உயர்த்தி, ஞானத்
தொண்டினைச் செய்ய வைத்தல்
அண்டமும் அனைத்து காக்கும்
ஆண்டவன் அருளென் றெண்ணிக்
கொண்டுளம் தெளியு மாறு
கொடுத்ததிந் நூலென் றோர்ந்தேன்.

14. இறைவனுக் கின்பம் தொண்டர்
இடர்களைந் தருள்தல் என்னும்
மறையினை எடுத்துக் காட்ட,
மலரடி வருந்தத் தூது
முறையினால் நடந்த தென்று,
முற்றிய பத்தர் எண்ணிக்
கறையிலா இன்பம் எய்தும்
காட்சியும் கருத்தும் தேர்ந்தேன்.

15. முத்தமிழ் நாட்டி லுள்ள
முக்கணன் கோயில் தோறும்
பத்தியால் பாடி ஆடிப்
பழவினை அறுத்த ஞான
வித்தகர் நாவ லூரார்
விமலரின் தோழர் ஆகிப்
'பித்தரே' என்று பாடிப்
பிழையறுத் துயர்ந்த தாய்ந்தோன்.

16. உழைப்பினால் உயர்ந்த மு.வ
உதவியை உயர்ந்து போற்றித்
தழைத்துள **டாக்டர் சுப்பு**
ரெட்டியார் தகுதி யாலே
இழைத்துள நூல்கள் எல்லாம்
இலக்கிய நயங்கள் காட்டிப்
பிழைப்பதற் கறங்கள் காட்டிப்
பிறங்குதல் ஆய்ந்து தேர்ந்தேன்

17. தம்பிரான் தோழர் கோயில்
தலந்தொறும் சென்று போற்றிச்
செந்தமிழ்ப் பதிகம் பாடிச்
சேவைசெய் திறங்கள் எல்லாம்
நம்முளம் கொள்ளு மாறு
நன்கெடுத் தியம்பும் டாக்டர்
தம்மறி வாற்றல் முற்றும்
தமிழ்க்களித் துவத்தல் கண்டேன்.

பாராட்டு

18. வடித்தெடுத்த அமிழ்தனைய தமிழ்மொழியில் ஈசன்
வன்றொண்டர்க் கருள்செய்த வரலாற்றைத் தீட்டி
அடிக்குறிப்பும் மேற்கோளும் அழகாகக் காட்டி
அவர்பணிந்த தலமெல்லாம் தெளிந்துநிலை நாட்டி
பிடித்தலைக்கும் பேராசைப் பேயனைத்தும் ஓட்டி
பிழையறுக்கும் மனையறத்தில் பேரின்பம் கண்டு
குடிப்பெருமை தனையுய்த்தும் குணத்தழகர் தம்மைக்
குன்றாத பேரன்பால் பாராட்டு கின்றேன்.

19. ஆதாரம் பலகாட்டி அகச்சான்றால் புறச்சான்றால்
ஆருரர் வரலாற்றை ஆராய்ந்து தெளிந்தோதிக்
காதாரக் கேட்போரும் கருத்தாரப் படிப்போரும்
களித்துவக்கும் படியிருக்கும் திருக்காதல் மலரன்பைப்
போதாரம் எனச்சூட்டி பொருளில்லாச் சடங்கென்னும்
பொலிவில்லாப் பொருட்செலவும் பொய்ப்பூசைத்
தீதாரம் எனநீக்கித் தேவாரம் புகழ்ந்தேத்தும்
திருவடியில் முடிவைத்துத் திகழ்வோர்க்குப் பல்லாண்டு

20. எம்பெருமான் திருவடியை
எப்போதும் பணிந்தேத்திச்
செந்தமிழில் பாட்டிசைத்துச்
சேவித்த வன்றொண்டர்
தம்முடைய வரலாற்றின்
தகவனைத்தும் ஆய்ந்துரைத்து
நம்முடைய உளங்கவர்ந்த
நல்லார்க்குப் பல்லாண்டு.

21. யாருக்கும் தீங்கறியாப்
பூஞ்சிரிப்பர்; தம்மறிவைப்
பாருக்குத் தந்துவக்கும்
பாங்காளர் பண்பாட்டின்
வேருக்கு நீருற்றும்
வித்தகர்தம் சத்தான
சீருக்கும் பல்லாண்டு
தீந்தமிழ்க்கும் பல்லாண்டு.

வாழ்த்து

22. தற்பரன் திருத்தாள் பற்றித்
தமிழமிழ் தூட்டி அன்பால்
அற்புதம் நிகழ்த்தி ஞாலம்
அமைதியாய் வாழ்தற் கேற்ற
கற்பினைக் காத்துத் தூய
காதலால் இன்பம் துய்த்து
நற்றவம் செய்த ஆரூர்
நம்பியும் நாடும் வாழ்க.

23. அவருயர் வாழ்வு பற்றி
அறிவன அனைத்தும் ஆய்ந்து
தவறிலா நடையில் நல்ல
தமிழினில் எழுதிக் கற்றார்
எவருமே புகழும் வண்ணம்
எடுத்துரைத் துலகிற் கீந்த
கவரிலா மனத்தர் சுப்பு
ரெட்டியார் *கலைகள் வாழ்க.*

24. அறிவியற் கலைகள் பற்றி
அறநெறி வாழ்வு பற்றி
குறிகுணம் இல்லா ஈசன்
குரைகழல் நற்றாள் பற்றி
நெறியுடன் வாழ்ந்தோர் ஆன்ம
நேயநன் நெறிகள் பற்றி அறிவறி ஆய்வால் தந்த
அவர்திரு நூல்கள் வாழ்க
.

25. அறிவுக்கு விருந்தும் நல்ல
அறிவியல் விருந்தும் வாழ்க்கை
நெறிகளுக் குதவும் காதல்
நிறைநல நூலும், காம
வெறிகளுக் கெரிகள் ஊட்டி,
வெம்பகை நீக்கி, ஐந்து
பொறிகளுக் கொழுக்கம் ஊட்டிப்
புகழ்பெறு நூலும் வாழ்க.

26. சொல்வகைக் கெட்டா ஞானச்
சுடர்திரு **வேங்க டத்தான்**
பல்கலைக் கழகந் தன்னில்
பயன்தமிழ் ஆசா னாகி
நல்வகைப் பணிகள் செய்து,
நல்லுல கமைக்க வல்ல
கல்வியை வளர்த்த **சுப்பு**
ரெட்டியார் களித்து வாழ்க.

27. சிந்தனைத் தெளிவு பெற்றுச்
சிறந்தவர் எவரும் போற்றும்
சுந்தரர் தம்மை அன்புத்
தோழராய் ஏற்றுக் கொண்ட
செந்தழல் மேனி யானின்,
செந்தமிழ்க் காதலானின்,
அந்தமில் இன்பத் தானின்
அடிஅவர் முடிமேல் வாழ்க.

28. **எழுபதில் ஒன்று போக**
எஞ்சிய அகவைக் குள்ளே
எழுபதின் மேலாம் நூல்கள்
எழுதிய எழுத்தின் வேந்தர்
பழுதிலாப் பண்பர், அன்பர்
பரிசுகள் பெற்ற நூலோர்,
விழுமிய மனைவி மக்கள்
விழுதெனப் பெற்றோர் வாழ்க.

29. உலகெலாம் படைத்துக் காக்கும்
ஒப்பிலான் அருளில் மூழ்கிப்
புலங்களைத் திருத்திக் காத்துப்
புவிசுமை நீக்கி, இன்ப
நலமெலாம் பெருக்க வல்ல
நல்லநூல் இன்னும் ஆக்கி
இலகுநற் சான்றோர் வாழ்த்தை
ஏற்றிவர் இனிது வாழ்க.

30. இளமையில் பெற்ற துன்பம்
யாவையும் வென்ற வீரர்,
வளமொழித் தமிழைக் கற்று
வறுமையை வென்ற சூரர்,
உளம்நிறை இறைவன் அன்பில்
ஊறிய தீரர், கல்விக்
களங்களில் கழகம் தம்மில்
கற்றவர் புகழ வாழ்க.

31. கடலெனக் கல்வி கேள்விக்
கரையெலாம் கடந்த ஞானச்
சுடரொளிச் செல்வர், தோழர்,
சுந்தரர் அருளால் சூதில்
படலறி யாத பண்பர்,
பல்கலை வல்லார், வாழ்வில்
இடரறுத் துயர்த்தும் நூல்கள்
எண்ணில இயற்றி வாழ்க.

* * *

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண் ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருள்துறையுள்
அத்தா உனக்காளாய் இனிஅல்லேன் எனலாமே!
— சுந்தரர்

1916 2016



வைணவ உரைவளம்

Vainava Uraivalam

திரு. **S.K. இராமாசன்**

('கம்பராமன்') பதிப்பாசிரியர், பேரகராதித்துறை,

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிர மாலை

நற்றவ வடிவாம் வைதிக மதத்தை
நவையறு கோவிலைக் குளத்தைப்
பெற்றியிற் காக்க எண்ணிய விஜயப்
பேரர சுளத்தினில் ஆய்ந்து
கொற்றமார் குன்றில் மேவுரெட்டிககளைக்
குலவிய தமிழகத் தனுப்பி
வெற்றிபெற் றது; நற் கொண்டரெட் டிகளும்
வீரத்தால் சமயத்தைப் புரந்தார். 1

குன்றினிலிருந்து மேவுகா ரணத்தால்
குலவுகொண் டாரெட்டி என்று
மன்றெலாம் புகழ்ப் பொலிந்தவர் நிலத்தைப்
மகிழ்வுடன் உழுதொழில் புரிந்து
நன்றமை பண்ட குலத்தவர் என்று
நானிலம் புகல்பெயர் பெற்றுத்
தென்றமிழ் நாட்டை யுயர்த்தினார்; இவரால்
செந்தமிழ் வீறுபெற் றதுவால். 2

சங்கரன் உமையோ டுவப்புடன் மேவித்
தகவுறு பெருங்களிப் பெய்தும்
வெங்கனூர்ச் சிற்பம், சிவப்பிர காசர்
மேதினிக் களித்தநன் னூல்கள்
கங்கைபோற் பெருகும் காவடிச் சிந்து
காசினிக் கிக்குலம் புரிந்த
துங்கமார் தொண்டை வியப்புற விளக்கும்
துவங்குக இக்குலம் என்னும். 3

இத்தகு புகழ்சால் குலத்துலோர் புரிந்து
இணையிலா நற்றவத் தாலே
வித்தகம் மிக்க செந்தமிழ் உயர,
மேவிய பல்கலை ஒளிர,
எத்தலங் களிலும் அறிவியல் பொலிய
இணையிலா முயற்சியே வடிவாம்
சித்தமொ டுதித்தார் பல்கலை யாவும்
தேர்சுப்பு ரெட்டியாம் தோன்றல். 4

உலகினுக் கன்றே சமரசந் தன்னை
உணர்த்திய எதுமலை என்னும்
தலமதில் மேவும் தெய்வங்கள் அருளத்
தகவுறு கல்வியி லுயர்ந்து
நலமுறு துறையூர் உயர்நிலைப் பள்ளி
நவையறு பெயர்பெற உழைத்துப்
புலமமை காரைக் குடியினிற் கல்விப்
புனத்தினைக் காத்தனர், அன்பர், 5

பாங்குறு காரைக் குடியினிற் கம்பன்
பாலமு துண்டசெம் மாந்து
தேங்கிய களிப்பை மழையெனப் பொலியத்
திருமகள் நாயகன் பொலியும்
வேங்கடம் 'வாவா' என்றுவந் தழைக்க
மேவியங் கொப்பிலாத் தமிழை
ஓங்குறச் செய்தார்; அருங்கலைக் கோனென்
றுவந்தது குன்றையா தீனம். 6

கற்றவர் பராவும் வேங்கடக் குன்றில்
கனிவொடு மேவிடும் போதில்
பெற்றியல் மிக்க வைணவக் கடலிற்
பெட்புடன் பன்முறை தோய்ந்தும்
நற்றவத் திருவாய் மொழியினை யாய்ந்தும்
நயமுறுத் தந்த நூல் தேர்ந்து
பற்றுடன் 'டாக்டர்' என்றுயர் பட்டம்
பண்புடன் தந்தனள் தமிழ்த்தாய். 7

ஓங்கிய தமிழ்த்தாய் இதயமாய்ப் பொலிவும்
ஒப்பிலா வாய்மொழி ஆய்ந்து
பாங்குறத் தந்த தத்துவ நன்னூல்
பாய்தலாற் புவிஎங்கும் இலங்கும்
ஆங்கிலம் இனிய சருக்கரைக் குன்றம்
அமைவுறக் கரைந்தபாற் கடலாய்
ஈங்குயர் சுவையைப் பெற்றது; தமிழ்த்தாய்
இதயத்தில் உவகைபொங் கியதே. 8

செந்தமிழ் நாட்டின் இருகணாய்ப் பொலியும்
சீரிய வைணவந் தனையும்
நந்தலற் றோங்கும் உயர்வினைப் பெற்ற
நவையறு புகழ்ச்சைவந் தனையும்
சிந்தையில் ஆய்ந்து தருமிரு நூலைச்
செம்மையாய் ஆய்பவர் எவரும்
புந்தியில் சுப்பு ரெட்டியின் ஞானப்
புலமைக்கு முதல்மதிப் பளிப்பார். 9

துங்கமார் முயற்சி வடிவமாய் என்றும்
துலங்கிடும் சுப்புரெட் டியின்கை
தங்கிடத் தவம்செய் எழுதுகோல் களித்துத்
தாளினில் புனிதக்கூத் தியற்றின்
பொங்கிய சமய தத்துவம் விளங்கும்;
புனிதஇல் லறநெறி துலங்கும்;
மங்கலில் லாமல் அணுவியல் இலங்கும்;
மடமையே அச்சத்தாற் கலங்கும். 10

அருங்கலை வினோதர் இவ்வண்ணம் பன்னூல்
அளித்தனர்; அறிஞர்கள் வாழ்த்தை
மருங்குறப் பெற்றுக் களித்தனர்; மேலும்
மனத்தினில் வேட்கைஓங் குதலால்
கருங்கலும் உருக வைணவச் செல்வர்
கனிந்தருள் உரைகளுக் கிடைசேர்
பெருங்கனிக் குள்ளார் சாற்றினைப் பிழிந்து
பேரமு தாக்கிநன் களித்தார். 11

மறைகளும் பரவ உலகமும் பரவ
மகிழ்வுடன் பாற்கடல் மேவும்
இறைவனை உணர்த்தும் புராணமாகக் கதைகள்
இணையிலா ஐதிகம் சான்றோர்
நிறைவுறப் பேசும் நல்லுரை யாடல்
நேயமார் சொற்பொருள் விளக்கம்
முறைமையால் விளக்கும் இப்பெரும் பனுவல்
முதன்மையாற் களஞ்சியம் ஆகும். 12

பொன்னியின் நடுவண் எம்பிரான் மேவிப்
பொலிவுறு கோவிலை விளக்கும்
மன்னிய விமானம் எட்டெழுத் தின்கண்
மருவுமோங் காரமே என்றும்
பன்னரும் ஏழு மதில்களும் மற்றைப்
பண்புறும் ஏழெழுத் தென்றும்
நன்னய மாக விளக்குதல் கண்டு
நான்மறை பூரித்து வாழ்த்தும். 13

உலடயவர் தமது பாதுகை தாங்கி
ஒப்பிலா நுண்பொருள் அறிந்து
தடையறப் பகர்ந்த திறங்கொள்எம் பார்; நல்
தலைவனைப் பணிந்துமுக் கோலை
அடைவுடன் "எனைநீ காத்திடு" கென்ன
அமைந்ததே என்னும்நஞ் சீயர்
நடையினை நோக்கி விளக்கிய இந்நூல்
நாம்புரி தவப்பயன் அன்றோ? 14

கடலினுள் ஆழ்ந் து விருப்புடன் சென்று
கையினால் பன்முறை அரித்துச்
சுடர்விடு மணிகள் கொணர்ந்துல குவப்பத்
துறையினிற் குவிப்பவர் போலத்
திடமுடன் புகுந்து வைணவ வுரைக்குள்
திகழ்தரு நுண்பொருள் வழங்கும்
அடலினை வியந்தேன் புலமையாம் செல்விக்
கமைந்தநற் றிலகம்இப் பனுவல். 15

* * *

1916 2016

நாவுக்கரசர்

Naavukkarasar

பேராசிரியர் **க. வெள்ளை வாரணனார்**

முன்னாள் தமிழ்துறைத் தலைவர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம்

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

நாவுக்கரசர்

சிறப்புப் பாயிர மலர்

1. நன்றுடையான் வீற்றிருக்கும் **சிராப்பள்ளி**
வட்டத்து நல்லோர் வாழும்
தொன்றுமுதிர் பதியின்கண் இரட்டியார்
தொன்மரபில் வந்த தோன்றல்
குன்றெனுஞ்சீர்ப் பெருங்குணத்தான் குறைவிலா
நல்லுளத்தான் கோதொன் றில்லான்
தென்றமிழ்தேர் பேராசான் **சுப்புரெட்டி**
யாரென்னும் செல்வ னாவான்.

2. ஊக்கமுடன் கல்விபயில் உரனுடையான்
தமிழார்வ முடையான் என்றும்
ஆக்கம்வளர் பணிபுரியும் ஆற்றலும்நல்
ஆர்வமுமே உருவாக் கொண்டான்
நோக்கமெலாம் கல்விநலம் வளர்ப்பதுவே
யெனக் கொளுநுண் ணுணர்வின் மிக்கான்
ஏக்கமென்ப தறியாதான் இவனெனச்சொல்
எழில்நலத்தன் இனிய நண்பன்.

3. பலகலையும் பயின்றுணர்ந்த பண்பாளன்
அன்பாளன் பாரோர் போற்றும்
நிலையுடைய **சான்றாண்மைக் கிலக்கியமாய்**
நிலவுபுகழ்க் குரிசில் நெஞ்சின்
நலமொன்றே பெருஞ்செல்வ மெனக்கொண்டு
நாடுமகிழ் நலத்தால் நாளும்
புலவருள மகிழ்கூர வேண்டுவன
புரிந்துவக்கும் புலமைச் செல்வன்.

4. ஆங்கிலமும் செந்தமிழும் **அறிவியலும்**
பயின்றுணர்ந்த *அறிவன் கல்வி*
ஓங்கிவளர் **துறையூரில்** *உயர் நிலைப்பள்*
ளியின் தலைமை யாசா னாகி
பாங்கினுளார் பாராட்ட மாணவர்கள்
நன்முறையிற் பயிலச் செய்தான்
யாங்குமிவன் அறிவியல்நூல் பயிற்றவல்லான்
எனப்புகலும் ஏற்றம் பெற்றான்.

5. ஆசிரியப் பயிற்சிபெற விழைவோருக்
காமுறையின் அறிவு நூல்கள்
மாசிரியப் பயிற்றிவளர் மாணவர்கள்
மதிநலத்தால் வளம்பெற் றோங்கத்
தேசுமிகு நூலியற்றித் தேர்ச்சிபெறச்
செய்துவக்கும் திறத்தான் 'யார்க்கும்
ஆசிரியன் இவன்' என்ன அறிஞரெலாம்
பாராட்டும் ஆற்றல் வாய்ந்தான்.

6. நகரத்தார் எனும் வணிகர் வாழ்காரைக்
குடியின்கண் நாடு வாழப்
பகரருஞ்சீர் அழகப்பர் நிறுவுசெழுங்
கலைநியமம் பலவுள் ஒன்றாய்த்
திகழ்தரு**நல் லாசிரியப்** பயிற்சிதரு
கல்லூரி யாசா னாகித்
தகவுடனே தமிழ்பயிற்றும் முறையிதெனப்
பயிற்றுவிக்கும் தகைமை பெற்றான்.

7. **பிறமொழியில் தோன்றிவளர் மேனாட்டின்**
அறிவியல்நூ லனைத்தும் பேணி
முறைமைபெற வுணர்ந்திடநம் தாய்மொழியில்
மொழிபெயர்த்தல் முதற்றொண் டாமென் (று)
உறுதிபெற வுணர்ந்தமையால் ஆங்கிலநூல்
பலவற்றைத் தமிழின் கல்வித்
துறைவளர மொழிபெயர்த்தான் சுப்புரெட்டி
யெனும்பெயர்கொள் தோன்றல் மாதோ.

8. மானிடவுடலும் அணுக்கரு அமைப்பும்
வயங்குவா னொலித்தொலைக் காட்சி
ஏனைய பிறவும் உலகியல்வாழ்வில்
இற்றைநாள் உலவுபல் புதுமை
நானிலத்தமிழர் நாடொறும் உணர
நல்லன அறிவியல் நூல்கள்
தான்வரைந் தளித்தான் தமிழ்வழிஞானம்
தழைத்திட வேண்டுமென் றிவனே.

9. தொல்காப் பியரும் திருக்குறளும்
தொன்மை வளஞ்சேர் தொகைநூலும்
ஒல்காப் பெருமை இளங்கோவின்
சிலம்பும் ஒளிசேர் கம்பர்பிரான்
பல்காப் பியத்தின் வளங்கெழுமப்
பாடும் இராம காதையுடன்
நல்லோர் பயிலும் திருத்தொண்டர்
புராண முதலாம் நற்றமிழும்;

10. திருந்தப் பயின்றான் தமிழ்நடையின்
செப்ப முணரப் பலநூல்கள்
பொருந்த வரைந்தான் புகழுடனே
வாழ்ந்த புனிதர் அருள்வாழ்வும்
வருந்தி யுழைத்தே நாடுயர
வாழ்ந்த பெரியோர் வரலாறும்
அருந்தும் அமிழ்தாம் எனத் தமிழின்
அழகு திகழ வரைந்தனனால்.

11. நாடும் மொழியும் உரிமைபெற
நல்ல தமிழ்தேர் பாரதியார்
பாடும் பனுவல் முதலாகப்
பல்லோர் பயிலும் இலக்கியமும்
பீடு பெறுமவ் இலக்கியத்தின்
பெற்றி காணும் திறனாய்வும்
தேடி யரிதிற் கற்போர்க்குத்
தெவிட்டா விருந்து படைத்தனனே.

12. **காலமும் கவிஞர் வாழ்வுங்**
கருதுறு பொருளுந் தேர்ந்தே
ஏலவே இலக்கி யங்கள்
இயல்பினால் தோன்றும் மாட்சி
ஞாலத்தார் உணரும் வண்ணம்
நல்லன பலநூல் செய்தான்
சீலத்தால் மாந்தர் வாழ்வு
செம்மையிற் றிகழு மாறே.

13. தமிழ்பயிற் றும்முறை தந்த
தண்டமிழின் ஆசிரியன்
அமிழ்தனைய கவிதையையும்
பயிற்றும்முறை அறிவித்தான்
இமிழ்திரைசூழ் ஞாலத்தின்
இயல்புணர்த்தும் அறிவியலை
அமைதிபெறப் பயிற்றுமுறை
யிதுவெனவும் அறிவித்தான்.

14. திருவேங் கடவன் திருப்பெயரால்
திகழ்பல் கலைதேர் கழகத்துத்
தெளிதீந் தமிழின் துறைவளர்க்குஞ்
சீரார் தலைவ னாகியங்கே
உருவார் புலமைப் பணிகள்பல
ஊக்க முடனே செய்துவந்தான்
உயர்ச்சி பெறநன் மாணவரை
யுருவாக் கிடுநற் பேராசான்.

15. அருள்சே ருளத்தின் ஆழ்வார்கள்
அருளிச் செயலில் உளந்தோய்ந்தே
ஆய்வின் திறத்தால் முனைவர்பட்டம்
அளிக்கப் பெற்றான் அறிவியலின்
பொருள்சேர் கலைகள் தமிழ்மொழியிற்
பொலிந்து விளங்க மொழிபெயர்த்தே
புதிய நூல்கள் பலவியற்றிப்
புலமைப் பணிசெய் புகழாளன்.

16. மக்கள் வாழ உலகியல்நூல்
மட்டும் போதா வென்றுணர்ந்து
மன்னு தமிழில் முன்னோர்செய்
அருள்நூல் வழக்கும் வேண்டுமெனத்
தக்க வகையில் ஆழ்வார்கள்
அருளிச் செயலின் தகையுணர்ந்தே
தலத்தின் பெருமை நனிவிளங்க
நூல்செய் தளித்த தாளாளன்.
நக்கன் அருள்சேர் நாயன்மார்
நவிலும் திருப்பாட் டருள்நலத்தை
நாடுமகிழ விரித்து ரைக்கும்
நல்ல பணியுஞ் செய்வனென
மிக்க நாவுக் கரசர்தமிழ்
வீறு விளங்க நூல்செய்தான்
மேன்மை திகழும் சுப்புரெட்டி
யெனும்சேர் பெற்ற வித்தகனே.

17. சீரார் காழிப் பிள்ளையார்
திகழ்பே ரன்பால் அப்பரெனச்
செப்பும் திருநா வுக்கரசர்
சீர்த்தி மிக்க வரலாறும்
பாரோர் வாழ நாவரசர்
பரிவால் திருவாய் மலர்ந்தருளும்
பதிகப் பாடற் பொருள்நலமும்
பண்பார் தலத்தின் வரலாறும்
ஆர்வ முடனே கற்போர்கள்
அறிந்து மகிழத் தக்கவண்ணம்
அறமார் நாவுக்கரசரெனும்
ஆய்வு நூலை அளித்ததனால்;
சோர்வி லாமல் தமிழ்ப்பணிசெய்
தோற்ற முடையான் கற்றோர்கள்
சுப்பு ரெட்டி யாரெனும்பேர்
செப்ப விளங்கும் தூயோனே.

18. மாலோன் அருளின் ஆழ்வார்கள்
மூழ்கித் திளைத்து வாய்மலர்ந்த
நாலா யிரமும் முன்னோர்கள்
நவின்ற உரையின் நயப்பாடும்
ஏல வுணர்ந்தே கற்போர்கள்
இன்ப முறவே உரைநடைநூல்
சால வரைந்தான் **திருத்தலத்தின்**
பெருமை பலவுஞ் சாற்றினான்.

19. ஞாலமெலாம் உய்யவரும்
நம்பியா ரூரரெனும்
ஆலால சுந்தரனார்
வரலாறும் அம்மைமுலைப்
பாலார்ந்த பிள்ளையார்
தேவாரப் பாநலமும்
மேலாய வாசகத்தேன்
சுவைநலமும் விரித்துரைத்தான்.

20. பெருமை சிறுமை கருதாது
பேரன் புடனே யாவரொடும்
நெருங்கிப் பழகும் நீர்மையினான்
நின்ற சொல்லும் நேர்மையினான்
கருமை விரவா நெஞ்சத்தான்
கற்றோர் தமக்கே தன்பணியை
உரிமை செய்யும் உவப்புடையான்
உயிரோ ரன்ன கேண்மையினான்.

21. அயரா முயற்சி யாலறிவால்
வறுமை அகற்றும் ஆற்றலான்
செயிர்தீர் நட்பால் அன்பரொடு
சேர்ந்து பழகும் தெளிவுடையான்
மயர்வில் மனத்தான் மதிநலத்தால்
மக்கள் சுற்றம் மகிழ்கூரத்
துயர்தீர்ந் துலகம் வாழச்செய்
தூயோன் நேயம் மிக்குடையான்.

22. வையத்தின் வாழ்வாங்கு மனையறத்தில்
இன்பமுற வாழ்ந்து மக்கள்
செய்யத்தகும் அறங்கள் விருந்தோம்பல்
முதலாகச் செய்யும் சீரான்
தெய்வத் திருத்தலங்கள் பலவணங்கி
அருளாளர் செய்யும் வாய்மை
உய்வைத் தரவுரைந்தான் மனைமக்கள்
சுற்றமுடன் உவந்து வாழி!

23. **வாழிசுப்பு ரெட்டியார்** மனைமக்கள் சுற்றமுடன்
வாழிதமிழ் வளர்த்து வாழியரோ - ஏழிசைநேர்
நல்லதமிழ் நுகர்ந்து நாடு வளம்பெறவே
செல்வமுடன் வாழி சிறந்து.

* * *



ஞான சம்பந்தர்
Gnanasambandhar

திருமதி சௌந்தரா கைலாசம்

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

நெஞ்சினிமை நிறைந்து வர நிலைத்து வாழி!

1. யுகமுடிவில் பெருக்கெடுத்த ஊழி வெள்ளம்
உலகழிக்கச் சீற்றமுடன் எழுந்த வேளை
புகலருளும் பேரிறைவன் உறைந்த கோயில்
பொன்றாமல் தோணியென மிதந்த தாலே
சகமுழுதும் கொண்டாடிப் பெருமை சேர்க்கும்
தலமான சீகாழி யதனைப் பற்றிப்
புகல்வதற்கு மொழியுண்டோ? வார்த்தை உண்டோ?
பூதலத்தில் இணையான பதிப்பும் உண்டோ?

2. வெள்ளத்தில் தோணியென மிதந்த கோயில்
வீற்றிருக்கும் முதலிறையாம் தோணி யப்பர்
பள்ளத்தில் வீழ்ந்துதுயர்ப் பட்டு மாளும்
பாருலக மானுடரைக் கரையிற் சேர்க்க
உள்ளத்தில் அருள்பொங்கி ஞானச் செல்வம்
ஊட்டுகிற குருவாகக் காட்சி நல்கும்
கொள்ளையெழில் திருப்பதியாம் காழி நோக்கிக்
கும்பிட்டால் அதுபோதும்; வினைகள் போகும்!

3. அத்தகைய காழியிலே வேதம் ஓதும்
அந்தணரில் சிறந்தவராய்த் திகழ்ந்து நின்ற
உத்தமராம் சிவபாத இருத யத்தார்,
உற்றதுணை பகவதியார், உள்ளம் ஒன்றி
நித்தியனை எப்பொழுதும் நெஞ்சில் தாங்கி
நெறிசிறிதும் பிறழாமல் அறங்கள் போற்றி
எத்தகைய குறையுமிலா துலகில் சைவம்
ஏற்றமுற வேண்டுமென வாழ்ந்தி ருந்தார்.

4. வேதநெறி தனைவளர்க்கும் அன்பு மைந்தன்
வேண்டுமென இருவருமே இறையை வேண்ட
ஆதிமுதற் பொருளான ஈசன் நல்ல
அருள்காட்டி வரம் தந்தான்; கோள்கள் எல்லாம்
ஆதரவாய் அமைந்துள்ள வேளை தன்னில்,
ஆதிரையில், ஆளுடைய பிள்ளை நல்லார்
பேதமிலாத் தம்பதியர்க் குலகில் என்றும்
பெருமைதரும் மகவாக அவத ரித்தார்!

5. எவருக்கும் பிறவாத பிள்ளை தன்னை
ஈன்றெடுத்த பெற்றோர்கள் மகிழ்வில் துள்ள,
அவருடைய சுற்றத்தார் அழகு பொங்கும்
அருமகவை நிதம் வாழ்த்தி உவகை கொள்ள,
புவனமதில் வாழ்கின்ற உயிர்கள் இன்பப்
பொழிலதனில் திளைத்தாடிப் பூரிப் பெய்த,
சிவனவனின் அருட்பரிசாய், அமுத ஊற்றாய்த்
திருஞான சம்பந்தப் பிள்ளை வாழ்ந்தார்.

6. பெற்றெடுத்த அன்னைபக வதியார் மிக்கப்
பிரியமுடன் முலைப்பாலை ஊட்டும் காலை
சிற்பரனின் திருப்பாதம் எந்தப் போதும்
சிந்திக்கும் அன்பினையும் கலந்து தந்து
குற்றமெலாம் தீர்ந்துவிடும் நீறை மட்டும்
கோலமிகும் திருநுதலில் காப்பாய் இட்டு
நற்றவத்தின் தடத்தினிலே நடைப யிற்றி
நாள்தோறும் நலம்பெருக வளர்த்தி ருந்தார்!

7. கையூன்றிக் கால்மடித்துத் தலைய சைத்துக்
களங்கமிலாச் செங்கீரை ஆடும் தோற்றம்,
''பொய்யூன்றிப் பாழ்பட்டுக் கிடக்கும் இந்தப்
பூவவுலகம் நன்மையுறப் புன்மை மாய,
மெய்யூன்றும் பெருமழுவார் தொண்டை அல்லால்
வேறேதும் ஒப்புகிலேம்'' என்று சொல்லித்
தெய்வநெறி வளர்ப்பதுவாய்த் தெரியக் கண்டு
திகட்டாத ஆனந்தத் தேனை உண்டார்!

8. பிள்ளையவர் இருகரமும் சேர்த்த வண்ணம்
பேரழகாய்ச் சப்பாணி கொட்டும் தோற்றம்
கொள்ளைநலம் தரும்சைவ நெறியை அன்றிக்
கொள்வதிலை வேறோன்றை என்ப தேபோல்
உள்ளமதில் பெற்றோர்கள் உணர்ந்து கொண்டார்!
ஒப்பரிய மகிழ்ச்சியெனும் இமயம் சென்றார்!
எள்ளளவும் குறையின்றி எந்த நாளும்
எழில்விழியின் இமையாகக் காத்தி ருந்தார்!

9. ஈரகவை கடந்துவிட மூன்றாம் ஆண்டும்
இசைவாக நடைபோடத் தொடங்கும் போது
சீருடைய பிள்ளையினைப் பெற்ற தாதை
சிவபாத இருதயர்ஓர் தினத்தில் ஓங்கும்
பேருடைய பிரமபுரக் கோயிலுக்குள்
பிரமநறுந் தீர்த்தமதில் ஆடப் போந்தார்.
ஆர்வமுடன் ஆளுடைய பிள்ளை யாரும்
அவரோடு திருக்கோயில் சென்ற டைந்தார்.

10. புனிதமிகு தீர்த்தத்தின் கரையில் அன்பு
பொங்கிவரப் பிள்ளையினை அமர்த்தி ஐயன்
மனம்ஒன்றி அகமருட மந்தி ரத்தை
மாசறவே ஓதுதற்கு நீருள் ஆழ்ந்தார்
முனம்உலகில் பிறந்திட்ட நினைவு மீண்டும்
மூண்டுவரப் பிள்ளையவர் வதனம் வீங்க
இனிமைமிகு குரல்காட்டி “அம்மை அப்பா”
என்றழுதார் திருக்கோயில் விமானம் நோக்கி.

11. பிள்ளையவர் அழுங்குரலைச் செவியில் கேட்ட
பிரமபுரத் தீச்வரனார் உமையை நோக்கி
வள்ளத்தில் முலைப்பாலைச் சிறிது வாங்கி
வாடியழும் குழந்தைக்கு வழங்கச் சொல்ல,
உள்ளத்தில் தாயாகிப் பொற்கிண் ணத்தில்
உயர்வுதரும் சிவஞானம் குழைத்த பாலை
கிள்ளைமொழித் திருநிலைநா யகியாள் தந்தாள்!
கிட்டாத பெரும்பேற்றைப் பெற்றார் பிள்ளை!

12. சிற்றெறும்பு பக்கத்தில் ஊர்ந்து விட்டால்
தேள்கொட்டி விட்டதுபோல் நடுக்கம் கொண்டு
பெற்றவொரு பிள்ளையினைப் பெண்ணொருத்தி
பெட்டகத்துப் பொற்குவையாய்க் காப்பாள் என்றால்
முற்றுகிற அன்பாலே உலகை ஈன்ற
முதல்வியவள் தெருப்பிள்ளை அழுத வேளை
உற்றவொரு தாய்மைநலம் உளத்தில் பொங்க
ஓடிவந்து காப்பதிலே விந்தை என்ன?

13. ஒப்பரிய தாய்மைநலம் உள்ள தால்தான்
உலகமெலாம் தழைக்கிறது! நாட்கள் எல்லாம்
செப்பரிய விதமாக ஓங்கி நிற்கும்
சிறப்பதனை அடைகிறது! கவிழ்ந்து போகாக்
கப்பலிலே பயணித்து வாழ்க்கை என்னும்
கடல்கடக்கச் செய்கிறது! மக்கள் காணும்
சொப்பனத்தை நனவாக்கிக் கையில் தந்து
சுகம்பெருக்கி நிற்கிறது! வாழ்க தாய்மை!

14. தாயுமையாள் அருளூறித் தந்த பாலைத்
தன்பசிக்கு மருந்தாக உண்ட பிள்ளை
வாயினிரு மருங்கினிலும் பால்வ ழிந்து
வருவதனைத் தந்தையவர் வெகுண்டு நோக்கி,
ஆய்வின்றி, அப்பாலைத் தந்தார் யாரென்
றரும்மகவைக் கோலொன்றால் அடிக்கப் போக,
நேயமிகும் மகவதுவோ விரலாற் சுட்டி
நில்மலனாம் தோணியுரத் திறையைக் காட்டும்!

15. ‘தோடுடைய செவியன்’ எனத் தொடங்கு கின்ற
தூயதமிழ்ப் பாட்டிசைத்து ஞானப் பிள்ளை
பீடுபெற விளங்கியவோர் நிலைமை கண்டு
பெற்றெடுத்த தந்தையவர் வியப்பில் ஆழ்ந்தார்!
ஆடுகிற சிவபெருமான் தாளைப் பற்றும்
அருள்நெறியைத் தமிழிசையால் பரப்பு தற்கு
நாடுபல வலம்வந்து தொண்டு செய்யும்
நல்லவரைப் பெற்றதனால் உவகை சூழ்ந்தார்!

16. தெய்வநெறி, சைவநெறி உலகம் எங்கும்
திகழ்ந்தினிது பரவுதற்கு நாளும் தொண்டு
செய்ததிரு ஞானசம் பந்தர் வாழ்வைச்
சிறப்பாக ஆய்ந்தினிய தமிழ்நூ லாக்கி
வையமெலாம் பயன்எய்த வழங்கு கின்ற
மாண்புடைய ஆசிரியர் அவரைப் பற்றிக்
கையகலத் தாளுக்குள் எழுதப் போமோ?
களித்தமிழில் அடங்கிடுமோ கவின்கள் எல்லாம்?

17. சுப்புரெட்டி யாரென்று சொல்லும் போதே
சகமான சுவைமிக்க தமிழ்ம ணக்கும்
ஒப்பரிய ஆராய்ச்சித் திறன்கள் மிக்க
உயர்வுடைய நூல்களின்நற் சங்கொ லிக்கும்!
செப்பமுள சிந்தனையின் ஆழத் துள்ளே
திகழ்ந்தொளிரும் முத்தான கருத்துப் பூக்கும்!
கப்புகிற இருள தனை விலக்கி வைக்கும்
காரியங்கள் அகலாமல் கால்ப திக்கும்!

18. முத்துமணி ரத்தினங்கள் கோத்த தேரில்
முடியாத அழகதனைக் கொலுவி ருத்தி
எத்திசையும் புகழ்விளங்கப் பவனி செல்லும்
ஏற்பாட்டைச் செய்யுமொரு வேந்த னைப்போல்
மெத்தஎழில் விளங்குகிற கருத்துத் தேரில்
மேலான இலக்கியத்தை அமரச் செய்து
புத்தொளியை நாற்புறமும் பரவ விட்ட
பூந்தமிழர் திரு.சுப்பு ரெட்டி யார்தான்!

19. திருமாலை நெஞ்சத்தில் நிறைத்தி ருப்பார்!
சிவனாரை எக்கணமும் நினைத்தி ருப்பார்!
ஒருகாலும் பிறர்போற்றும் மதத்தை, வாழ்வை
உள்ளத்தில் குறைவாகக் கருத மாட்டார்!
சருகாக உலகத்தில் வாழ்வோர் மீண்டும்
தழைக்கின்ற வழிகாண முயற்சி செய்வார்!
கருகாமல் காயாமல் அறிவுக் கன்று
கற்பகமாய்ச் செழித்தோங்க வகைகள் காண்பார்!

20. துறையூருக் கருகினிலே கோட்டாத் தூரில்
தூயர்திரு நல்லப்ப ரெட்டி யாரும்
உறுதுணையாம் காமாட்சி அம்மாள் தாமும்
உளம்கலந்து நிதம்வாழ்ந்த குடும்ப வாழ்வில்
இறைவனவன் அருள்பூக்க இன்பம் சேர்க்கும்
எழில் மகவாய்ச் சுப்பு ரெட்டி யார்பிறந்தார்!
கறையறியாப் பாதையினைப் பெற்றோர் காட்டக்
காலமெலாம் அவ்வழியே நடக்க லானார்!

21. ஏணியென வறுமையினை இளமை வாழ்வில்
ஏற்றுக்கொண் டயராமல் உயரச் சென்றார்!
சாணையென நூல்களினால் அறிவைத் தீட்டித்
தக்கபல பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்!
பூணுகிற பதவிஎது வான போதும்
புகழ்பெருகும் விதமாகச் செயல்கள் செய்தார்
ஆணவமே இல்லாமல் அமைதி சார்ந்த
அன்பொளிரும் நல்லகத்தை உடைமை பெற்றார்!

22. பெருமைமிகு துறையூரில் நிலக்கி ழாரின்
பேரோங்கும் பள்ளியிலே தலைமை தாங்கி
அருமைமிகு கல்வியினை இளஞ்சி றார்கள்
அறிந்துணர ஊக்கமுடன் தொண்டு செய்தார்!
தருமமிகு திருக்காரைக் குடியில் கல்வி
தனைப்பயிற்றும் ஆசிரியர் பயிலு கின்ற
ஒருபெரிய கல்லூரி யதனில் வாழ்வை
உணர்த்துகிற தமிழ்த்துறையின் தலைமை பெற்றார்!

23. திருப்பதியில் வேங்கடவன் பேரைக் கொண்டு
திகழ்ந்திடுபல் கலைக்கழகம் தன்னில் இன்பம்
வரப்புரியும் செந்தமிழை வளப்ப டுத்தும்
வாய்ப்பான நற்றுறையின் தலைமை ஏற்றுக்
கருத்துயரச் செயலுயரச் சிந்தை முற்றும்
கரும்பான தமிழமுதம் உயர்ந்து பொங்க,
திருத்தமுறும் பலபணிகள் ஆற்றி நின்ற
திருவுடையார் அறிவுடையார் திறமை மிக்கார்!

24. அரியகலைக் களஞ்சியத்தைப் பதித்து நல்கும்
ஆசிரியர் குழுவதனில் முதன்மை தாங்கி
உரியபல சிறப்புடைய நூல்கள் தம்மை
ஊன்றிநிதம் படித்தாய்ந்து முடிவு செய்து,
பெருமையுற வெளியிட்டுத் தமிழன் னைக்குப்
பெரிதான புகழாரம் தேடித் தந்த
ஒருதமிழர்! உயர் தமிழர்! உலகம் யாவும்
உளமாரப் புகழ்ந்தேத்தும் உண்மைத் தொண்டர்!

25. கணக்கற்ற அவைகளிலே பங்கு கொண்டு
கலைவளரப் பேருதவி புரிவார்! அன்பு
மணக்கின்ற மனம்தாங்கி நாடு முற்றும்
வலம்வந்து தீந்தமிழை ஆய்வார்! தெய்வ
அணுக்கத்தில் எப்போதும் இன்பம் காணும்
ஆசையுடன் நல்வாழ்க்கை வாழ்வார்! தூய
குணக்குன்றாய், அருட்குன்றாய், கொள்கைக் குன்றாய்
குறையற்ற நலக்குன்றாய்த் திகழ்வார்! வாழி!

26.   அவரெழுதித் தந்திருக்கும் நூல்கள் தம்மை
அளவிடுதல் எளிதில்லை! சொல்லப் போனால்
நவநிதியக் குவியல் அவை! மதிக்க ஒண்ணா
நலமருளும் நதிகள் அவை! சூழ்ந்து மாய்க்கும்
பவவினையின் இருளதனை விலக்க வந்த
பகலவனின் கதிர்களவை! வாழ்வு நல்கும்
தவத்தின் உயர் மலைகள் அவை! என்று போற்றத்
தக்கவிதம் விளங்குவன! தந்தார் வாழி!

27.   அறிவியலை அவரறிவார்! இலக்கி யத்தை
ஆராயும் வகையறிவார்! வளமை கொள்ள
உறுதுணையாய் யாவர்க்கும் உதவு கின்ற
உளவியலும் தெளிவுறுவார் நாட்டில் உள்ள
சிறுவர்களை இளைஞர்களைப் பயிற்று விக்கும்
திறனறிந்து செயல்புரிவார்! இவற்றின் மேலாய்
இறையுணர்வில் தமையிழந்த பெரியோர் வாழ்வை
எழிலமுதத் தமிழ்மொழியில் தருவார்! வாழி!

28.   இவ்வகையில் அவர்தந்த ஞானசம் பந்தர்
எனும்அரிய நூலதனைப் படித்த போதில்
செவ்வையுற விளக்கும்அரும் கருத்த னைத்தும்
சிந்தையிலே ஒளிகாட்டித் திகழக் கண்டேன்!
கொவ்வைமலர் வாயிதழாள் உமையி னோடு
குலவுகிற சிவபெருமான் எதிரில் தோன்றி
உய்வகையைக் காட்டுகிற உணர்வைப் பெற்றேன்!
ஓங்குகிற சிவநெறியின் உயர்வைக் கண்டேன்!

29.   மதுபோன்ற பூந்தமிழின் இனிமை காட்டி
மதிநுட்ப ஒளிகாட்டி மகிழ்வை ஊட்டும்
இதுபோன்ற பலநூல்கள் யாத்து மாந்தர்
இறையருளைத் துய்க்கின்ற வழியும் காட்டப்
பொதுமன்றில் நடமாடும் ஈசன் அன்பு
பூத்தருளைத் திரு.சுப்பு ரெட்டி யார்க்கு
நிதம்வழங்கி நின்றிடுவான்! நீண்ட காலம்
நெஞ்சினிமை நிறைந்துவர நிலைத்து வாழி!

30. சித்தமதில் எப்பொழுதும் இறையைத் தாங்கித்
திகழ்வுடைய நறுந்தமிழில் தெளிவு மிக்க
புத்தகங்கள் புதுமையுற எழுதி இந்தப்
புவியினர்க்கு வழங்கிஉயர் புகழ்கு விக்கும்
வித்தகராம் திரு. சுப்பு ரெட்டி யார்க்கு
மேன்மைகளும் வளமைகளும் மிகுந்து சேர
அத்தனவன்அருளமுதம் பொழிவான்! நீண்ட
ஆயுளுடன் அப்பெரியார் இனிது வாழி!

நாதன் தாள் வாழ்க. !

1916 2016



ஆழ்வார்களின் ஆரா அமுது
Aazhvarkalin Aaraa Amudhu

கவிஞர் நாரா. நாச்சியப்பன்
(நாவல் ஆர்ட்ஸ் பிரிண்டர்ஸ்),
137, ஜானிஜான்கான் சாலை, சென்னை - 600 014)

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிர மாலை

1. அண்ணலை மேக வண்ணன்
ஆகிய பெருமாள் தன்னை
எண்ணியே நாளும் நெஞ்சில்
இருத்தியே அன்பில் ஆழ்ந்து
நண்ணியே நின்ற தாலே
நலமுற ஆழ்வார் என்று
திண்ணமாய்ப் போற்றப் பெற்றார்
செல்வர்பன் னிருவர் தாமே!

2. துன்பங்கள் சூழ்ந்த போதும்
துயரிலே ஆழ்ந்த போதும்
அன்பிலே தாழ்ந்த தில்லை
அரவணை யானைப் போற்றும்
இன்பமே இன்ப மென்றே
இணையிலா வாழ்வு கண்டு
மன்பதைக் கெடுத்துக் காட்டாய்
வாழ்ந்தவர் ஆழ்வார் ஆவார்!

பொய்கையாழ்வார்

3. தாமரைப் பூவில் தோன்றித்
தமிழிலே நூறு பாட்டுக்
காமுறும் வண்ணம் சொன்ன
கவிஞரைப் பொய்கை யாழ்வார்
ஆமெனச் சொல்லும் வையம்
அவர்முதல் திருவந் தாதி
தேன்மலர் மாலை போலும்
திருச்சுடர் ஆழி யாற்கே!

4. சங்கமே குழந்தை யாகித்
தாமரைப் பொய்கைப் பூவில்
தங்கியே பிறப்பெ டுத்துத்
தமிழிலே பெருக்கெ டுத்து
வங்கமே நிறையு மாறு
வடித்தநற் சொல்லின் மாயை
இங்கொரு திருவந் தாதி
இணையிலாத் தெய்வப் பாட்டே!

பூதத்தாழ்வார்

5. மாதவிப் பூவில் தோன்றி
மாநிலங் காப்பான் மீது
காதலை வைத்தி ரண்டாம்
கவினுறு திருவந் தாதி
ஓதிய கவிஞர்; ஞான
ஒளிவிளக் கேற்றி வைத்தார்
பூதத்தாழ் வாரே! கண்ணன்
பொன்னடிக் காட்பட் டாரே!

6. கார்நிறப் பெருமாள் கையின்
கதையதே பிள்ளை யாகிச்
சேர்ந்தது பூவில் என்று
செப்புமோர் மரபுண் டாமே!
நேர்தமிழ்ப் பூதத் தாரின்
நிகரில்அந் தாதிப் பாடல்
யார்படித் தாலும் தோன்றும்
அறிவெனும் ஒளிப்பெ ருக்கே!

பேயாழ்வார்

7. செவ்வல்லிப் பூவில் தோன்றித்
திருப்பொன்னின் மேனி யோடு
பவ்வத்து நீலந் தானும்
படிந்ததோர் வண்ணங் கண்டே
ஒவ்வொன்றாய் நூறு பாட்டுத்
தொடருமுன் றாம்அந் தாதி
செவ்வையாய்ப் பாடி வைத்த
சேவையார் பேயாழ் வாரே!

8. வாளொரு கூறாய் வந்து
வடிவுறு பூவில் தங்கி
நாளொரு மேனி யாக
நலமுற வளர்ந்து நின்று
ஆளுறு போது நெஞ்சம்
அழிந்துகண் சுழன்று பேய்போல்
நீளுற நகைத்துப் பாடி
நின்றுபேய் ஆழ்வார் ஆனார்!

திருமழிசையாழ்வார்

9. தேவனை யாழி யானைத்
திருச்சந்த விருத்தம் பாடிப்
பாவனை செய்து போற்றும்
மழிசையார்; தேனைச் சிந்தும்
நாவினாற் சொல்லிப் போந்த
நான்முகன் திருவந் தாதி
பூவினும் எழில தாகும்!
புதுமணம் பொலிவ தாகும்!

10. ஆழியின் கூறாய்த் தோன்றி
அழகிய பிள்ளை யாகிப்
பாழுறு சமயந் தோறும்
பல்கலை நூல்கள் ஆய்ந்து
வாழுறப் பக்தி யொன்றே
வழியெனக் கண்டு கொண்டே
ஏழிசை பாடிப் பாடி
இறைவனை ஏத்தி நின்றார்.

நம்மாழ்வார்

11. திருக்குருகூர்ச் சடகோ பன்சொல்
திவ்வியப் பிரபந் தங்கேட்(டு)
உருகாத நெஞ்சும் உண்டோ?
உலகெலாம் உடைய மூர்த்தி
திருப்பேறு வேண்டி வேண்டித்
திருவாயின் மொழிகள் யாவும்
உருப்போட்டு வந்தாற் போதும்
உய்யலாம் ஞாலத் துள்ளே!

12. தாய்முலைப் பாலுண் ணாமல்
தானாக வளர்ந்த பிள்ளை
பேய்முலைப் பாலை யுண்ட
பிள்ளையின் சீர்த்தி போற்றித்
தூயநான் மறையின் சாரம்
தொகுத்துநற் றமிழில் தந்த
ஆயிரம் மீறிப் போன
அழகுறு கவிகள் தாமே!

மதுரகவியாழ்வார்

13. உய்யவே சடகோ பன்சொல்
ஒவ்வொன்றும் போற்றி வாழ்ந்த
மையிலார் அடியார்க் கன்பர்
மதுரநற் கவியார் அன்பின்
மெய்யினை யுள்ளுந் தோறும்
மேனிலை தோன்றும் இந்த
வையகம் திருந்தி வாழ
வளர்ந்திடும் இன்பந் தானே!

14. சித்ததின் வயிற் றிருந்து
சிறுகுட்டி தான்பி றந்தால்
எத்தைத்தின் றெங்கி ருக்கும்
என்றதோர் கேள்வி யாலே
அத்தைத்தின் றங்கி ருக்கும்
அதுவென்ற பதிலைப் பெற்றுத்
தத்துவப் பொருள்உ ணர்ந்து
'தாம்பு' அருள் கவிதை மன்னன்!

குலசேகராழ்வார்

15. திருவஞ்சிக் களத்து மன்னர்
குலசேக ராழ்வார்; மூத்த
பெருமாளின் பித்தர்: சீதை
பிடியுண்ட கதையைக் கேட்டுப்
பொருமியே போர்க்கெ ழுந்தார்
பொசுக்குவேன் இலங்கை யென்று
கருவியே படை யெடுத்துக்
கடலிலே இறங்கிச் சென்றார்!

16. அடியவர் திருட ராகார்
அதனைமெய்ப் பிக்க வென்றே
கொடியபாம் படைந்தி ருக்கும்
குடத்தினுள் கையை விட்டுப்
படிமிசை உண்மை நாட்டிபி
பக்தரின் மேன்மை காட்டி
அடியவர்க் கடிய ராகி
அறுபத்தே ழாண்டு வாழ்ந்தார்!

பெரியாழ்வார்

17. பூமாலை கட்டி வில்லிப்
புத்தூரான் மகிழச் சூட்டிப்
பாமாலை யாத்தும் அந்தப்
பரமனை வணங்கி நிற்பார்
மாமாலை சூடித் தந்த
மங்கையை வளர்த்த தந்தை
ஆமாமாம் பெரிய ஆழ்வார்
அவர்பெரும் புலவர் ஆவார்!

18. பல்லாண்டு பாடிப் பாடிப்
பாதாதி கேசம் பாடிச்
சொல்லாண்டு கண்ணன் பேரில்
சுவைகூட்டும் தமிழைப் பாடி
வல்லானைப் பிள்ளை யாக்கி
வளர்க்கின்ற தாயும் தானாய்ச்
சொல்லார அன்பு தேக்கிச்
சுடர்க்கவி பாடி னாரே!

ஆண்டாள்

19. தனக்கொரு கணவன் வேண்டித்
தானேதேர்ந் தெடுத்துக் கொண்டாள்
வனக்குயில் ஆண்டாள் என்னும்
வஞ்சியாள் அரங்கத் தானை
மனத்திலே இன்பம் பொங்க
மணக்கோலம் கொண்டு சென்றே
நினைத்ததை நடத்திக் கொண்டாள்
நின்மல னொடுக லந்தாள்!

20. கண்ணனை மாயன் தன்னைக்
காதலால் ஏங்கி ஏங்கி
எண்ணத்துள் வைத்துக் கொண்டாள்
எப்போதும் அவன் நினைப்பில்
வண்ணங்கள் பாடி நின்றாள்
வளர்த்தனள் காதல் தீயை
கண்ணுக்குள் அவனே! காணும்
கனவிலும் அவனே யானாள்!

தொண்டரடிப் பொடியாழ்வார்

21. விலைமகள் வலையுள் பட்டு
வேதனைச் சிறையுள் பட்டு
நிலைதடு மாறிப் பின்னர்
நிமலனார் அருளி னாலே
அலைவிலா உள்ளம் பெற்றே
அடியவர்க் கடிய ரானார்
அலைகடல் மிதப்பான் தொண்டர்
அடிப்பொடி யாழ்வார் தாமே!

22. மாலையின் கூறாய்த் தோன்றி
மண்ணிலே பிறப்பெ டுத்துக்
கோலமா மாயன் தொண்டே
குறியெனக் கொண்டு வாழ்ந்து
சீலமே கடைப்பி டித்துத்
திருவடித் தொண்டர் தொண்டில்
ஞாலமே போற்ற வாழ்ந்த
நாரணப் பொடிக ளாரே!

திருப்பாணாழ்வார்

23. தீண்டாத பாண்கு லத்தான்
துறைவழி நிற்கக் கண்டு
வேண்டாத கல்லை வீசிச்
சாரங்க முனிவர் சென்றார்
ஆண்டவன் நெற்றி தன்னில்
அதுபட்டி ரத்தம் கொட்ட
மீண்டோடி வந்து தோளின்
மீதேற்றிக் கொண்டு சென்றார்.

24. சாரங்க முனிவர் மீது
தாமேறிக் கொண்டு சென்று
சீரங்க நாதன் பள்ளித்
திருக்கோலம் கண்ட பேற்றில்
ஈரங்கொள் பக்திப் பாடல்
ஈரைந்தை அருளிச் செய்தே
பாரங்கொள் வினைகள் மாயப்
பரத்திலே கலந்து விட்டார்

திருமங்கையாழ்வார்

25. நாலாயி ரத்தில் ஒன்றை
நவில்பர காலர்; அன்பர்
வேலாயு தத்தை ஏந்தி
விழிப்புடன் காத்தி ருந்து
மாலான அண்ணல் தன்னை
வழிப்பறி செய்த கள்ளர்
ஆலிநன் னாட்டு தித்த
அருட்டிரு மங்கை யாரே!

26. அழகுறு குமுத வல்லி
அமுதவாய் பருக ஏங்கிப்
பழகுறு மணத்தால் பற்றிப்
பரமனுக் கடிய ராகி
வழிப்பறி கொள்ளை யிட்டு
வருத்துமோர் நெறியை விட்டு
எழில்மிகு மாயன் தொண்டில்
இணைதிரு மங்கை யாழ்வார்!

சுப்பு ரெட்டியார்

27. தேவாரம் திருமுறைகள் சித்தாந்தம்
ஆகமங்கள் தேர்ந்த மேதை
நாவாரச் சிவனருளைப் பாடுகின்ற
அடியாரின் நலங்கள் பேசிப்
பூவாரம் சூட்டுகின்ற சுப்புரெட்டி
யாரென்னும் புலவர் கோமான்
ஆழ்வார்கள் ஆரமுதைப் படைக்கின்றார்
இந்நூலில் அழகு கூட்டி!

28. எப்போதும் திருநீறு பொலிகின்ற
திருமுகத்தார் இவரின் உள்ளம்
தப்பேதும் இல்லாத சமரசசன்
மார்க்கத்தில் தழைப்ப தாலே
முப்புரத்தை எரித்தானும் திருவரங்கத்
துறைவானும் முனைந்து பார்க்கில்
ஒப்பென்றும் ஒன்றென்றும் ஒருகடவுள்
தாமென்றும் உணர்ந்த மேதை!

29. தன்மதமே உயர்வென்று சாதிப்பார்
வாழுகின்ற தரணி தன்னில்
தொன்னூலாம் திருக்குறளின் நெறிபோற்றும்
சுப்புரெட்டி யாரோ தூய
நன்னெறியின் வழிப்படுத்தல் சமயங்கள்
பணியென்னும் நம்பிக் கையால்
பன்னூலும் கற்றிடுவார் கற்றவற்றைப்
பிறர்க்குரைத்துப் பயன்கொள் வாரே!

30. ஆறுசொற் பொழிவுகளில் ஆழ்வார்கள்
எட்டுப்பேர் அருமை பற்றிக்
கூறுகின்ற முறைநோக்கின் சுப்புரெட்டி
யார்சொல்லின் கூர்மை தோன்றும்
பேறுவகை, வளர்ந்தமுறை, சோதனைகள்
பரமபதம் பெற்ற வாறும்
வீறுகவி வெளிப்படும் இலக்கியமேம்
பாடும்மிக விளக்கிச் சொல்வார்!

31. பாடல்களில் படிந்துள்ள வேதாந்தக்
கூறுகளும் படிமம் தானும்
நீடுவழக் கத்துள்ள மரபுகளும்
உட்பொருளும் நினைத்துக் கூறி
ஏடுபடிப் பவர்க்குமுழுப் பயன்நல்கும்
தகவல்களும் எடுத்துச் சொல்வார்
பாடுபட்ட பலனெல்லாம் தருமத்தாய்
பரிந்தளிக்கும் பரிசு போலே!

32. சுப்புரெட்டி யார்வந்து நுழைந்துவிட்டால்
ஓரிடத்தில் சுறுசு றுப்பும்
கப்பென்று வந்துவிடும்; எழுபதிலும்
விறுவிறுப்பாய்க் கடமை யாற்றும்
அப்பரென்பேன்; திருநாவுக் கரையரென்பேன்;
எளிமையிலும் அவரே யென்பேன்!
இப்படியோர் தமிழாசான் கிடைத்ததுசெந்
தமிழ்த்தாயின் இன்பப் பேறே!

33. சிரிப்பள்ளித் தெளிக்கின்ற திருமுகத்தில்
வெண்ணீறு பொலியும் பாங்கும்
விரும்போடு தமிழமுதைச் சொற்பொழிவாய்
மன்றத்தில் விரிக்கும் பாங்கும்
உருப்போடும் மாணவர்கள் உணர்வோடு
கற்றிடவே உதவும் பாங்கும்
இருப்போடு வரவாகும் ஊதியம்போல்
பயன்மிக்க பணியின் பாங்காம்!

34. அறிவியலும் இலக்கியமும் கற்றவராய்
இருப்பதனால் அடிவு நூல்கள்
செறிவுள்ள தமிழ்மொழியில் திறமாகப்
படைத்தளித்தார்; இலக்கி யத்தில்
நெறியற்ற கற்பனைகள் தமைவிளக்கி
குறிக்கோளும் தூய்தாகக் கொள்கைகளும்
சீராகக் கொள்ளக் கண்டோம்!

35. துறையூரும் சீர்காரைக் குடிநகரும்
வேங்கடமும் துய்ந்த பேறு
குறையில்லாப் பெரும்பேறாம் சுப்புரெட்டி
யார்தொண்டு கொண்ட தாலே!
நிறைபெறவே ஓய்வுநாள் இலக்கியங்கள்
ஆய்வெனவே நெறிப்ப டுத்தி
முறையாகத் தமிழ்நாடு முழுவதற்கும்
பயனீந்தார் நீடு வாழ்க!

வாழ்த்து

36. தில்லைப் பதியானும் சீர்வேங் கடத்தானும்
இல்லைவே றொன்றாய் இருந்திங்கே-நல்ல
குணந்திகழும் சுப்புரெட்டி யார்க்குத் தருக
மணங்கமழும் பல்லாண்டு வாழ்த்து!

* * *



1916 2016



சடகோபன் செந்தமிழ்
Sadagopan Senthamizh

‘பாவலர் மணி’, ‘சித்தன்’, வைணவமணி’
பல் மருத்துவர்
வித்துவான் **மு. இராதாகிருஷ்ணன்**
புதுவை

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிர மாலை

1. சுகரென்னும் மாமுனிபோல் பிறந்த போதே
துறந்தவர்நம் சடகோபர்! அவர்தம் ஆற்றல்
சகந்தனிலே விரித்திடயார் சதுரர்? அந்தச்
சாமி, உயர் சேனையர்கோன் அவதா ரந்தான்!
அகந்தனிலே உன்னுதொறும் அமுதம் பெய்யும்
அரியதமிழ் இவர் தந்தார்! காரி மாறர்
பகர்ந்த தமிழ் கேட்பதற்கே ஆண்டு தோறும்
பத்துநாள் ஒதுக்குகிறார் அரங்கத் தண்ணல்!

2. வண்பொருநை யாற்றின்தென் கரையில் வாய்த்த
வளவயல்சூழ் திருநகரி எனும்பேர் பூண்ட
தண்குருகூர் நகருறையும் காரி என்னும்
தவமுடைய நல்லார்க்கும், பொறைக்கோர் சான்றாம்;
பெண்குலத்துப் புகழ்விளக்கம் உடைய நங்கைப்
பெருமாட்டி யாரவர்க்கும் உலகம் உய்ய
மண்ணிலொரு வைகாசிப் பருவ மாக
மலர்ந்தவிசா கத்திலிவர் அவத ரித்தார்!

3. அவதாரம் செய்தருளும் நாள்தொடங்கி
அழுததிலை, முலையுண்ணும் அவதி இல்லை!
தவராசன் போல்வாட்ட மின்றி, மௌனச்
சாமியென இவரிருந்தார்! கண்கள் மூடி;
இவரிருந்த நிலைகண்டே பெற்றோர் உள்ளம்
எய்தியதாம் துன்பத்தை எழுதல் ஆமோ?
நவமணியாய்க் குறுங்குடியுள் நின்ற நம்பி
நல்லருளும் ஈதேஎன் றயர்ந்தார் பெற்றோர்!

4. பொருநைத்தென் கரையினிலே பொலிந்து நின்ற
பூரணனின் திருவுளத்தை ஏற்றே ஆங்கோர்
திருப்புளியின் கிளையினிலே தொட்டில் கட்டித்
திருக்கண்கள் விழியாத இவரை வைத்துக்
குருகூர்க்கு விடைகொண்டார் பெற்றோர்! அன்றே
குவலயம்நல் லருள்பெற்ற பனிரண்டாம்நாள்!
ஒருமுனிபோல் யோகநிலை கூடப் பெற்றே
உணர்வொன்றிப் பதினாறாண் டிருந்தார் ஐயர்!

5. வடதிசைக்கண் இருக்கின்ற திருக்கோயில்கள்
மாண்பெல்லா மறிந்தவற்றை வணங்கச் சென்ற
திடமுடைய மதுரகவி அயோத்தி தன்னைச்
சேவித்துத் திரும்பிடுமோர் இரவு தன்னில்
கடலெழுந்த பகவலனின் ஒளிபோல் விண்ணில்
கண்டனரோர் பேரொளியைத் தெற்குத் திக்கில்!
“சுடர்இதுவேன்? காடெரியும் ஒளியோ? அன்றிச்
சுற்றியுள்ள சிற்றூர்தான் எரியும் தீயோ?”

. எனவியந்தார்! பின்னிரண்டு முன்று நாட்கள்
இவ்வாறே ஒளிகாட்ட "இதுவென்-தேர்வோம்"
எனவெழுந்தார்! இரவெல்லாம் நடந்து பன்னான்
எழிலரங்கம் தனையடைந்தார்! அதற்கும் அப்பால்
மனமடங்காப் பேரொளிதான் இருக்கக் கண்டு
மாமதுர கவிமீண்டும் நடக்க லானர்!
வனம், ஆறு கடந்தேபின் குருகை சென்றார்,
மற்றந்த ஒளியங்கே மறைந்த தோர்ந்தார்!

7. ஊரெல்லாம் தேடிப்பின் அனந்தாழ் வானாம்
உறங்காத புளியின்கீழ் வீற்றி ருக்கும்
மாறர்தம் யோகநிலை கண்(டு) இவர்தாம்
மானுடரன் றென்றுணர்ந்தார்! அவர்முன் னங்கோர்
சீருடைய கல்லொன்றை இட்டார், கேட்டே
திருக்கண்கள் திறந்தாராம் குருகூர் நம்பி!
நாருடைய மதுரகவி கேள்வி ஒன்றை
நயமாகக் கேட்டவர்பால் ஞானம் பெற்றார்!

8. "செத்தத்தின் வயிற்றினிலே சிறிய வொன்று
சேர்ந்துபிறந் தாலிந்த வையந் தன்னில்
எத்தைத்தின் றெங்கதுவும் கிடக்கும்?" என்ற
இனியதொரு கேள்வியினை விடுத்தார்; மாறர்
"அத்தைத்தின் றங்கேயே கிடக்கும்" என்றே
அருளினரால்! மதுரகவி கேட்டி வர்தாம்
வித்தகரென் றேஓர்ந்தார்! அவர்பொற் றாளில்
வீழ்ந்தடிய ராயவர்க்குத் தொண்டு பூண்டார்!

9. நம்பெருமாள் என்றரங்கர் தம்மைச் சொல்வர்;
நம்முடைய மாறனையும் கற்று வல்லோர்
நம்மாழ்வார் என்கின்றார் உரிமை யோடே!
நன்மகிழ மலர்மாலை சூட லாலே
நம்பிவகு ளாபரணர் என்பர் மேலோர்;
நாயகியாய்ப் பாசுரங்கள் நல்க லாலே
அம்புவியோர் பராங்குசநா யகிஎன் கின்றார்;
அருள்மாறன், சடகோபன் ஐயர் நாமம்!

10. வேதத்தில் ஒன்றான சாம வேத
விரிவுக்குள் சாந்தோக்யந் தன்னில் கண்ட
கோதற்ற "உத்" என்னும் பகுதி தன்னைக்
குலவின்பப் பாட்டாக்கி-மக்கள் உய்யத்
தீதற்ற நெறிகாட்டித் திருமால் காட்டும்
"திருவாய்நன் மொழி" யாக்கித் தந்தே, இன்றும்
ஓது "திரு விருத்த" "மொடாசிரியம்" மிக்கிங்
குயர்ந்த "திருவந்தாதி" நான்கும் தந்தார்.

11. இவரிடத்துப் பாடல் பெறத் திவ்ய தேசத்
தெம்பெருமான் பலரிவர்முன் காட்சி தந்தார்!
தவமுடையார் அறியாத சித்த சித்தில்
வரனென்னும் தத்துவநன் நெறிவி ளக்கிப்
புவிமுழுதும் வணங்குகிற சோழ நாட்டுள்
புகழ்மிக்கத் திருப்பதிகள் ஐந்தினுக்கும்
கவிதந்தார்! நால்வேதக் சுருக்காய் நிற்கும்
களிதமிழாம் இவர் தமிழும்! மற்று முள்ள

12. பாண்டியநாட் டுப்பதிகள் தம்முள் நம்மின்
பராங்குசரும் பாடியவை பன்னி ரண்டாம்!
நீண்டமலை நாட்டிலுள்ள ஆறி ரண்டு
நிறைபுகழ்கொள் விண்ணகரம் தம்மில் உள்ள
ஆண்டகையும் இவரிடத்துப் பாடல் பெற்றார்!
அடுத்துவரும் வடநாட்டுத் தலங்கள் உள்ளே
பூண்டஎழில் வேங்கடத்தை முதலாக் கொண்ட
புண்ணியநற் றலமைந்தைப் பொலியச் செய்தார்!

13. ஆழ்வார்கள் பதின்மார்களாம்! அவர்க ளுள்ளே
ஆழ்வாரென் றாலிவரைத் தான்கு றிக்கும்!
ஆழ்வார்கள் உறுப்புக்கள் என்னில் இந்த
ஆழ்வாரோ உயிராவர் என்பர் மேலோர்!
வாழ்வாகக் கருதுகிற திருமால் தன்னை
வணங்கிடவே நாம்சென்றால், ''உமக்கு வாழ்விங்(கு)
ஆழ்வாரே'' என்றவரைத் தூக்கி நாமும்
அருள்பெறவே சடாரியெனச் தலையில் வைப்பார்!

14. ஆதித்தன் ஓர்சுடராம்! அடுத்த தான
அவதார இராகவனாம் பகல வன்தான்!
சோதியெனும் கண்ணனுமோர் கதிர்என் பார்கள்!
சொலுமிந்த மூவர்களும், சடகோ பர்தாம்
மேதினியில் செஞ்சுடராய் எழுந்த பின்னர்
விண்சுடர்முன் மின்மினியாய்ப் பொலிவி ழந்தார்!
ஓதுமவர்க் கேகாத உள்ளி ருள்தான்
உடையநங்கை மகனார்க்கண் டொதுங்கிற் றையா!

15. இங்கிவர்தம் தமிழ்கொண்டே கற்று வல்லோர்
எளிதாக மறைநிலங்கள் தெளிகின் றார்கள்;
தங்கிஅதில் உளநயங்கள், சாத்தி ரங்கள்
தமையெல்லாம் சான்றோர்தம் உரையுள் கொண்டார்!
இங்கவற்றைப் பாலைப்போல் யாரும் கொள்ள
எளிதாக - இனிதாக - அளித்தா ரெங்கள்
பொங்குபுகழ்ச் சுப்புரெட்டி யாராம் தோன்றல்;
புலமைமிகும் தமிழ்வலவர் இவர்யா ரென்னில்!

16. சிவவாக்ய ரெனும்பேர்கொள் சித்தர் இங்குத்
திருமழிசைப் பிரானாகி, ஆழ்வார் தம்முள்
யுவராச ராய்விளங்கும் தன்மை போல,
உவமையிலா நம்சுப்பு ரெட்டி யாரும்
சிவநெறியி லேநின்றும் விசிட்டாத் வைதச்
செந்நெறியில் ஆழங்கால் பட்டே நின்றார்!
நவமான வைணவநூல் பலவும் தந்த
நற்புலவர் இவர்ப்பற்றிச் சிலசொல் வேனே!

வேறு

17. நற்றமிழ்த் துறைகள் என்னும்
கடல்களைக் கடந்த நல்லார்!
விற்பனர் வியக்கும் வண்ணம்
விரிவுரை ஆற்றும் சூரர்!
கற்றவர் அவையை நீங்காக்
கல்வியர்! கவிகள் தேரும்
பெற்றியர்! அவைவி ளக்கும்
பெருமையும் பெற்ற சீலர்!

18. ''அருங்கலைச் கோன்'' என் கின்ற
அரியதோர் பட்டத் திற்கே
உரியவர்! கணமும் சோரா(து)
உழைத்திவர் உயர்வு பெற்றார்!
பொருளினைப் பெரிதென் றெண்ணாப்
புண்ணியர்! உலகம் வாழ
அருளினால் பன்னூல் தந்தார்!
ஆரிவர் திறம்தேர் வாரே!

19. பல்கலை ஆய்ந்து, நூல்கள்
பற்பல தந்து தம்மை
வெல்பவர் இன்றி நிற்கும்
மேன்மையர்! விரிந்த கேள்விச்
செல்வராம் இவரோர் ஆசான்!
செந்தமிழ் இவர்பால் கற்றோர்
நல்லவராய் வல்ல ராக
விளங்குவா நானி லத்தே!

20. கலைகளின் களஞ்சி யத்தைக்
கனிச்சுளை யாக்கித் தந்த
பலகலைச் செல்வர்! நல்ல
பதிப்புக்கள் வரஉழைத் தோர்!
தலைமுறை பலவும் வாழத்
தத்துவம் சமய மோடு
விலைமதிப் பில்லா நூல்கள்
விளக்கமாய்த் தந்த மேலோர்!

21. நஞ்சட கோபர் செய்த
செந்தமிழ் நமக்குத் தேனாய்
விஞ்சிய புலமை யாலே
விரித்தளித் துள்ளார்! அர்த்த
பஞ்சக மான இந்தப்
பண்புநூல் நுணுக்க மெல்லாம்
செஞ்சுடர் எனவி ளக்கம்
செய்துநற் றமிழர்க் கீந்தார்!

22. அகப்பொருள் தத்து வங்கள்,
அகம்கவர் தோழிப் பாக்கள்
தகவுடைத் தாய்ப்பாட் டின்னும்
தண்டமிழ்ச் சுவைகள் பொங்கும்
மக(ள்) அருட் பாட்டு, வேத
மந்திரப் பாடலெல்லாம்
வகையுற உரையிட் டிங்கே
வானமு தாகத் தந்தார்!

23. சித்தசித் தீச னென்று
செப்பிடும் தத்து வங்கள்
புத்தியுள் நிற்கும் வண்ணம்
பொலிவுறக் காட்டி, நங்கள்
வித்தகர் சடகோ பர்தம்
திருவுளம் விளங்க வைத்தார்,
எத்தனை தரம்உண் டாலும்
இனித்திடும் அமுத மொத்தே!

24. ''மாசறு சோதி'' தன்னில்
மட லெடுத் தினிமை தேக்கும்
பாசுரக் கருத்தை நேர்த்தித்
தமிழினால் பலரும் கொள்ள
ஆசற விளக்கம் சுப்பு
ரெட்டியார் ஆயி ரத்துள்
மீசுர மாக நின்ற
ஒருவராய் மேன்மை உற்றார்!

25. தூதெனில் மாறன் சொன்ன
தூதுதான் தமிழில் மேலாம்!
ஓதுமத் தூதில் காணும்
உள்ளுறை நயங்கள் தம்மைத்
தீதறக் காட்டி, ஞானம்
சிறந்தநல் லனுட்டா னங்கள்
மேத(கு) அப் பறவை தன்னின்
விரிசிற கிரண்டென் கின்றார்!

26. அன்னமும் கிளியும் வண்டோ
டருங்குயில் மயில்கள் பூவை
என்னுமிப் பறவை யெல்லாம்
பறவையோ? இல்லை, இங்கே
நன்னயத் தாழ்வார் நாத
முனிக ளாசாரி யர்கள்,
முன்னைய சான்றோர் என்ற
மேலவர் முழக்கம் தானும்

27. இப்புவி மாந்தர் நெஞ்சில்
இடங்கொளும்; யாரும் கொள்ள
ஒப்பிலாச் சடகோ பர்தம்
உளத்தினை - அருங்க லைகோன்
எய்ப்பினில் வைப்பாய் நாட்டுக்
கீந்தவிந் நூலின் மேன்மை
செப்பிடற் குரியன் யானோ

28. கண்ணனைக் குருகூர் வள்ளல்
காதலால் பாடிச் சென்ற
வண்ணங்க ளாயி ரத்தின்
வகைளை அலசி, யாரும்
உண்ணுதற் கேற்ற நீராய்
உரையிடு ரெட்டி யாராம்
அண்ணலின் புகழிங் காழ்வார்
புகழுள வரையி ருக்கும்!

29. உலைவிலா துழைப்ப தொன்றே
உயர்நெறி யாகக் கொண்டு,
பலகலை நூல்கள் தந்த
பன்மொழிப் புலமை யாளர்
நலமிகு சுப்பு ரெட்டி
யாரெனும் நம்பிக் கிங்கே
''தலையலால் கைம்மா றில்லை''
என்பரே தமிழ்ச் சான்றோர்!

30 பற்பல பரிசு பெற்றார்;
பல்கலைக் கழகத் தார்கள்
விற்பன ரிவருக் கீந்த
மேன்மைகள் எண்ணி லாது!
சொற்றிறம் வல்ல சுப்பு
ரெட்டியா ரென்னும் தோன்றல்
நற்றமிழ் நன்னூ லின்னும்
ஆயிரம் நல்கி வாழ்க!

31. மூச்செலாம் தமிழ்தான் இந்த
மூதறி வாளர்க் கென்பேன்;
பேச்செலாம் இலக்கி யந்தான்!
பிறழ்ந்தொரு நாளும் ஐயர்
''ஆச்செலாம்'' எனவோய்ந் தாரில்!
தமிழ்ப்பயிர்க் கருளும் கங்கைப்
பாய்ச்சலாம் இவரின் தொண்டு!
வாழிய இவர்பல் லாண்டே!

* * *

விட்டு சித்தன் விரித்த தமிழ்
Vittu Chitthan Viritha Thamizh

புலவர் **இரா. திருமுருகன், க.மு., கல்.மு.,**
புதுச்சேரி - 605 001

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிர மாலை

1. செந்தமிழ்த் தென்புதுவை என்று
திகழ்புதுச் சேரி தன்னைப்
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி
பாங்குடன் பாடி னாலும்
நந்தமிழ் ஆழ்வார் இருவர்
பிறந்ததும் நாட்டின் தெற்கில்
முந்தி இருந்தது வில்லிபுத்
தூர்ப்புதுவை மூதூர் அன்றே?

2. அந்தப் புதுவை அருமைதனை
இவ்வுலகம் அறியும் வண்ணம்
முந்து புகழ்சான்ற வேயர்
குடித்தோன்றல் முகுந்த பட்டர்
அந்தம் மிகுபண்பின் அம்மை
பதுமவல்லி ஆகி யோர்க்கு
வந்து மகனாக விட்டுசித்
தர்பிறந்த வளர்ந்து வந்தார்.

3. மந்தாரை மாதவி மல்லிகை
முல்லை மணத்தை நெஞ்சில்
சிந்தும் திருத்துழாய் தாமரை
யாதி செழும லர்சேர்
நந்த வனங்கள் வளர்த்துமலர்த்
தொண்டு நடத்தி என்றும்
சிந்தை முழுதும் திருமால்
நிறைவிட்டு சித்தர் வாழ்ந்தார்.

4. துளவ நிழலிற் கிடந்த
மகவுதனைத் தூக்கி வந்தே
அளவில் உவகையொடும் கோதையெனும்
பேர்வைத் தழைது நாளும்
உளமார் இறையுணர்வும் ஒண்டமிழும்
ஊட்டி உயர்ந்த வண்ணம்
வளமுடன் பட்டரும் தேவி
விரசையும் வளர்த்து வந்தார்.

5. பாண்டியன் கொண்டாடப் பட்டர்
பெருமாள் பரத்து வத்தை
வேண்டும் வகையில் விரித்துக்
கிழியை விரைந்த றுத்தார்
ஈண்டிய சங்கம் இயம்பிட
யானை இவர்ந்த போதில்
ஆண்டுபல் லாண்டென்றே ஆண்டவன்
காட்சி யதில்தி ளைத்தார்.

6. வண்ணமா டங்களே சூழ்திருக்
கோட்டியூர் வந்த ணைந்து
கண்ணனைப் பிள்ளைப் பருவத்துத்
தெய்வமாய்க் கண்டு கொண்டார்
எண்ணத்தில் தம்மை எழிலார்
யசோதையாய் ஏன்று கொண்டு
வண்ணங்கள் கொஞ்சிடும் பிள்ளைத்
தமிழ்ப்பாடல் மகிழ்ந்தி சைத்தார்.

7. ‘‘பேதைக் குழவி பிடித்துச்
சுவைத்துண்ணும் பெற்றி மைசால்
பாதக் கமலங்கள் வந்திங்குக்
காணீரோ பவள வாயீர்!
காதினிற் குண்டலம் காணீரோ
பூந்தளிர்க் கைகள் என்னும்
போதினைக் கண்டு புரிவளை
யீர்! வந்து போற்றி டீரோ?

8. தாழியில் வெண்ணெய் தடங்கையால்
தொட்டளைந்து தான்வி ழுங்கும்
பேழை வயிற்றெம் பிரான்கண்டாய்
உன்னுடனே பெட்புக் கொண்டான்
ஆழிகொண் டுன்னை எறிவான்
வராவிட்டால் ஐயம் இல்லை
வாழ உறுதியேல் மாமதியே
தாமதியேல் மகிழ்ந்து வாராய்!

9. எண்ணெய் கவிழ்த்தும் இளைஞர்களைக்
கிள்ளி எழுப்பி விட்டும்
கண்ணில் மணல்கொண்டு தூவியும்
காணாமல் காலிற் பாய்ந்தும்
பண்ணும் குறும்பு பொறாமே
முறையிடுவான் பலரும் வந்தார்
கண்ணின் இனிய பெருமானே
நீராடக் கடிது வாராய்!

10. கஞ்சன் கறுக்கொண்டு நின்றன்மேல்
ஏவியதோர் கரிய பேயை
அஞ்சி அலற அழித்தொழித்தாய்
அஃதொன்றோ? ஆவி போக்கும்
நஞ்சுமிழும் நாகம் கிடந்தநற்
பொய்கைதனில் நடுங்கப் பாய்ந்து
அஞ்சப் பணத்தின்மேல் அஞ்சனத்தின்
வண்ணா! நீ ஆடி நின்றாய்.''

11. என்றெல்லாம் பட்டர்பிரான் இன்பம்
தருந்தமிழில் இசைத்த பாடல்
துன்றும் பொருள், சொல், தொடைந யங்கள்
காட்டிச் சுவைகள் எல்லாம்
நன்று விளக்கி நமக்கின்
றொருநூல் நயந்த ளித்தார்
என்றும் இளையர் எழில்சுப்பு
ரெட்டியார் என்னும் ஏந்தல்.

12. சிறுவிரல்கள் மெல்லத் தடவிப்
பரிமாறச் செங்கண் கோடக்
குறுவெயர் விற்புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழலூ துங்கால்
கறவையின் கூட்டங்கள் கால்பரப்பிக்
கேட்டதுவும் கண்ணன் தோற்றம்
சிறுகாலை வண்டுதொழும் தெய்வப்
பதியெங்கும் திகழு மாறும்,

13. வெள்ளத்தின் மேலே விரிந்திருக்கும்
பாம்பணையில் விளங்கு மாப்போல்
உள்ளத்தின் உள்ளும் உவந்தினிது
செங்கண்மால் உறையு மாறும்,
கள்ளத்தில் கண்ணனுக்கே காதலியாய்த்
தன்னைத்தான் காட்டு மாறும்,
பள்ளத்தில் வீழ்ந்தோர் பதவிபெறப்
பத்திநெறி படைத்த வாறும்,

*14. இருப்பூர்தி, பேருந்து போன்ற
தனித்தமிழ் இனிய சொற்கட்(கு)
இருப்பாய் விளங்கும் இனியவிந்
நூலினிலே எடுத்துக் காட்டி,
விருப்புற்றார் யாரும் விளங்கி
மகிழ்வகையில் விரித்த தன்மை
திருப்பதிப் பல்கலைக்கே செந்தமிழைத்
தந்தவரின் சிறப்பே அன்றோ?*

*15. பாடிப் பரவுதற்கே பட்டர்பிரான்
வாய்மலர்ந்த பாட்டென் றெண்ணும்
வாடிக்கை அன்பர்கள் நெஞ்சில்
தமிழ்ச்சொல் வளங்கள் எல்லாம்
ஓடிப் பெருகும் வகையில்
படிமவகை உத்தி தன்னைத்
தேடி விளக்குதலும் சுப்புரெட்டி
யார்க்குரிய சிறப்பே அன்றோ?*

வேறு

*16. ஆய்ப்பாடிக் கண்ணனையே தெய்வ மாக
ஆழ்வார்கள் பற்பலரும் சுவைத்தார்; பெற்ற
சேயாகப் பெரியாழ்வார் சுவைத்தார்; நாளும்
செய்யதமிழ் மாலைகளே செய்து சூடி
நாயகனாய் ஆண்டாளும் சுவைத்தார்; அந்த
நற்றமிழைச் சுப்புரெட்டி யார்சு வைத்துத்
தோய்வுற்றார்; அதனாலே நாம்சு வைக்கச்
சுவை ததும்பும் இந்நூலை யாத்துத் தந்தார்.*

*17. முப்போதும் திருநீறு தாங்கும் நெற்றி;
மூழ்கிமிக வைணவத்தில் திளைக்கும் நெஞ்சம்;
தப்பேதும் அறியாத செம்மல் வாழ்க்கை;
சலியாத தமிழ்ப் பேச்சு; பயணம் செய்யும்
அப்போதும் விடுதிகளில் தங்கும் போதும்
அணுவளவும் நேரத்தை வீணாக் காமல்
எப்போதும் எழுதிக்கொண் டிருக்கும் கைகள்;
இவற்றின் பேர் சுப்புரெட்டி யார்என் பார்கள்.*

18. பண்பாட்டிற் கொருவடிவம்; எளிய தோற்றம்
பழகுவதற் கினியமுகம்; பழகி விட்ட
நண்பர்களின் நலன்களையே கருது கின்ற
நல்லமனம்; ஆராய்ச்சி போற்றும் உள்ளம்
பண்பாடு, வள்ளுவனார், இராம லிங்கர்,
பகர் மு.வ. இவர்பற்றி ஆராய் கின்ற
வண்புலவர் பரிசுபெற வைப்பு வைத்த
வள்ளலுளம் இவைசுப்பு ரெட்டி யாராம்.

19. எத்தனைதான் புகழ்தன்னை எய்தி னாலும்
எழுபதுக்கு முன்னாலே எழுபத் தெட்டு
சத்தான நூல் எழுதி வெளியிட் டாலும்
சலியாமல் கலைக்கழகம் பலவும் சென்று
முத்தான விரிவுரைகள் ஆற்றி னாலும்
முயன்றுகலைக் களஞ்சியத்தைச் சமைத்திட் டாலும்
எத்துணையும் செருக்கடையா எளிய உள்ளம்
இதன்யெர் தான் சுப்புரெட்டி யார்என் பார்கள்.

20. தாய்தன்னைக் குடல்விளக்கம் செய்த அந்தத்
தாமோத ரன்போலக் கோட்டத் தூரைச்
சேயாக அவ்வூரில் பிறந்த தாலே
சேயோரும் அறிந்திடவே செய்து விட்டார்
தூயபெரும் தொண்டுகளால் துறையூர் இன்று
சுடர்காரைக் குடிவேங்க டம்சீர்ச் சென்னை
ஆயபல ஊர்களையும் சிறக்கச் செய்தார்
அங்கெல்லாம் என்றுமிவர் புகழ்ம ணக்கும்.

21. அறிவியலில் தேர்ந்திருப்பார் சிலபேர்; என்றும்
ஆழ்ந்திருப்பார் இலக்கியத்தில் சிலபேர்; ஆனால்
அறிவியலும் இலக்கியமும் ஒருங்கே வல்லார்
அருமையிலும் அருமை; இவர் அதற்கோர் சான்று!
அறிவியலில் பதினான்கு புதுநூல் செய்தார்;
அவ்வளவில் இலக்கியங்கள் படைத்த ளித்தார்;
அறிவியலின் பார்வையினால் ஆக்கித் தந்த
ஆராய்ச்சி நூல்களும்அவ் வளவி ருக்கும்.

22. மாசில்லாச் சமயநிலை விளக்கும் நூல்கள்
வரிசையிலோர் பதினேழு படைத்த ளித்தார்;
தேசுடைய சான்றோர்தம் வாழ்க்கை தன்னைத்
தெரிக்கின்ற பனுவல்களோ முந்நான் காகும்;
ஆசிரியப் பணியாற்றி அறிந்த வெல்லாம்
ஐந்தரிய நூலாகத் தந்தார் மண்மேல்;
ஆசிரியப் பணியிருக்கும் வரையி ருக்கும்
அவர் படைத்த 'தமிழ்பயிற்று முறை'யின் சீர்த்தி!

23. கடலனைய பெருவாழ்வின் பரப்பை எல்லாம்
கடந்துவந்த பட்டறிவு; சொல்லச் சொன்னால்
மடைதிறந்த வெள்ளம்போல் பெருக்கெ டுக்கும்;
மாணிக்கம் வைரமெலாம் வந்து வீழும்!
கெடலரிய தம்வாழ்வில் நிகழ்ந்த எல்லாம்
கிளர்ச்சிதரும் பலநினைவுக் குமிழி யாக
விடலரிய விருப்பினொடு சுவைப்ப தற்கு
விரிவாக எழுதியுள்ளார் வெளியி டற்கே.

24. முனைவர்கள் பலபேரைப் படைத்த தாலே
முதுமுனைவர் என்றிவரைச் சொல்ல வேண்டும்;
அனைவருமே ஒருமனமாய் அளித்து வாழ்த்தும்
'அருங்கலைக் கோன்' பட்டத்தை அடைந்த சான்றோர்;
கனவுழைப்பால், தமிழரசால், தமிழ்வ ளர்ச்சிக்
கழகத்தால் சென்னைப்பல் கலையால் எட்டு
நினைவரிய பரிசுகளைப் பெற்ற மேலோர்;
நிகரற்ற இவர்பெருமை நிகழ்த்தப் போமோ?

25. இத்தகைய பேரறிஞர் எழுதி யுள்ள
எளியநடை இனிய தமிழ்க் கிருப்பே யான
வித்தகராம் விட்டுசித்தர் விரித்துச் சொன்ன
வீறுதமிழ்ப் பெருமைதனை விளக்கும் இந்நூல்
இத்தரையில் தமிழ்வாழும் வரையில் வாழும்!
இருந்தமிழில் இதுபோலத் தமிழர்க் கெல்லாம்
சொத்தான பலநூல்கள் இயற்றி எங்கள்
சுப்புரெட்டி யார்உலகில் நீடு வாழி!

* * *

மாணிக்கவாசகர்

Maanickavasakar

புலவர் **த. பெரியாண்டவன்,** எம்.ஏ.,

உதவி இயக்குநர்,

தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை - 108

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிர மாலை

திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால்சீர் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர்சுப்பு ரெட்டி யாராம்
பெருமகன் சீர்மை முற்றும்
பேசுதல் யாரா லாகும்?

சொல்லிலே இனிமை; தூய
நெஞ்சிலே தமிழு ணர்ச்சி;
அல்லுநன் பகலு மெல்லாம்
ஆய்வுகள் செய்தல் மற்றும்
பல்துறை வாயி லாகப்
பைந்தமிழ்த் தொண்டு செய்தல்
வல்லநல் லறிஞர் சால்பு
வையகம் அறிந்த தன்றோ!

ஆங்கில மொழிவ ளப்பம்
அருந்தமிழ் பெறுதல் வேண்டும்
தூங்காமல் அறிஞ ரெல்லாம்
தொண்டுகள் செய்ய வேண்டும்
ஏங்கிடும் தமிழ்த்தாய் ஏக்கம்
ஏகிட வேண்டும் என்னும்
பாங்குளம் வேண்டு மென்பார்
பலசெய்தி சுவையாய்ச் சொல்வார்!

பழங்கதை சொல்லிச் சொல்லிப்
பண்டைநற் பெருமை பேசிப்
பொழுதினை வீணே போக்கும்
புல்லர்போ லிருந்தி டாமல்
அழகுடைத் தமிழ்க்கன் னிக்கு
அணிகல னாகும் நூல்கள்
இழைத்திழைத் திட்டுப் பார்த்து
இன்புறும் மனத்த ராவார்!

கன்னலின் இனிமை தோற்கக்
கற்கண்டுத் தமிழு ரைப்பார்!
முன்னிய ஆழ்வார் பாட்டில்
மூழ்கியே இன்பம் காண்பார்!
தன்னிகர் இல்லா வண்ணம்
தமிழ்ப்பணி நாளும் செய்வார்
மன்னவர் இவர்ப டைத்த
மாநூல்கள் கொஞ்ச மாமோ?

அறிவியல் நூல்கள் தந்தார்
ஆய்வுநூல் பலவும் தந்தார்
நெறியிலக் கியங்கள் தந்தார்
நேர்சமய நூல்கள் தந்தார்
வரலாற்று நூல்கள் தந்தார்
வனப்பாசி ரியநூல் தந்தார்.
உரனேற்று மிவர்நூல் மொத்தம்
ஓரெண்பத் தேழு ஆகும்!

காவியச் சுவையில் தோய்ந்துக்
கலைபல ஆய்ந்தும் கற்றும்
பாவியல் திறங்கள் தேர்ந்தும்
பலநூல்கள் கொடுத்த தாலே
வாவியில் கதிரோன் தன்னை
வரக்கண்ட தாம ரைபோல்
மேவிய தமிழாம் கன்னி
மேனிபூ ரித்தாள் ஆமாம்!

அந்தநூல் வரிசை தன்னை
அடுத்ததாய்ப் புகழ்வி ளங்க
வந்தநூல் தான்மா ணிக்க
வாசகர் என்னு மிந்நூல்
இந்தநூல் தன்னை யானும்
எழுத்தெண்ணிச் சுவைத்து வேறு
எந்தநூல் இதற்கீ டென்றே
இன்பத்தில் திளைத்துப் போனேன்!

வேணியங் கொன்றைத் தாரான்
விரும்பும்நல் லடியா ரான
மாணிக்க வாச கன்சீர்
மன்பதைக் குரைக்கு மிந்நூல்
ஆணிப்பொன் னொத்த தாக
அமைந்துள திறங்கள் சொல்ல
வாணிக்கும் கூட யிங்கே
வார்த்தைகள் போதா தம்மா!

பெருமான்மணி வாச கர்தாம்
பிறந்தநற் பேறு பெற்ற
திருவாத வூரைப் பற்றித்
தெரியாதார் வருந்த வேண்டாம்
ஒருமுறை இந்த நூலை
ஓதுவா ராகில் அன்னார்
திருவாத வூர்க்கே சென்று
திரும்பிய உணர்வு கொள்வார்!

எத்துணை வருண னைகள்
எழில்மிகு உவமைத் தேன்கள்
முத்தெனும் விளக்கப் பூக்கள்
முழுமைசேர் ஒப்பு மைகள்
அத்தனை நயமும் சேர்ந்து
அமிழ்தமாய் இனிக்கும் நூலை
வித்தகன் சுப்பு வன்றி
வேறெவர் படைக்கக் கூடும்?

திருவாச கத்தை மற்றும்
செய்வித்த பெரியோன் தன்னை
ஒருவாச கத்தில் முற்றும்
உணருதல் வேண்டு மென்னில்
கருவினில் திருப டைத்த
கலைவலோன் சுப்பு சொன்ன
பெருமைநூல் இஃதே போதும்
பெரும்பயன் மலைபோல் சேரும்!

வான்புகழ்த் தொண்டு செய்து
வண்டமிழ் வளர்த்த தாலே
தேன்தமிழ்க் கலைஞர் கையால்
திரு.வி.க. விருது பெற்ற
கோன்சுப்பு ரெட்டி யாரைக்
கும்பிட்டு வணங்கு கின்றேன்
நீணில மீதில் அன்னார்
நீடுழி வாழ்க வென்றே!

* * *



பரகாலன் பைந்தமிழ்

Parakaalan Paithamizh

டாக்டர் பு.மு. சாந்தமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர் - துறைத் தலைவர்
சௌராஷ்டிர கல்லூரி, மதுரை - 625 006

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்பு பாயிர மாலை

வேங்கடவன் மலர்த்தாளில் நெஞ்சம் வைத்து
வினையகற்றும் பிரபந்த விளக்கை ஏந்தி
ஓங்குபுகழ்த் தமிழ்ச்சுடரின் பாதை கண்ட
உயர்வானப் பரப்பாக அறிவைத் தேக்கிப்
பாங்குடனே தொண்டாற்றும் என்றன் ஆசான்
பண்பட்ட தமிழ்ச்சுப்பு ரெட்டி யார்தம்
தேங்கமமுழும் நூலுக்குள் திளைத்து நின்றேன்
தேவநலத் தொடர்களிலே திருவைக் கண்டேன். 1

செந்தமிழில் தோய்ந்தவுளம் என்ப தாலே
செம்மாந்த பாரதியை உணர்ந்த தாலே
சிந்தையிலே பல்லாற்றல் வளரக் கண்டார்
செழுந்தமிழின் நூற்பரப்பில் சிறப்புத் தந்தார்;
இந்தவளம் வாய்த்திட்ட இசைமை யாலே
இவர்பெற்ற **அருங்கலைக்கோன்** என்னும் பட்டம்
சந்ததமும் இவர் திறமை சாற்று மன்றோ?
சங்கத்துத் தமிழ்வளரும் சான்று மன்றோ? 2

விண்ணளவு விரிந்திலங்கும் அறிவின் ஈட்டம்
விரும்பித்தாம் கொண்டதனால் தமிழ் வீட்டில்
எண்ணரிய துறைகளிலே இதயம் தந்தார்
இலங்குதுறை பலவற்றின் நூல்கள் தந்தார்;
கண்ணுக்குள் கனிவுகளைத் தேக்கிக் கொண்டு
கல்விதரும் **தமிழ்ச்செம்மல்** ஆன ஆசான்
பண்பட்ட நெஞ்சாழம் பார்க்க வேண்டின்
பரகாலன் பாட்டாய்வே போது மென்பேன்! 3

சடகோபன் பொன்னடி என் றான ஆசான்
சாற்றுதமிழ்ச் சுப்புரெட்டி யார்தாம் கண்ணில்
நடமாடும் களஞ்சியமாய்த் தோற்றம் தந்தார்
நம்மாழ்வார் பாசுரத்தின் நயத்தைப் போல;
வடநாடும் தென்னாடும் கண்ட மாலின்
வளமான தலமெல்லாம் படைத்த தாலே
படமாடும் பாம்பணையில் பள்ளி கொண்ட
பரமனவன் திருவருளே வாழ்க்கை என்பார்! 4

நெற்றியிலே இறைச்சின்னம் நெஞ்சம் காட்டும்
நிமிர்ந்தநடைப் பெருமிமோ நினைப்பைக் காட்டும்;
கற்றதுறை அறிவெல்லாம் ஆற்றல் காட்டும்
களங்கமிலாக் குழந்தைமனம் இதயம் காட்டும்;
பொற்புடைய பணியென்றும் பொலிவைக் காட்டும்
புகழ்படைத்த படைப்புகளோ திறனைக் காட்டும்
நற்புலமை பேராண்மை தமிழே காட்டும்
நல்லிதயப் பண்பாட்டை வாழ்க்கை காட்டும்! 5

கண்டிருக்கும் வழிகாட்டி ஆசான் நெஞ்சக்
கனிவுகளை இவர்போலக் கொண்டா ரில்லை;
பண்டிருக்கும் நூல்களையும் ஆய்வு செய்வார்
பயன்கூட்டும் அறிவியலும் தேர்ந்து சொல்வார்!
மண்டிருக்கும் கலைச்செல்வம் யாவும் இந்த
மாநிலத்தின் பயனுக்கே என்ப தாலே
கொண்டிருக்கும் அருங்கலைக்கோன் பட்டம் உண்மை
கூறுகின்ற கல்வெட்டாய் என்றும் வாழும்! 6

திருநீற்றை அணிந்தபோதும் நெஞ்சிற்குள்ளே
திருமாலின் அருளிச்செயல் பாட்டே கேட்கும்
ஒருமனத்தில் இருகாட்சி படைத்துக் கொண்ட
ஒருமை நலப் பொதுமையதன் உணர்வு கொண்டார்;
பெருந்தன்மை இவர்கொண்ட வாழ்க்கை என்றால்
பேரன்பே இவர் காட்டும் பாச மாகும்;
வருநாளின் வரலாற்றில் வாழும் நெஞ்சாய்
வாழ்கின்றார் சுப்புரெட்டி யார் என் பேனே! 7

பரமனருட் சுடர்பாடிக் கலியன் தந்த
பாசுரத்தில் திளைத்திட்ட என்றன் ஆசான்
வரலாற்றின் வழிநின்று வகுத்துத் தந்த
வளமான பயணங்கள் எல்லாம் நெஞ்சில்
சுரக்கின்ற அருளாகிப் பாய்வ தாலே
சொற்றமிழின் இறைக்காட்சி உளத்தில் தோன்றும்!
வரமாக இந்நூலை ஏற்றுக் கொண்டால்
வருநாளின் பயணத்தில் இறைமை வாழ்த்தும்! 8

வளர்கின்ற ஆண்டுகளை வெல்லும் ஆர்வம்
வளமைசேர் தமிழுக்குள் வாழும் உள்ளம்
தளராத தமிழ்ப்பணியில் பொன்னி வெள்ளம்
தாமறிந்த கலைபிறர்க்குக் கூறும் வேட்கை
அளப்பரிய கருத்துகளை எண்ணும் நெஞ்சம்
அன்றாடம் இறைநெறியில் வழுவாச் செம்மை
உளமறிந்த ஆய்வுகளில் திளைக்கும் சீர்மை
உள்ளபடி ஐயாவை இவையே காட்டும்! 9

பேச்சினிலே சிரிப் பிருக்கும் சிரிப்பிற் குள்ளே
பெருமைதரும் கருத்திருக்கும் கனிவி ருக்கும்
மூச்சினிலே வேங்கடவன் மணமே வீசும்
முப்போதும் இறைமறவா முழுமை தோன்றும்;
பாச்சுவையில் திளைக்கின்ற போதில் நம்மைப்
பரவசத்தில் ஆழ்த்துகின்ற பண்பே தோன்றும்
நாச்சுவையில் நல்லவளம் கொண்ட ஆசான்
நான்பெற்ற வழிகாட்டி; என்றன் பேறே! 10

எல்லார்க்கும் வாய்க்காத இளமை நெஞ்சம்
இளநெஞ்சில் தமிழ்ப்பண்பே என்றும் தஞ்சம்
நல்லார்வம் வளர்ப்பதிலே சீர்மை கொள்ளும்
நாளெல்லாம் எழுதுவதில் உள்ளம் துள்ளும்;
சொல்லாண்மைப் பிரபந்தப் பாடற் காட்சி
சுவை நூல்கள் முன்கூறும் புலமைச் சாட்சி;
வல்லமைகள் எல்லார்க்கும் வாய்ப்ப தில்லை
வளர்துறையின் திறமைக்கும் இவர்போ லில்லை! 11

கலியனாரின் புகழ்காட்டும் நூலைப் போலக்
கனிதமிழில் பிற ஆழ்வார் வாழ்வைக் கூறும்
பொலிவுள்ள பலநூல்கள் தமிழுக் கீந்து
பொன்னாழிக் கையானின் புகழைப் பாடி
வலிமைகளை நாளெல்லாம் வளர்க்க வேண்டும்
வாழ்க்கைநலப் பாதையிலே இருகை நீட்டி
மெலிந்தமனம் வீறுகொளும் வண்ணம் ஐயா
மேன்மேலும் இறைநூல்கள் படைத்தல் வேண்டும்! 12

இனிக்கின்ற சொல்லாலே இறையைப் பாடி
இதயத்தை நெகிழவைக்கும் ஆழ்வார் பாட்டின்
தனிச்சுவையை “வியாக்கியான” உரையில் கண்டோம்
தமிழறிந்தார் நெஞ்சாரச் சுவைக்கும் வண்ணம்
கனிதமிழில் அவ்வுரைக்கும் விளக்கம் தந்தால்
காண்பதுவும் சுவைப்பதுவும் இறைமை ஒன்றே!
இனியதமிழ் உணர்வுடனே கேட்டுக் கொண்டேன்
எளியவனின் வேட்கையினைத் தீர்க்க என்றே! 13

என்றுமுள தென்தமிழை இயம்பிக் கம்பர்
எழுதிவைத்த இராமகாதைச் சுவையைப் போல
குன்றாத காதலுடன் கோதை சொன்ன
கொண்டாட்டத் திருப்பாவைப் பண்ணைப் போல
நன்றறிந்த ஆழ்வார்கள் நாளும் நாளும்
நவின்றிட்ட பிரபந்தப் பாடல் போல
என்றென்றும் ஐயாஉம் இளமை நெஞ்சால்
எமைவளர்க்கும் தமிழ்தருக என்றே கேட்பேன்! 14

தன்னை நன்றாய்த் தமிழ்செய்யு மாறு தேவன்
தந்ததமிழ் கொண்டதகை சான்ற ஐயா,
மன்னுமாரு தமிழ்ச்செம்மல் என்றே ஆனீர்
மாண்புடைய அருங்கலைக்கோன் என்றும் ஆனீர்;
தன்னின்பப் பெருக்காலே தமிழும் நாளும்
சடகோபன் பொன்னடி என் றிசைத்து வாழ்த்தக்
குன்றெனவே உயர்கின்றீர் வணங்கு கின்றேன்
கூறுதமிழ்ப் பாசுரம் போல் வணங்குகின்றேன்! 15

கலியனார் இறைவாழ்வின் காட்சி கூறும்
கனிவான செய்திகளோ செவிசேர் இன்பம்
மலிந்திருக்கும் அகச்சான்றின் நிறைவைக் காட்டி
மணித்தமிழில் வடித்திருக்கும் வாழ்க்கைக் காட்சி
சலிப்பின்றி நமையழைத்துச் செல்லும் பாதை
சார்ந்திருக்கும் வைணவத்தின் செழுமைப் பாதை!
பொலிந்திருக்கும் கட்டுரைக்குள் பாடற் சான்று
பொன்னான ஆழ்வாரின் வாழ்வைக் காட்டும்! 16

வடநாட்டுத் திருத்தலங்கள் வழங்கும் தேவ
வளக்காட்சி ஒருமைக்குச் சான்று கூறும்;
திடங்கொண்ட மூவேந்தர் பார்வை கொண்ட
திருநாட்டின் பயணங்கள் அருளைக் கூறும்
மடைவெள்ளப் பெருக்காகக் கலியன் பாடல்
மாநிலத்தின் தலமெல்லாம் இருகை நீட்டி
நடைபோட்டுத் தந்திருக்கும் பயணக் காட்சி
நாளெல்லாம் மணிவண்ணன் நலனே கூறும்! 17

அகப்பொருளில் இறையன்பைக் காணும் பாங்கோ
ஆழ்வாரின் நெஞ்சளித்த பரிசி லாகும்;
தகவுடையார் சொல்விளக்கம், பரிசின் சீர்மைத்
தகுதிகாண விதந்தோதித் தரத்தைக் காட்டும்;
'மிகநல்ல மிகநல்ல' என்னும் வண்ணம்
மேலான தத்துவத்தின் விளக்கம் யாவும்
அகத்தினிலே திருவருளின் பதிவைக் காணும்;
அப்பதிவில் நிலைப்பதெலாம் இறைமை ஒன்றே! 18

முறையான மனக்காதல் முகிழ்த்து விட்டால்
முத்தமிழில் மாலவனைப் பணிந்து விட்டால்
நிறைவான பேரின்பம் நெஞ்சில் தோன்றும்
நினைவிற்குள் மணிவண்ணன் நேசம் தோன்றும்;
இறையின்ப அநுபவத்தைத் தந்த சொல்லில்
இனியவனைத் துய்த்தமனப் பற்றைக் கண்டேன்;
மறையாளன் திருவருளின் அநுப வத்தில்
மனம்தோய்ந்த என்னாசான் நெஞ்சம் கண்டேன்! 19

ஊர்விளக்கம் உற்றபல தலவி ளக்கம்
உயர்ந்தோங்கும் திருக்கோவில் விளக்கம் சீர்த்த
பேர்விளக்கம் பெருமைதரும் பாவி ளக்கம்
பேராளன் அருள்விளக்கம் செயல்வி ளக்கம்
சீர்விளக்கம் கலியனாரின் மனவி ளக்கம்
செந்தமிழின் சுவைஊட்டும் சொல்வி ளக்கம்
யார் தருவார் இவர்போல நூலுக் குள்ளே?
எமையாளும் பரமனவன் விளக்கம் கண்டேன்! 20

வண்டடைந்த 'மதுவிரதப்' பெயரைக் கூறும்
வனப்பிற்குள் மனம்பதிந்தால் பொலிவு தோன்றும்;
கொண்டிருக்கும் ஞானத்தில் தான்தன் பேச்சு
கூடிவரும் பிரேமத்தில் தான்பெண் பேச்சு
கண்டிருக்கும் சுவைகூறும் எழுத்திற் குள்ளே
கண்பதிந்தால் காண்பதெலாம் மாலின் காட்சி!
பண்கலந்த பாசுரத்தில் தோய்ந்த ஐயா
பார்த்தபடி படித்திட்டால் பரமன் காட்சி! 21

பெற்றவளின் உளமாகிப் பெருமை பேசிப்
பேணுகின்ற அகக்காதல் பேச்சி னாலே
பற்றுகின்ற தாய்ப்பாசுர விளக்க மெல்லாம்
பக்குவத்தை வெளிப்படுத்தும் ஆன்மக் காட்சி!
உற்றதுணை என்றுணர்ந்தே ஆன்ம வேள்வி
உருவாக்கும் தோழிப்பா சுரங்கள் எல்லாம்
நற்பயனைக் காண்பதற்கு வழிகள் காட்டும்
நம்மவரின் விளக்கங்கள் நயத்தைக் கூட்டும்! 22

உள்ளத்தில் உருக்கங்கள் வந்த வண்ணம்
உயிர்ப்பிற்குள் இறைவேட்கை வளர்த்த வண்ணம்
பள்ளமடை வெள்ளமெனப் பாய்ந்த வண்ணம்
பாடுகின்ற மகள்பாசுரப் பாடல் யாவும்
அள்ளுசுவை விளக்கத்தால் பொலிவைக் கூட்ட
அமைந்திருக்கும் கருத்தோட்டம் நெஞ்சிற் குள்ளே
தெள்ளூற்ற தமிழமுத இனிமை சேர்க்கும்
திருமாலின் அகவிளக்கம் அருளைச் சேர்க்கும்! 23

வழிபாட்டின் வழியில்தான் அருளைக் காணும்
வகைகூறும் தத்துவத்தில் பாவைக் காட்சி;
மொழிகின்ற அவதாரம், தத்து வத்தின்
முழுமைக்குள் அடங்குவதும் விளக்கக் காட்சி;
விழிகளிலே நீர்மல்க உருகும் நெஞ்ச
விருப்பிற்குள் தத்துவமே விளைச்ச லாகும்;
மொழிப்பண்கள் தத்துவமாய் விளங்கும் சீர்மை
மொழிகின்ற சொல்லெல்லாம் உயிரின் காப்பே! 24

ஆழ்வாரின் பாடற்குள் ஆழங் காண
ஐயாவின் இறைநெஞ்சம் கொண்ட ஆர்வம்
ஆழ்ந்தமனப் பக்குவத்தின் வலிமை யாகும்
அமைந்துள்ள கட்டுரைகள் வளமை கூட்டும்;
சூழ்ந்திருக்கும் தலமெல்லாம் சுற்றிப் பார்த்துச்
சுடராழித் திருவாளன் பண்மைக் கூறி
வாழ்வியலைத் தந்திருக்கும் கலியன் பாடல்
வரலாற்றின் தலப்பயணம் அருளைச் சேர்க்கும்! 25

சொல்வரிசை சீர்வரிசை என்றே கண்டு
சுவையான விளக்கங்கள் கூறும் பாங்கும்
நல்விளக்கம் தரும்போதில் குறிப்பும் தந்து
நயவுரைகள் சேர்க்கின்ற நலத்தின் பாங்கும்
வல்லமையை முன்னிறுத்தும் திறமை என்பேன்
வளர்கின்ற நூலெங்கும் அந்தப் பாங்கே
நல்லியல்பாய் அமைவதுவும் சுவையைக் கூட்டும்
நற்பாடல் பெறும்விளக்கம் நம்மை வாழ்த்தும்! 26

தொடக்கமுதல் இறுதிவரை தொடரும் பக்கம்
தொடர்ந்துவரும் கலியனாரின் உள்ளம் காட்ட
அடக்கமுடன் வரும்விளக்க உரைகள் எல்லாம்
ஐயாவின் நெஞ்சார்ந்த புலமை காட்ட
நடக்கின்ற இவ்விரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து
நல்லிறைவன் திருவருளின் நெருக்கம் காட்ட
வடநாடும் தென்னாடும் ஒன்றாய்ச் சேர
வடித்ததமிழ்க் கலியனார்போல் நூலும் வாழ்க! 27

தந்திருக்கும் இந்நூலின் உள்ளே உள்ளம்
தந்தவர்க்குத் திருமாலின் அருளே வாய்க்கும்;
சிந்தையிலே வைணவத்தின் செழுமை தேக்கிச்
சிறப்போர்க்கு மணிவண்ணன் மணமே வாய்க்கும்;
முந்தைமர பறிந்தோரின் பாசு ரத்துள்
மூழ்குவார்க்கு முகில்வண்ணன் காட்சி வாய்க்கும்;
சந்ததமும் தமிழ்ப்பாட்டின் இனிமைக் குள்ளே
சார்வோர்க்குப் பரமனருள் வாய்க்கும்; வாய்க்கும்! 28

சூழ்ந்தவினை வெல்லவேண்டி, நாளும் பாடல்
சொல்வாரின் திருவுள்ளம் இளமை தானே!
தாழ்வகற்றும் பிரபந்தப் பண்ணில் தம்மைத்
தருவாரின் திருவுள்ளம் பசுமை தானே!
ஆழ்வார்கள் பாசுரங்கள் உயிரின் வேட்கை
அவைதோயும் திருவுள்ளம் இனிமை தானே!
வாழ்நாளில் தமிழ்ப்பாட்டில் தோய்ந்து தோய்ந்து
வளமறியும் திருவுள்ளம் இறைமை தானே! 29

கணிகண்ணன் பின்சென்ற மாலைப் போலக்
கனிதமிழின் பின்செல்லும் நெஞ்ச மெல்லாம்
துணிவுடைய இந்நூலின் பின்னே சென்றால்
தொடர்வதெலாம் நலமொன்றே உண்மை; உண்மை!
மணிவண்ணன் புகழ்பாடி அருளும் பாடி
மானிடத்தின் வெற்றிதரும் பண்கள் பாடி
அணியாக நூல்மாலை ஏற்றுக் கொண்டால்
அடைவதெலாம் அவனருளே! திண்ணம், திண்ணம்! 30

* * *





வடவேங்கடமும்திருவேங்கடமும்
Vadavengadamum Thiruvengadamum

டாக்டர் **அர. சிங்கார வடிவேலன்**
எம்.ஏ., பிஎச்.டி., சி.ஜி.டி.,
தமிழ்ப் பேராசிரியர் - துறைத் துலைவர்
துணை முதல்வர் - சேவுகன் அண்ணாமலை கல்லூரி,
தேவகோட்டை - 623 302

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிரமாலை

மானுடத்தின் வெற்றியென்றும் வாழ்க! வாழ்க !

1. எப்போதும் ஏதேனும் எழுதிக் கொண்டும்
எழுபத்தா றகவையிலும் படித்துக் கொண்டும்
ஒப்பாய்வும் உறழாய்வும் செய்து கொண்டும்
ஒருநூறு அடையும்வரை உழைத்துக் கொண்டும்
மப்புடைய கார்முகில்போல் கருத்தைக் கொட்ட
மடிதற்று முந்துகின்ற என்றன் ஆசான்
சுப்புரெட்டி யாரென்று பெயர்சொன் னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே.

2. அம்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட்டாண்டில்
அழகப்பர் பண்ணையிலே தமிழை நட்டார்;
நெம்புகோல் விஞ்ஞானம் கற்ற ஆசான்
நெடுமாலின் திருவருளால் தமிழைச் சேர்த்தார்;
அம்பலத்தில் ஆடாமல் அறைக்குள் ஆய்ந்தே
அறிவுலகப் பல்துறையில் நூல்கள் யாத்தார்;
சம்பளத்தை நம்பாமல் ரெட்டி யாரும்
தம்பலத்தை நம்பியும் செட்டி யாரே.

3. கட்டையுடல் கறுத்திருக்கும்; நூல்கள் மேய்ந்தே
கண்ணிரண்டும் சிவந்திருக்கும்; ஆய்வு செய்தே
பட்டையிட்ட திருநீறாய்ப் பழுத்த ஞானப்
பழமான தலையில்முடி வெளுத்திருக்கும்;
ஒட்டி வைத்தல் போலிருக்கும் உதட்டு மீசை
உரைகாரர் தேன்மூழ்கி நரைத்திருக்கும்
ரெட்டியார் தமிழ்ப்பரிசாய்க் கிடைத்ததற்கு
ரெட்டிப்பாய் வேங்கடத்தை வணங்கு வோமே.

4. அன்னைமொழி அவருக்குத் தெலுங்கென்றாலும்
ஆதிமொழி தமிழ்தன்னில் மேதை யானார்;
திண்ணைமொழி தேசமொழி உலகம் எங்கும்
திகழுமொழி அனைத்தினிலும் தேர்ச்சி மிக்கார்;
எண்ணம்மொழி செயல்யாவும் பெருமாள் என்றே
இலக்கியத்தில் 'ஆழங்கால்' படுவதாலே
கன்னல்மொழி இனிப்பது போல் ரெட்டி யாரின்
கையசையும் நூலாகி இனிக்கு தம்மா!

5. வெறுந்தரையில் குப்புறத்தால் படுத்துக் கொள்வார்;
விரித்தபடி பலநூல்கள் உடனி ருக்கும்;
குறுந்தொகையும் நெடுந்தொகையும் அணியும் யாப்பும்
கோள்நிலையும் வாள்நிலையும் கூறும் நூலும்
மருந்தியலும் உளவியலும் காதற் பாங்கும்
மடைதிறந்த வெள்ளமெனத் தலையில் நின்று
அருந்துகிற பாலாகிக் கையில் பாயும்;
அத்தனையும் தேனாகி நூலாய் மாறும்.

6. ஆழ்வார்கள் பாசுரத்தில் மூழ்கி மூழ்கி
ஆழங்கால் படுவதவர் பிறவிப் பேறு;
வாழ்விக்கும் கருவிதரு விஞ்ஞா னத்தில்
வாய்த்திருக்கும் பேரறிவு கல்விப்பேறு;
ஆழ்வாரில் தலைமணியாம் நம்மாழ் வாரை
அருகணைய வாய்த்ததுவோ ஆய்வுப் பேறு;
பால்வார்க்கும் தாய்போலத் துறைகள் தோறும்
பலநூல்கள் அவர்யாத்தல் தமிழர் பேறே!

7. வேங்கடத்தை நடுவாக வைத்துக் கொண்டு
வெகுகாலப் பட்டறிவை வழங்கு கின்றார்;
வேங்கடத்தான் எம்பெருமான் வாழும் வீடு
வேங்கடமே எனநினைக்கும் வாய்க்கும் வீடு;
வேங்கடத்தான் இலக்கியத்தில் காலம் தோறும்
விளங்குவதை அழகாக விரித்துப் பேசி
வேங்கடத்தான் திருவடியில் சார்த்தும் மாலை
வெகுநேர்த்தி யாய்விளக்கும் இந்த நூலே.

8. இவ்வொரு நூல் படித்தாலே என்ன என்ன
எய்திடலாம் என்பதனைச் சுருங்கச் சொல்வேன்;
செவ்வையுறு வாழவுவரும்; வைண வத்தில்
தெளிவுவரும்; ஈட்டுரையில் தேன்கிடைக்கும்;
திவ்வியமாம் பிரபந்தத் திரட்டும் பாலும்
திருமாலின் அருளோடும் சேர்ந்து கிட்டும்;
ஒவ்வொருசொல் பிழையாக அச்சா னாலும்
உயர்திருமால் சௌலப்பியம் இந்த நூலே!

9. வாங்கியகை பூமணக்கும்; இந்த நூலை
வைத்த இடம் தேன் மணக்கும்; படித்து விட்டுத்
தூங்குகையில் திருமலையான் தென்றல் காற்று
துளபத்தின் நறுமணத்தை நெஞ்சில் தேக்கும்;
ஆங்காங்கே அருள்மணக்கும்; திவ்ய தேசம்
அடைந்தபயன் அத்தனையும் நொடியில் கிட்டும்;
பூங்குயிலாய் ஆசானின் புகழைப் பாடும்
பொற்பேறு மாணவன்என் பிறவிப் பேறே.

10. சொக்கலிங்கர் முருகப்பர் செட்டி நாட்டார்
சுடர்விட்ட புரட்சித்தீ கம்பன் தாசர்
தக்கவரின் திருநினைவால் மலரும் இந்நூல்
தகைசான்ற அவர்துணைவி புரட்சி அவ்வை
மிக்கவுயர் **பாசவல்லி மரக தம்மா**
மேலான திருக்கையில் கொண்டாய்ச் சேரும்;
தக்கபடி நன்றியினைச் செலுத்தும் எங்கள்
தமிழாசான் உயர்பண்பு தொடர்க! வாழ்க!

11. எண்பதினை நெருங்குகிற என்றன் ஆசான்
இருபதுபோல் உடல்பெறுக! நூறும் காண்க!
கண்படைத்த பேரதனைத் தமிழர் நாட்டார்
களிபடைத்த அவர்நூலின் படிப்பால் காண்க!
விண்துடைத்த வேங்கடமும் அதன்மேல் தோன்றும்
விரிசுடரும் ஆசானைப் படிப்போர் கேட்போர்
மண்படைத்த உயிர்களினை அருளிக் காக்க
மானுடத்தின் வெற்றி யென்றும் வாழ்க! வாழ்க!

* * *

வாய்மொழியும் வாசகமும்

Vaaimozhiyum Vaasakamum

புலவர் பேராசிரியர் டாக்டர் மா.வே. பசுபதி

எம்.ஏ., டி.லிட்., அவர்கள்

முதல்வர், ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி

திருப்பனந்தாள் - தஞ்சை மாவட்டம்

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிரப் பாமாலை

தமிழ்நலம் முற்றக் கற்றுத்
தனிவளம் செறிய நூல்கள்
அமிழ்தெனப் படைத்த செம்மல்
அருமைஎம் வேங்க டத்தான்
இமிழ்திரைப் பாற்க டல்போல்
இயல்துறை தன்நி னைவுக்
குமிழிகள் பலப டைத்த
குணாதிபன் வாழ்க வாழ்க! 1

அகவையை எட்டும் பன்னூல்
அமைத்தவர்; புதுமை கொஞ்சம்
தகவலை நிறைந்த ளிக்கும்
தனிப்பெரு மனிதர்; நெஞ்சிற்
புகவரி தாகும் நுண்மைப்
புலமையை எளிமை யாக்கிச்
சுகமுற வரையும் சுப்பு
ரெட்டியார் பணிகள் வாழ்க! 2

இமயமே என்ன ஓங்கி
இணையிலாப் பெருமை செய்யும்
சமயமே வரவா தாரம்;
சரித்திரம் தன்னை நோக்கி
அமைவன கூற லன்றி
அறிவியல் தன்னை நோக்கிச்
சமயத்தின் சிறப்பைச் சாற்றும்
சால்புநூல் இதுவொன் றென்பேன். 3

வாசகன் வரைந்த தெய்வ
வாசகம் அனைத்தும் ஞான
வாசகம் ஒன்று மட்டும்
வழிவழிச் செய்தி சொன்னோம்
வாசகத் தறிவி யல்கள்
வாசனை வீசு மாறு
தேசுறக் காட்டும் இந்தத்
தமிழினை உலகம் போற்றும். 4

ஆழ்வார்கள் அருளிப் பாட்டில்
அமைந்துள அழகுப் பாட்டில்
வீழ்வாரும் உய்யும் தெய்வ
விளக்கெனும் வாய்மொ ழிக்குள்
ஏழ்கட லுலகை ஈர்க்கும்
ஏற்றமார் அறிவி யல்கள்
ஊழிழ்த்துவே ரூன்றல் காட்டும்
உயர்நூலொன் றிதுவே யன்றோ? 5

காதலித் திறமை இன்பக்
கவினெலாம் கண்டார் செய்தி
சீதமார் தமிழில் சிந்தைச்
செல்வமாய் விளக்கிச் சொல்லும்
மேதகு புகழ்மை யாளர்
மிகுதமிழ் சுப்பு ரெட்டி
சாதனை வரிக ளெல்லாம்
சரித்திர மாக வாழும். 6

ஈடுகள் அனைத்தும் தேர்ந்த
ஈடிலாப் புலமை யாளர்
ஈடுகள் தமக்கோர் ஈடாய்
இயற்றிய தமிழ்நூற் கோவை
பாடுவோர் மனத்தில் என்றும்
பசுமரத் தாணி யாகும்;
தேடுநற் புலவோ ருக்குச்
செப்புதல் அற்பு தங்கள் 7

சூட்சுமச் சொற்க ளுக்கும்
சுவைநலப் பொருள்கள் சொல்லித்
தேட்டமார் கவிமேற் கோள்கள்
திகழ்வுறப் பலவாய் வைத்தே
ஆட்கொளும் இறைமைத் தன்மை
அவையெலாம் வியக்கக் காட்டும்
ஈட்டமே இந்நூ லாகும்;
எழிற்புது வரவே யாகும். 8

வள்ளுவர் வாய்மொ ழிக்குள்
வளர்பல சமயக் கொள்கை
உள்ளவா(று) எடுத்துக் கூறும்
உயர்ந்தநல் ஒருமைப் பாடும்
தெள்ளிய கீதைக் குள்ளே
திகழ்ந்திடும் நுணுக்கச் செய்தி
கொள்ளெனக் கொடுக்கும் பாங்கும்
குவிகரம் கொண்டே ஏற்போம். 9

சரணலால் சரணொன் றின்மை
சாதனை யெனவாழ்ந் துள்ளோர்
தரமெலாம் மந்தி ரத்துத்
திறத்தினால் எடுத்து ரைத்த
பரமகிழ் தேற்க வல்ல
பதத்தினை மெச்சு கின்றேன்;
வரதனம் முருகு பற்றி
வரைந்ததும் முருகே யன்றோ? 10

மன்னிய செழுந்த மிழ்க்கு
மகிமைகள் காட்டும் இந்நூல்
பன்னிய தெய்வ மேன்மைப்
பத்திமை மிகுக்கும் இந்நூல்
தென்னிலம் யாவினுள்ளும்
திகழ்ந்தொளி பரப்பு மாக!
இந்நிலை செய்த சுப்பு
ரெட்டியார் ஏற்றம் வாழ்க! 11

* * *



நவவித சம்பந்தம்

Navavitha Sambandham

உயர்திரு அருட்கவி ***அரங்க சீனிவாசன்***

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

<u>சிறப்புப் பாயிரப் பாமாலை</u>

அகாரந்தான் எழுத்துமுதல் ஆதல் போல
அச்சுதனே அனைத்துயிர்க்கும் **'அப்பன்'** *ஆவான்;*
அகாரந்தான் எழுத்தொலிக்க உதவல் போல
அவன்தானே உயிர்வாழக் **'காப்போன்'** *ஆவான்;*
அகாராந்தான் இறுதியிலே மறைந்த நான்கன்
உருபால்கைங் கரியம்அறி வித்த லாலே
அகாரந்தான் பெரானோன் உயிர்கட் கெல்லாம்
ஆண்டைஎனும் **'சேஷி'** *என அறிகின் றோமே.* 1

ஓங்காரத்து இடையில்எழுத்து உகாரம் ஆகும்;
ஒருவாத அநந்யம்எனும் தேற்றே காரம்;
பாங்கான உயிர்அனைத்தும் மகளிர் ஆவார்;
பகவன்அவன் பிரிக்கவொண்ணாக் ‘**கணவன்**’ என்னும்;
நீங்காத உயிர்ப்பெயராம் மகாரந் தானே
‘**நினைந்தறியத் தகும்பிரமம்**’ அவனே என்னும்;
ஆங்காரம் அழிக்கின்ற நமஸ்ஸி னாலே
அவன் ‘**உடையான்**’; நாம் ‘உடைமை’ என்று தேர்வோம். 2

நாராய ணாயஎனில் சொற்கள் மூன்றாம்;
நாரந்தான் அசித்துச்சித்து அனைத்தி னுக்கும்
பேராகும்; அவற்றினையே உடலாய்க் கொண்டு
பிரியாமல் இயக்குதலால் அவன் ‘**ச ரீரி**’;
வேராகும் அயனம்எனல் இருக்கும் தானம்;
விருப்பிடமாம் இருப்பிடத்துக்கு அவன் ‘**ஆ தாரம்**’
ஆராயின் எட்டெழுத்தே அதில்அ டங்கும்;
ஆழ்பொருளோ அளவிலவாம் வியப்புஈ தன்றோ? 3

ஆயஎனல் நான்கன்உரு பாகும்; இங்கே
அவ்வுருபை ‘**பொருட்டு**’ என்றும் சொல்லு வார்கள்;
தூயன்அவன் அநுபவிக்கும் பொருட்டே, சித்துத்
தோன்றியுளது எனப்பொருளை விரித்து நோக்கின்
மாயவனே அநுபவிக்க உரியன்; அந்த
மாண்உரிமை வாய்த்தவன்பேர் ‘**போக்தா**’ ஆகும்;
நேயமொடுஒன் பதுவகையில் உயிர்கட் கெல்லாம்
நீங்காத உறவாகி நின்றான் ஈசன். 4

இவ்வுறவை அவன்அறுக்க முனைந்திட் டாலும்
இயலாது; நாம்அறுக்க இயல்வ துண்டோ?
எவ்வுறவும் அவன்ஆன தாலே அன்றோ
எம்முடனே ஒருவனாய்த் தோன்று கின்றான்?
தவ்வுறவே சேய்குழியில் வீழ்ந்த தென்றால்,
தாய் உடனே அக்குழியில் தாவி மீட்பாள்;
ஒவ்வுறவே பரன்அந்த வண்ணம் நம்முன்
உறவுநினைந்து அர்ச்சைவடி வாயி னானே! 5

ஐந்நிலைகள் தனக்குரிமை யாகக் கொண்ட
அமலனுக்குப் பணிபுரியக் கடன்பட் டுள்ளோம்;
மெய்நிலைய மாம்அவன்அக் கடனைக் கொள்ள
விழிஎதிரே நிற்கின்றான்; நாம்ஒப் போமேல்
நம்நிலையத் தூடுஅவனே அமர்ந்து கேட்பான்;
நாம்அதற்கும் இசையோமேல் நமைவி டாமல்,
பைந்நிலையப் பாயலிலே படுத்துக் கொண்டு
பார்என்பான் என்கடனைந் தீர்என் பானே! 6

ஒரு வணிகன் கடல்கடந்து பொருளைத் தேடி
ஓர்இருப தாண்டின்பின் திரும்பி வந்தான்;
பொருள்களைத்தன் இடத்தினிலே இறக்க லுற்றான்;
போந்தொருவன் இடைமறித்து 'என்இடம்ஈது' என்றான்;
இருவருமே பூசலிட்டார்; ஆங்கோர் ஆன்றோர்,
'ஏன்பூசல்'? 'நீர்தந்தை - மகனே' என்றார்;
பொருதுபெரும் பூசலிட்ட கைத ளர்ந்து
பூசல்மறந்து உடல்நழுவிப் புளகுற் றாரே. 7

இப்படித்தான் பவக்கடலில் மூழ்கி மாழ்கி
இறைஉறவை மறந்துகயிங் கரியம் விட்டுத்
தப்படி நாம் இடுக்கின்றோம்; ஒருநல் லாசான்,
தளியுறவு நுமக்குண்டு என்று உபதே சிக்க
மைப்படியும் பேனியன்நம் தலைவன் என்று
வாஞ்சையினால் அறிந்துகொண்டு சரண்அ டைந்தே,
''எப்படியும் பயன்படுத்து கென்போம்'' ஆயின்
இப்படியில் பவக்கடல்தான் வற்றிடாதோ? 8

நவவிதசம் பந்தத்தை நாம்அ றிந்தால்
ஞாலத்தார் சகோ தரத்வம் சமத்வம், கொண்டே
அவவிதம்ஒன் றில்லாமல் ஒருமைப் பாட்டை
அடைந்திடுவோம்; உயிர்த்தொண்டே அரிதொண்டாகும்;
பவவிதனம் பறந்துவிடும்; வீடு பேறுஇப்
பாரினிலே இக்கணமே பலிக்க லாகும்;
தவஇதம்மிக் கெளிதாகும்; சமயம் சாதி
சச்சரவாம் நச்சரவம் சாம்பிச் சாகும். 9

ஆழ்வார்கள் தாம்அருளிச் செயல்என் கின்ற
அமுதொழுக விட்டனர், நாம் அமரர் ஆக;
ஏழ்பாரும் புகழ்தரும்நம் பிள்ளை ஆதி
எண்ணிலர்நல் உரைஎழுதி உபக ரித்தார்;
தாழ்வாதும் இலாதமணிப் பவள மாய், அத்
தனைஉரையும் இருப்பதனால், அதனைத் தேர்ந்தே
வாழ்வார விரும்புபவர் பலகால் கற்றும்
மலைமுட்டும் குருவினெ மருண்டார் அம்மா! 10

ஆசார்ய இருதயமாம் மாறன் நெஞ்சை
அருளாள ராம்இளவல் அருளிச் செய்யத்,
தேசார் ஸ்ரீ வசனபூ டணத்தி னோடு
தெய்விகநல் இரகசியம் ஈரொன் பானும்
நேசானு கூலமுடன் உலகா சார்யர்
நிலத்துளமர்க்குக் கொடையாக நேர்ந்து தந்தார்;
வாசாம கோசரமாய் அதனுள் நுட்பம்
மன்னுலகில் முடவனுக்குக் கொம்புத் தேனே! 11

விரியாத அரும்புகள்போல் உலகா சார்யார்
விண்டபொருள் நுட்பத்தை நன்கு தேறிச்
சரியாக மலர்த்துதற்கே வியாக்யா தாக்கள்
தாம்முயன்றும், தமிழ்மட்டும் அறிந்தோர் சற்றும்
தெரியாமல் தடுமாறும் நிலைக்கு இரங்கித்
தேசிகராம் சுப்புரெட்டி யார்மு யன்றே
எரியாத விளக்கதனை ஏற்றல் போல
எளியதமிழ் நடையினிலே விளக்கி னாரே! 12

பல்குரவர் பேருரைகள் அனைத்தும் கற்றுப்
பாரின்இயல் பொடுகலந்து தொகுத்துத் தந்தார்;
நல்குரவு மொழியில்இலா முன்னை ஆழ்வார்
நவில்வேத நுணுக்கமெலாம் திரட்டித் தந்தார்;
மல்குறவே சொல்வளரார்; சொல்சு ருக்கி,
வான்கதிரின் ஒளிதரல்போல் நுட்பம் ஈந்தார்;
வெல்குவர்யார் தெளிவுஎளிமை நுண்மை பெய்து
விரைந்துபல நூல்எழுதும் திறனை அம்மா! 13

வண்திருவண் பரிசாரத்து உடைய நங்கை
மகன்அருளும் வாய்மொழியைத் தேர்ந்து தேர்ந்தே
எண்தகுசீர் டாக்டர் என்ற ஏற்றம் பெற்றார்;
இனியசட கோபன்செந் தமிழாம் நூலைக்
கண்டறிஞர் பாராட்டக் கண்டோம்; நூற்றுக்
கணக்கான நூல்அருளிக் கருணை செய்தார்;
மண்டலமேல் வைணவநூல் மட்டோ! சைவ
மாசமய நூல்களும்தந்து உயர்வு பெற்றார். 14

வேங்கடவன் பல்கலையின் கழகந் தன்னில்
மேலான தமிழ்த்துறைக்குத் தலைவர் ஆனார்;
பாங்குடைய அறிவியலே ஆதி நூல்கள்
படைத்தமையால் பரிசுபல பலவே பெற்றார்;
ஈங்குலகில் இவர்தொடாத் துறைகள் உண்டோ!
இளைப்புச்சோர் வுகள்இவரை எட்டிப் பாரா!
தேங்கலில்ஆ யிரம்பிறைகாண் பருவத் துள்ளும்
செயற்கரிய செய்து பெருஞ் சீர்மை கொள்வார். 15

சுறுசுறுப்பில் எறும்பு! உரையில்செங் கரும்பு!
துரிசில்லா உறுதிஇரும்பு! உளம்அ ரும்பு!
விறுவிறுப்புஇங் கிவர்எழுத்தில் நடன மாடும்;
வெலவெலத்துச் சோர்வுகளோ அப்பால் ஓடும்;
குறுகுறுப்பாய் விளையாடும் குமரர் கூடக்
குதூகலத்தி லேஇவர்க்குத் தோற்றுப் போவார்;
கிறுகிறுப்பும் வியப்பும்நமக்கு உண்டாம் - இன்னார்,
கீர்த்தியும்சொல் நேர்த்தியும்கொள் பூர்த்தி கண்டே. 16

அட்டப்பிர பந்தம்போல் ஷட்ப்ர பந்தம்
அருள்ஆள வந்தார்ஓர் இரட்டி யாரே!
கட்டப்ப படாதுஎளிமை தமிழ்க்குத் தந்த
காவடிச்சிந்து அணாமலைஓர் இரட்டி யாரே!
இட்டப்பட்டு எளியவர்க்கு ஈந்து, வெங்கை
எழிற்கோவில் அமைத்தவர்ஓர் இரட்டி யாரே!
மட்டுப்ப டாதநவ விதசம் பந்தம்
வழங்கியவர் நம்சுப்பு இரட்டி யாரே! 17

சம்பந்தம் இறைவனுக்கும் நமக்கும் காட்டும்
தகவினால் உலகுக்கோர் ஆசான் ஆனார்;
**'வெம்பந்தம் நீக்குதற்குப் பகவன் அன்றி
வேறில்லை'** என்றுவழி காட்டி ஆனார்;
கம்பம்தன் அன்னைஎன உதித்த ஈசன்
கருணைஒளி பரப்பிஅருள் இரவி யானார்;
அம்புஅந்த வாலியின்மேல் எய்த ராமன்
அருட்குஇலக்கா கிய**சுப்பு இரட்டி யாரே**! 18

சொல்லுக்கு நல்லமுதச் சுவையை ஏற்றிச்
சுவைப்பார்க்கு விருந்தூட்டும் வேளாண் செல்வர்;
நெல்லுக்குப் பதர்போல்வார் தாமும், ஈசன்
நீர்மைக்குஇங் குரியர்என உறுதி சொல்வோர்;
அல்லுக்குள் இரவிவர வழைப்ப தைப்போல்,
அகத்துக்குள் அன்புவிளக் கேற்றும் நல்லார்;
மல்லுக்கு நிற்காமல் சொற்கள் எல்லாம்
வசத்துக்குக் கொண்டுவரும் மாயச் சித்தர். 19

ஆசாரி யரில்ஒருவர் இவரோ? அன்றி
ஆழ்வாரைப் பதினொருவர் செயவந் தாரோ?
பூசாரி யாய்த்தமிழை அருச்சித்து இங்கே
புதுக்கோவில் வந்தமரச் செயவந் தாரோ?
தேசாரத் திருநீறு பூசிச் சைவ
தேசிகரை நால்வர்எனச் செய்வந் தாரோ?
ஏசாமல் இருசமயத்து ஒருமைப் பாட்டை
ஏற்படுத்தும் நம்**சுப்பு இரட்டி யாரே**! 20

திருத்துவதோ அழிப்பதுவோ அடித்த டித்துச்
சிந்தித்துச் சிந்தித்தே எழுது கோலை
இருத்துவதோ எழுதுவதை நிறுத்திக் கொஞ்சம்
எழுந்தோய்வு கொள்வதுவோ? கருத்துஇன் னொன்றைப்
பொருத்துவதோ செய்வதில்லை; ஏடு தன்னில்
புதுமுத்தம் கோப்பதுபோல், எழுதிச் செல்லும்
கருத்துவளம் மிக்கவர்; நற் கலையில் வல்லார்;
கனிந்தமனத் தினர்**சுப்பு இரட்டி யாரே**! 21

* * *

1916 2016



அர்த்த பஞ்சகம்

Artha Panchakam

புலவர் வீர. அரங்கனார்

தமிழாசிரியர் - தலைமையாசிரியர் (ஓய்வு)

நாராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி,

விழுப்புரம்

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

<u>சிறப்புப் பாயிரப் பாமாலை</u>

1. உலகு புகழ் **வேங்கடத்துள்**
ஓங்குபுகழ் தமிழ்த்துறைக்கு
அலகில்புகழ் சேர்த்தவராம்
ஆற்றல்மிகு தமிழ்த்தலைமை
நிலவிடவே முதல்வராய்
நிறுவனத்தின் தோன்றலவர்
குலவிடவே நம்சுப்பு
ரெட்டியார் சென்றார்கள்.

2. சென்றார்நம் வேங்கடவன்
பல்கலையின் கழகத்துள்,
நன்றாகும் ***தமிழ்த்துறையின்***
துரையாகி *நலஞ்சேர்த்து*
குன்றாத கொள்கையெனக்
குலமனித நேயத்தால்
மன்றம்புகழ் மதிநலத்தால்
மாமனிசர் ஆனார்கள்.

3. மாமனிசர் இவரென்றால்
மாநிலந்தான் போற்றுகின்ற
சேமஞ்சேர் மலைக்கோடு
பெற்றதெனத் தமிழகத்தின்
மாமய்யம் ***திருச்சிமா***
வட்டத்தின் துறையூர ார்
நாமுயர்ந்தோம் என்றுரைக்கும்
நல்லாசான் *பொறுப்பேற்றார்.*

4. நல்லாசான் நலஞ்சேர்க்கும்
துறையூரில் *முதன்முதலில்*
எல்லாரும் மகிழ்ந்திடவே
எங்கள் ஜமீன் துரையமைத்த
நல்லார்கள் போற்றிடவே
உயர்பள்ளி *நண்ணியவர்*
வல்லவராய் மிக உயர்ந்தோர்
வளங்கண்டார் மாண்புற்றார்.

5. வளங்கண்டு மாண்புற்றார்
வாழ்வுக்கு எற்றதென
உளங்கொண்டு ***ஆங்கிலத்தின்***
உயர்பட்ட தாரிஇவர்
களங்கண்டார் ***நற்றலைமை***
ஆசிரியர் *ஆனாலும்*
களம்காணும் ***கம்பன்கவி***
நயத்தினையும் சுவைத்தளித்தார்.

6. கம்பன்கவி நலங்கண்டு
துடிக்குமந்நாள் தனிலாங்கோர்
கம்பன்அடிப் பொடியெனவே
தனைக்கூறி வாழ்ந்திட்ட
நம்பன் அவர் **கணேசனார்**
காரைக்குடி நகர்சிறக்க
அம்புவியோர் தாம்போற்ற
கல்லூரி அங்கமைத்தார்.

7. அங்கமைத்த **அழகப்பா**
கல்லூரி முதல்வரிவர்
தங்குபுகழ் செந்தமிழின்
திறந்தேர்ந்து ஆங்கிலமும்
பங்குபெறப் பயிற்றுவிக்கும்
பாவலராய்ப் பலநூல்கள்
சிங்காமல் எடுத்தெழுதிச்
சிந்திக்கும் பணியேற்றார்.

8. பணியேற்ற பண்பாளர்
பார்புகழ் வளர்கின்றார்
மணிவண்ண மாதவனார்
மாமலையாம் வேங்கடத்தின்
அணிசேர்க்க அழைத்தனால்
வாழ்வின்முடி யதுவெனவே
துணிந்தங்கே **பல்கலையின்**
தமிழ்த்தலைமை யோற்றிட்டார்.

9. தமிழ்த்தலைமைத் தொண்டர்தாம்
தந்தநூல் பலவாகும்
தமிழகத்துள் இவர்போன்று
நாளெல்லாம் ஆய்வெழுதிச்
சிமிழ்க்காமல் செப்புகின்றார்
சிலருளரோ எனக்கேட்டுக்
கமழ்கின்ற மணங்கண்டு
களிப்புறுவோம் நாமிங்கே.

10. களிப்புறுவோம் நாமிங்கே
காண்கின்றோம் களிவோடு
சுளிக்கின்றோம் **இவரகவை**
எண்பதெனச் *சொன்னாலும்*
அளிக்கின்றார் **தாத்தாவாய்**
ஆழ்வார்கள் அநுபவத்தை
விளக்கமாய் அர்த்தபஞ்
சகத்தில் ஆழ்த்திவிட்டார்.

11. ஆழ்வார்கள் ஆழங்கால்
பட்டதெல்லாம் அளந்துரைக்கும்
வாழ்வாக **அருங்கலைக்கோன்**
வந்துதித்தார் வாழ்க! எனச்
சூழ்வோம் அவர்புகழைச்
சொல்வோம் சுவைத்திடுவோம்
வாழ்வோம் **ஆயிரத்தில்**
இவரொருவர் *தாம்என்றே!*

12.. ஆயிரத்தில் ஒருவராய்த்
தோன்றினார் **அவருடைய**
பாயிரத்தைப் பகர்கின்றேன்
பாமாலை சூட்டுகின்றேன்
தாயிரக்கம் பெற்றவர் தம்
தகைமையிது ஆதலினால்
நீவிரெலாம் கேட்டிடுவீர்
எனநினைந்து நீட்டுகின்றேன்

13. நீட்டுகின்றேன் வைணவத்தின்
நிகழ்விங்கு நிலவிடவே
கேட்டுவக்க வந்துள்ளோம்
கிளரிளமை செழித்திடவே
நாட்டமுடன் நாமுகந்து
நலம்பெற்று வாழ்த்திடுவோம்
தேட்டமுறு வைணவத்தின்
பிரபந்தம் போக்கியமே.

14. வைணவத்தின் போக்கியமே
வரலாற்றின் வாய்ப்பாகும்
வைணவன்தான் நிறைவாக
விரவியதாம் பரவியதாம்
வைணவம் விஷ்ணுமயம்
என்றுரைத்தால் வயமதுவே
வைணவமே வையம்நிறை
பொருளாக வளர்ந்திடுமே.

15. வளர்ந்தேற்றம் பெற்றிடவே
வண்டமிழால் வேங்கடத்தெம்
உளந்தோய்ந்து உவந்திடவே
தூலொன்றை வெளியிட்டுக்
களங்காணும் அண்ணல்நம்
கலைமுதல்வர் வேங்கடத்தான்
தளர்ந்தோர்க்கு மனம்தேற்றும்
பஞ்சகத்தைத் தந்திட்டார்.

16. பஞ்சகத்துள் மனமிருத்தி
பரிந்துரைத்த வரிகளெலாம்
நெஞ்சகத்துட் கொள்வதற்கே
நேர்பட்டார் தம்நூலில்
எஞ்சகத்தார் ஏன்றுகொள
அருத்த பஞ்சத்தை
செஞ்சுவையில் செப்பியவை
சேமத்தின் நிலைக்களமே.

17. நிலைத்திடுவோம் நீணிலத்துள்
நிலவுகின்ற உயிர்களெலாம்
குலையாமல் இன்புற்று
வாழ்வதற்கே கூறியுளார்
மலைமீது விளக்காகி
மனிதரெலாம் மனங்கொளவே
கலையுரைத்து வைத்தவர்நம்
கவிமணியாம் டாக்டரிவர்.

18. **கவிமணிநம் டாக்டர் தாம்**
மனந்திறந்து உணர்த்தியவை
செவிமணக்க **மெய்ஞ்ஞானம்**
சிந்திக்க விஞ்ஞானம்
செவியாரச் செப்புமித்
திருமகனை நாமெல்லாம்
குவிந்திங்கே கூடிடுவோம்
வாழிந்திடுவோம் வாழியநீர்.

19. வாழ்த்திடவே வாரீர்!
எனவணங்கிக் கூறுகின்றேன்
ஆழ்ந்தமன அன்போடும்
அருளோடும் அறிவுரைத்து
ஆழ்வார்கள் வாழ்வார்கள்
அதுவேநம் விழைவென்போம்
வாழ்த்துதுமே பல்லாண்டு
எனக்கூறி வாழ்த்துமே.

* * *





வைணவ செல்வம்
Vainava Selvam

கல்விக்கடல் **S.K. இராமராஜன்** (கம்பராமன்)

(முன்னாள் துணைப்பதிப்பாசிரியர்

அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.)

அவர்கள் அன்புடன் உவந்தளித்த
சிறப்புப் பாயிரப் பாமாலை
(தோரண வாயில்)

துங்கம் மேவிய சங்கரன் கோவிலைத்,
தூய்மை ஓங்கிய மாயோன் நகரினை
மங்க லந்தரு சத்தியின் கோட்டத்தை,
மணங்கொள் கந்தன் உறும்படை வீட்டினை,
ஐங்க ரற்குறித் தாய தளியினை,
ஐயன் வைகிய துய்யநற் பாழியை,
இங்கு யர்த்தி, மிலேச்சர் புரிந்திட்ட
இழிவை நீக்கி ஒளியினைத் தந்ததார்? 1

வேதம் ஆகமம் போற்றிடும் தெய்வதம்
மேவு கின்ற பதிதொறும் கோபுரம்,
போத மேயென வானை யளத்திடப்
பொற்பின் ஓங்கப் படைத்த தெவர்கரம்?
சீத ளஞ்செறி சோலையைச் சாலையைத்
தெய்வப் பாற்கட லேநிகர் ஏரியை
ஆத ரத்திற் படைத்துல குய்கென
அவனிக் கீந்து மகிழ்ந்த தெவருளம்? 2

மறைகள் போற்றிடும் அங்கயற் கண்ணியார்
மாண்பி லாத மிலேச்சர் ஒழிந்திடக்
குறைவி லாதநற் சேனைகள் சூழ்தரக்
குன்றம் மேவிய வெம்புலி போலவே
நிறைவு கொண்ட பொலிவுடன் வம்மென
நேயத்தாலே யழைத்திட்ட போதினில்
பொறையொ டுற்றநம் கம்பணன் தோள்களில்
பூரிப் போங்கப் புகுந்திட்ட தீரர்யார்? 3

பொன்னி யாற்றில் துயின் றிடு மாயனும்,
புனித வேங்கடம் மேவிய அண்ணலும்,
மன்னு சோலை மலைசேர் அழகனும்,
வந்து வந்து தினமும் இரந்திடப்
பன்னு கூந்தலில் சூடி உதிர்த்திட்ட
பழைய கோதை வழங்கிய கோதைக்கு
நன்ன யஞ்செறி காவியக் கோவிலை
நயத்தின் நல்கிச் சிறப்பமை வேந்தர்யார்? 4

அற்பு தஞ்செறி பிள்ளைத் தமிழினை
அமுதம் தோற்க வழங்கும் குருபரர்,
பொற்ப தத்தினில் வீரக் கழலினைப்
பூட்டி ஞாலப் புகழினைத் தந்ததார்?
சிற்ப ரன்தனை இட்டலிங் கத்தினில்
சேவித் துள்ளப் புயலை யடக்கிய
கற்பின் மிக்க சிவப்பிர காசரைக்
கவிஞர் வேந்தெனப் பரவிப் புகழ்ந்ததார்? 5

சங்க நூற்குச் செவிலி எனத்தகும்
சால்பு மிக்கநம் ஐயர்க் கிளமையில்
பொங்கு செந்தமிழ் யாப்புறு நுட்பத்தைப்
புகன்று ஞானத் தெளிவினைத் தந்ததார்?
துங்க வாழ்வருள் பஞ்ச தசியினைத்
தூய நற்றமி ழாற்படைத் திட்டதார்?
அங்க வர்க்குச் சமாதியைக் கோயிலால்
ஆக்கி வேத வரம்பினைக் காத்ததார்? 6

கீரன் நல்கிய ஆற்றுப் படையினால்
கிளர்ச்சி பெற்ற முருகன் புயத்தினில்
சீர மைந்திடு காவடிச் சிந்தினைச்
செழிக்கச் சூடி மகிழ்ச்சி வளர்த்ததார்?
வீரம் மேவிய காவியக் கம்பனே
மேவிப் பாடினான் காந்தி கதையென
பார காவியம் இங்கு படைத்ததார்?
பண்டைச் சந்தங்கள் மீளக் கொணர்ந்ததார்? 7

'வான மோமழை பெய்திடும், பூமியோ
மாண்பின் ஓங்க விளைந்திடும், புல்லனே
ஊனம் மேவிய வரியைத் தரேன்' என
ஓதி வீரப் புயலை விளைத்ததார்?
மானம் நோக்கிய சானகி நாயகன்
மல்லல் தோள்களில் நல்லருள் பொங்கிடத்
தேன ளாவிய கீர்த்தனை தந்ததார்?
தேவ கானத்தை வாழ்வுறக் காத்ததார்? 8

மங்க லம்பொவி பாகதம் நல்கிய
மாசிலாதொளிர் சப்த சதியினை
பங்க மற்ற குறுந்தொகை நாணுறப்
பண்பி னோடு படைத்த தெவர்செயல்?
துங்க மார்கும ரேசவெண் பாவினை
தூய நற்குறள் மணியைப் பதித்தெழில்
பொங்கச் செய்து தமிழர்கள் வாழ்வினில்
புனித வாழ்வை மலர்ந்திடச் செய்ததார்? 9

அற்பு தஞ்செறி பாரதம் நல்கிய
அரங்க நாதர் சிவிகை சுமந்ததார்?
பொற்பு மேவிய கூடற் கலம்பகம்
போத நாதனின் தோளில் புனைந்ததார்?
சிற்ப மேயென ஈட்டுரை நற்றமிழ்
செம்மை யோங்க மொழிபெயர்த் திட்டதார்?
நற்க லைக்கு விருதாயக் கலைமகள்
நயக்கும் பிள்ளைத் தமிழைப் புனைந்ததார்? 10

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்,
கோதி லாதநம் மாயவன் காதையை
அன்று நம்முடைய ஐயர் உளத்தினில்
அறிவின் வித்திச் செறிவுறக் காத்ததார்?
வென்றி சேர்அரி சமயதீ பத்தினை
விளக்கத்தோடு களிப்புறத் தந்ததார்?
மன்று போற்றிடும் மாறனின் கோவையை
மாநி லத்தினில் படர விடுத்ததார்? 11

மங்க லத்தமிழ்த் தென்றல் திரு.வி.க.
மயிலைக் காப்பியர் என்று புகழ்ந்திடப்
பங்க மற்ற கபில பரணரைப்
பண்பின் ஈந்து தமிழைப் புரந்ததார்?
துங்கம் மேவு திருவருட் பாவினால்
தூய்மை பெற்றுத் தமிழக மாண்பினை
இங்க யர்த்திட நல்ல முதல்வராய்
ஏற்றம் பெற்று பொலிவினைத் தந்ததார்? 12

வேந்தர் வைகும் அரண்மனை போன்றதம்
வீட்டை நூலகம் ஆக்கும் முதல்வர்யார்?
காந்தி யொத்த வினோபா மலர்ந்திடக்
கனிந்து தந்த நிலக்கொடை யாளர்யார்?
சாந்த மேவடி வாகித் தழைத்திட்ட
சால்பி னாலே நிலங்கள் அனைத்தையும்
வாய்ந்த சத்திரம் கொள்கென கல்கிய
வாய்ந்த வேந்தரைத் தந்த தெவர்குளம்? 13

மங்க லந்தரு பிங்கள சூரண்ணா
மகிழந்து தந்த சிலேடைப் பனுவலைத்
துங்க நற்றமி ழில்வடித் திட்டதார்?
தூய்மை ஓங்க அதற்குரை தந்ததார்?
சங்கம் மேவு பவணந்தி நூலுக்குத்
தக்க நல்லுரை நல்கிக் களித்ததார்?
பொங்கு வைணவம் நன்கு மலர்ந்திடப்
புவன கிரியில் உதித்திட்ட சோதியார்? 14

போதம் நல்கும் பதும புராணத்தை
புனிதக் காப்பிய வடிவில் சமைத்ததார்?
சீத ளஞ்செறி தலைமலை மாலுக்கு
செப்பம் மிக்க சதகம் படைத்ததார்?
ஏத மற்றொளிர் சாரீ ரகத்தினை
எளிமை யாக்கிப் புகழை வளர்த்ததார்?
நாதன் கம்பன் புனிதப் பனுவலை
நலங்கொள் ஞானத் தெலுங்கில் இசைத்ததார்? 15

பதின்மர் ஓதிய பாசுரச் சாரமாய்ப்
பண்பின் ஓங்கும் அறிஞர்க் கமுதமாய்த்
துதிகொள் அட்டப் பிரபந்தம் நல்கிய
தூய அந்தணர் தம்மைப் புரந்ததார்?
மதியின் மாண்பினால் மாயமில் கொள்கையால்
மன்னு பொதிய மலைமுனி நாணுறப்
புதிய செந்தமிழ் ‘நம்பெரு மாள்’ எனப்
புலவர்க் கீந்து வளமுறக் காத்ததார்? 16

மாசி லாதநற் காதல் மதுவினால்
மாண்பு மிக்கொளிர் கற்பின் திறத்தினால்
காசி லாத மதுரா விஜயத்தால்
கணவன் தோள்களில் பூரிப்பைத் தந்ததார்?
தேசம் போற்றிடும் வள்ளுவர் போலவும்
சித்தர் ஒப்பவும், புத்தர் உறழவும்
நேசம் ஓங்கிய பத்தியம் தந்ததார்?
நெஞ்சந் தோறும் இருளைத் தொலைத்ததார்? 17

தேசி கன்பெறு நூற்குரை நல்கிய
தெய்வ மாண்புறு தீட்சிதர் தம்மையும்
மாசி லாச்சிவ லீலார் ணவந்தரு
மாண்பில் ஓங்கிய தீட்சிதர் தம்மையும்
பாச மோடு கனிவிற் புரந்ததார்?
பரத்தின் மாண்புறு காகுத்த வள்ளற்கு
நேசம் ஓங்கும் கலியன் மடல்என
நிகரில் சிற்பம்கொள் கோயில் படைத்ததார்? 18

மூன்று குற்றம் அகற்றிய ஞானிக்கு
முழங்கு வேதப் பெரும்புக ழானுக்கே
ஆன்ற ஞானப் பனுவல் படைத்ததார்?
அவன்றன் மாண்பினில் தன்னைக் கரைத்ததார்?
ஈன்ற தாயெனத் தன்மம் மலர்ந்திட
இணையில் செல்வத்தைப் பங்கிட்டுத் தந்ததார்?
வான்ற ரும்புகழ் இவ்வயின் நாட்டிய
வள்ளுவர்க் கொரு காப்பியம் தந்ததார்? 19

அல்லல் நீக்கிய தென்திரு வேங்கடத்
தருளைத் தேக்கிய நல்லடி வாரத்துச்
செல்லல் நீக்கிய மால்நெறி காத்திட்ட
தேசி கற்கொரு கோட்டம் சமைத்ததார்?
கொல்லல் போக்கும் நெறியை உயிர்ப்பித்த
கோதில் வள்ளலார் தம்மைப் புரந்ததார்?
மல்லர் ஓங்கு சமயம் புரந்திட
மாசில் சந்நிதி நெறியினைத் தந்ததார்? 20

கோவை வாய்ச்சி யிடைச்சி யுருக்கொடு
கோவ லன்றரும் போகம் நுகர்ந்திடப்
பாவை நன்னெறி நல்கிய பாவைக்குப்
பரத்தைத் தொட்டிடும் கோபுரம் தந்ததார்?
நாவை யாட்கொளும் மந்திரிக் கோவையை
நம்பன் சூடிட, அன்புறு வள்ளுவத்
தேவை சால உயர்த்துமுப் பாலெனத்
திட்ப நுட்பங்கொள் கோயில் படைத்ததார்? 21

உறங்கு கின்ற முனிவன் சிரமென
ஒளிரும் தலைமலை மேவிய மாயற்கு
நிறங்க லாவிய தாண்டகம் தந்ததால்
நேயம் ஓங்கும் கெடியினைப் பெற்றதார்?
பிறங்கு சித்தர் சிவப்பிர காசற்குப்
பெரிய நன்மடம் உரிமை யுடனமைத்
தறம்கு லாவக் கழனிகள் தந்ததார்?
அரிய வீர சைவத்தைக் காத்ததார்? 22

மடை

இங்கண் பற்பல் வினாக்கள் தொடுத்திடின்
ஏற்ற நல்ல விடைப்பொருள் ஆனவர்
மங்க லந்தரு கொற்றத் தெலுங்கராம்;
மாண்பி னாலிவர் இங்கு வராவிடின்
பொங்கு தென்னகம் வேறொரு தேசமாய்ப்,
புலிகள் பாம்புகள் மேவும் வனங்களாய்ச்
சங்கை யற்றுத் துயரம் விளைத்திடும்
சரத நான்மறைப் பனுவல் இருக்குமோ? 23

தெள்ளி தாகிய வள்ளுவன் மாக்குறள்,
தேசம் போற்றும் சிலம்பொடு மேகலை,
ஒள்ளி தாய அகம், புறம், நான்மறை,
ஒப்பி லாத திருமுறை, வாய்மொழி,
வள்ளி யோர்புகழ் நல்லிசைச், சிற்பங்கள்,
வளத்தின் மிக்குயர் கோயில்கள் யாவுமே
எள்ள ரும்புகழ்த் தெலுங்கரால் வாழ்வெய்தி
இன்பம் ஓங்க அவர்களை வாழ்த்துமால் 24

வேதம் காத்திட வேள்விகள் காத்திட
வீறு மிக்க சமயத்தைக் காத்திட
போத மோடிங்கு வந்த தெலுங்கரின்
பொலிவு மிக்க மரபு செழித்திட
ஆத வன்னெனத் தோன்றிக் குலப்புகழ்
அன்பிற் புரந்திட்ட நம்சுப்பு ரெட்டியின்
சாத னைக்கு வரம்பில்லை இல்லையே
சால்பின் மிக்கவர் இஃதறி வாரரோ 25

வேறு

பழவிறல் ரெட்டி குலத்தவர் முன்பு
பண்பையும் பொருளையும் ஆழ்ந்த
உழவிடை, விளைத்தார்; முகில்புரி சதிகள்
ஓட்டிய காலவெள் ளத்தால்,
தழைவினை இழந்தார்; துன்பத்தில் உழந்தார்;
தகவுடன் இவர்களால் வாழ்ந்தோர்,
விழைவினை ஒதுக்கித் தூற்றினார்; நன்றி
மெல்லிய அனிச்சப்பூ அன்றோ? 26

சிந்தனைச் செல்வச் செழிப்பினைப் பிறப்பால்
சிறப்பினைப் பெறுசுப்பு ரெட்டிசெம்மல்
சந்தமார் இளமைப் பருவத்தில் வறுமைச்
சலதியின் ஆழத்தைக் கண்டார்;
விந்தையாம் வறுமை இளமையில் பொறுப்பை
வியப்புறத் தந்தது; அதனால்
புந்தியில் சிறிதும் தீநெறி புகுதாப்
பொலிவினைப் பெற்றனர் அம்மா. 27

இந்தளம் தன்னில் தோன்றிய மலர்போல்
இடருறு நம்சுப்பு ரெட்டிசெம்மல்
வந்தது கண்டு மனஞ்சலி யாது
மாண்புடன் வாழ்ந்தனர்; அந்தோ!
தந்தையை இழந்த தனயனை அணைத்துச்
சால்புறு மொழிகளால் தேற்றும்
பந்தமார் சீல அன்னையின் அருளால்
படிப்பினில், அறிவினில் முதிர்ந்தார் 28

நலத்தினை வழங்கும் கலைமகள் பொருட்டா
நவையறு முன்னவர் படைத்த
நிலத்தினை விற்றார்; புலத்தினை விற்றார்;
நிலைபெறு பட்டங்கள் பெற்றார்
சலத்தினைப் புரிந்த ஞாதிகள் பகையைச்
சாதுரி யத்தினால் வென்றார்
குலத்தினுக் கமைந்த ஞானநற் பெயரைக்
குறைவறக் காத்தனர் அம்மா. 29

அடக்கரும் சினத்தால் புல்லிய பகைவர்
அமைவுறு வாழ்க்கையின் நெறியில்
தடைக் கற்கள் இட்டார்; ஐயகோ! அந்தச்
சால்பிலார் நாணுற அதனைப்
படிக்கற்கள் ஆக்கி மென்மெல நடந்து
பாரகத் துயர்ந்தனர்; அந்த
வடக்கினில் இருக்கும் மாலருள் உற்றால்
வாதனை சாதனை யாமால். 30

வேங்கடக் குன்றத் தெம்பிரான் நல்கும்
வித்தக நல்லருட் டிறத்தால்
தீங்கறத் தோங்கும் நம்சுப்பு செம்மல்
செவ்விய கலைவளத் தோடு
பாங்கொடு நூல்கள் படைத்தனர்; கற்றோர்
பண்புறப் போற்றினர்; அற்பர்
வாங்கிடற் கரிய பொறாமையில் வீழ்ந்தார்;
மானுடர் அழுக்காற்றின் வடிவோ? 31

மாறுபா டில்லா இலக்கியம் வரை
மாண்புறும் அறிவியல் வளர
நூறு நூல் தந்தார்; இன்னும் பன்நூல்கள்
நுட்பமாய் வரைந்திட உள்ளார்;
கூறபா டுற்ற அகத்தெழு நினைவுக்
குமிழிகள் உணர்வினில் சமைத்தார்;
தேறுசீர் சான்ற அப்பெரு நூற்குள்
சிந்தனைச் செல்வங்கள் உளவால்! 32

காதலைப் பெற்றும் பொன்னுடல் பெற்றும்
கலைநிறை போகங்கள் பெற்றும்
மாதக வுடைய புத்திரர் இன்றி
வாட்டமுற் றொடுங்கிய ஒருவர்,
ஏதமற் றேங்கும் நல்லறி வருளும்
இல்லற நெறியினைப் பயின்று
போதமார் மழலைச் செல்வங்கள் பெற்றுப்
பொலிகின்றார்; அறிவியல் வாழி! 33

பருவம தறிந்து நன்மழை பொழியும்
பாங்குறு காரென, யாண்டும்
பெருகிய இருளில் வழிதெரி யாது
பேதுறு கலத்தினைக் காக்கும்
துருவமீன் என்னத், தனையடைந் திட்ட
தோமிலா இளையடாக் டருக்குப்
பெருநெறி காட்டும் நம்சுப்பு ரெட்டி
பெருந்தன்மை வாழிய நன்றே. 34

வேறு

செப்பம் மிக்கநம் செம்மலின் நெற்றியில்
திகழும் நீற்றொளி யாண்டும் பரவலால்
ஒப்பற் றோங்கும் வைணவ மார்க்கத்தில்
உலாவி வேங்கட மாலருள் எய்தினார்
துப்புற் றோங்கும் வைணவ ஞானத்தால்
தூய நால்வரின் புனித நெறியினை
இப்பு விக்கண் விளக்கிட வல்லவர்;
இவர்தம் தொண்டு மிகவும் பெரியதால். 35

சிரிக்கச் சிரிப்பு பகருப மானத்தால்
சிந்த னைக்குமெட் டாத பொருளினை
விரித்துக் காட்டித் தெரிவிக்க வல்லவர்;
வெகுளி யோடு பகையினைச் சாடுங்கால்
எரிக்கும் காண்டவத் தீயொப்பர் என்னினும்,
இதயம் மேவும் அமைதியைக் காப்பவர்;
அரிக்கும் வஞ்சம் சற்றும் புகுந்திடா
ஆண்மை மிக்கவர்; பண்புறு வானவர், 36

நாத்தி கஞ்செறி குற்றக் குழுவினுள்
நன்மை கண்டிடில் போற்றிடக் கற்றவர்,
ஆத்தி கந்தனில் புல்லர் புகுத்திய
அற்பப் புன்மையைச் சாடி எதிர்ப்பவர்
காத்தி ருத்தலும் உண்மையை நோக்கலும்,
கவலை யற்று நடுநிலை நிற்றலும்,
பூத்தி ருக்கும் மலரென வாழ்தலும்,
பொலிவு மிக்கநம் ரெட்டி சமயமாம். 37

சத்தி யப்பெரு குன்றினில் மேவிய
சால்பு மிக்கவிஞ் ஞானநற் பார்வையால்
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
ஏற்றம் பெற்றவர்! மாற்றம் இலாதவர்
சித்தி நல்கிடும் இல்லற மார்க்கத்தைச்
செப்பும் போதிவர் வாற்சா யனமுனி,
புத்தி யாலுயர் அணுவை விளக்குங்கால்
பொலிவு மிக்க ஐன்ஸ் டீனும் இவரன்றோ? 38

அண்ணல் மேவிய தெய்வத் தலந்தொறும்
ஆழ்வார் நல்கிய பாசுரக் கண்கொடு
கண்ணன் ஆடலை முற்றும் சுவைத்தவர்:
கனிவி னாலுளத் தெளிவினைப் பெற்றவர்:
பண்ண மைந்த இலக்கியம் யாவையும்
பரிந்து போற்றித் திறங்களை நோக்குவோர்:
எண்ணம் யாவையும் வேங்கட மால்பதத்
தினிதில் வைத்தவர்; முனிவைத் துறந்தவர். 39

ஆடல் வல்லவன் அற்புதக் கூத்தினில்
ஆழங் காற்பட்ட நால்வர் நெறியினைப்
பாடல் சான்ற புலனெறிக் கண்கொடு
பண்பின் நோக்கி உலகியல் மாந்தர்க்கு
நாட கஞ்சேர் வழக்கினில் ஈந்தவர்;
நாலி ரண்டில ஐந்தினைப் பெற்றவர்
வாட வாடப் பரிமளம் உற்றிடும்
வகுள மாலைபோல புகழில் உயர்ந்தவர். 40

செம்பின் மேவும் களிம்பாய் உயிர்தொறும்
சேர்ந்த ஆணவம் நீக்கிடத் தில்லைவாழ்
நம்பி ரானிரு வன்மலம் சேர்த்ததை
நாட்டு சைவ சமய விளக்கினால்
வெம்பு கின்ற உயிர்க்கிடர் நல்கிடும்
வெய்ய தாய இருளை ஒதுக்கியே
நம்பு முத்தி நெறியை அறிந்திடும்
ஞானம் மிக்கவர் ஈனம் தொலைத்தவர். 41

நலம்பொ லிந்திடு நல்லப்ப ரெட்டியின்
குலம்பு ரிந்திடு கோதில் தவப்பயன்;
கனிவு மிக்கநல் காமாட்சி யம்மையின்
இனிய நோன்பில் எழுந்த கலைச்சுடர்;
பாங்குறு கர்ண பால கோத்திரம்
ஓங்குற வந்த உத்தம நம்பி; என்றே
சான்றவர் புகழும் சால்பும் சிறப்பும்
தோன்ற மலர்ந்தவர் தொல்கலை யாய்ந்தார். 42

செப்பமார் தங்கள் குலத்தவர் முன்பு
திருவளர் பாரத சமயம்
ஒப்பிலா தோங்கப் படையுடன் வந்த
உண்மையை மறந்திடா மையினால்
திப்பியம் சான்ற வைணவ சைவச்
சிறப்பினைக் கண்ணினுக் குள்ளே
வைப்பென வைத்துப் புரப்பவர் இவர்தம்
மாண்பினை உலகெலாம் அறிக. 43

மதுமலி துளபத் தாரணி மாயோன்,
மற்றவன் தங்கையாய் உதித்த
விதுமுகக் காமக் கோட்டத்து நங்கை,
விருப்புடன் அவள்கரம் பிடித்துப்
புதுமையாய்ப் பொலிவும் ஏகம்பன் - இவர்கள்
பொலிவுடன் அமர்ந்திட மலர்ந்த
எதுமலை போல விரிந்திடும் உளத்தார்
இருசம யத்தொளி பெற்றார். 44

எள்ளுதற் குரிய சாதிவேற் றுமைகள்,
இடர்செயும் சமயவேற் றுமைகள்
பொள்ளென வருத்தும் வருணவேற் றுமைகள்
புறப்புறத் தேகிட, முற்றுப்
புள்ளியை வைத்த எதுமலைக் கோயில்
புகட்டிய நல்வழி கண்டு
தெள்ளிய ஞானம் பெற்றநம் சுப்பு
தேர்ந்தனர் சமரச ஞானம். 45

நஞ்சையும் அமுதாய் மாற்றுமிச் சமயம்,
நவைகளை இதயமாய்ப் பெற்ற
வஞ்சகர் செருக்கால் இழிவினைப் பெற்று
வாடுதல் கண்டநம் சுப்பு,
செஞ்செவே யாய்ந்து சமரசம் என்னும்
சீரிய மருந்தினை நல்கி,
மஞ்செனக் காத்தார், வேதத்து மரபை
மாண்புறப் பேணினர் அம்மா 46

உலகவா சனையை யறிந்திடா ஞான
உத்தமர் நஞ்சட கோபர்
நலமுறு தெய்வ வாய்மொா யாய்ந்து
நல்லபண் டாரகர் ஆகி
அலகிலாப் புகழைப் பெற்றவர்; சான்றோர்
அருங்கலைக் கோண்எனப் போற்றப்
புலமையை வளர்த்தார்; அருட்சட கோபன்
பொன்னடி எனும்புகழ் உற்றார். 47

புலவீர் !

''உறவினர் தம்மை யுறவினர் புகழ்தல்
உலகத்தின் இயற்கையே'' என்று
திறமுறக் கருதா துண்மையைக் காண்மின்
சகத்துறு புலவர்கள் தங்கள்
அறமமை யுளத்தும் பொறாமையைத் தாக்க
அமைந்தஇக் கலைஞரின் ஒளியை
நிறமுறப் போற்றல் சான்றவர் கடனாம்;
நெஞ்சினைத் திருத்துமின் சற்றே. 48

வேங்கடத் தப்பன் அருளினால், முதுமை
விடை கொள்ள இளமையை அழைக்கும்
பாங்குறும் இந்த அருங்கலைக் கோன்நம்
பாக்கியம் ஒன்றுபட் டதனால்
ஓங்கிய புகழ்சால் **வைணவச் செல்வம்**
உதவினார்; இப்பெரு நூலைத்
தாங்குதல் புலவர் தங்கடன் அதனால்
தத்துவ சரித்திரம் புலனாம். 49

வேறு

வைணவ சமய மாண்பினை இந்நூல்
கைவண நெல்லிக் கனிபோல் காட்டும்
வேதப் பனுவல் யோகக் கண்ணால்
போதக் கண்ட புண்ணிய வடிவம்
முப்புவ னத்தையும் மூவடி கொண்டு
திட்பமாய் அளந்த செஞ்சுடர் என்றும்,
பூரண ஞானிகள் பொலிவுறக் கண்ட
காரண முதல்வன் நாரணன் என்றும்,
சத்தியம் பேசும் சரித்திரம் கண்டது
சித்திசால் வாசு தேவன் என்றும்,
மல்லிகை முல்லை மணங்கமழ் காட்டில்
நல்லியல் வேய்ங்குழல் நலமுற ஏந்திப்
பண்களை விதைத்துப் பத்தியை வளர்த்துக்
கண்களுக் கொளிதரும் கண்ணன் என்றும்,
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
நலமமை ஆழ்வார் நயந்ததே என்று
திறமுற ஆய்ந்து செயமுறக் காட்டும்
வரன்முறை அறிதல் மாண்புடைத் தம்மா. 50

வேறு

நாரணனே உலகமெனும் உடலி னுக்கு
நல்லுயிராய் அமைந்துள்ளான் என்னும் மாண்பைப்
பூரணமார் பிரகதா ரணியம் என்னும்
புனிதநூல் விளக்குவதை இந்நூல் ஓதும். 51

கற்றவர்கள் புகழ்கிரேக்க நாட்டுத் தூதன்
கருடத்தூண் நிறுவியதைப், பத்தி யோடு
பெற்றமிகு பாகவத னாகத் தன்னைப்
பேசுகின்ற தனிமாண்பை இந்நூல் பேசும். 52

பெற்றமிகு பாணினிக்கு விளக்கம் தந்த
பேரறிஞர் பதஞ்சலியார் வாசுதேவன்
நற்றவர்கள் கொண்டாடும் இறைவன் என்று
நவில்கின்ற உண்மையினை இந்நூல் காட்டும். 53

வேறு

மெய்ப்பொருளின் களஞ்சியமாம் பாரதத்தில்
வைணவத்தின் விளக்கம் யாவும்
செப்பமுறப் புகல்வதனை ஆராய்ந்து
மாண்புடனே செப்பம் இந்நூல். 54

நற்றருமம் அகிம்சையுடன் இல்லறத்தை
நடாத்தியதால் நாதன் அங்கு
பெற்றமிகு நரனோடு நாரணனாம்
தனிமாண்பைப் பேசும் இந்நூல் 55

போர்க்களத்தில் நம்பெருமான் கீதையினில்
பேசியது பொலிவு மிக்குச்
சீர்த்தியமை நல்வாசு தேவவழி
பாடென்று செப்பும் இந்நூல். 56

வேறு

வேதம் போற்றிடும் வித்தக நாதனும்,
விரித்த ஆகமம் கணித்த தலைவனும்
போதம் பெற்றுயர் அற்புத மாயனும்
புனித நாரணன் ஆயினன் என்பதை, 57
மங்க லஞ்செறி சத்த பிதியின்கண்
மருவு நல்வழி காட்டும் இறைவனும்,
பொங்கு சீர்த்திகொள் விட்டுணு தேவனும்
புவியில் ஒன்றாய் மலர்ந்த முறைமையை, 58

மறைகள் போற்றிடும் மாண்புறு தெய்வதம்,
மகிழ்வில் ஓங்கிடும் கோபால கிருட்டிணன்,
நிறைவு மிக்கவர் ஒன்றெனக் கண்டுதம்
நேயத் தோங்கி வளர்ந்த புலமையை,

வேறு

தொகுத்தும் விரித்தும் வகுத்தும் இந்நூல்
பகுத்துப் பகுத்துப் பராவி மகிழும். 59

வேறு

வேதமுடன் இதிகாச புராணம் யாவும்
வேள்வியினால் உயிர்உய்யும் வழியைக் காட்டும்;
போதமிகும் ஆகமங்கள் அருச்சை யின்கண்
பூரணன்றன் பதம்எய்தும் வழியைக் காட்டும். 60

சரியையினைக் கிரியையினை யோகம் தன்னைச்
சால்புடைய ஞானத்தை எவரும் காணப்
பரிவுடனே இனிதருளும் ஆக மங்கள்
பாரதத்துப் பண்பாட்டின் மூலம் ஆகும். 61

வித்தகவை கானசத்தைச் சான்றோர் போற்ற
விளங்குபஞ்ச ராத்திரத்தை - இந்நூல் போலப்
பத்தியுடன் விளக்கியநூல் இல்லை இல்லை
பரந்தாமன் இஃதறிவான் உண்மை உண்மை. 62

வேறு

சரித்திரம் கடந்த சமய உண்மையை
சரித்திரக் கையால் தகவுறக் காட்டும்
வித்தகப் புலமையின் விறலை
சத்தியம் அறியும் தமிழும் அறியும். 63

வேறு

பாரதத்தின் சரிதத்தைக் கி.பி. என்னும்
பதமற்ற கஜக்கோலால் அளந்து பார்த்தால்,
பாரதத்துச் சமயத்தைக் கி.மு. என்னும்
பரிவற்ற சங்கிலியால் அளந்து பார்த்தால் 64

வேறு

அல்வழி என்றே யறிந்த கலைக்கோன்
நல்வழி பற்றி நற்பொருள் கண்டனர். 65

வேறு

மாயோன் வழிபாடே மண்ணுலகில் வைணவமாய்ச்
சால உயர்ந்த தகவை விரித்திசைத்தும்,
பழந்தமிழர் கண்ட பரம் பொருளை நன்றாய்
அளந்தறிந்த மாண்பே அறிவின் விருந்தாம்;
உள்ள தொருபொருளே ஓரா யிரமாக
விள்ளவரும் உண்மை விளங்கப் பகர்ந்தருளும்
சத்திய ஞான சமரசத்தை ஆசிரியர்
வித்தகமாய் இங்கே விரித்திசைத்தார்; வாழ்வுற்றோம். 66

வேறு

மேற்கணக்கின் இதயமாம் பரிபாட லின்கண்
மேலாய கீழ்க்கணக்கின் முடிமணியாம் குறளில்
பாற்பட்ட சான்றோர்கள் மாயவனின் மாண்பைப்
பரிந்திசைத்தார் ஞானமெலாம் தெரிந்துய்ந்த தம்மா. 67

கச்சிநகர் தனில்மேவும் திருவெஃகா, மாயோன்
கனிவுடனே அறிதுயில்கொள் திருவரங்கம், என்றும்
நற்றவருக் கொளியருளும் இருந்தையூர், யாவும்
நயந்துரைத்தார்; சான்றவர்கள் வியந்து மகிழ்ந் திட்டார் 68

வாழ்வருளும் நற்றிணையில் மாயவன்வாழ்த் தாக
வாய்ந்தகவி திருமங்கை யாழவார்தம் பாட்டில்
நிழலிட்டுப் பொலிவதனைக் காட்டுகின்றார், சான்றோர்
நிகரற்ற புலமைக்குத் தலைவணக்கம் செய்வார். 69

வேறு

தாமரை மலர்க்குத் திருவடி மலரால்
தகவுறு நன்மையை வழங்கும்
பூமகள் மணாளன் திருவருட் சமயம்
பொலிவுறு தத்துவம் வழங்கி
மாமறை முடிவில் மேவிய ஞான
வழக்கினை உலகிற்கு நல்கித்
தோமறு மாய இருளினை யோட்டித்
துலங்கலை இந்தநூல் விளக்கும். 70

கருமத்தை ஞானப் பொலிவினை உறுப்பாய்க்
கண்டிட்ட புனிதநற் பத்தி
மருமத்தை உணர்த்தி, அதன்சிர மத்தை
மாண்புறும் உளந்தொறும் வித்தி
பெருமையால் எளிய பண்பினால் யார்க்கும்
பீடுறு முத்தியை வழங்கும்
அருமையார் தூய பிரபத்தி தன்னை
அமைவுற இந்தநூல் விளக்கும். 71

சருக்கரை தன்னால் புனைந்தபொம் மைக்குச்
சால்பருள் கரும்புவில் போலத்
திருக்கிளர் ஞான மேவடி வாகத்
திகழ்ந்திடும் நுண்ணிய ஆன்மா
உருக்கொளும் புனித தருமபூ தத்தால்
ஒளியினை மிகமிகப் பெற்றுப்
பெருக்குறும் பண்பால் இருளினை யோட்டிப்
பிறங்கலை இந்தநூல் விளக்கும். 72

நலம்செறி அரங்கன் கோவிலில் புனித
நயந்தரு மார்கழி மதியில்,
துலங்குறு ஞான வாய்மொழி முதலாம்
தூயநற் பழந்தமிழ் மறைக்குப்
புலங்கிளர் பெரிய உற்சவம் கண்டு
பொலிவுறு சமயத்தை வளர்த்து,
நிலந்தரு புகழ்கொள் ''பெரியவர்'' இதய
நெறியினை இந்தநூல் விளக்கும். 73

மூன்றுகோல் ஏந்தி ஐந்துகோல் வென்ற
முனிவரன் யதிபதி முடியால்,
சான்றவர் இதய மலருறும் அடியால்,
சால்புறு பெரியவர் தம்மைத்
தோன்றுசீர் சான்று வைணவம் வளர்க்கத்
துலங்குகால் வாயெனப் பரந்து
வான்றரும் புகழ்கொள் அரியணைச் செல்வர்
மாண்பினை இந்தநூல் விளக்கும். 74

திட்பமாய், அறிவாய், அடிமையாய், வினையின்
சிமிழ்ப்பினால் விபுத்துவம் இழந்து
நுட்பமார் அணுவாம் நல்லுயிர்த் திரளை,
நூற்றொரு கோடிமேல் விரிந்து
பெட்புறும் உலகாய் விரிபகு தியினைப்,
பிறப்பறுந் தருளிறை யவனை,
நட்புறக் காட்டும் இந்தநூல் தமிழர்
தற்றவப் பயனென அறிந்தேன். 75

வையக மாந்தர் குருட்டினைப் போக்கி
வளமுறு ஞானக்கண் நல்கிப்
பொய்யுறும் இருளைத் தொலைத்துயிர்க் கருளை
புரிந்திடும் திருமகல் அருளால்
ஐயனை அடையும் நன்னெறி காட்டும்
அற்புத நலம்செறி இந்நூல்
மையறு புகழ்சால் எதிபதி முக்கோல்
மகிழ்தவப் பயனென அறிந்தேன். 76

நிறைவுறும் மூலப் பகுதியை, ஞான
நேயமார் உயிர்ப்பெரும் திரளை
குறைவரும் உடலாய்க் கொண்டஅப் பிரம்மம்,
கோதிலாக் காய்கனி பெற்று
நறையுறு தருவே எனும்உண்மை பகரும்
நலமமை ஞானமார் இந்நூல்
பொறைவடி வாய பிரபந்தம் முன்பு
புரிதவப் பயனென உணர்ந்தேன். 77

கருணையே வடிவாம் எதிபதி, ஞானக்
களஞ்சிய தேசிகன், புல்லர்
மருணெறி போக்கும் வரமுனி. இவர்கள்
வளர்த்திட்ட நல்லறம் வளரத்
தெருணிறை கின்ற **வைணவச் செல்வம்**
திருவுருக் கொண்டதை அறிந்தேன்
இருளினைத் தகர்த்தேன்; என்றினி திசைப்பர்
இப்பெரு நூலுணர் புலவர். 78

பங்கமில் புகழான் எதிபதி கண்ட
பண்புறு தத்துவத் தினுக்குத்
துங்கமார் மூலம், வேதமே என்னும்
துணிவினை இந்தநூல் போல
மங்கலமாகப் பகர்ந்தநூல் இந்த
மாண்புறு தமிழகத் தில்லை
இங்கிதைப் பயின்றேன் ஒளியுற்றேன் என்பர்
இலங்குமிந் நூலுணர் புலவர். 79

பரத்துவம் முதலாம் ஐவகை நிலையைப்
பாங்குறத் தெரிந்தனம்; உயிரின்
தரத்தினை உயர்த்தும் பிரபத்தி நெறியைத்
தகவுறத் தெரிந்தனம்; தெய்வ
வரத்தினை வழங்கும் மந்திர நெறியின்
மாண்பினை உணர்ந்தனம்; அதனால்
சிரத்தினில் ஏற்கத் தக்கதென் னுரைப்பர்
திருந்துமின் நூலுணர்ப் புலவர். 80

உலகதத் துவங்கள் அனைத்தையும் படியாய்
உவப்பக் கொண்ட இப் பெருநூல்
கலைகளை அளக்கும் பொற்படி என்றும்,
கலிமறை இதயமே என்றும்,
மலர்முகத் திருவின் களத்தினில் மேவும்
மங்கள சூத்திரம் என்றும்
பலர்பல வாறாய்ப் புகலுவர் யானோ
பாரத தீபமே தென்பேன். 81

இதுவரை எவர்க்கும் புலப்படா திருந்த
இறைநிலை, உயிர்நிலை, மயக்கும்
மதுவினை வழங்கும் தடைநிலை, அதனை
மாய்த்திடும் அருள்நிலை, ஞானப்
புதுமைசேர் வீட்டின் பெருநிலை யாவும்
புகல்வதால் இப்பெரு நன்னூல்
பதுமையின் அருளால் புவியினில் உதித்த
பாரத தீபமே தென்பேன். 82

சாத்திரப் புலமை வேதத்தில் புலமை
தகவுறு காப்பியப் புலமை
தோத்திரப் புலமை பெற்றனம்; இனிமேல்
துன்பத்தில் ஆழ்ந்திடேம்; குன்றா
நாத்திரம் பெற்றேம்; இனியொரு போதும்
நாத்திகத் திழித்திடேம் - எனச்சொல்
பாத்திரம் யாண்டும் படைக்குமிப் பெருநூல்
பாரத தீபமே என்பேன். 83

மலர்தொறும் சென்று மகரந்தம் சுமந்து
மாண்புறு தேனிறால் எடுக்கும்
நலமமை சுரும்பும், கடல்தொறும் சென்று
நற்புனல் வாங்கிடும் முகிலும்,
உலகுகள் தோறும் சென்றுபல் லுடம்பால்
ஒப்பிலா அனுபவம் ஈட்டும்
புலமுறும் உயிரும், பெற்றிடும் முயற்சிப்
பொலிவினை இந்தநூல் காட்டும். 84

பொற்புறும் குடந்தைப் பதிவயின் இராமன்
பொலிவுறு கோவிலின் மேவும்
சிற்பத்து நளின மாண்பினை, ஞானச்
சிதம்பரக் கோபுரத் துயர்வை,
நற்புகழ் அண்ணா மலைரெட்டி எடுத்த
நாயகன் கோவிலின் வனப்பை
அற்புதம் மேவும் வைணவச் செல்வத்
தறிபவர்; தமிழநலம் காண்பார். 85

செவ்விய தியாக ராசரின் ஞானச்
சிறப்புறு கீர்த்தனை மேவி
இவ்வயின் புகழ்கொள் மோகனம், சாமா
இணைஇலாத் தேவகாந் தாரி,
பவ்வநேர் தர்பார், பைரவி, தோடிப்
பண்பெலாம் **வைணவச் செல்வம்**
மவ்வலின் மணம்போல் நம்முளத் தருளும்
மாண்புறும் இதயமீ துணரும். 86

மட்டறு புகழ்சால் **வைணவச் செல்வம்**
மாண்புற நாடொறும் வழங்கும்
வட்டியால் உலக வாழ்வினில் இன்ப
வளங்களை எய்தலாம்: முதலால்,
கட்டறு ஞான வளங்களை மலர்த்தும்
கண்ணிய வீட்டினைப் பெறலாம்;
நட்டமே இல்லை இப்பெரும் செல்வம்
நாடொறும் வளர்த்திடும், புலவீர்! 87

தத்துவம் ஒருபால் ஒளிவிடும்; ஞானச்
சரோருகம் ஒருபக்கம் மலரும்;
வித்தகப் பத்தி ஒருபுறத் திலங்கும்;
வேதமோ யாங்கணும் துலங்கும்;
சத்தியம் ஞானக் கோவினை ஏந்தித்
தந்ததே இந்தநூல் என்று
பத்தியின் மிக்க சான்றவர் உணர்வர்;
படைத்தவர் வாழிபல் லூழி. 88

ஆரணம் போற்றும் **வைணவச் செல்வம்**
அமைந்திடும் கோவிலம் நூற்குத்
''தோரண வாயில்'' அமைத்தனன் ஞானச்
சுந்தரக் கம்பனின் அடிமை;
தாரணிக் கீந்து சமயமே ஞானச்
சாந்தியை வழங்குமென் றுணர்ந்தோன்
பூரண ஞானக் கம்பரா மப்பேர்ப்
புண்ணியன், பாவல ரேறே. 89

ISBN 978-81-932327-7-4
9 788193 232774 >

நூற்றாண்டு வெளியீடு

பேராசிரியரின்

தலைசிறந்த படைப்புகள்

1916 2016

RELIGION AND PHILOSOPHY OF
NAALAAYIRAM
WITH SPECIAL REFERENCE TO
NAMMALVAR

தமிழ் பயிற்றும் முறை
கல்வி உளவியல் கோட்பாடுகள்
வைணவச் செல்வம்

Briefing the Masterpieces of

Prof Dr N Subbu Reddiar

____

பேராசிரியர் இராசு மைனர்
தொகுப்பாசிரியர்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

பேராசிரியரின்

தலைசிறந்த படைப்புகள்

பேராசிரியர் இராசு மைனர்
தொகுப்பாசிரியர்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பேராசிரியரின்

தலைசிறந்த படைப்புகள்

[Collection of Masterpieces]

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-932327-9-8

9 788193 232798 >

Printed at:

JP Printers, Chennai – 600 095

DEDICATION

Dedicated to:

साहित्य अकादेमी
SAHITYA AKADEMI
National Academy of Letters

"India's national academy of letters committed for promoting Indian Literature"

"Art begins with resistance - at the point where resistance is overcome. No human masterpiece has ever been created without great labor."
<< Andre Gide

தொகுப்புரை

பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் இளம் வயதில் தந்தையை இழந்தாலும், தன் கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் கல்வித்துறையில் உயர் பதவிகள் வகித்து வளர்ந்தவர். எல்லாத்துறைகளிலும் தம் எழுத்துப்பணியால் பல நூல்களை யாத்திருப்பது இவரது அரிய சாதனையாகும். இவர் 90 ஆண்டுகள் வாழ்ந்து 135 நூல்களை எழுதி தமிழுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து ஆய்வுப் பார்வையில் ஆழங்கால் பட்டவர்.

இவரது படைப்புகளில் மிகச்சிறந்த நான்கு நூல்களை (நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம், தமிழ் பயிற்றும் முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள், வைணவச்செல்வம்) தொகுத்து 'தலை சிறந்த படைப்புகள்' எனும் தலைப்பில் வெளிக்கொணர்வது மேன்மேலும் தரத்தை உயர்த்துகிறது.

'நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம்'

முதல் நூலாகிய 'நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம்' [*Religion and Philosophy of Nalayira Divya Prabhandham with special reference to Nammalvar*] எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டத்தைப் பெற்று இருப்பது இவரது உழைப்பினைப் பறைசாற்றுகின்றது. இதனுள் திகழும் திருப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் செவிக்கினிய சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

இந்நூல் ஆறு இயல்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. முதல் இயலில் நம்மாழ்வாரின் தத்துவமும், மதகோட்பாடுகளும் குறித்துத் தொகுத்துரைக்கப்பெற்றுள்ளன. இரண்டாம் இயலில் வேத காலத்திலிருந்து ஆழ்வார்களின் முற்பட்ட காலத்தைப் பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ளது. மூன்றாம் இயலில் நாலாயிரம் பற்றிய ஆய்வு குறித்து செய்ய வேண்டிய முதற்கட்ட ஆயத்தப்பணிகள் விளக்கப்பெற்றுள்ளன. நான்காம் இயலில் நம்மாழ்வாரின் தத்துவங்களை முதன்மையாக எடுத்துக் கொண்டு தன் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். ஐந்தாம் இயலில் ஆழ்வார்களுக்குப் பிற்பட்ட காலத்தின் கருத்துக்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. ஆறாவது இயலில் நம்மாழ்வாரின் தத்துவ மதக்கருத்துக்கள் பற்றிய ஆய்வின் முடிவுரைகளைச் செம்மைப்படுத்தியுள்ளார்.

இந்நூலுக்கு பீகார் மாநிலம் முன்னாள் ஆளுநர் டாக்டர் M அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் அணிந்தரை எழுதிச் சிறப்பித்துள்ளார். மேலும் இந்நூல் இந்திய முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் இராதாக்கிருஷ்ணன் அவர்களுக்கு அன்புப்படையலாக அளித்திருப்பது ரெட்டியார் அவர்மீது கொண்ட அன்பாகும்.

தமிழ் பயிற்று முறை

தமிழ் மொழியின் இன்றியமையாமையை எல்லா துறைகளில் உள்ளவர்களும் உணர்ந்து வருகின்றனர். தாய்மொழி, தம் கருத்துகளைப் பிறருக்கு எடுத்து உரைப்பதற்கும் பிறர் கூறும்

கருத்துக்களைக் கேட்பதற்கும் பயன்படுகின்றது. தாய்மொழியில் தெளிவாகப் பேசவும் பிழையில்லாமல் எழுதவும் ஆற்றல் பெற வேண்டும். பிற பாட ஆசிரியர்களும் தமிழ் மொழியில் கற்பிக்க வேண்டும் எனக் கூறியிருப்பது போற்றுதற்குரியதாக அமைகிறது.

இந் நூல் தமிழ்ப்பயிற்று முறையைக் கூறுகிறது. இது ஒன்பது ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் எட்டு ஆண்டுகள் பி.டி. மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்த அனுபவத்தைக் கொண்டும் எழுதப் பெற்றதாக டாக்டர் சுப்பு ரெட்டியர் குறிப்பிடுகிறார். மேலும் இந்நூலில் குறிப்பிட்டுள்ள பல கருத்துகளையும் நன்கு சிந்தித்து நடைமுறையில் செயலுக்குச் கொண்டு வந்தால் மாணாக்கர்களிடம் தமிழ்மொழி அறிவு நன்முறையில் அமைவது உறுதி எனக் குறிப்பிடுவது பாராட்டுதற்குரியது.

இந்நூல் 17 இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் இயலில் தமிழ் கற்பிப்பதன் நோக்கங்கள் பற்றியும் இரண்டாவது இயலில் பாடத்திட்டங்கள் பற்றியும் மூன்று முதல் ஆறு வரையுள்ள இயல்களில் பயிற்றுவதற்கு மேற்கொள்ளப் பெறும் பல்வேறு முறைகளைப் பற்றியும் விளக்கப்பெற்றள்ளன. 7 முதல் 12 முடிவுள்ள இயல்களில் தமிழாசிரியர்கள் நடைமுறையில் எதைக் கையாளுவது என்பது பற்றியும் 13வது இயலில் மாணாக்கர்களிடம் நல்ல கையெழுத்து அமைவது பற்றியும் சில கருத்துகள் தெரிவிக்கப் பெற்றுள்ளன. பதினான்காவது இயலில் தமிழாசிரியர்கள் தம் பணியைத் திறமையுடன் ஆற்றுவது பற்றியும், பதினைந்தாவது இயலில் துணைப்பாட நூல்களைப் பயிற்றும் முறைகள் பற்றியும் விளக்கப் பெற்றுள்ளன. மொழி அறிவையும் இலக்கிய அறிவையும் பெற பதினாறாவது இயல் விளக்குகிறது. பதினேழாவது இயல் தாய்மொழி ஆசிரியர்களின் தகுதி, பொறுப்பு முதலியவற்றைத் தெளிவுபடுத்துகிறது.

அழகப்பா பயிற்சிக் கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. ப. துரைக்கண்ணு அவர்களும் பேராசிரியர் எஸ். திருவேங்கடாச்சாரி அவர்களும் இந்நூல் எழுதுவதற்கு உறுதணையாக இருந்தார்கள். மேலும் இந்நூலுக்கு திரு.வேங்கடாச்சாரியார் அவர்களின் ஆங்கில அணிந்துரை அணி செய்கின்றது. முன்னாள் கல்வி அமைச்சர் திரு.தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி இருப்பது மகிழ்ச்சியைச் தருகிறது.

இளம் வயதிலேயே தந்தையை இழந்த டாக்டர் சுப்பு ரெட்டியாருக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வளர்த்த அன்னை திருமதி காமாட்சி அவர்களுக்குத் தமிழ் பயிற்றும் முறை நூலை அன்புப்படையலாகப் படைத்திருப்பது சாலச் சிறந்ததே ஆகும்.

கல்வி உளவியல் கோட்பாடுகள்

மனிதன் கருவறையில் பிறந்தது முதல் கல்லறைக்குப் போகும் வரை பலவிதமான வளர்ச்சிகள் நடைபெறுகின்றன. மனிதன் தன் வாழ்வில் அறிந்து கொள்ள வேண்டிய சில உளவியல் கருத்துகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. உடல் நலத்திற்கு அறிவு இன்றியமையாதது போல் உள்ளம் நலத்திற்கு உளவியல் அறிவு இன்றியமையாதது.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார், கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற இந்த நூல் ஆசிரியர்கட்கும் பெற்றோர்கட்கும் பொதுமக்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமையட்டும் என்று குறிப்பிடுகின்றார். இந்நூல் குழந்தையின் ஒழுக்க வளர்ச்சி, அறிதிறன் பற்றிய கருத்துக்கள், பருவங்களில் மன வளர்ச்சி ஆகிய கருத்துகள் தெளிவாக விளக்குகின்றது. இந்நூல் பதின் மூன்று தலைப்புகளைக் கொண்டது. முதல் இயலில் இயற்பியல் சூழ்நிலைக்கும் சமூக சூழ்நிலைக்கும் பொருத்தம் அடைவது என்பது பற்றியும் இரண்டாவது இயலில் மாணாக்கர்களின் பல்வேறு ஆளுமை கோலங்கள் பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கப்பெறுகின்றன. குழந்தையின் வளர்ச்சியை மூன்றாவது இயலிலும் முதிர்ச்சிக்கும் கற்றலுக்கும் இடையே நடைபெறும் இடைவினை, உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவு ஆகியவை நான்காவது இயலிலும் அடங்கியுள்ளன. கல்வியில் விளையாட்டு முறை, ஊக்குநிலை, உள்ளக்கிளர்ச்சிகள் ஆகியன ஐந்தாவது இயலிலும் கற்றலுக்கு இன்றியமையாத நிலைமைகள், கற்றல் விதிகள், அனுபவத்தின் மூலம் கல்வி ஆகியன ஆறாவது இயலிலும் விளக்கப்பெறுகின்றன. 7, 8, 9, 10 ஆகிய இயல்களில் கற்பனை, சிந்தனை, ஒழுக்கம், உடல்நலம் பேணுதல் ஆகியவை கூறப்பட்டுள்ளதால் அவை கருத்துத் தெளிவிற்கு வழிவகுக்கின்றன. 11வது இயலில் மாணவர்களை அன்புடன் கவனித்து அவர்களின் குறைகளை நீக்கியும் ஒழுக்க வளர்ச்சி பற்றி விளக்கி இருப்பதும் பொருத்தமாக அமைகிறது. 12வது இயலில் மதிப்பிடுதல், சரி-தவறு சோதனைகள், கட்டுரைச் சோதனைகள் ஆகியன நடத்தி மாணவர்களைக் கொடுமைப் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார். ஆசிரியரின் முக்கியத்துவத்தை 13வது இயல் எடுத்து இயம்புகிறது.

இந்நூலுக்கு சைதையிலுள்ள ஆசிரியர்க் கல்லூரியில் முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவரும் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்களின் நண்பருமான திரு.கே.ஆர்.மாணிக்கம் அவர்கள் அணிந்துரை வழங்கியதால் இந்நூல் மேலும் பெருமையுறுகிறது. ரெட்டியாரின் உளவியல் பேராசிரியர் திரு.குருசாமி ரெட்டியார் மீது கொண்ட பற்றுதலால் இந்நூலை அன்புப் படையலாக்கி மகிழ்வதாகக் குறிப்பிடுகின்றார்.

வைணவச் செல்வம்

தமிழ் மண்ணில் வைணவத்தை வளர்த்த பெருமை ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் சாரும். வைணவச் சமய கோட்பாடுகளை ஆராய்ந்து சுருக்கமாகத் தொகுத்து வைணவச் செல்வம் என்னும் ஒரு நூலாக வழங்கியிருப்பது மிகவும் செம்மையாக உள்ளது. இந்நூல் 15 இயல்களைக் கொண்டது. முதல் இயல் வரலாற்று முறையில் வைணவம் என்ற தலைப்பில் விளங்குகிறது. பரம்பொருள் ஒன்றே மக்கள் பல பெயர்களில் பல கடவுள்களும் பலவாக அமைந்துள்ளன என்று ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். இரண்டாம் இயலில் பண்டைத் தமிழ் நூல்களில் நிலங்கள் ஐந்து என்றும் முல்லை நிலக்கடவுள் மாயோன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் இயல் வைணவத்தின் தத்துவங்களை எளிய முறையில் விளக்குகிறது. நான்காம் இயலில் திருமந்திரம், துவயம், சரமசுயோகம் ஆகிய மூன்று மந்திரங்களின் ஆழமான கருத்துகளைத் தெளிவாக அளித்துள்ளார். ஐந்தாம் இயல் வைணவ இரகசிய கிரந்தங்களில் கூறப்பட்டுள்ள விசிஷ்டாத்வைத வைணவக் கருத்துகளைத் தெரிவிக்கிறது. வைணவ இலக்கியங்களைப் பற்றிய குறிப்புகள் ஆறாவது இயலில்

விளக்கப்பெற்றுள்ளன. தமிழ்ப்புலமையும் திவ்வியப் பிரபந்த உரைகளையும் வல்லார் வாய்கேட்டு உணர்ந்த அறிவும் துணையாக நிற்க இப்பகுதி விரிவாக அமைந்துள்ளது. வைணவம் பரப்ப இராமாநுசரால் ஏற்படுத்தப்பட்ட 74 சிம்மாசனாதிபதிகள், இன்று வைணவம் வளர்க்கும் மடங்கள் ஆகியவை எட்டாவது இயலில் இடம் பெறுகின்றன. வைகுண்ட ஏகாதசியை ஒட்டி ஆழ்வார்களின் பாசுரங்களை வைணவ ஆலயங்களில் இசைப்பட பாடியது ஒன்பதாம் இயலில் சுவைபடக் கூறப்பெற்றுள்ளது.

வைணவத் திருத்தலங்கள், புராணத் தலங்கள் திருக்கோயில் வழிபாட்டு முறைகள் பற்றிய விவரங்கள் அனைத்தும் 10, 11, 12, 13ம் இயல்களில் கோர்வையாக விவரிக்கப்பெற்றுள்ளன. வைணவத்தின் சிறப்பு இயல்புகள் பதினான்காவது இயலில் தெரிவிக்கப்பெற்றுள்ளன. வைணவக்கருத்துகள் நாடெங்கிலும் பரவின என்பது மட்டுமல்லாமல் கிறித்துவம், இஸ்லாம் ஆகிய சமயங்களிலும் வைணவ நெறியின் தாக்கம் ஏற்பட்டது என்பதை 15ம் இயலில் கூறி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலுக்குச் சொல்வேந்தர் ஔவை நடராசன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் வாழ்த்துரை வழங்கியதால் மேலும் சிறப்பூட்டுவதாக அமைந்துள்ளது. வைணவச் செல்வர், தமிழ்க்கடல் எஸ்.கே. இராமராசன் அளித்துள்ள சிறப்புப் பாயிரப் பாமாலை, வைணவச் சீலர் பேராசிரியர் டாக்டர் யு.ஏ. ரங்காச்சாரி அருளியுள்ள அணிந்துரை ஆகியவற்றால் இந்நூல் மேலும் பெருமையுறுகின்றது. இந்நூலைக் கொடைவள்ளல், வைண வேந்தர் கோட்டூர் அரங்கநாத முதலியார் அவர்களுக்கு அன்புப் படையலாக்கிக் காணிக்கை ஆக்குகின்றார். பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் கடின உழைப்பாலும் முயற்சியாலும் பல்வேறு அரிய கருத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் இந்நூலில் கூறியுள்ளார். இந்நூல் தமிழ் மக்களுக்கும், வைணவத்தைத் தேனாக அள்ளிப் பருகும் தமிழ் நெஞ்சங்களுக்கும் பெரும் பயன் தருவதாக அமைந்துள்ளது.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றாலும் ஓயாமல் தமிழ்ப்பணி புரிந்துள்ளார். அவரது புலமைக்கு அரசின் அங்கீகாரமும் விருதும் கிடைத்தது நினைந்து மகிழ்ந்து போற்றதற்குரியதாகும். இந்நூல்களை உருவாக்கிய டாக்டர் சுப்பு ரெட்டியார்க்கு என் இனிய பாராட்டுகள். தமிழ் உலகம் உள்ளவரை இவரைப் போற்றட்டும்.

பேராசிரியர் இராசு மைனர்
தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர்
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
பல்கலைக்கழகம்
சென்னை – 600 095

அணிந்துரை

இரவெல்லாம் பனித்தென்றல் அரவணைப்பில் திளைத்த இலைகளும், மலர்களும் அதிகாலையில் உதிர்க்கும் ஆனந்த கண்ணீரே பனித்துளிகளாகும். இதனையொத்த கவித்திறனையும், கருத்தியலையும் வெளிக்கொணர்ந்து போற்றிட்ட தலை சிறந்த பல்முனைத் தமிழ் ஆர்வலர் பேரா. ந. சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகள் அரிதிலும் அரியவையாகும்.

தமிழன்னையை அலங்கரிக்கும் அகநானூறு, புறத்திற்கு புறநானூறு, எட்டுத்தொகை அவள் ஒட்டியாணம், இத்துனை நகைதனை அணிந்திருந்தும் சிரம் தாழ்ந்தே வீற்றிருந்த அவளது வதனத்தில் புன்னகை இல்லை, பேரா. சுப்புரெட்டியாரின் தமிழ்க்கடல் அலை அவளது மேனியைத் தொடும் வரை.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியர் அவர்கள் 90 ஆண்டு வாழ்ந்து, 135 நூல்களைத் தமிழுலகத்திற்கு வழங்கியிருப்பதுவே ஒரு சாதனையாகும். 60 வயதில், பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 100 நூல்களை அவர் எழுதியிருக்கிறார் என்பது, கின்னஸ் சாதனை எனப் போற்றுதலுக்குரியதாக அமைகிறது.

சமயம், தத்துவம், கல்வியியல், உளவியல், அறிவியல், இலக்கியத்திறன், பயண இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்திருப்பதால், பேராசிரியர் தொடாத துறையெதுவும் இல்லை என்பது தெளிவாகிறது.

1949ல் தமது 33வது வயதில், "கவிஞன் உள்ளம்" எனும் முதலாவது நூலை வெளியிட்ட பேராசிரியர் ரெட்டியார், 88 வயது வரை எழுத்துப் பணியில் ஆழங்கால்பட்டு நூல்களை வடித்திருப்பது இமாலய சாதனை என்பதில் ஐயமில்லை.

அன்னாரின் நூல்களில், தலைசிறந்த நான்கு படைப்புகளைத் தனித்தொகுதியாக வெளியிடுவது பாராட்டுக்குரியது. இதற்காக, பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழாக் குழுவினரை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

"நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம்" [*Religion and Philosophy of Nalayira Divya Prabhandham with special reference to Nammalvar*] - ஆழ்வார்களின் காலம் பற்றியும், அவர்கள் அருளிய பாசுரங்கள் புலப்படுத்தி நிற்கும் சமய, தத்துவக் கருத்துகள் பற்றியும் இந்நூல் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் பல்வேறு கூறுகளை, 14 அத்தியாங்களில், ஆசிரியர் விரிவாக ஆராய்ந்திருப்பது பாராட்டத்தக்கது. நூலுக்குப் பெருமை சேர்த்து, மணிமகுடமாகவும் இந்தப் பகுதி அமைகிறது.

ஆழ்வார்கள் காலத்திற்கு முன்பு பேசப்படாத ஒன்று சரணாகதி தத்துவம். இது, நாலாயிரத்தில் சிறப்பிடம் பெற்றிருக்கும் பாங்கினை ரெட்டியார் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

இந்த ஆய்வுக்காக அவர் பயன்படுத்திய ஆங்கில, தமிழ், வடமொழி சுவடிகள் ஆகியவற்றின் பட்டியலைப் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. அடிக்குறிப்புகளைக் காணும்போது, மேலும் பிரமிப்பு உண்டாகின்றது.

சுருங்கக்கூறின், பேராசிரியரின் கடும் உழைப்புக்கு இந்த நூல் சான்றாக அமைகிறது என்று தயக்கமின்றி முடிவுசெய்யலாம்.

"தமிழ் பயிற்றும் முறை" எனும் நூல், இன்றுவரை கல்வியியல் துறையில் ஒளிரும் நூலாகும். பேராசிரியரின் புகழ்பாடும் நூல் இது.

"உளவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, மேற்புல அறிஞர்கள் கண்டறிந்த பயிற்றுரைகளை மொழியின் மரபு கெடாது அ(எ)ந்தந்த அளவில் நந்தமிழ் மொழியைக் கற்பிப்பதில் மேற்கொள்ளலாம் என்பதை ஓரளவு ஆராய்ந்துள்ளேன்" என்று இந்நூலின் நோக்கத்தை அவர் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகிறார்.

தமிழ் மொழியைப் பயிற்றும் நோக்கங்கள் எனும் அத்தியாயத்தில், இலக்கிய நயங்கண்டு இன்புறல், கற்பனையாற்றலையும், முருகுணர்ச்சியையும் வளர்த்தல், வாழ்க்கையை வளப்படுத்தி நீதிகளைப் புகட்டுதல் ஆகியவற்றை ஆசிரியர் விரிவாக, உள்ளத்தில் பதியுமாறு கூறிச் செல்கிறார்.

பயிற்று முறைகள், பயிற்றலின் உத்திகள் ஆகியவற்றை அனுபவத்தின் வழி நின்று பேராசிரியர் எடுத்துரைக்கிறார். இலக்கியம், இலக்கணம் பற்றியும், அவற்றை மாணவர்க்குப் பயிற்றுவிக்கும் முறை பற்றியும் விரித்தோதுகிறார்.

முத்தாய்ப்பாக, தாய்மொழி, ஆசிரியனின் இலக்கணம், அவனது கல்வியறிவு - மொழியறிவு - மொழிப்பற்று பற்றிய தமது கருத்துகளை நடுநிலை நின்று பேராசிரியர் ரெட்டியார் அலசி ஆராய்ந்திருக்கிறார். பேராசிரியரின் தலைசிறந்த படைப்புகளில் தமிழ் பயிற்றும் முறை தனியிடம் பெறுகிறது என்று கூறலாம்.

"கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், குழந்தைக் கல்வியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கட்கும் பொதுமக்கட்கும் ஒரு வழிகாட்டியாக அமையட்டும் என்றே கல்வி உளவியல் கோட்பாடுகள் எனும் நூலை எழுதியிருப்பதாக முன்னுரையில் பேராசிரியர் ரெட்டியார் கூறுகிறார். இந்நூலானது, இந்தக் குறிக்கோளைச் சீரிய முறையில் நிறைவேற்றியிருப்பதாக அறுதியிட்டுக் கூறலாம்.

பதின்மூன்று தலைப்புகளை உள்ளடக்கிய இந்நூலில், கல்வி உளவியல் குறித்து ஆசிரியர் விரிவாகப் பேசுகிறார். கற்றல், கற்றலில் அடங்கிய மூலக்கூறுகள் எனும் இரு அத்தியாயங்களும், கற்றலின் அடிப்படை இயல்புகளைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. மதிப்பீடும் சோதனையும் எனும் தலைப்பில், கட்டுரைச் சோதனைகள், புதிய முறைச் சோதனைகள், சரி-தவறு சோதனைகள், பல்விடையிற் பொருத்துச் சோதனைகள், நிரப்பும் சோதனைகள், இணைக்கும் சோதனைகள், இனச் சோதனைகள், ஒப்பிட்டுக் காட்டும் சோதனைகள் எனப் பல்வேறு சோதனைகள் குறித்து, படிப்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு விவரித்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

வைணவச் செல்வம் (இரு தொகுதிகள்) நூலானது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய திட்டப்பணியின் நூல் வடிவமாகும். வைணவத்தில் ஆழங்கால்பட்டவர் எனும் நிலையில் அவர்தம் உழைப்பின் மிகுதியை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படுகிறது.

இந்நூலில், வரலாற்று முறையில் வைணவம் எனும் தலைப்பில், மானிட வாழ்வில் சமயம் பின்னிக் கிடக்கும் பாங்கினை, தமக்கே உரிய வகையில் பேராசிரியர் எடுத்தியம்புகிறார். வைணவத்தின் சிறப்பியல்புகள், தத்துவங்கள் ஆகியவற்றை எளிய முறையில் விளக்கியிருக்கிறார். கோயில்களில் தமிழை வளர்த்து வருவது வைணவத்தின் தனிச்சிறப்பு என்கிறார் ரெட்டியார்.

தமிழ் மண்ணில் வைணவத்தை வளர்த்துப் பெருமை கொண்ட ஆழ்வார்கள் - ஆசிரியர்கள் குறித்தும் இந்நூலில் பேராசிரியர் ஆராய்ந்திருக்கிறார். சுருங்கக்கூறின், வைணவம் பற்றிய ஒரு நூலாக, வைணவச் செல்வம் அமைகிறது எனலாம். இந்நூல், அனைவராலும் போற்றப்படுவது உறுதி.

நூற்றாண்டு விழா காணும் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் தலைசிறந்த நூல்களின் தொகுதிக்கு அணிந்துரை அளிக்கும் வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

'கல்வி உளவியல் கோட்பாடுகள்' என்ற இந்த நூல் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், குழந்தைக் கல்வியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கட்கும், பொதுமக்கட்கும் ஒரு வழிகாட்டியாக அமையட்டும் என்றே இதனை எழுதி வெளியிட்டேன். இந்த நூலில் கல்வி உளவியலின் இன்றியமையாமை, மனிதனும் சூழ்நிலையும், குழந்தையின் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் அதன் மனவளர்ச்சி, குழந்தைக் கல்வியில் ஊக்கு நிலைகள், கல்வியில் உள்ளக் கிளர்ச்சியின் பங்கு, குழந்தை கற்றலில் அடங்கிய மூலக் கூறுகள், அறிதிறன்பற்றிய கருத்துகள், இவற்றின் அடிப்படையில் தனியாள் வேற்றுமைகள், குழந்தைகளின் உடல்நலம் பற்றிய பல்வேறு செய்திகள், பால்- கல்வியைப் பற்றிய கருத்து, குழந்தையின் இயல்பு பிறழ்ந்த நடத்தைகள், அவற்றைச் சமாளிக்கும் முறைகள், குழந்தையின் ஒழுக்க வளர்ச்சி, குழந்தைக் கல்வியில் தேர்வு முறைகள் - ஆகிய பல்வேறு கருத்துகள் விளக்கம் அடைகின்றன. சிறுவர் கல்வியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் இவர்கட்கு இன்றியாமையாத செய்திகள் பலவும் இந்நூலில் அடங்கியுள்ளன.

தரமான நூல்களை வெளியிட்டு வெள்ளிவிழாக் காணும் மணிவாசகர் பதிப்பகத்திற்கும், என்னிடம் அன்பு காட்டும் குறிப்பாக **எஸ். மெய்யப்பன்** அவர்கட்கும், இத்றகு முதற்காரணமாக இருந்த மணிவாசகர் நூலக மேலாள்ர **திரு. இரா. குருமூர்த்தி** அவர்கட்கும், இந்நூலை அச்சிட்டு உதவிய கற்பகம் அச்சக மேலாளர், செய்வன திருந்த செய்யும் திரு. **க. நாராயணன்** அவர்கட்கும் என் மனம் உவந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.ந

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய **திரு. கே.ஆர். மாணிக்கம்** சென்னை- சைதையிலுள்ள ஆசிரியர்க் கல்லூரியில் (இப்போது அரசு கல்விக்கல்லூரி எனப்பெயர் மாற்றம் பெற்றது) எல், டி வகுப்பில் பயிலும்போது (1940-41) ஒரு சாலை மாணாக்கர்; நல்லொழுக்கம் மிக்க என்கெழுதகை நண்பர்; மாணாக்கர் உணவு விடுதியில் தங்கியிருந்த போது நெருக்கமாகப் பழகியவர். கல்லூரி நாளில் 'துருதுரு' வென்று அங்கும்இங்கும் ஓடிப் பொதுப்பணியில் ஆர்வங்காட்டி வகுப்புத்தோழர்களின் அன்பையும் பேராசிரியர்களின் மதிப்பையும் பெற்றுப் புகழுடன் திகழ்ந்தவர். **இரண்டு** ஆண்டுகள் ஆசிரியப் பணி ஆற்றி, **நான்கு** ஆண்டுகள் போர்த்துறையில் பங்கேற்றுப் பணிபுரிந்தவர். அதன்பின்னர் **மூன்று** ஆண்டுகள் மாவட்டக் கல்வி அதிகாரியாகவும், **மூன்றரை** ஆண்டுகள் அரசுத் தேர்வுகளின் செயலராகவும், ஆறு ஆண்டுகள் கல்வி இயக்குநரின் தனி அலுவலராகவும், நான்கு ஆண்டுகள் கல்வித் துணை இயங்க்குநராகவும், ஐந்தரை ஆண்டுகள் மண்டலப் பள்ளி ஆய்வாளராகவும், தாம் பயின்ற சைதை ஆசிரியர்க் கல்லூரியில் ஆறு ஆண்டுகள் முதல்வராகவும், பணியாற்றிப் பெரும்புகழுடன் ஓய்வு பெற்றவர். பணியாற்றிய காலத்தில், 'என் கடன் பணி செய்து கிடப்பதே'[1] என்ற குறிக்கோளுடன் பணியாற்றியதால் சகப்பேராசிரியர்கள், மாணாக்கர்கள், பொதுமக்கள் மேலிடத்தார் இவர்களின் அன்புக்கும் பாராட்டுதலுக்கும் இலக்காகிப் பெரும் புகழ் பெற்றவர். இங்ஙனம் பல்துறை அநுபவம் பெற்ற அன்பரின் **அணிந்துரையை** இந்நூல் பெற்றது இந்நூலின் பெருமையை பன்மடங்கு உயர்த்துகின்றது; நூலாசிரியராகிய அடியேனுக்கும் பெருமகிழ்ச்சியை நல்குகின்றது. இக்கூறிய பெருமைகள் எல்லாம் பெற்ற நண்பர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியமைக்கு என் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது.

பேராசிரியர் **குருசாமிரெட்டியார்** சைதை ஆசிரியர்க்கல்லூரியில் என் உளவியல் பேராசிரியர். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்று இந்தியக் கல்விப் பணியாளராக (I.E.S.) பணியாற்றியவர். சிறந்த முறையில் - ஆனால் சற்று விநோதமான முறையில் - கற்பிப்பவர்.

கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலைமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குணம் இனையவும்[2]

பெற்றுத் திகழ்ந்த வராதலால், இவர் வகுப்பில் நிகழ்த்தும் ‘பேருரைகள்’ உன்னிப்பாகக் கவனிப்பவர்கள் பெரும்பயன் அடைவர். அளக்கலாகாக அளவும் பொருளும் துளக்கலாகாக நிலையும் தோற்றமும் உடையவர். ஐயந் தீரப் பொருளை யுணர்த்தும் திறம் படைத்தவர். இவர்,

உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன் உளங்கொளக்[3]

கொடுத்தலால் இவருடைய பேருரைகள் மாணாக்கரிடம் அகத்தெழுச்சியை உண்டுபண்ணி உளவியலில் தனி நாட்டம் ஏற்படச் செய்யும்; ஆழ்ந்து கற்கவும் தூண்டும். இவற்றால் பெரும்பயன் பெற்றவன் அடியேன். இவருடைய ‘பேருரைகள்’ இன்னும் என்செவியில் ஒலிப்பன போன்ற பசுமையான உணர்வு உண்டாகின்றது. இத்தகைய பெரும் பேராசிரியருக்கு இந்நூலை அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

என்னுடைய நெஞ்சில் நிலையாக இடம் பெற்றவன் ‘வேங்கடம் மேவியவிளக்கு’, எப்படி இடம் பெற்றான் தெரியுமா?

பனிக்கட லில்பள்ளி கோளைப்
பழகவிட்டு ஓடிவந்து, என்
மனக்கட லில்வாழ வல்ல
மாய மணாளநம்பி.[4]

என்னும் அவன்,

அரவத்து அமளியி னோடும்
அரவிந்தப் பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளி கொள்கின்ற பிரான்.[5]

1960 முதல் இவன் காட்டும் ஒளியில் வாழும் அடியேனுக்கு எண்ணற்ற தொல்லைகளையும் துன்பங்களையும் தந்தாலும், நல்ல உடல் நலத்தையும் மனவளத்தையும் அருளி வருபவன். அவனருளால்தான் இன்றுவரை நூலுலகில் ஆழங்கால் பட்டுப் பலதுறை நூல்களைத் தொடர்ந்து எழுதி வருகின்றேன்; என் கல்வித் தொண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இங்ஙனம் என்னைப் பல்வகைத் தொண்டுகளில் ஆளாக்கி வைத்து எனக்குப் பலவித நலன்களையும் அருளிவரும் அப் பெருமானை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி அவன் கழலிணைகளையே சரணமாகக் கொள்ளுகின்றேன்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே[6] - தாயுமான அடிகள்.

‘வேங்கடம்’
A.D-13, அண்ணா நகர் ந. சுப்புரெட்டியார்
சென்னை-600 040
20-12-1985

*****

1916 2016

TABLE OF CONTENTS

உள்ளுறை

இயல் *பக்கம்*

1. கல்வி உளவியலின் இயல்பும் அளவும் (1-25)

கல்வி உளவியல் - உளவியலும் ஓர் அறிவியலே - உளவியலுக்கும் கல்வி உளவியலுக்கும் தொடர்பு - உளவியலின் நோக்கங்கள் - உளவியல் ஆராய்ச்சி முறைகள் - ஏனைய அறிவுத் துறைகளோடு தொடர்பு.

2. மனிதனும் சூழ்நிலையும் (26-78)

பொருத்தப்பாடு - பொறுத்தமுறுதலின் செயற்படும் உறுப்புகள் - பொருத்தப்பாட்டின் கோலங்கள் - நரம்பு மண்டலம் - தூப்பிலாச் சுரப்பிகள் - பொறிகள் - புலப்பயிற்சி - உற்று நோக்கல்.

3. குழந்தைகளின் வளர்ச்சியும் துலக்கமும் (79-129)

ஆளுமை - வளர்ச்சியின் சிறப்பியல்புகள் - உடல் வளர்ச்சி - உள்ளக் கிளர்ச்சியின் துலக்கம் - சமூகப் பண்பு வளர்ச்சி - மன வளர்ச்சி (அறிவு வளர்ச்சி) - வளர்ச்சிப் பருவங்கள் - குழந்தைகளை உற்று நோக்கும் முறைகள்.

4. குடிவழியும் சூழ்நிலையும் (130-167)

குடிவழி - சூழ்நிலை வாதங்கள் - குடிவழியைப் பற்றிய விளக்கம் - சூழ்நிலைகள் இயல்பு - பிறப்பதற்குமுன் முதிர்ச்சி - பிறந்தபின் முதிர்ச்சி - முதிர்ச்சிக்கும் கற்றலுக்கும் இடையே நடைபெறும் இடைவினை - உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவு - இயல்பூக்கக் கொள்கைகள்.

5. ஊக்கு நிலையும் உள்ளக்கிளர்ச்சிகளும் (168-203)

ஊக்கு நிலை - தூண்டு பொருள்களும் ஊக்கிகளும் - ஊக்கு நிலை வகைகள் - ஊக்கிகளின் செயல்கள் - பரிசில்களும் தண்டனைகளும் - சில உள்ளக் கிளர்ச்சிகள் (விளக்கம்) : வெகுளி, அச்சம், இன்பம், அன்பு - நல்வாழ்வில் உள்ளக் கிளர்ச்சிகளின் பங்கு - உள்ளக்கிளர்ச்சிகளைக் கட்டுப் படுத்துதல் - உயர்மடை மாற்றம் - கல்வியில் விளையாட்டு முறை - விளையாட்டைப் பற்றிய கொள்கைகள்.

6. கற்றல் (204-229)

கற்றலின் அடிப்படை இயல்பு - கற்றல் என்றால் என்ன? கற்றலுக்குச் சாதகமான ஏதுக்கள் - கற்றல் விதிகள் - கற்றலுக்கு இன்றியமையாத நிலைமைகள் - செயல் திட்டமும் செய்து கற்றலும் - வேலை மூலம் கல்வி (வார்லதா கல்வி முறை) - அநுபவத்தின் மூலம் கல்வி.

7. கற்றலில் அடங்கிய மூலக் கூறுகள் (230-294)

அக்கறை - கவனம் - புலன் காட்சி - கற்பனை - சிந்தனை - ஆய்தல் - நினைவு; இருத்துதல், நினைவுகூர்தல், மீட்டறிதல் - பொருள் - பொதுமைப்படுத்துதல் -

பழக்கங்கள் - திறன்கள் - பரிவு - பின்பற்றல் - கருத்தேற்றம் - விளையாட்டு - பயிற்சி மாற்றம்.

8. அறிதிறனும் தனியாள் வேற்றுமைகளும் (295-316)

அறிதிறன் நிலைகள் - அறிதிறன் ஆய்வுகளின் வளர்ச்சி - அறிதிறன் ஈவு - அறிதிறனைப் பற்றிய புதிய கருத்து - அறிதிறன் ஈவு நிலையானது - அறிதிறனின் தனிக் கூறுகள் - தனியாள் வேற்றுமைகளும் அவற்றை அளத்தலும் - புள்ளிக் கணிதம் - மனத்தின் சிறப்பியல்புகளின் கோலங்கள் - தனிவேற்றுமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்பப் பள்ளிநிரலை அமைத்தல்.

9. உடல்நலமும் உடல்நல வியலும் (317-340)

உடல்நலம் - உடல்நலவியல் - குழந்தை, குமர உடல்நலவியல் - கண்ணின் குறைபாடுகள்: காரணமும் அறிகுறிகளும் - காதின் குறைபாடுகள்; காரணமும் அறிகுறிகளும் - பற்களின் குறைகள்; காரணமும் அறிகுறிகளும் - ஊட்டத் தேவைகள்; - களைப்பும் சலிப்பும்; காரணமும் நீக்கமும் - பொழுது போக்குக் கவர்ச்சிகள் - பால், கல்வி: கல்வியில் அதன் இடம்.

10. இயல்பு பிறந்த நடத்தை (381-401)

தொடக்கம் - குடும்ப நிலையிலுள்ள ஏதுக்கள் - பள்ளிப் பழக்க வழக்கங்களின் விளைவுகள் - தனிப் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் வாய்ந்த குழந்தைகள் - நெறி பிறழ்வின் சிறப்பியல்புகள் - நெறி பிறழ்வினைத் தடுத்தல் - நனவிலி மனம்; அதன் தன்மையும் முக்கியத்துவமும் - சில நடத்தைகள் - பெருவிரல் சவைத்தல், நகம் கடித்தல், பொய் சொல்லுதல், தூக்கத்தில் சிறுநீர்கழித்தல், களவாடுதல், ஊர் சுற்றுதல், பொறாமை, கூச்சம், வெளித்தோற்றம், தாக்குந் தன்மை - ஒத்துழைப்பும் போட்டியும்.

11. ஒழுக்க வளர்ச்சி (382-401)

ஒழுக்கம் - பற்றுகள் - ஒழுக்கமும் மன உறுதியும் - குறிக்கோள்களும் வாழ்க்கைத் தத்துவ வளர்ச்சியும் - ஒழுக்கத் துலக்கத்தில் பள்ளியின் பங்கு - ஒழுங்கத் துலக்கத்தில் பள்ளியின் பங்கு - ஒழுக்க வளர்ச்சியில் பள்ளியின் முயற்சியையும் வீட்டின் முயற்சியையும் இயைபுறுத்தல்.

12. மதிப்பீடும் சோதனையும் (402-413)

மதிப்பிடுதல் - தேர்வுகளின் நோக்கம் - கட்டுரைச் சோதனைகள் - புதிய முறைச் சோதனைகள்; சரி - தவறு சோதனைகள், பல்விடையிற் பொருக்குச் சோதனைகள், நிரப்பும் சோதனைகள், இணைக்கும் சோதனைகள், இனச் சோதனைகள், ஒப்பிட்டுக் காட்டும் சோதனைகள் - நல்ல சோதனைகளின் சிறப்பியல்புகள்; தகுதியாற்றல், முரண்படாமை, புறவயம், கையாளுவதில் எளிமை - அறிக்கைகள்.

13. ஆசான் (414-438)

ஆசிரியர் - ஒரு முதிர்ந்தோர்; ஒரு தொழில்முறை உறுப்பினர்; சமூக உறுப்பினர்களில் ஒருவர்; ஆசிரியரின் முக்கியத்துவம்.

பின்னிணைப்பு - 1 : பயன்பட்ட நூல்கள் (439 - 440)
பின்னிணைப்பு - 2 : கலைச்சொல் அகர முதலி (441 - 466)
பின்னிணைப்பு - 3 : பொருட்குறிப்பு அடைவு (467 - 481)

*****



வைணவச் செல்வம்

[*Vainava Selvam*]

Foreword by:

Prof Dr AV Rangachari, Head of Dept of Economics, Annamalai University, Annamalainagar - 608 002 Tamilnadu

Vaazhthurai by:

Dr Avvai Natarajan, Vice-Chancellor, Tamil University, Tanjore - 613 005

Sirappu Paayira Paamaalai by:

Shri SK Ramarajan, Former Deputy Editor, Dept of Dictionary, Tamil University, Tanjore - 613 005

Dedicated to:

Kottur Aranganatha Mudaliar [1850 - 1907]

Preface:

Prof Dr N Subbu Reddiar

Field:

Religion [Vaishnavism]

Publishers:

Tamil University, Tanjore - 613 005, Tamilnadu

1916 2016

FOREWORD

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் A.V. **ரங்காச்சாரி** எம்.ஏ., எம்.லிட்.பிஎச்டி.
பொருளாதாரத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

இவ்வுலகம் தோன்றியநாள் தொட்டு மக்களிடையே ஏதோ ஒரு வகையில் சமய வளர்ச்சி நிலவி வருகின்றத. மக்கள் அன்றாட வாழ்க்கை ஒழுங்கு பெறவிக்கும் நன்னெறிகளின் தொகுதியே சமயம் ஆகும். அநாதிகாலமாக நமது பாரததேசத்தில், வேதத்தின் அடிப்படையில் நிலவி வரும் சமயங்களில் சிறந்தது வைணவம் ஆகும். வேதங்களை விளக்க வந்த வடமொழி நூல்கள் சுமிருதிகள், இதிகாசகங்கள், புராணங்கள் ஆகும். மநு சுமிருதியின் தொடக்கத்தில் ‘‘நாராயணன் என்னும் பரம் பொருள் உலகனைத்தையும் படைத்தான்’’ என்று கூறப்பட்டுள்ளது. வால்மிகி ராமாயணம் ‘‘சக்கரத்தைத் தரித்த நாராயணனே ஸ்ரீராமபிரான்’’ என்றும், ‘‘எல்லா உலகுக்கும் அவனே ஆதிகர்த்தா’’ என்றும், ‘‘உலகனைத்தும் அவனுக்கு சரிரம் என்றும் கூறுகிறது. ‘நாராயணகதை’ என்று தொடங்கும் மகாபாரதம் ‘‘கிருஷ்ணனாகிற நாராயணனே பரமாத்மா’’ என்றும், ‘‘அவன் உலகனைத்தையும் சரீரமாகக் கொண்டவன்’’ என்றும் முழங்குகிறது. புராணரத்னமாகிய ஸ்ரீவிஷ்ணு புராணம் ‘‘விட்டுணுவே உலகனைத்தையும் படைத்து, அளித்து, அழிக்கும் பரம்பொருள்’’ என்று அறிவிக்கிறது.

தமிழ்மொழியில் சங்ககால நூல்களான எட்டுத் தொகை நூல்களில் ‘‘திருமாலே அனைத்துலகையும் படைத்து, அளித்த, அழிப்பவன், பரம் பொருளுக்குரிய எல்லாத் தன்மையோடு விளங்குபவன், எல்லா உலகத்தையும் சரீரமாகக் கொண்டவன், எல்லாவற்றிற்கும் அந்தர் யாமியாய் (உள்ளே உறைபவன்) இருப்பதால், அனைத்துப் பொருளாகவும் இருப்பவன்’’ என்று பறை சாற்றுகிறது. இவ்வாறு மிகத் தொன்மையான வைணவம் பற்றிய அனைத்துச் செய்திகளையும் ஒருங்கே கொடுக்கும் களஞ்சியமே **‘‘வைணவச் செல்வம்’’** என்னும் இவ்வரிய பெரிய நூலாகும். இந்நூல் பதினைந்து இயல்களைக்கொண்டது.

முதல் இயல் **‘வரலாற்று முறையில் வைணவம்’** என்ற தலைப்பில் சமயம் எவ்வாறு மானிட வாழ்க்கையில் பின்னிக் கிடந்துள்ளது என்பதனை விளக்குகிறது. பண்டையகாலத்தில் இறைவனைத் ‘‘தந்தை’’ என்றும், ‘‘பட்டவன் வழிபாடு’’ என்றும் கொண்ட கருத்துகளே நாளடைவில் எழுத்து வடிவம் பெற்று, நூல்களில் இடம் பெற்றுள்ளது. இங்ஙனம் தோன்றிய வழிபாட்டு மரபுகளை ஒன்றாகக் கொண்டதே **‘‘இந்துமதம்’’** என்ற ஒரு கதம்பம். இதன் காரணமாக, பரம்பொருள் ஒன்றே எனினும், பல பெயர்களில் பல கடவுல்களும், அவற்றை வழிபடும் துறைகளும் பலவாக அமைந்துள்ளன என்று ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார்.

இவற்றுள் விட்டுணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு திகழ்வது வைணவம். வேதங்களில் விட்டுணு உலகம் முழுவதையும் பரவி நிற்கும் பெரிய தெய்வமாகவும், உலகைப் படைத்து காப்பவராகவும், நலம் செய்தல், தூய்மை, இரக்கம், பெருந்தன்மை, விருப்பத்தை நிறைவேற்றுதல், ஆற்றல் முதலிய அனைத்து நற்குணங்கள் நிறம்பப் பெற்றவர்; ஆதலால் உயிர் தன்னைவிட்டுணுவிடம் ஒப்படைத்தலே அவரை அடைய உயரிய உரிய வழியாகும் ஆகிய வேதக் கருத்துகள் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

‘‘விட்டுணுவுக்குப் **‘புருடன்’** என்று திருநாமம் (இருக்கு வேதம்), அவனுக்குப் பூதேவியும் இலக்குமியும் பிராட்டிமார்கள் (யசுர்வேதம்), கடவுள்களில் முதல்வன் (சடங்கியல் பகுதி),

விட்டுணு மேலானவன் (ஐத்ரேயப் பகுதி), இறைவன் இயற்கையின் உயிர், உலகின் உள் உறைபவன், (அந்தர்யாமி) இறைவனின் உயிர், உலகின் உள் உறைபவன், (அந்தர்யாமி) இறைவனின் உடலே இப்பூமி, அவனினும் நுண்ணியது எதுவும் இல்லை, அவனைக் கடந்து எவ்விருப்புமில்லை (வியாபகத்வம், அந்தர்யாமித்வம்), உயிர்கள் தம் அழியாத் தன்மையினை உணர்கின்ற வீடு பேற்றுக்கு அன்பு அல்லது பக்தி நெறியே சிறந்தது'' ஆகிய அனைத்து வைணவக் கோட்பாடுகளும் உபநிடதங்களில் சுட்டப்பட்டுள்ளன என்று இந்நூலில் கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளது.

வேதக் கடவுளான விட்டுணு, மெய்ப்பொருளில் நாராயணன், புராணங்களில் வாசுதேவனாக ஒன்றுபடுத்தப்பட்டு, இன்றைய வழிபாட்டு முறையில் இறைவனாகக் கருதப்படுகிறார் (பக்கம் 27). விட்டுணுவின் திருமேனிகளை வழிபடும் முறைகளை விளக்குவது ஆகமங்கள். இவை பாஞ்சராத்ரம், வைகாநசம் என இருவகைப்படும். இவ்வாகமங்கள் நாராயணனே பரம்பொருள் என்பதனை நிலை நாட்டி, அவனை வழிபடும் நெறிகளையும், சரணாகதியின் சிறப்பினையும், அர்ச்சாவதாரத்தின் அருமை பெருமைகளை யெல்லாம் எடுத்து இயம்புவன. இவற்றுள் பாஞ்சராத்ர ஆகம வழிபாடு நடைபெறும் கோயில்களே எண்ணிக்கையில் அதிகம் (ப.33). வைகாநச ஆகமத்தில் பூசைசெய்பவருக்கு கருவிலேயே திருவிலச்சினை என்றாலும், திருவல்லிக்கேணி திருவாலி திருநகரி, ஸ்ரீபெரும்புதூர், வானமாமலை முதலிய பல திருக்கோயில்களில், சங்குசக்ரங்களைத் தங்கள் புயங்களில் பொறித்துக் கொண்டவர்களே பூசை செய்வது மரபு. மேலும் வைகானச ஆகம பூசைகள் நடக்கும் திருவேங்கடம் தொடக்கமான அனைத்து திவ்ய தேசங்களிலும், தமிழ் பிரபந்தங்கள் ஓதப்பட்டே வழிபாடு நிறைவுபெறுகிறது (பக்34). இவை வைணவத்தின் சிறப்பியல்புகளாக குறிக்கொள்ளத்தக்கவை.

இரண்டாம் இயலில் பண்டைய தமிழ் நூல்களில் முல்லை நிலக்கடவுள் திருமால், அவனே மாயோன், கண்ணன் (தொல்காப்பியம், அகநானூறு), அவனே இராமன் (புறநானூறு), அவனே வெஃகாவில், திடப்பவன் (பத்துப் பாட்டு), அவனே திருமேனியுடையவன், அவதாரங்களை எடுத்துக்காப்பவன், அவனே பதிகளில் உறைபவன் (பரிபாடல், கலித்தொகை), அவனே ஆதிபகவன், பொறிவாயில் ஐந்தவித்தவன், அறவாழி அந்தணன், எண்குணத்தான், அடியளந்தான், தாமரைக் கண்ணான் (திருக்குறள்) மற்றுமுள்ள தமிழ இயக்கியங்களிலிருந்து வைணவம் பற்றிய அரிய செய்திகளையும்; திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை திருவனந்தவுரம் முதலிய பல திவ்வியதேசங்கள் பற்றிய குறிப்புகளையும், ஆழ்வார் பாடல்களோடு ஒப்புநோக்குடன் அளித்து வைணவம் மிகத் தொன்மையானது என்பது நன்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இயல் வைணவ தத்துவங்களை மிக எளிய முறையில் விளக்குகிறது. இறைபற்றி அறியவேண்டுவோர், தத்துவம், இதம், புருஷார்த்தம் என்ற மூன்றினை அறிய வேண்டும். அவற்றுள் வைணவ தத்துவம் மூன்று. சித்து, அசித்து, ஈசுவரன். ஞானத்திற்கு இடமான ஆன்மா சித்து. பத்தர், முத்தர் நித்தியர் என்ற ஆன்ம வகை மூன்று. ஆன்மாவின் நிலை ''அடியேன்'' என்பது. அசித்து அறிவில்லாப் பொருள். இது சுத்த சத்துவம், மிச்ரத்துவம், சத்துவ சூனியம் என மூவகைப்படும். சித்து அசித்து ஆகிய தத்துவங்களைத் தன் திருமேனியிலி அடக்கியிருப்பவன் திருமால். திருமாலுக்கு ஐந்து நிலைகள். அவைமுறையே பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்பன.

வீடு பேற்றுக்குச் சாதனமாகக் கடைப்பிடிக்கப் பெறும் உபாயங்கள் சித்தோபாயம், சாத்தியோபாம் என இருவகைப் படும். இவற்றுள் நம் முயற்சியால் செய்யப் பெறவேண்டிய சாத்திய உபாயத்திலும், இறைவனையே உபாயமாகப் பற்றுதல் என்கிற சித்த உபாயமே சிறந்தது. இதுவே பிரபத்தி நெறி. இந் நெறிக்கு நியமங்கள் ஏதும் இல்லை (பக்45). அனைவரும் இதனைச் செய்து வீடுபேற்றினை அடைந்து, நலமந்தமில்லதோர் நாடாகிய திருநாட்டில் அடியார் குழாங்களுடன் கூடி, இறைவன் பெருமை பேசி, அந்தமிழ் பேரின்பம் அடையலாம். இவை யாவும் தமிழகத்தின் பழம் பெரும் கொள்கை என்று (பக்கம் 151) ஆசிரியர் பாராட்டியுள்ளது போற்றுதலுக்குரியது.

மேலே கூறப்பட்டுள்ள தத்துவங்களைத் தெரிவிப்பது வைணவமந்திரங்கள். இவை, **திருமந்திரம், துவயம், சரமசுயோகம்** என்பன. இம் மூன்றினையும் அருளிச் செய்தவன் திருமாலே, இம் மூன்று மந்திரங்களிள் ஆழமான கருத்துகளை விளக்க வைணவத்தில் பல (இரகசிய) நூல்கள் உள்ளன. அவையனைத்தும் தெரிவிக்கும் சீரிய கருத்துகளைத் தெளிவாகவும், விரிவாகவும் 108 பக்கங்களில் நான்காம் இயலில் அளித்துள்ளார் ஆசிரியர் வைணவம் பற்றி அறியவிரும்புவோர்க்கு இஃதோர் அரிய விருந்தாகும்.

ஐந்தாம் இயல் வைணவ இரகசிய கிரந்தங்களில் கூறப் பட்டுள்ள விசிஷ்டாத்வைத, வைணவக் கருத்துகளைத் தெரிவிக்கிறது. உயிரும் உடலும் இசைமை கொள்ளுதலே தத்துவம். உலகு அனைத்து இறைவனது வடிவம். இதனால் இறைவன் ஆன்மாகவும், உலகு அவனது உடலாகவும் ஆகும். இறைவனுக்கு உலகம் உடலாகவே அதனைக் காப்பது, அவனுக்கு இயல்பாய் அமைந்த கடமையாயிற்று. நாமும் இறைவனது ஒருடல் என்று கருதி, நம்மைக் காப்பது அவன் கடமை என்று தெளிந்து, நம்மை இறைவனிடம் ஒப்படைத்தல் வேண்டும். இதுவே உய்வதற்கு வைணவம் காட்டும் நீதில் நன்னெறியாகும் இக்கருத்துகளை விளக்கியபின், மூன்றாம் பகுதியில், பிள்ளைலோகாசிரியர் அருளிய மறை நூல்கள் பதினெட்டின் பிழிவினையும் வேதாந்த தேசிகள் அருளிய 18 பிரபந்தங்களின் தத்துவக் கருத்துகளையும் எளிய முறையில் திறம்படவிளக்கியுள்ளார். இப்பகுதியில் இரகசிய க்ரந்தங்களைமுதன் முதல் அருளிய பெரியவாச்சான் பிள்ளையின் (1) மாணிக்கமாலை (2) சகலப்ரமாண தாத்பர்யம், (3) இரகசிய திரய தீபிகை (4) இரகசிய திரய விவரணம், (5) நிகமனப்படி, (6) சரம இரகசியம், (7) உபகார சிமிருதி. அழகியமணளாளப் பெருமாள் நாயனாரின் அருளிச் செயல் இரகசியம், ஆசாரிய ஹிருதயம், வேதாந்த தேசிகரிள் பதினொரு சில்லறை இரகசியங்கள் பிள்ளைலோகம் ஜீயரின் ஸ்ரீ வைணவ சமயாசார நிஷ்கருஷம் ஆகிய நூல்களின் திரண்ட கருத்துகளும் சேர்ந்தால் இப்பகுதி முழுமைபெறும்.

வைணவ இலக்கியங்களைப் பற்றிய குறிப்புகளை ஆறாவது இயல் கொடுக்கிறது. இது (1) நாலாயிர திவ்வியபிரபந்தம் (2) காவியங்கள், (3) சிற்றிலக்கியங்கள் (4) தனிப்பாடல்கள், தனியன்கள் என நான்கு பகுதியாக அமைத்துள்ளது. இப்பகுதியில் அருளாளப் பெருமாள் எம்பெருமானா அருளிச் செய்த ஞான சாரம், பிரமேய சாரம், விளாஞசோலைப் பிள்ளை அருளிய சப்தகாதை, தேசிகப்பிரபந்தம், மணவாள மாமுனிகளின் பிரபந்தம் ஆகியவை சேர்க்கத்தக்கவை. (இவை 5ம் இயலில் உள்ளன.) காவியங்களில் கம்பராமாயணம், வில்லிபாரதம், அஷ்டபிரபந்தம், மற்றும் அந்நாள் தொடங்கி இந்நாள் வரை வெளிவந்துள்ள 25 நூல்களின் கருத்துகள் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றோடு ‘சடகோபரந்தாதி,’ திருக்குருகூர் மாலை,’ ‘ஆண்டாள் சந்திரகலாமாலை,’ ‘மகர நெடுங்குழைக் காதர் கலம்பகம்’ ‘பாமாலையந்தாதி,’ பெருந்தேவனார் பாடிய பாரதம்,’ ‘வங்கிபுரத்தாச்சியின் கலிப்பாட்டு’ ‘திருவேங்கடநாதர் உலா,’ ‘செவ்வகைச் சூடுவாரின் ‘இதிகாச பாகவதம்’ (4973 பாடல்கள்) ‘புராண பாகவதம்’ (9147 பாடல்கள்) திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் பிரபந்தங்களான ‘திருப்பதிக் கோவை,’ ‘எம்பெருமான் மும்மணிக் கோவை,’ திருப்பதிக் கலம்பகம்,’ மாறன் அலங்காரம்,’ ‘பரகால நல்லான் இரகசியம்’ போன்ற வெளிவந்துள்ள பல இலக்கியங்களும் நோக்கத்தக்கவை.

வைணவத்தின் கருவூல வியாக்கியானங்களாகும். வைணவ வியாக்கியனைங்கள் தமிழ் இலக்கியத்தின் ஒரு தனிப்பகுதி. இவை வெறும் சொற்பொருள் தரும் உரைகள் மட்டும் அல்ல. பெரிய கருத்துக் களஞ்சியம், இனிய சுவைப் பெட்டகம். திவ்வியப் பிரபந்த உரைகள் பெருங்கடலைப் போல் விரிந்தவை. இவை பற்றி ஆசிரியர் 100 பக்கங்களில் உரை வந்த வரலாறு, உரையின் வகைகள், உரையின் சிறப்புகள் நயங்கள், உரைகள், பகரும் வைணவதத்துவ விளக்கங்கள், அகப்பொருள் தத்துவம், தூது விடுதலின் உட்பொருள், ஆகியவற்றை மிகவும் பாராட்டும் வகையில் அமைத்துள்ளார். வைணவ உரைகளில் ஆழங்காற்பட்ட வைணவர்களே கண்டு மூக்கில் விரல் வைக்கும்படி எழுதியுள்ளார். தமிழப் புலமையும், திவ்வியப் பிரபந்த உரைகளை வல்லார் வாய்க் கேட்டு உணர்ந்த அறிவும், கூர்த்தமதியும் துணையாக நிற்க, இப்பகுதி மாக விரிவாக அமைந்துள்ளது. வைணவ உரை வளத்தைக் கூறும்போது, ஆசிரியர் ‘‘வைணவ இலக்கிய உரைகள். . . கற்போருக்கு சுவாநுபவத்தை விளைவிப்பவை. நடையழகு தனிச்சிறப்பு வாய்ந்தது . . . பயிலப் பயிலப் பேரின்பம் பயப்பது . . . . . . பொருள் கூறும்முறை எத்தகையோரும் வியக்கத் தக்கது’ என்று கூறித் தாமும் மிகவும் ஈடுபடுகின்றர். வைணவ ஆசாரியர்கள் பொருளை

விளக்கும்போது, ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள் என்ற முறைகளைக் கையாண்டுள்ளமை அறியத்தக்கது.

ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு வைணவத்தை வளர்த்த பெருமை ஆசார்யர்களையே சாரும். வைணவச் சீலர்களான ஆசாரியர்கள், வைணவம் பரப்ப இராமாநுசரால் ஏற்படுத்தப்பட்ட 74 சிம்மாசனாதி பதிகள், மணவாள மாமுனிகளால் நியமிக்கப்பெற்ற அஷ்ட திக்கஜங்கள், மற்றும் இன்று வைணவம் வளர்க்கும் மடங்கள் ஆகியவை எட்டாவது இயலில் இடம் பெறுகின்றன. இவற்றோடு, திருமலை திருப்பதி மடங்கள், காஞ்சிபுரம் வாதிகேசரி அழகிய மணவாள சீயர்மடம், மேலக் கோட்டை யதிராஜ சீயர் மடம், திருக்கோவலூர் எம்பெருமனார் சீயர் மடம், மற்றும் மைசூர் பரகால மடம் ஆற்றும் தொண்டும் அறியத்தக்கது.

கோயில்களில் தமிழ் வளர்த்து வருவது வைணத்தின் தனிச்சிறப்பு ஆகும். திருமால் திருக்கோயில்களில் முக்கிய வழிபாடு ஆழ்வார்கள் அருளிய தெய்வப்பனுவல்களைச் சேவிப்பதேயாகும். இறைவன் திருமுன் பாசுரங்களை முறையாகத் தொடங்கிச் சேவித்து நிறைவாகச் சாற்றுதல் நெடு நாளை மரபு. திவ்வியப் பிரபந்த விழாவாகவே மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியை ஒட்டி, ஆழ்வார்களின் பாசுரங்களைத் திருவரங்கன் முன் இயலும் இசையுமாகப் பாடி 10 நாட்கள் பெருவிழா நடத்தியவர் திருமங்கை ஆழ்வார். அதனைத் தொடர்ந்து எல்லா வைணவ ஆலயங்களிலும் இவ்விழா நடைபெறுகிறது. இதன் விபரங்கள் அனைத்தையும் திரட்டி ஒன்பதாவது இயலில் சுவைபடக் கூறியுள்ளார் ஆசிரியர். திவ்விய பிரபந்தங்களின் அடைவு, அவற்றை எப்போது எவ்வாறு சேவிக்க வேண்டும் என்ற அனைத்து நடைமுறைகளையும் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்துள்ள ‘‘கலியன் அருளப் பாடு’’ என்ற நூலில் காணலாம்.

வைணவத் திருத்தலங்கள், அபிமான, புராணத் தலங்கள், திருக்கோயில்களில் அருளிச் செயல்களை ஓதும் நடைமுறை, வைணவனின் அன்றாடக் கடைப்பிடிப்புகள், திருக்கோயில் வழிபாட்டுமுறைகள் பற்றிய விவரங்கள் அனைத்தும் 10, 11, 12, 13 இயல்களில் சுவையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வைணவத்தின் சிறப்பு இயல்புகளான வைணவ தீட்சை, திருமண்காப்பு தரிக்கும் முறை, அன்றாடம் நவிற்ற வேண்டிய மந்திரங்கள், ஆன்ம-பரமான்ம சம்பந்த அறிவு, பகவத் பாகவத அபசாரங்கள், ஸ்ரீ வைஷ்ணவ லட்சணங்கள், பிரபந்நர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பொருட்சிறப்புகள், வைணவ ஆசிரியர்கள் அவ்வப்போது அருளிச் செய்த அருள் நெறிகள், வைணவத்தில் தமிழின் எற்றம் ஆகியவை பற்றிய தெள்ளிய விளக்கங்கள் பதிநான்காவது இயலில் அழகுற வரையப்பட்டுள்ளன.

தமிழ் மண்ணில் வைணவத்தை வளர்த்த பெருமை ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் சாரும். ஆழ்வார்கள் பாசுரங்களால் திருமால் பரம்பொருளாகப் பலரும் போற்றும் நிலை உறுதியாயிற்று. ஆழ்வார்களுக்குப் பின்னர் வந்த ஆசாரியர்கள் வைணவ தத்துவங்களையும், சமய உண்மைகளையும் நெறிப்படுத்தினர். இதன் காரணமாக வைணவக் கருத்துகள் நாடெங்கிலும் பரவின என்பது மட்டு மல்லாமல், வட இந்திய சீர்திருத்த வாதிகளும், வைணவக் கொள்கையினை ஏற்று, வைணவ நெறியினைப் பரப்பினார்கள். மேலும் கிறித்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களிலும் வைணவ நெறியின் தாக்கம் ஏற்பட்டது. இவை அனைத்தினையும் 15 ஆம் இயலின் ஆய்வு செய்து இந்நூல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, வைணவத்தின் தோற்றம், வளர்ச்சி, வைணவ தத்துவங்கள், வைணவ இலக்கியங்கள், வைணவம் பரப்பிய சீலர்கள், வைணவத்தலங்கள், திருக்கோயில் வழிபாட்டு முறைகள், திவ்வியப்பிரபந்தப் பெருவிழா, நடைமுறை சம்பிரதாயங்கள், வைணத்தின் தாக்கம் ஆகிய அனைத்தையும் தன்னுள்ளே கொண்ட வைணவம் பற்றிய ஒரு முழு நூலாக, கலைக்களஞ்சியமாக, பேராசிரியர் அவர்கள் இதனை அளித்துள்ளார்கள். தம் வாழ்நாள் முழுதும் கடும் உழைப்பினால் வைணவ சமயத்தின் அனைத்து வடமொழி, மணிப்பிரவாள நூல்கள், வியாக்கியானங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவு பெற்று, மற்ற சமய நூல்கள், பிறமொழி நூல்களிலும் நுண்ணறிவு பெற்று, அதன் பயனாக விளைந்தது இந்நூலாகும். பரந்து விரிந்து

*கிடக்கும் பாற்கடலில் நீந்தி, அதன்கண் மூழ்கி மூழ்கி, சுவைத்து, அரிய கருத்துகளைத் தொகுத்து வகைப்படுத்தியதன் காரணமாகத் தேனும், பாலும் கன்னலுமாக ''**வைணவச் செல்வம்**'' அமைந்துள்ளது. பேராசிரியரின் பரந்த அறிவும் ஆய்வுத் திறனும் சிந்தனைத் தெளிவும் இந்நூலினில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒளிவிடுகின்றன. வைணவம்பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் வெளிவரும் முழுமுதல் நூலான இந்நூல் ''அழியாத வைணவச் செல்வ'' மென அனைவராலும் போற்றப்படும். இந்நூலை நல்கிய பேராசிரியருக்கு வைணவ உலகமும், தமிழ கூறு நல்லுலகமும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளன. வாழ்க வைணவம்! வளர்க வைணவ நூல்கள்!!*

தில்லைச் திருச்சித்திர கூடம்
103, மேல வெளிவீதி
சிதம்பரம் **அ.வே. ரங்காச்சாரி**
12-10-1995

*****

1916 2016

வாழ்த்துரை

டாக்டர் **ஔவை நடராசன்**
துணைவேந்தர்

செழித்தோங்கும் செந்தமிழ்ச் செல்வம்

தொல்காப்பியருக்கு *முன்னிருந்தே வானுற ஓங்கி வளம்பெற்றுத் திகழ்ந்தது தமிழ். இன்றும் தன் சீரிளமைத் திறம் விளங்குமாறு தமிழ மொழி செழித்தோங்குகின்றது. செந்தமிழைச் செழுந்தமிழாகச் செய்து வரும் சிந்தனையாளரும்செஞ்சொற்புலவரும்'என்கடன் பணிசெய்து கிடப்பதே'என்றஉயர்ந்த குறிக்கோளுக்கு இலக்கியமாகத் திகழ்கின்றனர். இவ்வாறு செந்தமிழ் வளர்க்கும் சான்றோர்களுள் தமக்கெனத் தனியிடம் பெற்றத் திகழ்கின்றவர் முது பெரும் புலவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள். எண்பதுஅகவையை எட்டிப் பிடிக்கும் நிலையில் பொலிவுற்றிருக்கும் நரைமுதிர்யாக்கை உரைமூதாளராகத்திகழும் இவர்கள் இதுவரை 105 நூல்களை இயற்றியுள்ளார்கள். சமயம், இலக்கியம், திறனாய்வு, வாழ்வியல், அறிவியல் கல்வி,உளவியல், ஆராய்ச்சி எனப் பல்துறை சார்ந்த செல்வங்களாகவே இவை திகழ்கின்றன. பேராசிரியர் ரெட்டியாரது அநுபவச் செறிவும், அருந்தமிழ்ப் புலமையும், அருள் நெறித் தோய்வும் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக* **வைணவச் செல்வம்** *என்ற நூலை வளர்தமிழ் உலகுக்கு வழங்குகின்றார்கள்.*

திருமிகு சுப்புரெட்டியார் அவர்களே வைணவச் செல்வமாக விளங்குகின்றவர்கள். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தினை - சிறப்பாக நம்மாழ்வார் திருவாக்கினை - ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்கள். சைவமரபினராயினும் சமயப் பொது நோக்கம் சார்ந்தவர்கள். வைணவத் திருவுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட பெருந்தகையாளர். பொதுவான பார்வையில் சமயங்களுக்கிடையில் வேறுபாடு தோன்றலாம். ஆனால் மெய்யுணர்வுச் சிந்தனையில் வாழ்ந்த பெரியோர் அவ்வேறுபாடுகளை மாறுபாடுகளாகக் கொள்ளாமல் வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒருமைப்பாட்டு உணர்வினராகவே திகழ்கின்றனர்.

வேறுபடு சமயம் எல்லாம் புகுந்து பார்க்கில்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா

என்ற தாயுமான அடிகளின் சமரச ஞானத்திற்குத் திரு. ரெட்டியாரவர்கள் இலக்கியமாகத் திகழ்கின்றார்கள் என்றே கூறலாம்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்னும் திருமூலர் திருவாக்கினைத் தமது குறிக்கோள் மொழியாகக் கொண்டவர்கள். எம்பெருமானாரை ஆசானாகக் கொண்டு வைணவச் செல்வங்களை வழங்கிவருவதுபோலவே, மெய்கண்டாரை ஆசானாகக் கொண்டு சைவமெய்ச் சான்றோர்களின் அருளிச் செயல்கள், நல்லுரைகள் இவற்றையெல்லாம் தொகுத்து நால்வர் பெருமக்களின் வரலாறுகள், சைவசமய விளக்கு ஆகிய நூல்களையும் அளித்துள்ளார்கள். இப்போது வைணவச் சமயக் கோட்பாடுகளைச் சிறப்பாக விளங்கும் பல்வேறு நூல்களையும் ஆய்ந்து அந்நூல்கள் பற்றிய சுருக்க விளக்கங்களைத் தொகுத்து 'வைணவச் செல்வம்' என்ற ஒரே பெருநூலாக வழங்கியிருப்பது ஒப்பற்ற சமயப் பணியாகவும் தமிழ்ப் பணியாகவும் அமைகின்றது.

'சைவம்' 'வைணவம்' என்ற பெயர்கள் வடமொழிச் சார்புடையனவாகத் தோன்றினும் சைவ வைணவச் சமயங்கள் செந்தமிழ் மரபு தழுவிய செந்நெறிகளே என்பதனை ஆய்வுலகம் நன்குணரும். தமிழர் சமயங்களாகிய சைவமும் வைணவமும் தேவார திருவாசகங்களையும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களையுமே தமக்குரிய மறைமொழிகளாகக் கொள்பவை.

ஞாலங் காக்கும் கால முன் பின்
தோலா நல்லிசை நால்வர்

என்று புறநானூறு போற்றும் கடவுளருள் நீலமணி மிடற்று ஒருவனை வழிபடு கடவுளாகக் கொண்டு வளர்ந்ததே சைவம்; விண்ணுறு புட்கொடி விறல் வெய்யோனாகிய மாயோனைத் தலைவனாகக் கொண்டு வளர்ந்ததே வைணவம். பத்திமை உணர்வின் பயனாகத் தோன்றிய இந் நெறிகள் பிற்காலத்தில் தத்துவ வளமும் பெற்றன. ஆயினும் தத்துவக் கோட்பாடுகளைச் சொல்கின்ற நூல்கள் யாவும் வடமொழி நூல்களாகவே அமைந்தன. தத்துவச் செய்திகளைத் தமிழில் விளக்க முற்பட்டாலும் தத்துவக் குறியீடுகள் வடமொழிச் சொற்களாகவே உள்ளன.

இந்நாளில் 'அம்மா' 'அப்பா' என்று அன்பு ததும்ப அழைப்பதனைக் கூடத் தவிர்க்கும் அளவுக்கு ஆங்கிலம் நம்மைச் சூழ்ந்துவிட்டது. இங்ஙனமே அந்நாளில் ஆரியம் (வடமொழி) நம்மைச் சூழ்ந்திருந்தது. ''தென்சொல், விஞ்சமர் வடசொல் திசைமொழி'' என்று திருஞானசம்பந்தரும், ''தென்தமிழும் வடகலையும் தேசிகமும்'' என்று சேக்கிழார் பெருமானும் அன்றைய மொழித் தேவையைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர். அறிவியலை ஆங்கிலத்தில்தான் சொல்ல முடியும் என்ற இன்றையதொரு நம்பிக்கையைப் போலவே, தத்துவத்தை வடமொழியில்தான் சொல்ல முடியும் என்ற நிலை உருவாகியிருந்தது. வடமொழி தத்துவத்துக்கு உரியமொழி என்ற சிறப்பினையும் பெற்றுவிட்டது. எனவே 'தத்துவச் செய்திகள் எல்லோர்க்கும் தெரிவதில்லை; தெரிந்தாலும் புரிவதில்லை' என்ற நிலையிலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. அறிவியல் துறையில் தமிழால் சிந்திக்க வேண்டும் என்று கூறுவது போன்றே தத்துவத் துறையிலும் தமிழால் சிந்திக்க வேண்டும் என்று சொல்லத் தோன்றுகின்றது.

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

என்று திருவள்ளுவரும் இந்தச் சிந்தனைக்கு வழிகாட்டியுள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது.

'தத்துவம்' என்ற அளவிலேயே அது எட்டாத ஒன்று, அது வேறு உலகச் சிந்தனை என்ற கருத்தே எல்லோரிடமும் எழுகின்றது. இங்கே ஒன்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வெற்றி வீரனாகிய விசயன் போர்க்களம் புகுகின்றான்; உற்றார் உறவினரை, மூத்தோரை, முதுகுவரை எதிரணியில் காண்கின்றான். அவன் உள்ளம் தளர்கின்றது; உறுதி குலைகின்றது. அப்போது அவனது உள்ளச் சோர்வினைப் போக்கக் கண்ணன் காண்டீபனுக்கு உரைத்த உறுதி மொழிகளை உரிப் பொருளாகக் கொண்டதே கீதை என்றால் அது வாழ்வியலுக்கு வேறாகுமா? இதனை இந் நூலாசிரியரும் வாழ்க்கைக் குரிய திறவுகோலைக் கண்ணன் இக் கோட்பாட்டில் வழங்கி விடுகின்றான் என்று குறித்திட்டிருப்பதைக் காணலாம். (பக்.340).

மேலும், இறைவனிடம் தன்னை ஒப்புக் கொடுப்போன் இறைவன் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்ய உறுதி கொள்ள வேண்டும் எனவும், இறைவன் திருவுள்ளத்திற்கு மாறானவற்றைச் செய்யாதிருக்க உறுதி கொள்ள வேண்டும் எனவும் சுட்டி உரைத்திருப்பது (பக்.318) மெய்யுணர்வு என்பது 'நல்லன புரிதலும் அல்லன தவிர்த்தலுமே' என்பதனை இனி தெடுத்துக் காட்டுகின்றது.

இந்த நூலில் பேராசிரியர் ரெட்டியார் வரலாற்று முறையில் வைணவம் தோன்றி வளர்த்த முறையை விளக்கி பண்டைத் தமிழ் நூல்களில் திருமாலை வழிபாட்டைக் காட்டி வைணவ தத்துவங்களை விரிவாக விளக்குகின்றார்கள். தொடர்ந்து வைணவ மந்திரங்களும் தெளிவாக்கப் பெறுகின்றன. அடுத்து, வைணவ இரகசிய கிரந்தங்கள் இன்னவை என இனங்காட்டிச் சுருக்கமாக விளக்கப் பெறுகின்றன. தொடர்ந்து வைணவ இலக்கியங்களை நாலாயிரம் தொடங்கி இன்றுவரை தோன்றியுள்ளவற்றில் அவருக்குக் கிடைத்தவை பற்றி விளக்கங்கள் தருகின்றார்.

மேலும், இந்நூலில் ஆழ்வார்கள், ஆசாரியர்கள், அடியார்கள் இவர்களைப் பற்றிய குறிப்புகளும், ஆசாரியர்களில் 74 சிம்மாசனாதிபதிகள் (உடையவரால் நியமிக்கப் பெற்றவர்கள்) அஷ்டதிக் கஜங்கள் (மணவாள மாமுனிகளால் நியமனம் பெற்றவர்கள்) என்பவர்களையும் அறிமுகப் படுத்தியிருப்பது சிறப்பாகும். ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் வைணவ திவ்விய தேசங்களில் நடைபெறும் 'பகல்-பத்து, இராப்பத்து' என்ற பெயரில் வழங்கும் 'திவ்வியப் பிரபந்த பெருவிழா' வைப் பற்றிய விவரங்களையும் தருவது பயனுடையதாகும்.

பேராசிரியர் ரெட்டியார் தம் குடும்பத்துடன் 102 திவ்விய தேசங்களைச் சேவித்த பேறு பெற்றவர்கள். இந்தத் திருத்தலப் பயணத்தை ஆறு தொகுதிகளாக வைணவ உலகுக்கு வழங்கிய பெருமை இப் பெரியாருக்கு உண்டு. இத்திருத்தலங்களைப்பற்றிய இன்றியமையாத சில குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. வைணவப் பெருமக்களுக்கு இது கிடைத்தற்கரிய கருவூலமாகும். அபிமான புராணத் தலங்களும் வகைப் படுத்திக் காட்டப் பெற்றுள்ளன. வைணவர்களின் அன்றாடக் கடைப்பிடிப்புகளைப் பற்றிய விதிகள், திருக்கோயில் வழிபாட்டு முறைகள், சம்பிரதாயங்கள், பிற சமயங்களில் எம்பெருமானார் தர்சனத்தின் தாக்கம் ஆகியவை யாவும் சிறப்பாக விளக்கம் அடைகின்றன.

இங்ஙனம் நூல் முழுவதும் பேராசிரியர் ரெட்டியார் பல்வேறு அரிய கருத்துகளைத் தொகுத்தும் வகுத்தும் நம் சிந்தனைக்கு விருந்தாக்கியுள்ளார்கள். பலகாலம் பல நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டிய உண்மைகளையெல்லாம் இவ்வொரு நூலில் ஆசிரியப் பெருமான் தொகுத்தளித்திருப்பது தமிழ் மக்களுக்கும், சிறப்பாக வைணவப் பெருமக்களுக்கும், பெரும்பயன் தருவதாகும்.

உனக்குப் பணிசெய் திருக்கும்
தவம் உடையேன், இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை
நிற்கைநின் சாயை அழிவுகண்டாய்

என்று பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலை எம்பெருமானின் வள்ளன்மையைத் தெளிந்துரைப்பதுபோல பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தம் வாழ்க்கையில் வைணவ உறுதி பூண்டவர்கள்.

'வைணமும் தமிழும் வளர்ந்தோங்கச் செய்யும் பேராசிரியரின் தெய்வப் பணிமேலும் சிறந்து விளங்கிடுக. செந்தமிழ் உலகு இன்னும் பல்வேறு செல்வங்களைப் பெற்றுப் பயனுறுக' என்று போற்றிப் பணிந்து மகிழ்கின்றேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 615 005
தங்கல் : சென்னை - 102
2-7-1995

ஔவை நடராசன்

*****

கல்விக்கடல் **S.K. இராமராஜன்** (கம்பராமன்)

(முன்னாள் துணைப்பதிப்பாசிரியர்

அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.)

அவர்கள் அன்புடன் உவந்தளித்த

சிறப்புப் பாயிரப் பாமாலை

(தோரண வாயில்)

துங்கம் மேவிய சங்கரன் கோவிலைத்,
தூய்மை ஓங்கிய மாயோன் நகரினை
மங்க லந்தரு சத்தியின் கோட்டத்தை,
மணங்கொள் கந்தன் உறும்படை வீட்டினை,
ஐங்க ரற்குறித் தாய தளியினை,
ஐயன் வைகிய துய்யநற் பாழியை,
இங்கு யர்த்தி, மிலேச்சர் புரிந்திட்ட
இழிவை நீக்கி ஒளியினைத் தந்ததார்? 1

வேதம் ஆகமம் போற்றிடும் தெய்வதம்
மேவு கின்ற பதிதொறும் கோபுரம்,
போத மேயென வானை யளத்திடப்
பொற்பின் ஓங்கப் படைத்த தெவர்கரம்?
சீத ளஞ்செறி சோலையைச் சாலையைத்
தெய்வப் பாற்கட லேநிகர் ஏரியை
ஆத ரத்திற் படைத்துல குய்கென
அவனிக் கீந்து மகிழ்ந்த தெவருளம்? 2

மறைகள் போற்றிடும் அங்கயற் கண்ணியார்
மாண்பி லாத மிலேச்சர் ஒழிந்திடக்
குறைவி லாதநற் சேனைகள் சூழ்தரக்
குன்றம் மேவிய வெம்புலி போலவே
நிறைவு கொண்ட பொலிவுடன் வம்மென
நேயத்தாலே யழைத்திட்ட போதினில்
பொறையொ டுற்றநம் கம்பணன் தோள்களில்
பூரிப் போங்கப் புகுந்திட்ட தீரர்யார்? 3

பொன்னி யாற்றில் துயின் றிடு மாயனும்,
புனித வேங்கடம் மேவிய அண்ணலும்,
மன்னு சோலை மலைசேர் அழகனும்,
வந்து வந்து தினமும் இரந்திடப்
பன்னு கூந்தலில் சூடி உதிர்த்திட்ட
பழைய கோதை வழங்கிய கோதைக்கு
நன்ன யஞ்செறி காவியக் கோவிலை
நயத்தின் நல்கிச் சிறப்பமை வேந்தர்யார்? 4

அற்பு தஞ்செறி பிள்ளைத் தமிழினை
அமுதம் தோற்க வழங்கும் குருபரர்,
பொற்ப தத்தினில் வீரக் கழலினைப்
பூட்டி ஞாலப் புகழினைத் தந்ததார்?
சிற்ப ரன்தனை இட்டலிங் கத்தினில்
சேவித் துள்ளப் புயலை யடக்கிய
கற்பின் மிக்க சிவப்பிர காசரைக்
கவிஞர் வேந்தெனப் பரவிப் புகழ்ந்ததார்? 5

சங்க நூற்குச் செவிலி எனத்தகும்
சால்பு மிக்கநம் ஐயர்க் கிளமையில்
பொங்கு செந்தமிழ் யாப்புறு நுட்பத்தைப்
புகன்று ஞானத் தெளிவினைத் தந்ததார்?
துங்க வாழ்வருள் பஞ்ச தசியினைத்
தூய நற்றமி ழாற்படைத் திட்டதார்?
அங்க வர்க்குச் சமாதியைக் கோயிலால்
ஆக்கி வேத வரம்பினைக் காத்ததார்? 6

கீரன் நல்கிய ஆற்றுப் படையினால்
கிளர்ச்சி பெற்ற முருகன் புயத்தினில்
சீர மைந்திடு காவடிச் சிந்தினைச்
செழிக்கச் சூடி மகிழ்ச்சி வளர்த்ததார்?
வீரம் மேவிய காவியக் கம்பனே
மேவிப் பாடினான் காந்தி கதையென
பார காவியம் இங்கு படைத்ததார்?
பண்டைச் சந்தங்கள் மீளக் கொணர்ந்ததார்? 7

‘வான மோமழை பெய்திடும், பூமியோ
மாண்பின் ஓங்க விளைந்திடும், புல்லனே
ஊனம் மேவிய வரியைத் தரேன்’ என
ஓதி வீரப் புயலை விளைத்ததார்?
மானம் நோக்கிய சானகி நாயகன்
மல்லல் தோள்களில் நல்லருள் பொங்கிடத்

தேன ளாவிய கீர்த்தனை தந்ததார்?
தேவ கானத்தை வாழ்வுறக் காத்ததார்? 8

மங்க லம்பொலி பாகதம் நல்கிய
மாசிலாதொளிர் சப்த சதியினை
பங்க மற்ற குறுந்தொகை நாணுறப்
பண்பி னோடு படைத்த தெவர்செயல்?
துங்க மார்கும ரேசவெண் பாவினை
தூய நற்குறள் மணியைப் பதித்தெழில்
பொங்கச் செய்து தமிழர்கள் வாழ்வினில்
புனித வாழ்வை மலர்ந்திடச் செய்ததார்? 9

அற்பு தஞ்செறி பாரதம் நல்கிய
அரங்க நாதர் சிவிகை சுமந்ததார்?
பொற்பு மேவிய கூடற் கலம்பகம்
போத நாதனின் தோளில் புனைந்ததார்?
சிற்ப மேயென ஈட்டுரை நற்றமிழ்
செம்மை யோங்க மொழிபெயர்த் திட்டதார்?
நற்க லைக்கு விருதாயக் கலைமகள்
நயக்கும் பிள்ளைத் தமிழைப் புனைந்ததார்? 10

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்,
கோதி லாதநம் மாயவன் காதையை
அன்று நம்முடைய ஐயர் உளத்தினில்
அறிவின் வித்திச் செறிவுறக் காத்ததார்?
வென்றி சேர்அரி சமயதீ பத்தினை
விளக்கத்தோடு களிப்புறத் தந்ததார்?
மன்று போற்றிடும் மாறனின் கோவையை
மாநி லத்தினில் படர விடுத்ததார்? 11

மங்க லத்தமிழ்த் தென்றல் திரு.வி.க.
மயிலைக் காப்பியர் என்று புகழ்ந்திடப்
பங்க மற்ற கபில பரணரைப்
பண்பின் ஈந்து தமிழைப் புரந்ததார்?
துங்கம் மேவு திருவருட் பாவினால்
தூய்மை பெற்றுத் தமிழக மாண்பினை
இங்க யர்த்திட நல்ல முதல்வராய்
ஏற்றம் பெற்று பொலிவினைத் தந்ததார்? 12

வேந்தர் வைகும் அரண்மனை போன்றதம்
வீட்டை நூலகம் ஆக்கும் முதல்வர்யார்?
காந்தி யொத்த வினோபா மலர்ந்திடக்
கனிந்து தந்த நிலக்கொடை யாளர்யார்?
சாந்த மேவடி வாகித் தழைத்திட்ட
சால்பி னாலே நிலங்கள் அனைத்தையும்

வாய்ந்த சத்திரம் கொள்கென கல்கிய
வாய்ந்த வேந்தரைத் தந்த தெவர்குளம்? 13
மங்க லந்தரு பிங்கள சூரண்ணா
மகிழந்து தந்த சிலேடைப் பனுவலைத்
துங்க நற்றமி ழில்வடித் திட்டதார்?
தூய்மை ஓங்க அதற்குரை தந்ததார்?
சங்கம் மேவு பவணந்தி நூலுக்குத்
தக்க நல்லுரை நல்கிக் களித்ததார்?
பொங்கு வைணவம் நன்கு மலர்ந்திடப்
புவன கிரியில் உதித்திட்ட சோதியார்? 14

போதம் நல்கும் பதும புராணத்தை
புனிதக் காப்பிய வடிவில் சமைத்ததார்?
சீத ளஞ்செறி தலைமலை மாலுக்கு
செப்பம் மிக்க சதகம் படைத்ததார்?
ஏத மற்றொளிர் சாரீ ரகத்தினை
எளிமை யாக்கிப் புகழை வளர்த்ததார்?
நாதன் கம்பன் புனிதப் பனுவலை
நலங்கொள் ஞானத் தெலுங்கில் இசைத்ததார்? 15

பதின்மர் ஓதிய பாசுரச் சாரமாய்ப்
பண்பின் ஓங்கும் அறிஞர்க் கமுதமாய்த்
துதிகொள் அட்டப் பிரபந்தம் நல்கிய
தூய அந்தணர் தம்மைப் புரந்ததார்?
மதியின் மாண்பினால் மாயமில் கொள்கையால்
மன்னு பொதிய மலைமுனி நாணுறப்
புதிய செந்தமிழ் ‘நம்பெரு மாள்’ எனப்
புலவர்க் கீந்து வளமுறக் காத்ததார்? 16

மாசி லாதநற் காதல் மதுவினால்
மாண்பு மிக்கொளிர் கற்பின் திறத்தினால்
காசி லாத மதுரா விஜயத்தால்
கணவன் தோள்களில் பூரிப்பைத் தந்ததார்?
தேசம் போற்றிடும் வள்ளுவர் போலவும்
சித்தர் ஒப்பவும், புத்தர் உறழவும்
நேசம் ஓங்கிய பத்தியம் தந்ததார்?
நெஞ்சந் தோறும் இருளைத் தொலைத்ததார்? 17

தேசி கன்பெறு நூற்குரை நல்கிய
தெய்வ மாண்புறு தீட்சிதர் தம்மையும்
மாசி லாச்சிவ லீலார் ணவந்தரு
மாண்பில் ஓங்கிய தீட்சிதர் தம்மையும்
பாச மோடு கனிவிற் புரந்ததார்?
பரத்தின் மாண்புறு காகுத்த வள்ளற்கு

நேசம் ஓங்கும் கலியன் மடல்என
நிகரில் சிற்பம்கொள் கோயில் படைத்ததார்? 18

மூன்று குற்றம் அகற்றிய ஞானிக்கு
முழங்கு வேதப் பெரும்புக ழானுக்கே
ஆன்ற ஞானப் பனுவல் படைத்ததார்?
அவன்றன் மாண்பினில் தன்னைக் கரைத்ததார்?
ஈன்ற தாயெனத் தன்மம் மலர்ந்திட
இணையில் செல்வத்தைப் பங்கிட்டுத் தந்ததார்?
வான்ற ரும்புகழ் இவ்வயின் நாட்டிய
வள்ளுவர்க் கொரு காப்பியம் தந்ததார்? 19

அல்லல் நீக்கிய தென்திரு வேங்கடத்
தருளைத் தேக்கிய நல்லடி வாரத்துச்
செல்லல் நீக்கிய மால்நெறி காத்திட்ட
தேசி கற்கொரு கோட்டம் சமைத்ததார்?
கொல்லல் போக்கும் நெறியை உயிர்ப்பித்த
கோதில் வள்ளலார் தம்மைப் புரந்ததார்?
மல்லர் ஓங்கு சமயம் புரந்திட
மாசில் சந்நிதி நெறியினைத் தந்ததார்? 20

கோவை வாய்ச்சி யிடைச்சி யுருக்கொடு
கோவ லன்றரும் போகம் நுகர்ந்திடப்
பாவை நன்னெறி நல்கிய பாவைக்குப்
பரத்தைத் தொட்டிடும் கோபுரம் தந்ததார்?
நாவை யாட்கொளும் மந்திரிக் கோவையை
நம்பன் சூடிட, அன்புறு வள்ளுவத்
தேவை சால உயர்த்துமுப் பாலெனத்
திட்ப நுட்பங்கொள் கோயில் படைத்ததார்? 21

உறங்கு கின்ற முனிவன் சிரமென
ஒளிரும் தலைமலை மேவிய மாயற்கு
நிறங்க லாவிய தாண்டகம் தந்ததால்
நேயம் ஓங்கும் கெடியினைப் பெற்றதார்?
பிறங்கு சித்தர் சிவப்பிர காசற்குப்
பெரிய நன்மடம் உரிமை யுடனமைத்
தறம்கு லாவக் கழனிகள் தந்ததார்?
அரிய வீர சைவத்தைக் காத்ததார்? 22

மடை

இங்கண் பற்பல் வினாக்கள் தொடுத்திடின்
ஏற்ற நல்ல விடைப்பொருள் ஆனவர்
மங்க லந்தரு கொற்றத் தெலுங்கராம்;

மாண்பி னாலிவர் இங்கு வராவிடின்
பொங்கு தென்னகம் வேறொரு தேசமாய்ப்,
புலிகள் பாம்புகள் மேவும் வனங்களாய்ச்
சங்கை யற்றுத் துயரம் விளைத்திடும்
சரத நான்மறைப் பனுவல் இருக்குமோ? 23

தெள்ளி தாகிய வள்ளுவன் மாக்குறள்,
தேசம் போற்றும் சிலம்பொடு மேகலை,
ஒள்ளி தாய அகம், புறம், நான்மறை,
ஒப்பி லாத திருமுறை, வாய்மொழி,
வள்ளி யோர்புகழ் நல்லிசைச், சிற்பங்கள்,
வளத்தின் மிக்குயர் கோயில்கள் யாவுமே
எள்ள ரும்புகழ்த் தெலுங்கரால் வாழ்வெய்தி
இன்பம் ஓங்க அவர்களை வாழ்த்துமால் 24

வேதம் காத்திட வேள்விகள் காத்திட
வீறு மிக்க சமயத்தைக் காத்திட
போத மோடிங்கு வந்த தெலுங்கரின்
பொலிவு மிக்க மரபு செழித்திட
ஆத வன்னெனத் தோன்றிக் குலப்புகழ்
அன்பிற் புரந்திட்ட நம்சுப்பு ரெட்டியின்
சாத னைக்கு வரம்பில்லை இல்லையே
சால்பின் மிக்கவர் இஃதறி வாரரோ 25

வேறு

பழவிறல் ரெட்டி குலத்தவர் முன்பு
பண்பையும் பொருளையும் ஆழ்ந்த
உழவிடை, விளைத்தார்; முகில்புரி சதிகள்
ஓட்டிய காலவெள் ளத்தால்,
தழைவினை இழந்தார்; துன்பத்தில் உழந்தார்;
தகவுடன் இவர்களால் வாழ்ந்தோர்,
விழைவினை ஒதுக்கித் தூற்றினார்; நன்றி
மெல்லிய அனிச்சப்பூ அன்றோ? 26

சிந்தனைச் செல்வச் செழிப்பினைப் பிறப்பால்
சிறப்பினைப் பெறுசுப்பு ரெட்டிசெம்மல்
சந்தமார் இளமைப் பருவத்தில் வறுமைச்
சலதியின் ஆழத்தைக் கண்டார்;
விந்தையாம் வறுமை இளமையில் பொறுப்பை
வியப்புறத் தந்தது; அதனால்
புந்தியில் சிறிதும் தீநெறி புகுதாப்
பொலிவினைப் பெற்றனர் அம்மா. 27

இந்தளம் தன்னில் தோன்றிய மலர்போல்
இடருறு நம்சுப்பு ரெட்டிசெம்மல்
வந்தது கண்டு மனஞ்சலி யாது
மாண்புடன் வாழ்ந்தனர்; அந்தோ!
தந்தையை இழந்த தனயனை அணைத்துச்
சால்புறு மொழிகளால் தேற்றும்
பந்தமார் சீல அன்னையின் அருளால்
படிப்பினில், அறிவினில் முதிர்ந்தார் 28

நலத்தினை வழங்கும் கலைமகள் பொருட்டா
நவையறு முன்னவர் படைத்த
நிலத்தினை விற்றார்; புலத்தினை விற்றார்;
நிலைபெறு பட்டங்கள் பெற்றார்
சலத்தினைப் புரிந்த ஞாதிகள் பகையைச்
சாதுரி யத்தினால் வென்றார்
குலத்தினுக் கமைந்த ஞானநற் பெயரைக்
குறைவறக் காத்தனர் அம்மா. 29

அடக்கரும் சினத்தால் புல்லிய பகைவர்
அமைவுறு வாழ்க்கையின் நெறியில்
தடைக் கற்கள் இட்டார்; ஐயகோ! அந்தச்
சால்பிலார் நாணுற அதனைப்
படிக்கற்கள் ஆக்கி மென்மெல நடந்து
பாரகத் துயர்ந்தனர்; அந்த
வடக்கினில் இருக்கும் மாலருள் உற்றால்
வாதனை சாதனை யாமால். 30

வேங்கடக் குன்றத் தெம்பிரான் நல்கும்
வித்தக நல்லருட் டிறத்தால்
தீங்கறத் தோங்கும் நம்சுப்பு செம்மல்
செவ்விய கலைவளத் தோடு
பாங்கொடு நூல்கள் படைத்தனர்; கற்றோர்
பண்புறப் போற்றினர்; அற்பர்
வாங்கிடற் கரிய பொறாமையில் வீழ்ந்தார்;
மானுடர் அழுக்காற்றின் வடிவோ? 31

மாறுபா டில்லா இலக்கியம் வரை
மாண்புறும் அறிவியல் வளர
நூறு நூல் தந்தார்; இன்னும் பன்நூல்கள்
நுட்பமாய் வரைந்திட உள்ளார்;
கூறபா டுற்ற அகத்தெழு நினைவுக்
குமிழிகள் உணர்வினில் சமைத்தார்;
தேறுசீர் சான்ற அப்பெரு நூற்குள்
சிந்தனைச் செல்வங்கள் உளவால்! 32

காதலைப் பெற்றும் பொன்னுடல் பெற்றும்
கலைநிறை போகங்கள் பெற்றும்
மாதக வுடைய புத்திரர் இன்றி
வாட்டமுற் றொடுங்கிய ஒருவர்,
ஏதமற் றேங்கும் நல்லறி வருளும்
இல்லற நெறியினைப் பயின்று
போதமார் மழலைச் செல்வங்கள் பெற்றுப்
பொலிகின்றார்; அறிவியல் வாழி! 33

பருவம தறிந்து நன்மழை பொழியும்
பாங்குறு காரென, யாண்டும்
பெருகிய இருளில் வழிதெரி யாது
பேதுறு கலத்தினைக் காக்கும்
துருவமீன் என்னத், தனையடைந் திட்ட
தோமிலா இளையடாக் டருக்குப்
பெருநெறி காட்டும் நம்சுப்பு ரெட்டி
பெருந்தன்மை வாழிய நன்றே. 34

வேறு

செப்பம் மிக்கநம் செம்மலின் நெற்றியில்
திகழும் நீற்றொளி யாண்டும் பரவலால்
ஒப்பற் றோங்கும் வைணவ மார்க்கத்தில்
உலாவி வேங்கட மாலருள் எய்தினார்
துப்புற் றோங்கும் வைணவ ஞானத்தால்
தூய நால்வரின் புனித நெறியினை
இப்பு விக்கண் விளக்கிட வல்லவர்;
இவர்தம் தொண்டு மிகவும் பெரியதால். 35

சிரிக்கச் சிரிப்பு பகருப மானத்தால்
சிந்த னைக்குமெட் டாத பொருளினை
விரித்துக் காட்டித் தெரிவிக்க வல்லவர்;
வெகுளி யோடு பகையினைச் சாடுங்கால்
எரிக்கும் காண்டவத் தீயொப்பர் என்னினும்,
இதயம் மேவும் அமைதியைக் காப்பவர்;
அரிக்கும் வஞ்சம் சற்றும் புகுந்திடா
ஆண்மை மிக்கவர்; பண்புறு வானவர், 36

நாத்தி கஞ்செறி குற்றக் குழுவினுள்
நன்மை கண்டிடில் போற்றிடக் கற்றவர்,
ஆத்தி கந்தனில் புல்லர் புகுத்திய
அற்பப் புன்மையைச் சாடி எதிர்ப்பவர்
காத்தி ருத்தலும் உண்மையை நோக்கலும்,
கவலை யற்று நடுநிலை நிற்றலும்,
பூத்தி ருக்கும் மலரென வாழ்தலும்,
பொலிவு மிக்கநம் ரெட்டி சமயமாம். 37

சத்தி யப்பெரு குன்றினில் மேவிய
சால்பு மிக்கவிஞ் ஞானநற் பார்வையால்
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
ஏற்றம் பெற்றவர்! மாற்றம் இலாதவர்
சித்தி நல்கிடும் இல்லற மார்க்கத்தைச்
செப்பும் போதிவர் வாற்சா யனமுனி,
புத்தி யாலுயர் அணுவை விளக்குங்கால்
பொலிவு மிக்க ஐன்ஸ் டீனும் இவரன்றோ? 38

அண்ணல் மேவிய தெய்வத் தலந்தொறும்
ஆழ்வார் நல்கிய பாசுரக் கண்கொடு
கண்ணன் ஆடலை முற்றும் சுவைத்தவர்:
கனிவி னாலுளத் தெளிவினைப் பெற்றவர்:
பண்ண மைந்த இலக்கியம் யாவையும்
பரிந்து போற்றித் திறங்களை நோக்குவோர்:
எண்ணம் யாவையும் வேங்கட மால்பதத்
தினிதில் வைத்தவர்; முனிவைத் துறந்தவர். 39

ஆடல் வல்லவன் அற்புதக் கூத்தினில்
ஆழங் காற்பட்ட நால்வர் நெறியினைப்
பாடல் சான்ற புலனெறிக் கண்கொடு
பண்பின் நோக்கி உலகியல் மாந்தர்க்கு
நாட கஞ்சேர் வழக்கினில் ஈந்தவர்;
நாலி ரண்டில ஐந்தினைப் பெற்றவர்

வாட வாடப் பரிமளம் உற்றிடும்
வகுள மாலைபோல புகழில் உயர்ந்தவர். 40

செம்பின் மேவும் களிம்பாய் உயிர்தொறும்
சேர்ந்த ஆணவம் நீக்கிடத் தில்லைவாழ்
நம்பி ரானிரு வன்மலம் சேர்த்ததை
நாட்டு சைவ சமய விளக்கினால்
வெம்பு கின்ற உயிர்க்கிடர் நல்கிடும்
வெய்ய தாய இருளை ஒதுக்கியே
நம்பு முத்தி நெறியை அறிந்திடும்
ஞானம் மிக்கவர் ஈனம் தொலைத்தவர். 41

நலம்பொ லிந்திடு நல்லப்ப ரெட்டியின்
குலம்பு ரிந்திடு கோதில் தவப்பயன்;
கனிவு மிக்கநல் காமாட்சி யம்மையின்
இனிய நோன்பில் எழுந்த கலைச்சுடர்;
பாங்குறு கர்ண பால கோத்திரம்
ஓங்குற வந்த உத்தம நம்பி; என்றே
சான்றவர் புகழும் சால்பும் சிறப்பும்
தோன்ற மலர்ந்தவர் தொல்கலை யாய்ந்தார். 42

செப்பமார் தங்கள் குலத்தவர் முன்பு
திருவளர் பாரத சமயம்
ஒப்பிலா தோங்கப் படையுடன் வந்த
உண்மையை மறந்திடா மையினால்
திப்பியம் சான்ற வைணவ சைவச்
சிறப்பினைக் கண்ணினுக் குள்ளே
வைப்பென வைத்துப் புரப்பவர் இவர்தம்
மாண்பினை உலகெலாம் அறிக. 43

மதுமலி துளபத் தாரணி மாயோன்,
மற்றவன் தங்கையாய் உதித்த
விதுமுகக் காமக் கோட்டத்து நங்கை,
விருப்புடன் அவள்கரம் பிடித்துப்
புதுமையாய்ப் பொலிவும் ஏகம்பன் - இவர்கள்
பொலிவுடன் அமர்ந்திட மலர்ந்த
எதுமலை போல விரிந்திடும் உளத்தார்
இருசம யத்தொளி பெற்றார். 44

எள்ளுதற் குரிய சாதிவேற் றுமைகள்,
இடர்செயும் சமயவேற் றுமைகள்
பொள்ளென வருத்தும் வருணவேற் றுமைகள்
புறப்புறத் தேகிட, முற்றுப்
புள்ளியை வைத்த எதுமலைக் கோயில்
புகட்டிய நல்வழி கண்டு

1916 2016

தெள்ளிய ஞானம் பெற்றநம் சுப்பு
தேர்ந்தனர் சமரச ஞானம். 45

நஞ்சையும் அமுதாய் மாற்றுமிச் சமயம்,
நவைகளை இதயமாய்ப் பெற்ற
வஞ்சகர் செருக்கால் இழிவினைப் பெற்று
வாடுதல் கண்டநம் சுப்பு,
செஞ்செவே யாய்ந்து சமரசம் என்னும்
சீரிய மருந்தினை நல்கி,
மஞ்செனக் காத்தார், வேதத்து மரபை
மாண்புறப் பேணினர் அம்மா 46

உலகவா சனையை யறிந்திடா ஞான
உத்தமர் நஞ்சட கோபர்
நலமுறு தெய்வ வாய்மொா யாய்ந்து
நல்லபண் டாரகர் ஆகி
அலகிலாப் புகழைப் பெற்றவர்; சான்றோர்
அருங்கலைக் கோண்எனப் போற்றப்
புலமையை வளர்த்தார்; அருட்சட கோபன்
பொன்னடி எனும்புகழ் உற்றார். 47

புலவீர் !

''உறவினர் தம்மை யுறவினர் புகழ்தல்
உலகத்தின் இயற்கையே'' என்று
திறமுறக் கருதா துண்மையைக் காண்மின்
சகத்துறு புலவர்கள் தங்கள்
அறமமை யுளத்தும் பொறாமையைத் தாக்க
அமைந்தஇக் கலைஞரின் ஒளியை
நிறமுறப் போற்றல் சான்றவர் கடனாம்;
நெஞ்சினைத் திருத்துமின் சற்றே. 48

வேங்கடத் தப்பன் அருளினால், முதுமை
விடை கொள்ள இளமையை அழைக்கும்
பாங்குறும் இந்த அருங்கலைக் கோன்நம்
பாக்கியம் ஒன்றுபட் டதனால்
ஓங்கிய புகழ்சால் **வைணவச் செல்வம்**
உதவினார்; இப்பெரு நூலைத்
தாங்குதல் புலவர் தங்கடன் அதனால்
தத்துவ சரித்திரம் புலனாம். 49

வேறு

வைணவ சமய மாண்பினை இந்நூல்
கைவண நெல்லிக் கனிபோல் காட்டும்
வேதப் பனுவல் யோகக் கண்ணால்
போதக் கண்ட புண்ணிய வடிவம்
முப்புவ னத்தையும் மூவடி கொண்டு
திட்பமாய் அளந்த செஞ்சுடர் என்றும்,
பூரண ஞானிகள் பொலிவுறக் கண்ட
காரண முதல்வன் நாரணன் என்றும்,
சத்தியம் பேசும் சரித்திரம் கண்டது
சித்திசால் வாசு தேவன் என்றும்,
மல்லிகை முல்லை மணங்கமழ் காட்டில்
நல்லியல் வேய்ங்குழல் நலமுற ஏந்திப்
பண்களை விதைத்துப் பத்தியை வளர்த்துக்
கண்களுக் கொளிதரும் கண்ணன் என்றும்,
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
நலமமை ஆழ்வார் நயந்ததே என்று
திறமுற ஆய்ந்து செயமுறக் காட்டும்
வரன்முறை அறிதல் மாண்புடைத் தம்மா. 50

வேறு

நாரணனே உலகமெனும் உடலி னுக்கு
நல்லுயிராய் அமைந்துள்ளான் என்னும் மாண்பைப்
பூரணமார் பிரகதா ரணியம் என்னும்
புனிதநூல் விளக்குவதை இந்நூல் ஓதும். 51

கற்றவர்கள் புகழ்கிரேக்க நாட்டுத் தூதன்
கருடத்தூண் நிறுவியதைப், பத்தி யோடு
பெற்றமிகு பாகவத னாகத் தன்னைப்
பேசுகின்ற தனிமாண்பை இந்நூல் பேசும். 52

பெற்றமிகு பாணினிக்கு விளக்கம் தந்த
பேரறிஞர் பதஞ்சலியார் வாசுதேவன்
நற்றவர்கள் கொண்டாடும் இறைவன் என்று
நவில்கின்ற உண்மையினை இந்நூல் காட்டும். 53

வேறு

மெய்ப்பொருளின் களஞ்சியமாம் பாரதத்தில்
வைணவத்தின் விளக்கம் யாவும்

செப்பமுறப் புகல்வதனை ஆராய்ந்து
மாண்புடனே செப்பம் இந்நூல். *54*

நற்றருமம் அகிம்சையுடன் இல்லறத்தை
நடாத்தியதால் நாதன் அங்கு
பெற்றமிகு நரனோடு நாரணனாம்
தனிமாண்பைப் பேசும் இந்நூல் *55*

போர்க்களத்தில் நம்பெருமான் கீதையினில்
பேசியது பொலிவு மிக்குச்
சீர்த்தியமை நல்வாசு தேவவழி
பாடென்று செப்பும் இந்நூல். *56*

வேறு

வேதம் போற்றிடும் வித்தக நாதனும்,
விரித்த ஆகமம் கணித்த தலைவனும்
போதம் பெற்றுயர் அற்புத மாயனும்
புனித நாரணன் ஆயினன் என்பதை, *57*
மங்க லஞ்செறி சத்த பிதியின்கண்
மருவு நல்வழி காட்டும் இறைவனும்,
பொங்கு சீர்த்திகொள் விட்டுணு தேவனும்
புவியில் ஒன்றாய் மலர்ந்த முறைமையை, *58*

மறைகள் போற்றிடும் மாண்புறு தெய்வதம்,
மகிழ்வில் ஓங்கிடும் கோபால கிருட்டிணன்,
நிறைவு மிக்கவர் ஒன்றெனக் கண்டுதம்
நேயத் தோங்கி வளர்ந்த புலமையை,

வேறு

தொகுத்தும் விரித்தும் வகுத்தும் இந்நூல்
பகுத்துப் பகுத்துப் பராவி மகிழும். *59*

வேறு

வேதமுடன் இதிகாச புராணம் யாவும்
வேள்வியினால் உயிர்உய்யும் வழியைக் காட்டும்;
போதமிகும் ஆகமங்கள் அருச்சை யின்கண்
பூரணன்றன் பதம்எய்தும் வழியைக் காட்டும். *60*

சரியையினைக் கிரியையினை யோகம் தன்னைச்
சால்புடைய ஞானத்தை எவரும் காணப்

பரிவுடனே இனிதருளும் ஆக மங்கள்
பாரதத்துப் பண்பாட்டின் மூலம் ஆகும். 61

வித்தகவை கானசத்தைச் சான்றோர் போற்ற
விளங்குபஞ்ச ராத்திரத்தை - இந்நூல் போலப்
பத்தியுடன் விளக்கியநூல் இல்லை இல்லை
பரந்தாமன் இஃதறிவான் உண்மை உண்மை. 62

வேறு

சரித்திரம் கடந்த சமய உண்மையை
சரித்திரக் கையால் தகவுறக் காட்டும்
வித்தகப் புலமையின் விறலை
சத்தியம் அறியும் தமிழும் அறியும். 63

வேறு

பாரதத்தின் சரிதத்தைக் கி.பி. என்னும்
பதமற்ற கஜக்கோலால் அளந்து பார்த்தால்,
பாரதத்துச் சமயத்தைக் கி.மு. என்னும்
பரிவற்ற சங்கிலியால் அளந்து பார்த்தால் 64

வேறு

அல்வழி என்றே யறிந்த கலைக்கோன்
நல்வழி பற்றி நற்பொருள் கண்டனர். 65

வேறு

மாயோன் வழிபாடே மண்ணுலகில் வைணவமாய்ச்
சால உயர்ந்த தகவை விரித்திசைத்தும்,
பழந்தமிழர் கண்ட பரம் பொருளை நன்றாய்
அளந்தறிந்த மாண்பே அறிவின் விருந்தாம்;
உள்ள தொருபொருளே ஓரா யிரமாக
விள்ளவரும் உண்மை விளங்கப் பகர்ந்தருளும்
சத்திய ஞான சமரசத்தை ஆசிரியர்
வித்தகமாய் இங்கே விரித்திசைத்தார்; வாழ்வுற்றோம். 66

வேறு

மேற்கணக்கின் இதயமாம் பரிபாட லின்கண்
மேலாய கீழ்க்கணக்கின் முடிமணியாம் குறளில்
பாற்பட்ட சான்றோர்கள் மாயவனின் மாண்பைப்
பரிந்திசைத்தார் ஞானமெலாம் தெரிந்துய்ந்த தம்மா. 67

கச்சிநகர் தனில்மேவும் திருவெஃகா, மாயோன்
கனிவுடனே அறிதுயில்கொள் திருவரங்கம், என்றும்
நற்றவருக் கொளியருளும் இருந்தையூர், யாவும்
நயந்துரைத்தார்; சான்றவர்கள் வியந்து மகிழ்ந் திட்டார் 68

வாழ்வருளும் நற்றிணையில் மாயவன்வாழ்த் தாக
வாய்ந்தகவி திருமங்கை யாழவார்தம் பாட்டில்
நிழலிட்டுப் பொலிவதனைக் காட்டுகின்றார், சான்றோர்
நிகரற்ற புலமைக்குத் தலைவணக்கம் செய்வார். 69

வேறு

தாமரை மலர்க்குத் திருவடி மலரால்
தகவுறு நன்மையை வழங்கும்
பூமகள் மணாளன் திருவருட் சமயம்
பொலிவுறு தத்துவம் வழங்கி
மாமறை முடிவில் மேவிய ஞான
வழக்கினை உலகிற்கு நல்கித்
தோமறு மாய இருளினை யோட்டித்
துலங்கலை இந்தநூல் விளக்கும். 70

கருமத்தை ஞானப் பொலிவினை உறுப்பாய்க்
கண்டிட்ட புனிதநற் பத்தி
மருமத்தை உணர்த்தி, அதன்சிர மத்தை
மாண்புறும் உளந்தொறும் வித்தி
பெருமையால் எளிய பண்பினால் யார்க்கும்
பீடுறு முத்தியை வழங்கும்
அருமையார் தூய பிரபத்தி தன்னை
அமைவுற இந்தநூல் விளக்கும். 71

சருக்கரை தன்னால் புனைந்தபொம் மைக்குச்
சால்பருள் கரும்புவில் போலத்
திருக்கிளர் ஞான மேவடி வாகத்
திகழ்ந்திடும் நுண்ணிய ஆன்மா
உருக்கொளும் புனித தருமபூ தத்தால்
ஒளியினை மிகமிகப் பெற்றுப்
பெருக்குறும் பண்பால் இருளினை யோட்டிப்
பிறங்கலை இந்தநூல் விளக்கும். 72

நலம்செறி அரங்கன் கோவிலில் புனித
நயந்தரு மார்கழி மதியில்,
துலங்குறு ஞான வாய்மொழி முதலாம்
தூயநற் பழந்தமிழ் மறைக்குப்
புலங்கிளர் பெரிய உற்சவம் கண்டு
பொலிவுறு சமயத்தை வளர்த்து,
நிலந்தரு புகழ்கொள் ''பெரியவர்'' இதய
நெறியினை இந்தநூல் விளக்கும். 73

மூன்றுகோல் ஏந்தி ஐந்துகோல் வென்ற
முனிவரன் யதிபதி முடியால்,
சான்றவர் இதய மலருறும் அடியால்,
சால்புறு பெரியவர் தம்மைத்
தோன்றுசீர் சான்று வைணவம் வளர்க்கத்
துலங்குகால் வாயெனப் பரந்து
வான்றரும் புகழ்கொள் அரியணைச் செல்வர்
மாண்பினை இந்தநூல் விளக்கும். 74

திட்பமாய், அறிவாய், அடிமையாய், வினையின்
சிமிழ்ப்பினால் விபுத்துவம் இழந்து
நுட்பமார் அணுவாம் நல்லுயிர்த் திரளை,
நூற்றொரு கோடிமேல் விரிந்து
பெட்புறும் உலகாய் விரிபகு தியினைப்,
பிறப்பறுந் தருளிறை யவனை,
நட்புறக் காட்டும் இந்தநூல் தமிழர்
தற்றவப் பயனென அறிந்தேன். 75

வையக மாந்தர் குருட்டினைப் போக்கி
வளமுறு ஞானக்கண் நல்கிப்
பொய்யுறும் இருளைத் தொலைத்துயிர்க் கருளை
புரிந்திடும் திருமகல் அருளால்
ஐயனை அடையும் நன்னெறி காட்டும்
அற்புத நலம்செறி இந்நூல்
மையறு புகழ்சால் எதிபதி முக்கோல்
மகிழ்தவப் பயனென அறிந்தேன். 76

நிறைவுறும் மூலப் பகுதியை, ஞான
நேயமார் உயிர்ப்பெரும் திரளை
குறைவரும் உடலாய்க் கொண்டஅப் பிரம்மம்,
கோதிலாக் காய்கனி பெற்று
நறையுறு தருவே எனும்உண்மை பகரும்
நலமமை ஞானமார் இந்நூல்

பொறைவடி வாய பிரபந்தம் முன்பு
புரிதவப் பயனென உணர்ந்தேன். 77

கருணையே வடிவாம் எதிபதி, ஞானக்
களஞ்சிய தேசிகன், புல்லர்
மருணெறி போக்கும் வரமுனி. இவர்கள்
வளர்த்திட்ட நல்லறம் வளரத்
தெருணிறை கின்ற **வைணவச் செல்வம்**
திருவுருக் கொண்டதை அறிந்தேன்
இருளினைத் தகர்த்தேன்; என்றினி திசைப்பர்
இப்பெரு நூலுணர் புலவர். 78

பங்கமில் புகழான் எதிபதி கண்ட
பண்புறு தத்துவத் தினுக்குத்
துங்கமார் மூலம், வேதமே என்னும்
துணிவினை இந்தநூல் போல
மங்கலமாகப் பகர்ந்தநூல் இந்த
மாண்புறு தமிழகத் தில்லை
இங்கிதைப் பயின்றேன் ஒளியுற்றேன் என்பர்
இலங்குமிந் நூலுணர் புலவர். 79

பரத்துவம் முதலாம் ஐவகை நிலையைப்
பாங்குறத் தெரிந்தனம்; உயிரின்
தரத்தினை உயர்த்தும் பிரபத்தி நெறியைத்
தகவுறத் தெரிந்தனம்; தெய்வ
வரத்தினை வழங்கும் மந்திர நெறியின்
மாண்பினை உணர்ந்தனம்; அதனால்
சிரத்தினில் ஏற்கத் தக்கதென் நுரைப்பர்
திருந்துமின் நூலுணர்ப் புலவர். 80

உலகதத் துவங்கள் அனைத்தையும் படியாய்
உவப்பக் கொண்ட இப் பெருநூல்
கலைகளை அளக்கும் பொற்படி என்றும்,
கலிமறை இதயமே என்றும்,
மலர்முகத் திருவின் களத்தினில் மேவும்
மங்கள சூத்திரம் என்றும்
பலர்பல வாறாய்ப் புகலுவர் யானோ
பாரத தீபமே தென்பேன். 81

இதுவரை எவர்க்கும் புலப்படா திருந்த
இறைநிலை, உயிர்நிலை, மயக்கும்
மதுவினை வழங்கும் தடைநிலை, அதனை
மாய்த்திடும் அருள்நிலை, ஞானப்
புதுமைசேர் வீட்டின் பெருநிலை யாவும்

புகல்வதால் இப்பெரு நன்னூல்
பதுமையின் அருளால் புவியினில் உதித்த
பாரத தீபமே தென்பேன். 82

சாத்திரப் புலமை வேதத்தில் புலமை
தகவுறு காப்பியப் புலமை
தோத்திரப் புலமை பெற்றனம்; இனிமேல்
